முதலாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 56

தேர்தல் சிறப்பு பதிப்பு இன்று மாலை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 77 தை 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 11 பெப்ரவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049

Ramco
கூரை மற்றும் சீலிங் தகடுகள்

# வடக்கில் கூட்டமைப்பு தெற்கில் மகிந்த அணி

## இரு சபைகள் த.தே.ம. முன்னணி வசம் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது ஐ.தே.க.

யாழ்ப்பாணம், பெப்ரவரி 11

மிக நீண்ட இழுத்தடிப்பின் பின்னர் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தெற்கில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன முன்னணியும் முன்னிலை பெற்றுள்ளன. இரண்டு தரப்பும் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களைத் தம் வசமாக்கியுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கைப்பற்றியிருந்த இரண்டு சபைகளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் பறிகொடுத்து பின்னடைவைச் சந்தித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டு ஆண்டுகளின் பின்னர் நாடு முழுவதும் நேற்று நடத்தப்பட்டது. இந்தத் தேர்தல் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

>> 49



## வாக்களிப்பு வீதம் இந்தமுறை அதிகம்

யாழ்ப்பாணம், பெப். 11

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலை விட நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் அதிகளவு வாக்களிப்பு வீதம் பதிவாகியுள்ளது.

>> 49

## வெடிகள் கொளுத்தி இரவில் ஆர்ப்பரித்த ஆதரவாளர்கள்

யாழ்ப்பாணம், பெப். 11

வட்டாரங்களில் வெற்றிபெற்றவர்களது விவரங்கள், வாக்கு எண்ணும் நிலையங்களில் அறிவிக்கப்பட்டதுமே ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி ஆர்ப்பரித்தனர்.

41 ஆண்டுகளின் பின்னர் வட்டார ரீதியான தேர்தல் நேற்று இடம்பெற்றது. வட்டாரங்களில் வைத்தே வாக்கு எண்ணும் பணியும் முன்னெடுக்கப்பட்டது. இரவு 7 மணிக்கே வட்டார ரீதியில் வெற்றி பெற்றவர்களது விவரங்கள் அறிவிக்கப்பட்டன. வாக்கு எண்ணும் நிலையங்களின் முன்பாகக் குழுமியிருந்த ஆதரவாளர்கள் வெடிகளைக் கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

கடந்த காலங்களில்

>> 49

## யாழ்ப்பாணத்தில் குலுக்கலில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 11

கலப்பு முறையில் நடைபெற்ற முதலாவது உள்ளூராட்சித் தேர்தலில் குலுக்கலில் வேட்பாளர் வெற்றி பெற்ற சம்பவம் யாழ்ப்பாணத்தில்

>> 49

## உத்தியோகபூர்வ முடிவுகள் எவையும் வெளியாகவில்லை

யாழ்ப்பாணம், பெப். 11

தேர்தல்கள் திணைக்களம் அறிவித்ததைப் போன்று தேர்தல் முடிவுகள் இரவு 8 மணிக்கு வெளியாகவில்லை. வடக்கில் மாத்திரமல்லாது, நாட்டின் எந்தவொரு சபையினதும் உத்தியோகபூர்வ முடிவுகள் நேற்று நள்ளிரவு வரையில் தேர்தல்கள் திணைக்களத்தால்

>> 49

## இடையூறு இன்றி கொண்டாடுங்கள்

### ஆதரவாளர்க்ளை கோருகிறார் மகிந்த

கொழும்பு, பெப். 11

அமைதியான முறையில் தேர்தல் வெற்றியைக் கொண்டாட வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கோரியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று இரவு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வெற்றிக்காகப் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும்

>> 49

## கிழக்கில் கூட்டமைப்பு 15 சபைகளில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 11

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட 15 சபைகளில் 11 சபைகளில் பெரும்பான்மை வட்டாரங்களைக் கைப்பற்றியுள்ளது. 3 சபைகளில் தொங்கு நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபை உள்ளிட்ட 9 சபைகளிலும், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தலா 3 சபைகளிலும் போட்டியிட்டிருந்தது.

அவற்றில் 11 சபைகளில் பெரும்பான்மையான வட்டாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. விகிதாசார ஆசனங்களின் முடிவு

>> 49

## அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால் சிக்கல்

யாழ்ப்பாணம், பெப். 11

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில உள்ளூராட்சி மன்றங்களில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற்றிருக்காத நிலையில், கூட்டணி ஆட்சியே அமைக்கவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

புதிய முறையில் நடைபெற்ற முதலாவது உள்ளூராட்சித் தேர்தலில், சில சபைகளில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைப்பதற்கு வாய்ப்பில்லாத சூழல்

>> 49

## வெளியான வட்டார முடிவுகளின் அடிப்படையில்

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாநகர சபை: த.தே.கூ
வல்வெட்டித்துறை நகர சபை: த.தே.கூ
பருத்தித்துறை நகர சபை த.தே.ம.மு
சாவகச்சேரி நகர சபை த.தே.ம.மு
காரைநகர் பிரதேச சபை த.தே.கூ. மற்றும் சுயேச்சை
ஊர்காவற்றுறை பிரதேச சபை: ஈ.பி.டி.பி
நெடுந்தீவு பிரதேச சபை: ஈ.பி.டி.பி.
வேலணை பிரதேச சபை: த.தே.கூ
வலி.மேற்கு பிரதேச சபை: (சங்கானை) த.தே.கூ
வலி.வடக்கு பிரதேச சபை: (தெல்லிப்பழை) த.தே.கூ
வலி.தென்மேற்கு பிரதேச சபை: (மானிப்பாய்) த.தே.கூ
வலி.தெற்கு பிரதேச சபை: (சுன்னாகம்) த.தே.கூ
வலி.கிழக்கு பிரதே சபை: (கோப்பாய்) த.தே.கூ
வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை: (கரவெட்டி) த.தே.கூ
பருத்தித்துறை பிரதேச சபை: த.தே.கூ
சாவகச்சேரி பிரதேச சபை: த.தே.கூ
நல்லூர் பிரதேச சபை: த.தே.கூ

**கிளிநொச்சி**

கரைச்சி பிரதேச சபை: த.தே.கூ
பூநகரி பிரதேச சபை: த.தே.கூ.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை: த.தே.கூ

**முல்லைத்தீவு**

மாந்தை கிழக்கு த.தே.கூ
துணுக்காய் த.தே.கூ
கரைதுறைப்பற்று த.தே.கூ
புதுக்குடியிருப்பு த.தே.கூ

**வவுனியா**

வவுனியா நகர சபை: த.தே.கூ
வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை: த.தே.கூ
வவுனியா வடக்கு பிரதேச சபை: த.தே.கூ
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை: த.தே.கூ

**மன்னார்**

மன்னார் நகர சபை: த.தே.கூ
மன்னார் பிரதேச சபை: த.தே.கூ
நானாட்டான் பிரதே சபை: த.தே.கூ
மாந்தை மேற்கு பிரதேச சபை: ஐ.தே.க.
முசலி பிரதேச சபை: ஐ.தே.க

SDB

வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை
011 5 411 411
ரூபா 2 மில்லியன் வரையிலான கடனுதவி*
அரச ஓய்வூதியர்களான உங்களுக்கு, உற்பத்தியாளர்களாக எழுந்து நிற்க SDB வங்கியிடமிருந்து அழைப்பு
*நிபந்தனைகளுக்குட்பட்டது
SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

# வாக்களிக்கச் சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

கொழும்பு, பெப்.11

வாக்களிக்கச் சென்ற இளைஞர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கிதுல்கல, பிபிலிஓய பிரதேசத் தில் பேருந்தின் மிதிபலகை யில் பயணித்த இளைஞர் கீழே விழுந்ததால் அதே பேருந்தில் அடிபட்டு உயிரிழந்தார் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்த னர்.

முதலாவது தடவையாக தனது வாக்குப் பதிவை மேற்கொள்ளும் நோக்கில் சென்ற 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார் என பொலி ஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் உயிரிழந்தவர் சாமிமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என என அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த இளைஞரின் சடலம் அவிஸ்ஸாவளை மருத்துவமனையில் வைக் கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அரச பேருந்தின் சாரதி மற்றும் நடத்து நர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தெடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (ற)



## தேர்தல் கடமையில் ஈடுபட்ட வாகனம் விபத்து

முல்லைத்தீவு, பெப்.11

முல்லைத்தீவில் தேர்தல்கடமையில் ஈடுபட்ட மாவட்ட செயலக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று அதிகாலை முல்லைத்தீவு மாங்கு ளம் நந்திக்கடலுக்கு அருகில் மூன்றாம் கட்டை பகுதியில் இடம்பெற்றது. இதில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் இரண்டு பொலிஸார் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல் லைத்தீவு போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,பெப்.11

தேர்தல் தினமான நேற்று ஏறாவூர் நகர பிரதேசத்தில் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் இருவரும் மேலும் ஒரு ஆதரவாளரும் தாக்கப்பட்டனர்.

வெவ்வேறு இடங்களில் இந்த மூன்று தாக்குதல்களும் இடம்பெற்றன. (ற,ரி2)

## முகநூல் ஊடாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டவர் உடனடியாகப் பதவி நீக்கம்

கிளிநொச்சி,பெப்.11

கிளிநொச்சி விவேகானந்தா நகர் வாக்குச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி கல்வித் திணைக்கள ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் நேற்று தேர்தல் திணைக்களத்தினால் அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

குறித்த ஆசிரிய ஆலோசகர் தனது முகநூல் ஊடாக சுயேச்சைக்குழு ஒன்றுக்கு வாக்கு சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குற்றச் சாட்டிலேயே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

## வவு. தேர்தல் வன்முறை: குற்றச்சாட்டில் ஐவர் கைது



வவுனியா,பெப்.11

வவுனியாவில் தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட ஐவர் கைது செய்யப்பட்ட தாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். உள்ளு ராட்சி சபைக்கான வாக்க ளிப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, வாக்காளர்க ளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி தமது கட்சிக்கு வாக்களிக்குமாறு தூண்டி யமை, வீதிகளில் தமது கட்சிச் சின்னங்களை வரைந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் இவர் கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் அமைச்சர் ரிசாத் பதியுதீ னின் ஆதரவாளர்களுக் கும், நாடாளுமன்ற உறுப் பினர் மஸ்தானின் ஆதர வாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந் தது. கோவில் குளம் வாக்க ளிப்பு நிலையத்துக்கு முன் னால்தேர்தல்விதிமுறையை மீறி செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட் பாளர் மற்றும் ஆதரவாளர் கள் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மற்றும் பொலி ஸார் ஆகியோரினால் எச்ச ரித்து வெளியேற்றப்பட்ட னர். (ற,ரி2)

## மர ஆலையில் தீப்பரவல்

மட்டக்களப்பு.பெப்.11

மட்டக்களப்பு புதிய காத்தான்குடி அப்ரார் பள்ளி வீதிக்கு அருகாமையில் உள்ள மர ஆலை ஒன்றில் நேற்று தீப்பரவல் ஏற்பட்டது.

தீயால் மர ஆலை பெரிய சேதத்துக்கு உட்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ற-ரி5)

## தேர்தலில் தெரிவாவோருடன் இணைந்து பணியாற்றுவேன்

### மைத்திரி கூறுகிறார்

பொலனறுவை, பெப்.11

இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவு செய் யப்படும் புதிய மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து கிரா மங்களை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான செயற் றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன் என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பொலன றுவை புதிய நகரம் ஸ்ரீ வித்யாலோக்க விகாரையில் பதிவு செய்தார்.

இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சுமார் நான்கு தசாப்தங்களின் பின்னர் தொகுதி வாரி முறையில் இடம்பெறும் இந்தப் புதிய தேர்தல் முறையால் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பிரச்சினைகள் ஏற்ப டவில்லை என்பதுடன் அமைதியான முறையில் இந்தத் தேர்தலை நடத்த முடிந்துள்ளமை தொடர்பாக நான் மகிழ் வடைகிறேன் - என்றார். (ற-ரி5)

## காணொலி எடுத்த கட்சி ஆதரவாளர் மீது தாக்குதல்

முல்லைத்தீவு,பெப்.11

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர் ஒருவர் தாக்கப் பட்டார்.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த 55 வய துடைய ஒருவரே தாக்குதலுக்கு இலக்கானார்.

உதய சூரியன் மற்றும் சைக்கிள் கட்சிகளின் ஆதரவா ளர்கள் வாக்காளர்களுக்கு பணம் வழங்குவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர் கண்டுள் ளார்.

இதனையடுத்து சம்பவத்தை குறித்த ஆதரவாளர் காணொலி எடுத்துள்ளார்.

இதைப் பார்த்த இரு கட்சியின் ஆதரவாளர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளரைத் தாக்கி னர்.

தாக்குதலில் காயமடைந்த ஆதரவாளர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொர்டர்பில் பொலிஸாருக்கும் தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கும் தொடர்பினை ஏற்படுத்தி னேன். அது பயனில்லாமையினாலேயே சம்பவத் தைக் காணொலி எடுத்ததாக தாக்கப்பட்ட ஆதரவாளர் தெரிவித்தார். (ற,ரி2,ரி3)

## தேர்தல் நாளில் கள் மற்றும் கசிப்பு விற்றவர் கைது

முல்லைத்தீவு.பெப்.11

தேர்தல் நாளான நேற்று நாட்டில் உள்ள மதுபான சாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் வீட்டில் வைத்து கள் மற்றும் கசிப்பு விற்பனை செய்தவரை முள்ளியவளைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

சந்தேகநபர் தனது வீட்டில் வைத்து வாடிக்கையாளர்களுக்கு கள் மற்றும் கசிப்பு விற்னை செய்துள்ளார்.

இதன்போது இவரிடம் இருந்த 71 போத்தல் கள், ஒரு போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் திரவம் 2 போத்தல் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற,ரி2,ரி3)

## போலி வாக்குச் சீட்டுக்கள் விநியோகித்தவர் கைது

புத்தளம்,பெப்.11

புத்தளம், தில்லையடியில் போலி வாக்குச் சீட்டுக்களை விநியோகம் செய்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்

23 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட் டார். குறித்த இளைஞரிடம் இருந்து 143 போலி வாக்குச் சீட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றினர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர். (ற,ரி2)



## மாட்டு வண்டியில் சென்று வாக்களித்த வாக்காளர்கள்

கிளிநொச்சி,பெப்.11

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மக்கள் மாட்டு வண்டியில் சென்று வாக்களித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமத்தின் வீதியொன்று நீண்ட காலமாக மறுசீரமைக்கப்படாது காணப்படுகிறது. இந்த வீதியால் வாக்களிக்கச் சென்ற மக்கள் மாட்டு வண்டியில் சென்று தமது வாக்கைச் செலுத்தினர்.

"2018 உள்ளூர் மன்றத் தேர்தலில் மாட்டு வண்டிலில் பயணம் அடுத்த தேர்தலில் நடந்த சென்று வாக்களிப்பதா" என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகையும் மாட்டு வண்டியின் முன் பக்கத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. (ற,ரி2)

# வட்டார ரீதியான முடிவுகள் (உத்தியோகப்பற்றற்றது)

## யாழ்ப்பாண மாவட்டம்

### யாழ்ப்பாணம் மாநகர சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (த.தே.கூ) | - 14 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (த.தே.ம.மு) | - 10 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 1 |
| ஈ.பி.டி.பி. | - 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 1 |

### வல்வெட்டித்துறை நகர சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 7 |
| சுயேச்சைக் குழு | - 1 |
| ஈ.பி.டி.பி. | -1 |

### பருத்தித்துறை நகர சபை

| | |
|---|---|
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 5 |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 3 |
| ஈ.பி.டி.பி. | - 1 |

### சாவகச்சேரி நகர சபை

| | |
|---|---|
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 7 |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 3 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 1 |

### காரை நகர் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 4 |
| சுயேச்சைக் குழு | - 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 1 |
| ஈ.பி.டி.பி. | - 1 |

### நெடுந்தீவு பிரதேச சபை

| | |
|---|---|
| ஈ.பி.டி.பி. | - 6 |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 2 |

### வலி.மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 9 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 2 |
| ஈ.பி.டி.பி | - 1 |

### வலி.வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 17 |
| ஈ.பி.டி.பி. | - 3 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 1 |

### வலி.தெற்கு மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 12 |
| ஈ.பி.டி.பி. | - 5 |

### வலி.தெற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 11 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 2 |
| ஈ.பி.டி.பி | - 2 |
| அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் | - 3 |

### வலி. கிழக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | -15 |
| ஈ.பி.டி.பி | -3 |
| சுயேச்சைக் குழு | - 2 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 2 |

### வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 8 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 4 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 5 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 1 |

### பருத்தித்துறை பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 8 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 2 |
| ஈ.பி.டி.பி | - 1 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 1 |

### சாவகச்சேரி பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | -13 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 2 |
| ஈ.பி.டி.பி. | - 2 |

### நல்லூர் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 6 |
| ஈ.பி.டி.பி | - 3 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 1 |

## கிளிநொச்சி

### கரைச்சிப் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | -16 |
| சுயேச்சைக் குழு | - 5 |

### பச்சிலைப்பள்ளி பிரதேசசபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 6 |
| சுயேச்சைக் குழு | - 2 |

### பூநகரி

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 11 |

## முல்லைத்தீவு மாவட்டம்

### மாந்தை கிழக்கு பிரதேச சபை (இறுதி உத்தியோகபூர்வ முடிவு)

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 1,836 (6 ஆசனங்கள்) |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,505 (4 ஆசனங்கள்) |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | 523 (2 ஆசனங்கள்) |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 192 (1 ஆசனம்) |

### கரைதுறைப்பற்று பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 9 |
| சுயேச்சைக்குழு | - 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 1 |
| பொதுஜன பெரமுன | - 1 |

### துணுக்காய் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 6 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 1 |

### புதுக்குடியிருப்பு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 11 |
| சுயேச்சை | - 1 |

## வவுனியா

### வவுனியா நகர சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 7 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 4 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 1 |

### வவுனியா வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 8 |
| பொதுஜன பெரமுன | - 4 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 1 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 1 |

### வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 7 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 2 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 1 |

### வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 6 |
| சிறிலங்கா சுதந்திரக் கட்சி | - 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 2 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 1 |

### வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை

| | |
|---|---|
| பொதுஜன பெரமுன | - 9 |
| சுயேச்சைக் குழு | - 1 |

## மன்னார்

### மன்னார் பிரதேச சபை

| | |
|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | - 7 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 4 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 1 |

# பெரும் வன்முறை இன்றி சுமுகமாக நடந்த தேர்தல்

கொழும்பு, பெப்.11
340 உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் பெரும் வன்முறைகள் எவையுமின்றி நேற்று நடைபெற்றது. நாடு முழுவதிலும் சராசரியாக 70.75 சதவீத வாக்களிப்பு பதிவாகியது.
13 ஆயிரத்து 374 வாக்களிப்பு நிலையங்களில் நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெற்றது. ஒருகோடியே 57 இலட்சத்து 60 ஆயிரத்து 852 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர்.
இலங்கையில் முதன் முறையாக நேரடி மற்றும் விகிதாசார முறை இணைந்த புதிய முறையிலான தேர்தல் நேற்று நடைபெற்றது. 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள், 275 பிரதேச சபைகளுக்காக 57 ஆயிரத்து 252 பேர் அரசியல் கட்சிகளிலும், சுயேச்சைக் குழுக்களின் சார்பாகவும் போட்டியிட்டனர். இவர்களிலிருந்து 8 ஆயிரத்து 356 பேர் உள்ளூராட்சிசபைகளுக்கு தெரிவுசெய்யப்படவுள்ளனர். இன்று மதியத்துக்குள் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் விவரங்களை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.
வட்டார முறையில், நடைபெறும் தேர்தலில் 4750 வட்டாரங்களில் தனி ஒரு உறுப்பினரொருவர் தெரிவு செய்யப்படுவார். 169 பல உறுப்பினர் தெரிவு வட்டாரங்களும் உள்ளன.தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் மற்றும், உறுப்பினர்கள் நியமனம் என்பனவற்றில் பெண்களுக்கு முதல் முறையாக 25 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.தேர்தல் முடிவடைந்த பின்னர் வாக்குகளை எண்ணும் பணி, 6823 நிலையங்களில் இடம்பெற்றன. தேர்தல் பணிகளில், 173,383 அரச பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். பாதுகாப்புக் கடமைகளில், 4,178 சிறப்பு அதிரடிப்படையினர் உள்ளிட்ட 65,758 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.
வாக்களிப்பு வீதங்கள்
கொழும்பு 50%, கம்பஹா 75%, களுத்துறை 80%, கண்டி65%, நுவரெலியா 70%, மாத்தளை 80%, பதுளை 65%, மொனறாகலை 80%, அம்பாந்தோட்டை 65%, காலி 75%, மாத்தறை 70%, அநுராதபுரம் 85%, பொலன்னறுவை 75%, வவுனியா 60%, மன்னார் 70%, முல்லைத்தீவு 78%, யாழ்ப்பாணம் 76%, மட்டக்களப்பு 75%, திருகோணமலை 85%, அம்பாறை 70%, இரத்தினபுரி 7580%, கேகாலை70%, குருநாகல்78%, புத்தளம்73%
(ற)



## புதிய தேர்தல் முறை மகிழ்ச்சியளிக்கிறது

### அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.11
உள்ளூராட்சி சபைத் தேர்தல் அமைதியாக நடைபெறும் வகையில் புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தப்பட்டது தமக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
இனிவரும் காலங்களில் நாட்டின் அபிவிருத்தியை இலகுவாக முன்னெடுத்துச்செல்வதற்கான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.
பொலன்னறுவை, நவநகர சிறி வித்தியாலோக விகாரை வாக்குச்சாவடியில் நேற்று முற்பகல் தனது வாக்கைப் பதிவு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது:
நீண்ட நாள்களுக்குப் பின்னர் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் ஒரே தினத்தில் நடைபெறுகின்றன. சுமார், 40 ஆண்டுகளுக்குப் பிறகு விகிதாசாரமுறைமை ஒழிக்கப்பட்டு தொகுதிவாரி முறைமையின் கீழ் தேர்தல் இடம்பெறுகின்றமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது.
இந்தத் தேர்தலானது இவ்வாறு அமைதியாக இடம்பெறும்வகையில் புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தியமையிட்டும் இதனால், சுதந்திரமாகவும் மகிழ்ச்சியுடனும் அச்சம் மற்றும் யாருடைய அழுத்தமின்றிலும் வாக்களிக்க நாட்டு மக்களுக்கு நீண்ட நாள்களுக்குப் பின்னர் வாய்ப்பு கிடைத்துள்ளதையிட்டும் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.
உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வெற்றியின் பின்னர், அரசு என்ற ரீதியில் நாட்டின் அபிவிருத்திக்கான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இந்தமுறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் புதிய மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ற)

## வாக்களிக்கச் சென்றவர் மயங்கிச் சரிந்து சாவு

கொழும்பு, பெப்.11
வாக்களிக்கச் சென்ற வாக்காளர் ஒருவர் வாக்களிப்பு நிலையத்துக்கு அருகாமையில் மயங்கிவிழுந்து உயிரிழந்தார். கம்பளை, பள்ளேகம பகுதியில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு அருகிலேயே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றது.
புஸல்லாவை, இரட்டைப் பாதை சங்குவாரி ஜனபதயைச் சேர்ந்த அப்புஹாமி திஸா நாயகலாகே பியதாஸ (வயது - 86) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
கம்பளை, பள்ளேகம மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு நேற்றுக்காலை சென்ற நபர் வாக்களிப்பு நிலையத்தை அண்மித்த வேளையிலேயே மயங்கிவிழுந்துள்ளார். (ற)

## பெரமுன பிரதிநிதி கைகளை வெட்டித் தப்பிய மர்மநபர்கள்

கொழும்பு, பெப்.11
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதியொருவரின் இருகரங்களையும் இனந்தெரியாதவர்கள் நேற்று வெட்டி காயப்படுத்தியுள்ளனர். படுகாயமடைந்த நபர் நாவலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர்.
நாவலப்பிட்டிய பிரதேசத்திலுள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு கண்காணிப்புக்காகச் சென்ற வெரலுகஹாஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த கெலும் மல்சிறி பெரேரா என்ற இளைஞனே இவ்வாறு வெட்டுக்காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.
வீதியில் செல்லும்போது அவரைச் சூழ்ந்துகொண்ட மர்மநபர்கள், கூறிய கத்திகளால் இரு கரங்களையும் சரமாரியாக வெட்டியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நாவலப்பிட்டிய பொலிஸார் பலகோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற)

## வாக்களிப்பதில் மக்கள் ஆர்வம்

கொழும்பு, பெப்.11
40 வருடங்களுக்குப் பிறகு நாட்டில் தொகுதிவாரி முறையில் இடம்பெற்ற முதலாவது தேர்தலான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு நாட்டு மக்கள் மட்டுமன்றி, அரசியல் தலைவர்களும் நேற்று ஆர்வம்காட்டியதைக்காணக் கூடியதாக இருந்தது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது சொந்த ஊரான பொலன்னறுவையில் அமைந்துள்ள சிறி வித்யாலோக விகாரையில் வைத்து நேற்று காலை 10 மணியளவில் தனது வர்க்கைப் பதிவு செய்தார்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவு கட்டடத்திலுள்ள வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவு செய்தார். எதிர்க்கட்சித் தலைவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், திருகோணமலை புனித மரியாள் பெண்கள் வித்தியாலயத்தில் வாக்களித்தார்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தனது குடும்பம் சகிதம் சென்று தங்காலை, வீரகெடிய டீ.ஏ. ராஜபக்ஷ வித்தியாலயத்திலுள்ள வாக்குச் சாவடியிலும், முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நிட்டம்புவயில் அமைந்துள்ள சிறிகேஷ்துரோம விகாரையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்திலும் எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொழும்பு, பஞ்சிகாவத்தையில் அமைந்துள்ள வாக்குச்சாவடியிலும் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர்.
(ற)

## நாடளாவியரீதியில் 211 வன்முறைகள்

கொழும்பு, பெப்.11
உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வாக்களிப்பு தினமான நேற்று மாத்திரம் நாடளாவிய ரீதியாக 211 தேர்தல் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பெப்ரல் தெரிவித்துள்ளது.
340 தேர்தல் தொகுதிகளில் இடம்பெற்ற வாக்குப் பதிவின்போது நேற்று மு.ப. 10.30 மணிமுதல் பி.ப. 4.30 மணி வரையிலேயே இந்தச் சம்பங்கள் பதிவாகியுள்ளன.
அதனடிப்படையில் தாக்குதல் தொடர்பில் 10 சம்பவங்கள், அச்சுறுத்தல் குறித்து 9 சம்பவங்கள், சட்டவிரோதமான முறையில் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டமை குறித்து 22 சம்பவங்கள், வாக்காளர்களை அச்சுறுத்தியமை குறித்து 65 சம்பவங்கள், வாக்காளர்களை கட்டாயப்படுத்தல் தொடர்பில் 23 சம்பவங்கள் என மொத்தமாக 211 தேர்தல் விதிமீறல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அவற்றில் 75க்கும் மேற்பட்ட சம்பவங்கள் உறுதி செய்யப்பட்டள்ளன என்றும் இந்தச் சம்பவங்களால் 10 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அயலுறவு அமைச்சின் மீது மைத்திரி கடும் அதிருப்தி!

கொழும்பு, பெப்.11
உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்ட விவகாரம் மற்றும் இலண்டன் தூதரக இராணுவ அதிகாரி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட விவகாரம் ஆகியவை தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் அதிருப்தியுடன் உள்ளார் என்று அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.
இதனால் உடனடி அமைச்சரவை மாற்றமொன்றை செய்து முக்கியமான அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை செய்வது தொடர்பில் அரச தலைவர் தனக்கு நெருக்கமானவர்களுடன் மந்திராலோசனை நடத்தியுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.
அயலுறவுத்துறை அமைச்சின் அண்மைக்கால செயற்பாடுகளால் இலங்கை இராஜதந்திர ரீதியில் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது என்று கருதும் அரச தலைவர் அது தொடர்பில் தமது அதிருப்தியை நேரடியாகவே சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார் என்று தெரியவருகிறது.
அண்மையில் டுபாயில் கைது செய்யப்பட்ட உதயங்க வீரதுங்கவை இலங்கைக்குக் கொண்டுவரும் விடயத்தில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் இலண்டன் இராணுவ அதிகாரி விவகாரம் ஆகியவற்றால் நாட்டின் அயலுறவுக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து அரசியல் ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியதையடுத்தே அரச தலைவர் இந்த நகர்வை மேற்கொள்ளவுள்ளார் என்று அறிய முடிகின்றது. (ற)


ES Printers
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்
மக் பிரிண்ட்
(MUG)
450/=
மணியம் கபே
சைவ உணவகம்
Maniyam Cafe
Vegetarian Hotel
347, Kasthuriyar Road, Jaffna.
075 054 3823
JUICE
Premier
Travels & Tours
Special Promotions
Mon - Sat 7 AM - 10 PM
Sun & Bank Holiday 8 AM - 9 PM
Thank you for your custom, see you again
K'si
காசி
Jaffna
Premier express
Just 1 Minute Walk
OPENING HOURS
Mon-Sat 7 AM - 10 PM
Sunday & Bank holidays 8 AM - 9 PM
The National Lottery
ALL MAJOR DEBIT AND CREDIT CARDS ACCEPTED
FREE CAR PARKING
Your Local Convenience Store
BATTLE NORTH
Rubber stamp
பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்
கிளை அலுவலகம்:-
# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
New Market, 1st Floor, Chavakachcheri
esprintersjaffna@gmail.com
021 492 7432



# கொங்கோவின் கண்ணீர்க் கதை!

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் நிகழும் வன்முறைச் சம்பவங்கள், படுகொலைகள் அதிரவைக்கின்றன. 1998ஆம் ஆண்டு முதல் நடந்துவரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 54 லட்சம் பேர் இறந்துள்ளனர். மாதந்தோறும் 45 ஆயிரம் பேர் கொல்லப்படுகிறார்கள். கலகக் கும்பல்கள் இடையிலான ஆயுதமேந்திய உள்நாட்டுப் போரும் உலகின் கவனத்தைப் பெரிதாக ஈர்க்கவேயில்லை.

**பதவி முடிந்த பின்னரும் ஆட்சியில் ஜோசப் கபிலா**

அதிபர் ஜோசப் கபிலாவின் பதவிக்காலம் முடிந்தும் ராணுவத்தின் துணையுடன் ஆட்சியில் நீடிக்கிறார். அவர் பதவிவிலக வேண்டும் என்று கொங்கோ மக்கள் போராடிவருகிறார்கள். மக்கள் போராட்டத்தைக் கடுமையாக ஒடுக்கும் கபிலா, தன்னைப் பதவியிலிருந்து இறக்க வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் சதி நடக்கிறது என்கிறார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, அதிகமானோரைப் பேரைப் பலிவாங்கிய ஒரு போர் அதுவும் உள்நாட்டுப் போர் நடப்பது கொங்கோவில்தான். 200க்கும் மேற்பட்ட பழங்குடி இனங்கள் வாழும் காங்கோ இயற்கை வளங்கள் மிக்க நாடு. பல்வேறு நாடுகளுக்குக் கனிம வளங்களையும் இயற்கை வளங்களையும் ஏற்றுமதிசெய்கிறது.

பக்கத்தில் உள்ள நாடுகள் மட்டுமல்லாமல் தொலைவில் உள்ள பணக்கார நாடுகளும் ஆளுக்கொரு இனக் குழுவைக் கூலிக்கு அமர்த்தி, இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கின்றன. தடுப்பவர்கள் தாக்கப்படுகிறார்கள். தாக்குவதும் தாக்குதலில் மடிவதும் காங்கோ மக்கள்தான் என்பதுதான் வேதனை. முதலில் பெல்ஜியத்தாலும் பிறகு பிரெஞ்சுக்காரர்களாலும் காலனியாகப் பிடிக்கப்பட்ட நாடு இது. மக்கள்தொகை 7.8 கோடி. நிலத்தின் பரப்பளவு 23 லட்சத்து 45 ஆயிரத்து 409 சதுர கிலோ மீற்றர். மோங்கோ, லூபா, கோங்கோ (பண்டுகள் என்றும் இக்குழுக்களை அழைக்கின்றனர்) மாங்பேடு, அசாண்டே என்பவை மிகப பெரிய இனக்குழுக்கள். மொத்த மக்கள்தொகையில் இவர்கள் மட்டும் 45 வீதம். மக்களில் 80 வீதமானார் கிறிஸ்தவர்கள். முஸ்லிம்கள் 10 வீதமானார். எஞ்சியவாகள பூாவ குடிகள.

**கொங்கோவை வாட்டும் கொடிய நோய்கள்**

நிமோனியா, வயிற்றுப்போக்கு, மலேரியா, ஊட்டச்சத்துக் குறைவு போன்றவற்றால் இறந்தவாகளே அதிகம். இந்த நோய்களுக்கு மருந்துகளும் மருத்துவமனைகளும் இருந்தும், இடைவிடாத் சண்டைகளால் மக்களால் சிகிச்சைக்குச்செல்ல முடியாததாலும் அகதி முகாம்களின் சுகாதாரக் கேடுகளாலும் இறக்கின்றனர். 80 வீதமானோர் பேர் நிம்மதியாக வீட்டில் தங்க முடியாமல் அடிக்கடி பக்கத்து நாடுகளுக்குத் தப்பிச்செல்கின்றனர். அதே வேளையில், வேலை தேடி பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள் கொங்கோவுக்குள் வருவதும், அங்குள்ள சட்டவிரோத கனிமச் சுரங்கங்களில் வேலை செய்வதும் தொடர்கிறது!

**நிலையான ஆட்சியில்லை**

நிலையான, நல்லரசு இல்லை. பழங்குடிகளின் தலைக்கட்டுகளுக்கு இடையில் ஒற்றுமை இல்லை. ஆயுதமேந்திய அராஜக கும்பல்கள் உதவியுடன் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதிலேயே குறியாக இருக்கும் இனக் குழுக்கள். அவர்களுக்குத் தூபம் போடும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள். இப்படிப் பல்வேறு காரணங்களால் கொங்கோவில் குருதி ஆறு ஓடுகிறது. கொங்கோவின் மொத்த மக்கள்தொகையில் 19 வீதமானோர் 18 வயதுக்கும் குறைவான குழந்தைகள். அவர்களில் 47 வீதமானோர் ஊட்டச்சத்துக் குறைவாலும் தொற்றுநோயகளாலும் அற்ப ஆயுளில் மடிகின்றனர். உலக சுகாதார நிறுவனம், மனித உரிமைகள் அமைப்பு ஆகியவை மன்றாடிக் கேட்டும்கூட கொங்கோவுக்குக் கைகொடுக்க யாரும் இல்லை.

**கோரைப் புற்களால் ஆன குடிசைகளில் குடித்தனம்**

கோரைப்புற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட குடிசைகளில் அகதிகள் தங்கியிருக்கின்றனர். அகதி முகாம்களில் சுகாதாரம் இல்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. சத்தான உணவு ஏன் உணவே இல்லை. குளிருக்குப் போர்த்திக்கொள்ள கம்பளி ஆடைகளோ, வெயில் காலத்தில் காத்துக்கொள்ளப் பருத்தி ஆடைகளோ கிடையாது. படிப்பதற்கும் வசதியில்லை. எல்லாவற்றுக்கும் மேலாகப் பாதுகாப்பும் இல்லை. 8 வயதுக்கு மேற்பட்ட ஆண் குழந்தைகளை அந்தந்த இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கடத்திச் சென்று, போரில் ஈடுபட ஆயுதப் பயிற்சி அளித்து சேர்த்துக் கொள்கின்றனர். 10 வயதுக்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளைக் கடத்திச் சென்று பாலியல்ரீதியாகத் துன்புறுத்துகின்றனர். அடிமைகளாக நடத்துகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் ஐநா சபை அனுப்பிய அமைதிப்படையைச் சேர்ந்த 14 பேர் ஆயுதம் தாங்கிய குழுக்களால் கொல்லப்பட்டனர். அது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் பேசப்பட்டன. அதைத் தாண்டி கொங்கோவின் நிலவரம் யாருடைய கவனத்திலும் இப்போது இல்லை.

நன்றி தி ஹிந்து





## மாணவர்கள் மோதல்

சாவகச்சேரி,பெப்.11

கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டியைக் காண வந்த மாணவனை தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர் மற்றொரு கல்லூரியின் மாணவர்கள்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறாரெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 29 . 03 . 1960

விண்ணில் 13 . 01 . 2018



### சிவஞானம் செந்தில்நாதன்

கடந்த (13.01.2018) சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவின்போது துயரில் பங்கு கொண்டு பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உறவினர்கள். நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (10.02.2018) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. சபிண்டீகரண கிரியைகள் நாளை (12.02.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக கருதி கலந்துகொள்ளவும்.

காளி கோயிலடி, நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. 021 222 0980 (C/583/15/17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### லயன் ஆறுமுகம் நடராசா

(அச்சுவேலி லயன்ஸ் கழக உறுப்பினர்)

கெருடாவில்லை பிறப்பிடமாகவும் நவக்கிரி,புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா அவர்கள் நேற்று (10.02.2018) சனிக்கிழமையன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சரஸ்வதி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும் மனோரஞ்சிதம் அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான வெள்ளைத்தம்பி, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பகீரதன் (Norway), பகீரதி(USA),வளர்மதி (வைத்தியர்-தேசிய புற்றுநோய் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கீதா (Norway), விக்னேஸ்வரன் (USA),நவரத்தினராசா(பொறியியலாளர்-Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும் கலாதேவி, கலாமோகன்(லண்டன்), தர்மகுலதேவி(கனடா), காலஞ்சென்ற ரவீந்திரதேவி, காலஞ்சென்ற பாஸ்கரமோகன் ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும், பிரசாத், ஆரண்யா, அனிதா, ஜீவிதா, பானுசா, கௌதமன் ஆகியோரின் அன்பு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.02.2018) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
நவக்கிரி, Dr.வளர்மதி
புத்தூர். 0772920345, 0719922985

# பூங்காக்களுக்கு கண்காணிப்பு கமராக்கள்

**யாழ்ப்பாணம், பெப்.11**

**யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் இரண்டு பூங்காக்களுக்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.**

பண்ணையில் உள்ள கடல் நீர் ஏரி பூங்கா மற்றும் பழைய பூங்கா வீதியில் உள்ள சிறுவர் பூங்கா ஆகிய இரண்டு பூங்காக்களுக்குமே கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

நகரை அண்டிய பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்தப் பூங்காக்களுக்கு தற்போது பொதுமக்களின் வருகை அதிகரித்துள்ளது. பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. (எ-17)

## பாற்குட பவனியும் சங்காபிஷேகமும்

யாழ்ப்பாணம், பெப்.11

சங்கரத்தை குளத்தடி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் பாற்குட பவனியும் சங்காபிஷேக விழாவும் இடம்பெறவுள்ளது. சங்காபிஷேக ஆரம்ப நிகழ்வாக வட்டுக்கோட்டை பத்திரகாளி சமேத வீர பத்திரசுவாமி ஆலயத்திலிருந்து இன்று காலை 6 மணிக்கு பாற்குடபவனி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து சங்காபிசேக சிறப்புப் பூஜைகள் இடம்பெறும்.

'சங்காபிஷேக மகத்துவமும் பாற்குடபவனியும்' என்ற விடயம் தொடர்பாக காரை எம்.பி.அருளானந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார் என ஆலய முதன்மைப் பூசகர் தெரிவித்துள்ளார். (எ-4)

### மக்கள் நடமாட்டமின்றி
## வெறிச்சோடியது வவுனியா நகரம்

வவுனியா,பெப்.11

வவுனியா நகரம் நேற்று சன நடமாட்டம் இன்றிக் காணப்பட்டது. வியாபார நிலையங்களும் பிற்பகலில் மூடப்பட்டு நகர மத்திய நிலையம் வெறிச்சோடிக்காணப்பட்டது.


காலை வேளையில் உணவகங்கள், சந்தைகள், மீன் சந்தைகளில் பொதுமக்களைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும் பிற்பகலில் சன நடமாட்டம் இன்றி வீதிகள் காணப்பட்டதுடன் வங்கிகளில் சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக்காணப்பட்டது. தேர்தலில் காலையில் அதிகளவானோர் வாக்களிக்கச்சென்றபோதும் பிற்பகலிலிருந்து வாக்குச் சாவடிகளும் சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டன.

வீதிகளில் பொலிஸார் கடமையில் இருந்ததையும் இராணுவத்தினர் வாகனத்தில் ரோந்து நடவடிக்கை மேற்கொண்டதையும் நேற்று காணமுடிந்தது.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 766
சீட்டிழுப்பு திகதி 2018.02.10 சனிக்கிழமை
B 02 33 60 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,924,732/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

EASY ENGLISH WAY
FRENCH LANGUAGE
பிரான்ஸ், கனடா செல்வோரிற்கானது
திருமணமாகி U.K செல்வோரிற்கான
IELTS LIFE SKILLS
(A1, B1)
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
BASIC ENGLISH
தொடர்புகளுக்கு - 077 977 3050, 071 034 4064
44 பலாலி வீதி, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



### வாஞ்சிநாதஐயர் சிவஸ்ரீ அகிலேஸ்வரக்குருக்கள்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தெல்லிப்பழைதுர்க்கையம்மன்கோயில்பிரதமசிவாச்சாரியாரும் ஆகிய சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் நேற்று (10.02.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாஞ்சிநாதஐயர் சிவகாமிஅம்மா தம்பதியரின் அன்புமகனும் சுகல்யாவின் அன்புக்கணவரும் அமிர்தனியின் அன்புத்தந்தையும் கதிர்காமநாதக்குருக்கள், நவநீதக்குருக்கள், சயந்தன் சர்மா, ஜெயதுளசி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சுவரொட்டிகளுடன் கைதுசெய்யப்பட்டவர் நபர் பிணையில் விடுவிப்பு

உள்ளூராட்சி தேர்தல் சுவரொட்டிகளுடன் கைது செய்யப்பட்ட இளைஞரை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. மீசாலைப் பகுதியில் நேற்று அதிகாலை. 3 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட வேளையில் அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் நடமாடிய இளைஞரைச் சோதனையிட்டபோது பெருமளவு மாதிரி வாக்குச்சீட்டுக்களும் சுவரொட்டிகளும் கைப்பற்றப்பட்டன. இளைஞர் கைது செய்யப்பட்டார். இளைஞரை கொடிகாமம் பொலிஸார் நேற்று பதில்நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் முற்படுத்தியபோது இளைஞரை ஒரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## ஆர்வத்துடன் வாக்களிக்க சென்ற சிறப்புத்தேவையுடையவர்கள்

யாழ்ப்பாணம் பெப் 11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று சிறப்புத் தேவையுடையவர்களும் வாக்களிப்பு நிலையங்களுக்கு ஆர்வத்துடன் சென்று வாக்களித்தனர்.

குறிப்பாக கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் நாவாந்துறை, சுண்டுக்குழி, ஈச்சமோட்டை போன்ற பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் சிறப்பு த்தேவையுடையவர்கள் ஏனையவர்களின் உதவியுடன் வருகை தந்து வாக்களித்ததைக் காணமுடிந்தது. (எ-17)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக 2017 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கடமையாற்றிருந்த

**அமரர் இராஜேந்திரம் புவன்ராஜ்**



அவர்கள் நோயுற்றிருந்த காலப்பகுதியிலும் எமது சங்க வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டிருந்தார். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நெறியாளர்குழ உறுப்பினர்கள்,**
**பொதுச்சபை பிரதிநிதிகள், பணியாளர்கள்,**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**

(CS/31895)(11,17)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேசசபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ச.ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

**சந்தியா யோகம்**

அவர்களின் மறைவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.



**நல்லூர் பிரதேசசபை, நலன்புரிச்சங்கம்.**

(3745)(11.17)

# வழியில் கண்டெடுத்த பணப்பையை ஒப்படைத்தார் உழவியந்திர சாரதி

## மக்கள் பாராட்டு

சாவகச்சேரி,பெப்.11

வீதியில் கண்டெடுத்த பணப்பையை உரியவரிடம் சேர்ப்பித்த உழவு இயந்திர சாரதியை பொது மக்கள் பாராட்டினர்.

தென்மராட்சி தெற்கு மறவன்புலவைச் சேர்ந்த உழவு இயந்திரச் சார்தி வலிகாமத்துக்கு வைக்கோல் கொண்டு சென்று விட்டுத் திரும்புகையில் செம்மணிப் பகுதியில் பணப்பையைக் கண்டெடுத்துள்ளார். பணப்பை கைதடியைச் சேர்ந்தவருக்குரியது எனக் கண்டு அந்தப் பகுதி அலுவலருடன் தொடர்பு கொண்டு பணப்பையை ஒப்படைத்துள்ளார். பணப்பையைத் தொலைத்தவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பதவி நிலையில் கடமையாற்றுவதாக அறிந்து அவருடன் தொடர்பு கொண்டார். அவர் அங்கு வந்து பணப்பையைப் பெற்று சரி பார்த்து உறுதி செய்தார்

சாரதியின் உயர்ந்த குணத்தை மக்கள் பாராட்டியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## துயர் பகிர்தல்

வேலணை மேற்கு, மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தின் முன்னாள் பரிபாலன சபையின் தனாதிகாரியான **அமரர் சண்முகலிங்கம்** அவர்களின் துணைவியாரும் தற்போதைய பரிபாலன சபையின் பொருளாளரான ஓய்வு நிலை அதிபர் **மு.மகேந்திரன்** அவர்களின் மாமியாரான வேலணை மேற்கூரைப்பிறப்பிடமாகக் கொண்ட

**திருமதி அன்னலட்சுமி சண்முகலிங்கம்**



பிறப்பு 12.07.1935 இறப்பு 08.02.2018

அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். எமது ஆலய வ்ளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய குடும்பத்தவர்களின் துயரத்தில் நாமும் பங்குகொள்கின்றோம். அன்னாரது ஆத்மா பெரியபுலத்தானின் பாதார விந்தங்களில் அமைதியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஐங்கரன் அன்னதான சபையினர்,**
**வேலணை மேற்கு.**

**பரிபாலன சபை,**
**பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்**
**வேலணை மேற்கு.**

(CS 13794.15/17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 31.05.1951 இறப்பு 11.01.2018

**திருமதி சரஸ்வதிதேவி (தங்கா) நற்குணம்**

அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**15, கதிரமலை வீதி,**
**சுன்னாகம் தெற்கு.**

**குடும்பத்தினர்.**
**021 224 0315**

## மரண அறிவித்தல்

# திருமதி சோதிப்பிள்ளை செல்லத்துரை



**தோற்றம்** 01.07.1922 **மறைவு** 09.02.2018

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை செல்லத்துரை 09.02.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி -காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பறுவதத்தின் அன்புச் சகோதரியும் ஜெயலட்சுமி, யோகலட்சுமி, சோமசுந்தரம், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் விஜயலட்சுமி உத்தமலட்சுமி, சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் முத்துலிங்கம், கலைரதி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் தர்மலிங்கம், ரவிசந்திரன், மோகனா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆறுமுகதாஸ், ஜெயகுமாரி, ஜெயந்தினி, ஆனந்தசிவம், சுதர்சன், சந்திரகுமார், சுபாசினி, யசோதரன், யசிதா, யசிகரன், காயத்திரி, பிரிந்தா, கௌசிகா, பிரணவன், ஜெகசோதி, ரஜிந்தா, சுகானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜெனித்தா, ஆருஜன், சதுஜா, சன்ஜே, சுவிற்றா, விஷாலி, விஷ்ணு, யதுசன், மதுமிதா, ஹம்சவர்ஷினி, ஹரிஸ்பவன், சிவசங்கரி, சாரங்கன், சூரியதரன், சுஷ்மிதா, சுசீலா, சுகன்ஜா, அக்ஷயன், அஸ்வினி, லிங்கன், தேவ், அபிலாஷ், அக்ஷரா, அபிசரன், ரித்திஜன், ஆதன்ஜா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆலங்குளாய், சண்டிலிப்பாய்.**
**0212240894**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(IN 5818/15/17)


LG
Life's Good
Dual Inverter COMPRESSOR
INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY
LG DUALCOOL
Inverter Air Conditioner
தோற்றம் ஒன்றானாலும்,
வேற்றுப் பிறப்பாகும்!
எந்தவொரு சூழலிலும் வழக்கமான இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகளை போலில்லாமல் LG DUALCOOL இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகள் 40% வரையான அதிக குளிருட்டலும், 60% வரையான ஆற்றல் சேமிப்பையும் உறுதிசெய்கிறது. LG DUALCOOL இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகளை அபான்ஸில் மட்டுமே உங்களுக்கு பெற்றிட முடியும்.
LG DUALCOOL இன்வெர்ட்டர்
ஏனைய இன்வெர்ட்டர்கள்
60% வரை மின் சேமிப்பு
நிலையான வேகத்தையுடைய வளிச்சீராக்கிகளை விடவும் 40% வரை விரைவான குளிர்ச்சி
40% வரை சத்தத்தை குறைக்கிறது
பாதுகாப்பு, நீடித்த ஆயுள், துரு பிடிக்காத கொப்பர் கண்டென்சர் அபான்ஸில் மட்டுமே
Capacity | 12000btu (Smart Inverter) | 18000btu (Dual Inverter) | 24000btu (Dual Inverter)
Model No. | JS-Q126ENP7 | JS-Q1865NP7 | JS-Q2465NP7
Price | Rs.109,990/- | Rs.136,990/- | Rs.154,990/-
Cash Discount | Rs.15,000/- | Rs.22,000/- | Rs.18,000/-
வளிச்சீராக்கியை கொள்வனவு செய்யும் போது LED தொலைக்காட்சி அல்லது மினி குளிரூட்டி இலவசம்!
20% வரை தள்ளுபடி
36 மாதங்களுக்கு வட்டியின்றிய தவணைமுறை கொடுப்பனவு
Standard Chartered
கடனட்டை உரிமையாளர்களுக்கு
நாடளாவிய அபான்ஸ் /அபான்ஸ் லைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
0115999000
Abans.com
Abans


SAMSUNG
Experience the amazing
Galaxy A8+
Water Resistant
IP68
Infinity Display
sAMOLED, 18.5:9
Dual Front Camera with Live Focus
16MP + 8MP, F1.9
Available at: JKOA SINGER SINGHAGIRI softlogic
*Offer valid till stocks last, limited to 700 | Offer is validated based on IMEI tracker activation info |
Prices are subjected to change without prior notice | For more details contact the distributors or dealers
| Product images, features and specifications shown are for visual representation purposes only, the actual product may vary
Buy a Galaxy A8+ and get a pair of free* Samsung Level U headphones.
Galaxy A8+
Rs. 99,990/-
SIMPLY DIAL
011 SAMSUNG
7267864
www.facebook.com/SamsungLanka

# தேர்தல் வாக்களிப்பு பதிவுகள்


அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொலனறுவையில் வாக்களித்தார்.


மெதமுலனவில் முன்னாள் அரச தலைவர் மகிந்த வாக்களித்தார்.


தலைமை அமைச்சர் ரணில் கொழும்பில் வாக்களித்தார்.


எதிர்க்கட்சித் தலைவரும் த.தே.கூ. தலைவருமான இரா.சம்பந்தன் திருகோணமலையில் வாக்களித்தார்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வாக்களித்தார்.


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா வாக்களித்தார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வாக்களித்தார்.


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ்பிரேமச்சந்திரன் வாக்களித்தார்.


வலிகாமம் வடக்கு பன்னாலை சேர் கனகசபை வித்தி யாலயத்தில் தமது வாக்கினை பதிவு செய்ய வந்த 98 மற்றும் 92 வயதுடைய தம்பதிகள்



அமைச்சர் ரிசாத் பதியுதீன் மன்னாரில் வாக்களித்தார்.





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் வாக்களித்தார்.



# எம் இதய தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 • 06 • 1964



மறைவு
23 • 01 • 2017

## அமரர் உயர்திரு E.S.பேரம்பலம் கணேசலிங்கம்

(உரிமையாளர் E.S.P. சக நிறுவனம் - கொழும்பு, E.S.P. சக நிறுவனம் - யாழ்ப்பாணம்)

(அகில இலங்கை சமாதான நீதிவான்(JP), சிவதொண்டன், தேசகீர்த்தி, தேசமாணி, வணிகமாமணி, கொழும்பு மாவட்ட மனித உரிமை அமைப்பாளர், இறைபணிச்செம்மல்)

திதி : 11.02.2018

ஆலமரம் சரிந்தது விழுதுகள் வளரும் முன்னே
ஆண்டொன்று அகன்றிடினும் இன்றென எண்ணிடும் மனசு
உள்ளம் கனக்கிறது நிமிடங்கள் யுகங்களாக கரைகிறது
உங்கள் பிரிவு தந்த வலி ஆழ்மனதை ரணமாய் தைக்கிறது

இன்பங்கள் சேருமிடத்தில் இன்முகம் காட்டி நின்றீர்கள்
துன்பங்கள் சேருமிடத்தில் துணிவு தந்து துணை நின்றீர்கள்
பொது சேவை என்று வந்தால் பொக்கிஷமாய் சேவை செய்தீர்கள்
அத்தனையும் மறந்து விண்ணில் ஓராண்டு வாழ்ந்து விட்டீர்கள்

குடும்ப தலைவனாய் நின்று முன்னுதாரணமாய் நின்றீர்கள்
கற்பனைக்கும் எட்டாத காருண்யனாய் திகழ்ந்தீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில் நெடிதுயரும் காலம் வருமுன்னே
ஈசனுடன் சங்கமித்து உருவற்று சோதியாய் போனதேனோ

சரிவுகளிலும் தளராத நிமிர்நடையும் தயங்காத பேச்சும்
புன்சிரிப்புடனே பழகும் உங்கள் கனிவு கலந்த நெஞ்சமும்
உத்தமனாய் வாழ்ந்து தொழிற்றுறையில் எட்டிய உயரமும்
எம் கண்முன்னே அழியாக் காவியமாய் நிற்கின்றன

ஈராறு மாதங்களாயினும் ஆறிடுமோ எம் துயரம்
களங்கமற்ற உங்களை மெச்சாதோர் உலகிலில்லை
நீங்கள் காட்டிய புகழ் தந்த அடையாளத்துடன் வாழ்கின்றோம்
உங்களைத் தந்தையாய் பெற நாம் செய்த தவம் என்னவோ ?

பாசமுடனே பெற்றெடுத்த பிள்ளைகளை பரிதவிக்க விட்டு
நடப்பது பொய்யா, மெய்யா எனும் மயக்கத்தில் மனைவி கதற
ஊர் வாழ உதவிகள் செய்த முதல்வனை இழந்து உறவுகள் பதற
உலக வாழ்க்கையில் பற்றறுத்து பிரிந்து சென்றதேனோ ?

பாரினிலே புண்ணியம் பல செய்து பல்லாண்டு வாழ முன்
காலனவன் உங்கள் உயிர் பிரித்து கொடும்பாவம் செய்ததேனோ
உத்தம குணாளனாய் திகழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கணேச பவனம்,
வாரிவளவு, காரைநகர்.

மனைவி, மக்கள்
இல.11, பெதெஸ்டா வீதி, கொழும்பு - 05

(IN 5809)(14.17)

## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## பல்கலைக்கழக அனுமதிகள் கல்வியாண்டு - 2017/2018

**நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்/நடனம்/நாடகமும் அரங்கியலும்/கட்புல, தொழில் நுட்பக் கலைகள்) கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை**

விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கற்கை நெறிகளை தெரிவுசெய்த பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

### பதிவு செய்வதற்கான தகைமைகள்

ஓகஸ்ட். 2017 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (2017/2018) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 1.2 பிரிவைப் பார்க்கவும். பக்கம் 11) அத்தோடு தாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தியும் (C) ஏனைய பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

### பரீட்சை மொழி

செய்முறைத்திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் மட்டுமே நடத்தப்படும். (2017/2018 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலில் 2.2.1 பிரிவைப் பார்க்கவும். பக்கம் 39)

### விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான தாளில் தமது சொந்த விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா. 300/- செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவேண்டும். இக்கொடுப்பனவை "சிரேஸ்ட உதவி நிதியாளர். சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்" கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை என்ற பெயருக்கு வங்கிக் கணக்கிலக்கம் 075-100110000-767 மக்கள் வங்கி. மட்டக்களப்புக் கிளைக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

க.பொ.த (சா/த). க.பொ.த (உ/த) பரீட்சைச் சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவை அதிபர் அல்லது சமாதான நீதிவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தல் வேண்டும். மூலப்பிரதிகள் அனுப்பப்படத் தேவையில்லை.

பரீட்சார்த்திகள் சுய விலாசம் இடப்பட்ட ரூபா 35/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை (23x10 செ.மீ) யினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இக்கடித உறை அனுமதி அட்டை அனுப்புவதற்கு பயன்படுத்தப்பட இருப்பதனால் சரியான அஞ்சல் முகவரி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்திலும் கல்விச்சான்றிதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் ஏதாவது வேறுபாடு காணப்படுமானால் இவை இரண்டும் ஒரே நபரைக் குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழியும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறை பரீட்சை நடைபெறும் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதியில் மிகக் குறைந்த தகைமைகளை கொண்டிராத அல்லது உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (சா/த). க.பொ.த (உ/த) சான்றிதழ்கள் இணைக்கப்படாத அல்லது கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அல்லது குறித்த திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் பதிவுத் தபாலில் " சிரேஸ்ட உதவிப் பதிவாளர். சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம். கிழக்குப் பல்கலைக்கழகம். கல்லடி. மட்டக்களப்பு " என்ற முகவரிக்கு 20.02.2018 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் செய்முறைத்திறன்காண் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

செய்முறைத் திறன்காண் பரீட்சை தொடர்பான விபரங்களை கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் (www.esn.ac.lk) பார்வையிடவும். மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்யவும் முடியும். இது தொடர்பில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள 065-2222663 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**பணிப்பாளர்.**
**சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**கல்லடி, மட்டக்களப்பு.**

### SWAMI VIPULANANDA INSTITUTE OF AESTHETIC STUDIES, EASTERN UNIVERSITY, SRILANKA.
### APPLICATION FOR UNIVERSITY ADMISSIONS- 2017/2018

**Admission for BFA (Carnatic Music/Dance/Drama & Theatre/Visual &Technological Arts) Degree Programmes**

01. Name of the Applicant: (With Initials)
Name Denoted by Initials:
National Identity Card Number:

02. Permanent Address:
Telephone Number:
Fax No: (if available)
E-Mail Address (if available)

03. Result of the G.C.E (Advanced Level) Examination:
Index Number:
Z Score:
General Aptitude Test Marks:

| No | Subjects | Grades | Medium |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |

04. Name and Address of Parent/Guardian:

05. Course of Study Applied for University Admission – 2017/2018:

| | |
|---|---|
| Music | |
| Dance | |
| Drama & Theatre | |
| Visual & Technological Arts | |

06. Documents to be attached (**Please tick the appropriate column**)
1. Paying-in Voucher
2. Certified Copy of G.C.E (A/L) Certificate/s
3. Certified Copy of G.C.E (O/L) Certificate/s
4. Certificate in Proof of Eligibility for University Admission Including ZScore/District
5. Affidavit in support of any change in names appearing in different Documents/Certificates

I certify that the above particulars furnished by me are true and accurate.

........................ Date ........................ Signature of Applicant

........................ Date ........................ Signature of Applicant

(C 13410)(14.17)

## CENTRE FOR IT EDUCATION
### Job Skills Development & Training

புதிய பிரிவுகள் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக உளச்சார்புப் பரீட்சை (Abtitute Test) நடத்தப்பட்டு சிறந்த பெறுபேறுகள் பெறுவோருக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட இருப்பதனால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகளைப் பெற விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செயன்முறை கற்பித்தல் முறையை உள்ளடக்கியதோடு தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும். குழுக்களாக இணைந்தும் பயிற்சி பெறலாம்.

**Examination Hall : Lecture Hall, Aaruthal CiTE Centre. #125 Main Street, Jaffna. Date: 20. 02. 2018. Time: 10 AM**

**Programme I**
Computer Literacy and English Language Skills Development and Training Programme
ICT | Graphic Design | Web Designing
Soft skills
Covers ICT and Communicative English Syllabus of TVEC- NVQ Level 3,4

**Programme II**
IT Job Skills Development & Training
Web Development Training including Digital marketing
Desktop Publishing & Designing.
Office & Database Management.
Course include Communicative English, Soft Skills & usage of Social media

உங்கள் பதிவுகளை மாசி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

SECOND BATCH COMMENCES FROM **01.03.2018**


Aaruthal's CiTE BELIEVE TO ACHIEVE

**021 221 4099**

**No. 125 Main Street, Jaffna (near to Courts Complex)**

Powered by RATNAM FOUNDATION    Facilitated by Aaruthal

## 15 ஆம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 26.02.2003 அன்று
இறைபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவர்

**அமரர்**
**ஆ.க.ஜெயராசா**
கமநல சேவை ஊழியர் -
புதுக்குடியிருப்பு

மலர்வு 25.09.1948    உதிர்வு 26.02.2003


அவர்களின் பதினைந்தாம்
ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு

இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கச்சார் வெளி பளை எனும் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கச்சார் வெளி,**
**பளை,**
(CS 13655)(14.17)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன்கள், பேர்த்தி**
**076 894 8120**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 15.01.2018
திங்கட்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர்**
**இராமு**
**ஜெகதீஸ்வரநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக்
கிரியைகள் (13.01.2018)
செவ்வாய்க்கிழமை

அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் மறுநாள் (14.01.2018) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது ஞானசாரியார் வீதி. துன்னாலை மேற்கு. கரவெட்டி இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**ஞானசாரியார் வீதி,**
**துன்னாலை மேற்கு, கரவெட்டி.**

**குடும்பத்தினர்.**
**021 226 2051**

(CS 13742)(14.17)

## வீடு வாடகைக்கு உண்டு

சிறிய குடும்பத்திற்கு (2 அல்லது 3)
யாழ். நகரில் வீடு வாடகைக்கு உண்டு.
**உடன் தொடர்புக்கு - 076 379 1672**

## HOTELROLEX
## வேலையாள்கள் தேவை

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- பார்சல் கட்டுபவர்கள்

(தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் மட்டும்)
ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக
தொடர்புகொள்ளவும்

077 907 9888/021 222 2808

## தேவை

யாழ்.நகரில் உள்ள கடை ஒன்றில் வேலை
செய்வதற்கு 20 வயதுக்குட்பட்ட
இளைஞர்கள் தேவை.

**077 648 7264** (CS/13775) (11.17)

## Mobile Connection

எம்மிடம் Dialog 500 நிமிட Free Blaster
Mobile இணைப்புக்கள் உள்ளன. உடனடியாக.
4G Router 1900/- அழைக்கவும்.

**077 474 0000/ 077 112 0480**

## Job Offer

கல்வியங்காட்டுக்கு அருகில் உள்ள CD கடைக்கு
வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் மற்றும்
கமிஷன் வழங்கப்படும். அழையுங்கள்,

**077 474 0000/ 077 212 3125**

## மணமகன் தேவை

1984ஆம் ஆண்டு பிறந்த கேட்டை நட்சத்திரம் 2ஆம் செவ்வாய் உள்ள மணமகன் தேவை. திருமணமாகி விவாகரத்தானவரும் விண்ணப்பிக்கலாம் (உள்நாடு/வெளிநாடு). தரகர் தேவையில்லை.

(CS/13778)(10) தொடர்பு: 077 4060402

## வாடகைக்கு

பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும்)
தொடர்பு:
076 8383672/ 077 915 1247 (CS/13768)(10)

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை. (ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்:**

விற்பனை உதவியாளர்

- க.பொ.த (சாதாரணதரம்) கற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- வயதெல்லை 19 -45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுய விவரக்கோவை. அடையாளஅட்டை போட்டோப்பிரதி ஆகியவற்றை இணைத்து 20.02.2018 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.


(CS 13700)(14.17) **மாதச் சம்பளமாக ரூ.25000 வழங்கப்படும்.**

**விண்ணப்ப முகவரி : Blue Skyy Agency**
**173, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் புவன்ராஜ்

**(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)**



அளவெட்டி தம்மனையை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் புவன்ராஜ் 09.02.2018 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் - புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், தில்லையம்பலம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், வேணுஜன் (மாணவன், யா/வயாவிளான் மத்திய கல்லூரி), கஜனி (மாணவி, யா/வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம் - கமலேஸ்வரி தம்பதிகளின் பெறாமகனும், காலஞ்சென்ற அரியகுட்டியின் மருமகனும், மதன்ராஜ் (கனடா), ரவிராஜ் (கனடா), ரஜனி, சிவரூபன் (கனடா), நிகேதன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புவிதா (கனடா), சிவபாலேஸ்வரி (கனடா), கவிதா (கனடா), சிவகுமார், பாலவதனி, மகேந்திரராஜா, சிவனேஸ்வரன், விக்கினேஸ்வரன், இரஞ்சனாதேவி, மனோரஞ்சிதம், யசோதா, சுதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் கிழக்கு,**
**கலைவாணி மில்லேன்.** (CS/13767)(11,17)

தகவல்
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாதேவி விக்னேஸ்வரன்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாதேவி - விக்னேஸ்வரன் கடந்த 09.02.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - ருக்குமணி தம்பதியரின் அன்பு மருகமளும், காலஞ்சென்ற விக்னேஸ் வரனின் அன்பு மனைவியும், ராகினி, கலாவதி, விஜயராணி, ராஜீவலோசனா, சோபா ஆகியோரின் அருமைத் தாயும், பிரபாகரன், காலஞ்சென்ற விஜயன் மற்றும் ரேகன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற சுதர்சினி, ஜசிதா, கேதீஸ், இருஷியன், பவிஷன், கிஷாளன், சஜிந்தவி, கவிஷா ஆகி யோரின் பேர்த்தியும், கபின்சனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.15, கன்னாரலேன், நல்லூர்.** (cs. 13773) (13.17)

தகவல் :
**குடும்பத்தினர்**



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்
யாழ். **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

*கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

*உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



*கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.



FACIALS *(முக அழகுக்கலை)*
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

BRIDAL DRESSINGS
*(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

*பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**

ஆரம்பமாகியுள்ள கிழமை நாள் மற்றும்
சனி, ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு
மேலும் மாணவிகள் அனுமதிக்கப்படுவர்

**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**
**-இயக்குநர்-**




## மரண அறிவித்தல்

### திருமதி முத்துப்பிள்ளை பண்டாரி



பிறப்பு: 05.03.1925
இறப்பு 08.02.2018

மட்டுவில் தெற்கு. சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துப்பிள்ளை பண்டாரி 08.02.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - முதலாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பண்டாரியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம், சோதிப்பிள்ளை, பரமு, சின்னத்தம்பி மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணி, பாக்கியம் தியாகராஜா ஆகியோரின் அன்புத்தாயும், முருகேசு, இராசேந்திரம் நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியக்காக மட்டுவில் தெற்கு கொட்டடி தூவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மட்டுவில் தெற்கு.**
**சிவன்கோயிலடி, சாவகச்சேரி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**077 466 0254** (C/310)(11,17)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா



காரைநகர், தங்கோடையினைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா 09.02.2018 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வங்காலி பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், சாந்தரூபியின் கணவரும், பிரவீனா, பிரியந்தி, பிரதீபா ஆகியோரின் தந்தையும், சிவாமோகன், ஜீட் ஜெயபிரகாஸ், ஆனல்ட்பிரியந்தன் ஆகியோரின் மாமனாரும், லஜிவ், ரிதேஸ், றிஷ்விகா, கானிகா ஆகியோரின் பேரனும், சகுந்தலா, சுசீலா, ரவீந்திரராஜா, நிர்மலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம், குலதாசன் மற்றும் விமலநாதன், சந்திரசூரியகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தினேஸ், கஸ்தூரி ஆகியோரின் பெரியப்பாவும், அனபாயன், சஞ்சயன், நிரூபா, பிருந்தா, ப்ரிட்னி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 66/01, அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்: திருமதி **நாகரட்ணம் சகுந்தலா** (ராசாத்தி)

**077 383 7975** (CS/11772)(11,17)

## விற்பனைக்குண்டு

இல.76. அரியாலை.இலந்தைக் குளம் வீதியில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 3. (../9384)(11,17)

**திருநீலகண்டன் - 076 887 2343, 077 946 3658**

## விற்பனை

**TATA 10 Wheel Tipper 2012**
**TATA 10 Wheel Tipper 2011**
**JCB England 2013**

ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு. (IN/5831)(11,17)

**077 314 4756, 077 085 6665**

## German Swiss Academy

**Deutsch மொழிகள்** ஜேர்மன் தூதரகத்தால் கோரப்படும் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு திரு. சு.மயூரன் ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.

இல.17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (Near C.T.B.Bus Stand) 077 645 4998, 021 312 2029

இல.17A, முதலாம் மாடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (Near Bus Stand)

## இரண்டு அடுக்கு மாளிகை வீடு விற்பனைக்குண்டு



பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தில் தொல்புரம் வழக் கம்பரை அம்மன் கோயிலுக்கு வடக்கே 200m தூரத்தில் இரண்டு அடுக்கு வீடு. 5 அறைகள். 02 குளியல் அறைகள். Kitchen, Store room, 8 1/2 பரப்பு காணி. சுற்றிவரமதில். தென்னை மரங்கள். மாம ரங்கள். நெல்லிமரம் போன்ற சோலைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 926 3491, 001 64799 27240, 077 299 8854 (cs.13765)(13,17)

## GRAPHIC DESIGNER/ COMPUTER OPERATOR

**Experience in**
Photoshop/CoralDraw
Tamil, English & Sinhala Typing
Salary Rs.20,000/- (EPF+ETF)

Apply with CV

**Contact:**
**Sunbeam Creations**
52, Bus Stand Complex, Vavuniya
Phone: 0777166601/0247538050
sbccreations@gmail.com/ www.sunbeam.lk

## பகிரங்க ஏலவிற்பனை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளையினர் பாவித்த பல பொருள் கள் குறிப்பாகத் தளபாடங்கள், மின்விசிறி, சுழல் நாற்காலிகள், மின்னியல் சாதனங்கள், அலுவலக உபகரணங்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட இருக்கின்றன.

இடம் :- இல.67, கோயில்வீதி, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை அலுவலகம்

காலம் :- 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி. பிரவேச கட்டணம் ரூபா 100/- அறவிடப்படும்.

பார்வையிடும் நேரம் :- 16.02.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணிவரை.

முக்கிய குறிப்பு :- ஏல தினமான 18.02.2018 இல் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கான பெறுமதியை ரொக்கப் பணமாக செலுத்தி அன்றைய தினமே கொள்வனவு செய்வோர் மாலை 5 மணிக்கு முன்பதாகப் பொருள்களை அப்புறப் படுத்த வேண்டும். மேலும் ஏலவிற்பனைக் குழுவின் முடிவே இறுதியானது.

ஏலவிற்பனைக்குழு,
09.02.2018 இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை (IN/5822)(11,17)

## பணியாளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல Distributing Company இற்கு கீழ்க் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. Invoicing Clerk**
**02) Administrative Assistant**
**03) Stores Assistant**
**04) Sales Representative**

**25.02.2018 இற்கு முன் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
vacancyjaffna@gmail.com

**விள்ம்பர இல 1001,**
**மே/பா/உதயன்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (CS/13777)(11,17)

## விநியோகஸ்தர்கள் தேவை (DISTRIBUTORS)

பிரசித்தி பெற்ற அழகு சாதன மற்றும் நுகர்வோர் உற்பத்திகளை (Consumer Products) விநியோகிப்பதற்காக விநியோகஸ்தர்கள் தேவை.

பிரதேசம் **யாழ்ப்பாணம்**

கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளுடன், விநியோக நடவடிக்கைகளுக்கு எங்கள் நிறுவனத்தின் முகவர்கள்.

விண்ணப்ப தகைமைகள்:
- களஞ்சிய வசதி.
- விநியோக நடவடிக்கைக்கான வாகன வசதி.
- வங்கி உத்தரவாதம் (Bank Guarantee).

உங்கள் விண்ணப்பங்களை முழுமையான விபரங்களுடன் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Harcourts Cosmetics (Pvt) Ltd,**
No. 55, K. Cyril C. Perera Mawatha, Colombo 13. **Tel: 011-2326284, 0773833415**
**Fax: 011-2326283** *E-mail: consol@harcourts.lk*

Fair and Handsome | Himani Navratna | emami 7 Oils in One | odonil | UJALA


## நுரையீரல் பாதிப்பிலிருந்து விடுபடுங்கள்

இருமல், இழுப்பு நோய், மார்பு இறுக்கம், சுவாசக்குறைபாடு ஆகியன சுவாசத்தொகுதியின் செயற்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி, இழுப்பு நோய், சயரோகம், நிமோனியா, நுரையீரல் புற்றுநோய் என்பன சுவாசம் இழப்பு தொடர்பான நோய்களுக்கு வழிவகுக்கும்.

எமது உன்னதமான ஆயுர்வேத மருந்தானது சுவாசப்பாதையின் சளியை அகற்றுவதன் மூலம் சுவாசத்தை இலகுபடுத்தும். வைரஸ் மற்றும் பக்டீரியா தொற்று நோய்களிலிருந்து குணப்படுத்துவதும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**



**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY



## சவுதி அரேபியா வேலைவாய்ப்பு

| வேலைவாய்ப்பு | எண்ணிக்கை | சம்பளம் SR(SLR) |
|---|---|---|
| பேஸ்ட்ரி செப் (f) - PASTRY CHEF | 16 | 5000 (Rs.200,000/-) |
| பேக்கரி செப் (f) - BAKERY CHEF | 12 | 4000 (Rs.160,000/-) |
| கொமி பேஸ்ட்ரி - COMMIS PASTRY | 24 | 3000 (Rs.120,000/-) |
| கொமி பேக்கரி - COMMIs BAKERY | 32 | 3000 (Rs.120,000/-) |

1SR = Rs.40/- ( Subject to change according to the exchange rate )

விதிமுறைகளும், நிபந்தனைகளும்:
- உணவு,தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து இலவசம்.
- 2 வருட ஒப்பந்த காலம்
- நாளொன்றுக்கு 8 மணத்தியாலமும், வாரத்தில் 6 நாட்கள் வேலை
- தகுதிகாண் காலம் 3 மாதம்
- ஒப்பந்த கால முடிவில் நாடு திரும்ப விமானப்பயண டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

AL1316/Advt:/02/18

தொடர்புகளுக்கு:
**0112681212 | 0112684433 | 0777144144**

## கிவ் பி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

இல:6, கலாநிதி மிலினா சுமதிபால மாவத்தை, புஞ்சிபொறளை, கொழும்பு -10. அரச அனுமதிப்பத்திர பதிவிலக்கம்: 1316

## சவுதி அரேபியா வேலைவாய்ப்பு

| வேலைவாய்ப்பு | | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|---|
| எலக்ட்ரீசியன் | ELECTRICIAN | 65 | SR1200 |
| A/C டெக்னீசியன் | A/C TECHNICIAN | 53 | SR1200 |
| மெக்கானிகல் டெக்/ஜெனரேட்டர் | MECHANICAL TECH GENERATOR | 78 | SR1200 |
| லேண்ட்ஸ்கேபர் | LANDSCAPER | 40 | SR1200 |
| பொயிலர் இயக்குனர் | BOILER OPERATOR | 25 | SR1200 |
| HVAC டெக்னீசியன் | HVAC TECHNICIAN | 80 | SR1200 |
| டீசல் மெக்கானிக் | DIESEL MECHANIC | 56 | SR1300 |
| பொயிலர் டெக்னீசியன் | BOILER TECHNICIAN | 30 | SR1200 |
| சில்லர் டெக்னீசியன் | CHILLER TECHNICIAN | 63 | SR2000 |
| தொலைபேசி டெக்னீசியன் | TELEPHONE TECHNICIAN | 44 | SR1200 |
| சிரேஷ்ட எலிவேடர் டெக்னீசியன் | SENIOR ELEVATOR TECHNICIAN | 55 | SR1600 |
| ஒடோ மெக்கானிக் | AUTO MECHANIC | 35 | SR1200 |
| கனரக உபகரண மெக்கானிக் (டீசல்) | HEAVY EQUIPMENT MECHANIC (DIESEL ) | 42 | SR1200 |

1SR = Rs.40/- ( Subject to change according to the exchange rate )

விதிமுறைகளும், நிபந்தனைகளும்:
- உணவு,தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து இலவசம்.
- 2 வருட ஒப்பந்த காலம்
- நாளொன்றுக்கு 8 மணத்தியாலமும், வாரத்தில் 6 நாட்கள் வேலை
- தகுதிகாண் காலம் 3 மாதம்
- ஒப்பந்த கால முடிவில் நாடு திரும்ப விமானப்பயண டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

AL1316/Advt:/03/18

தொடர்புகளுக்கு:
**0112681212 | 0112684433 | 0777529529**

## கிவ் பி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

இல:6, கலாநிதி மிலினா சுமதிபால மாவத்தை, புஞ்சிபொறளை, கொழும்பு -10. அரச அனுமதிப்பத்திர பதிவிலக்கம்: 1316

## காணி விற்பனைக்கு

கைதடி தெற்கு, வைரவர் கோயிலுக்கு அருகில் 15 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு

**021 223 0791/077 114 7395**

## உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை இலகுவாக தொலைபேசி மூலம் அவதானிக்க முடியும்

22 வசதிகள் உண்டு. (AJA 9366)(04,17)

**077 888 7051**

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. (CS 13762/15/17) -075 039 9441

## Room For Rent

Room with attached bathroom for Rent.

**076 352 5306** (CS/13784)(11,17)

## வீடு வாடகைக்கு தேவை

அரச பணிபுரியும் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. (நல்லூர், யாழ்நகரை அண்டிய பகுதியில்) (CS 13770)(14,17)

**077 775 3852**

## வீடு வாடகைக்கு உண்டு

சங்கானை பிரதான வீதியில் சிறிய வீடு வாடகைக்கு உண்டு. (CS 13720)(14,17)

**077 623 7037**

## தேவை

கம்பளை ஏரியாவில் உள்ள கட்டடங்கள் கட்டும் தளத்திற்கு மேசன்கள் தேவைப்படுகின்றனர். ஊதியங்கள் 1500 முதல் ஆக இருக்கலாம்.

தொடர்பிற்கு: 076 7696585/ 071 1641835 (IN/8548)(10)

## பணியாளர் தேவை

திருநெல்வேலி - சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள புத்தகக் கடைக்குப் பணியாளர் தேவை.

**077 128 5749** (../9385)(11,17)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் ஒஸ்கா லேனில் அமைந்துள்ள 2 பரப்புக்காணி. சுற்றுமதில். 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பிற்கு: 0777 460447 (CS/13785)(10)

## காணி விற்பனை

நெல்லியடி நகரத்துக்கு அண்மையாக கணேஸ் அறிவாலய வீதியில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 047 2533 (ACO 166)(10)

## மணமகன் தேவை

யாழில் பிறந்து வளர்ந்த இந்து கௌரவ குடும்பம் 39+, மிருகசீரிடம். மிதுனம். 5'-6", கிரகபாவம் 2, ACCA,CIMA. ஐரோப்பிய நாடொன்றில் மதிப்பு மிக்க நிறுவனத்தில் Accountant. படித்த மணமகன் தனது நாட்டிற்கு பெண்ணை அழைக்க முடியும். பெண்ணாலும் தனது நாட்டில் வேலை பார்க்கக்கூடிய படிப்புள்ள மணமகனை அங்கு அழைக்க முடியும்.

தொடர்பு: 071 838 7425 (ACO 167)(10)

## வேலையாள்கள் தேவை

விடுதியில் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. (CS 13689)(14,17)

**077 285 0821**

## வீடு வாடகைக்குத் தேவை

இருவர் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றுக்கு இணுவில்/ இருபாலை/ கோண்டாவில் பகுதியில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை.

**071 969 2192** (CS/13620)(11,17)

## Luxury Apartment வாடகைக்கு



நாள், கிழமை, மாத அடிப்படையில் கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்

**0773 540 632 / 0774 440 586**
**0776 332 580 / 0779 919 388**
**011 2363991**

## வேட்பாளரின் வாகனம் தீக்கிரை



மட்டக்களப்பு, பெப். 11

மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசபைக்கு போட்டியிடும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் வேட்பாளர் ஒருவரின் வாகனம் நேற்றுமுன்தினம் இரவு தீக்கிரையாக்கப் பட்டுள்ளது. களுதாவளை வன்னியார் வீதியில் உள்ள வேட்பாளர் குணராசா ஜெகதீஸ்வரன் என்பவரின் வாகனமே இவ்வாறு தீயிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (5)










## மனைவி கொலை

# வழக்கை விசாரிக்க நீதிமன்றம் மறுப்பு!

கொழும்பு, பெப். 11

கனடாவில் மனைவியைக் கொலை செய்த குற்றச்சாட்டில் நாடு கடத்தப்பட்ட இலங்கை ஏதிலியை மீண்டும் வரவழைத்து விசாரித்துத் தண்டனை வழங்க முடியாது என்று கனடா நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சிவலோகநாதன் தனபாலசிங்கம் 2007ஆம் ஆண்டு கனடாவிற்கு ஏதிலியாகச் சென்றுள்ளார். அதன் பின் கனடா நாட்டின் நிரந்தர குடியுரிமையைப் பெற்ற இவர், கடந்த 2012ஆம் ஆண்டு மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

56 மாதங்கள் சிறையில் இருந்த அவரைக் கனடா நீதிமன்றம் விடுவித்தது. 2016ஆம் ஆண்டு கனடாவின் உயர் நீதிமன்றம் ஒரு விதிமுறையை விதித்திருந்தது. அதில் குற்றவியல் வழக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும்என்று கூறப்பட்டுள்ளது. சிவலோகநாதன் தனபாலசிங்கம் தொடர்பான வழக்கு கால வரம்புகளைத் தாண்டிவிட்டதால் நீதிமன்றம் அவரை விடுவித்தது. விடுதலையான அவரை உடனடியாகக் குடிவரவு அதிகாரிகள் கைது செய்து, இலங்கைக்கு நாடு கடத்தினர். இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று மேன்முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது குறித்த விசாரணை நீதிமன்றத்திற்கு நேற்றுமுன்தினம் வந்தது.

அப்போது நீதிபதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட அவரை மீண்டும் அழைத்து விசாரித்துத் தண்டனை தர முடியாது என்று தெரிவித்துள்ளார். (5)

# 62 வேட்பாளர்களின் பதவி கேள்விக்குறி

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் 62 வேட்பாளர்களின் உறுப்புரிமை எந்தச் சந்தர்ப்பத்திலும் பறிபோகும் ஆபத்தான நிலையிலிருப்பதாகப் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் சட்ட விதிகளை மீறிய பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காரணமாக இந்த 62 வேட்பாளர்களும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் இவர்களைக் குற்றவாளிகளென நிரூபிக்கும் பட்சத்தில் இவர்கள் தேர்தலில் வெற்றிப் பெற்றிருந்தாலும் இவர்களுடைய உறுப்புரிமை இல்லாமல் செய்யப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு அவர்களால் தேர்தலில் போட்டியிட முடியாதென்றும் அவர் கூறினார்.

எந்தவொரு வேட்பாளரும் தற்போது சிறையில் இல்லை. சில ஆதரவாளர்கள் மட்டுமே தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ளனர். இலஞ்சம் கொடுத்தல், பலவந்தம் செய்தல், அச்சுறுத்தல் விடுத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் காரணமாகவே 62 வேட்பாளர்களும் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதனால் இவர்களுக்கெதிராகத் தண்டனை கடுமையாக அமையலாம். இவர்கள் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டால் இவர்கள் வெற்றி பெற்றாலும்கூட எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்களது உறுப்புரிமை நீக்கப்படலாம் - என்றார். (5)




# ஐக்கிய அரபு எமிரேட்சை விட்டு வெளியேற தடை

கொழும்பு, பெப். 11

டுபாய் வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்ட ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, ஐக்கிய அரசு எமிரேட்ஸ் அதிகாரிகளால் விடுவிக்கப்பட்டுள்ளதாக அயலுறவுத் துறை அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

விசாரணைகள் முடியும் வரை, உதயங்க வீரதுங்கவைஜக்கியஅரசுஎமிரேட்சைவிட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அயலுறவுத்துறை அமைச்சும், சட்டம் ஒழுங்கு அமைச்சும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பன்னாட்டு பொலிஸாரால் வெளியிடப்பட்ட நீல அறிவிப்பின் அடிப்படையிலேயே உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டார்.

குற்றவியல் விசாரணைக்காக, உதயங்க வீரதுங்கவின் இருப்பிடத்தைத் தேடிப் பிடிக்கும் நோக்கிலேயே இந்த நீல அறிவிப்பு வெளியிடப்பட்டது.

எனினும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சட்டத்தின்படியும், பன்னாட்டுப் பொலிஸ் விதிமுறைகளின்படியும், உதயங்க வீரதுங்கவைத் தொடர்ந்து தடுத்து வைக்க முடியாது. இந்தச் சூழலில், அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உதயங்க வீரதுங்க இன்னமும் ஐக்கிய அரபு எமிரேட்சிலேயே தங்கியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விசாரணைகள் முடியும் வரை அவர் நாட்டை விட்டு வெளியேறத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உதயங்க வீரதுங்க தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அபுதாபியில் இந்த விவகாரத்தைக் கையாளும் பன்னாட்டுப் பொலிஸாருடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

இலங்கையில் இருந்து சென்ற அயலுறவுத்துறை அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் குழு, இந்த விவகாரம் குறித்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர், என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (5)

# அமெரிக்கத் தூதரகம் வழமைக்கு திரும்பியது

இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக செயலிழந்த அமெரிக்கத் தூதரகத்தின் பணிகள் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அரசுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப் படாததால், அமெரிக்க அரசுப் பணியகங்கள் பல மூடப்பட்டன.

இதனால் இலங்கையில் உள்ள அமெரிக்க மையமும் மூடப்பட்டது.

எனினும், இரண்டு ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் ஒப்பமிட்டதை அடுத்து, நிலமைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. கொழும்பில் அமெரிக்கத் தூதரகப் பணிகளும் வழமை நிலைக்குத் திரும்பியு ள்ளதாகவும், அமெரிக்கத் தூதரக அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. (5)




உடம்பில் ஓடும் குருதி போல...
Mobil™ கடந்த 150 ஆண்டுகளாக எண்ணற்ற வகையான வீதிகளிலும் சகல விதமான காலநிலைமைகளிலும் பாவித்து நிரூபிக்கப்பட்ட ஒயில்களை வழங்கி வருகின்றது.
அதனால்தான், உங்கள் வாகனத்தின் உயிர்நாடியாக விளங்கும் சரியான மோட்டார் ஒயில் எதுவென்பதை நாம் நன்கறிவோம். நீங்கள் எங்கு எத்தகைய பயணத்தை மேற்கொண்டாலும் உங்கள் வாகனம் நன்கு பாதுகாக்கப்பட்டு அதிசிறந்த முறையில் செயற்படுவதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும்.
Mobil™ - உங்கள் பயணத்தின் பங்காளி.
உங்களுக்கு மோட்டார் ஒயில் பற்றி ஏதேனும் பிரச்சினை இருந்தால் அழையுங்கள் Dr. M "ஒயில் ஸ்பெஷலிஸ்ட்" – 077 777 2002
Mobil
மெக்லரன்ஸ் லூப்ரிகன்ற்ஸ் லிமிட்டட்
இல.341, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொ: 0114 967 474 | 077 777 2009 பெக்ஸ்: 0112 332 633
வலைத்தளம்: www.mclarenslubes.lk
www.facebook.com/Mobil.Srilanka


வாழ்வை பாதுகாக்கும் வீரர்களுக்கான கௌரவம்
ஜனசக்தி – தேசிய வீரச்செயல் விருது விழா 2018
"ஏதேனும் விபத்தின்போது தன் உயிரை பணயம் வைத்து இன்னுமோர் உயிரை காத்த அல்லது காக்க முயற்சித்த நீங்கள் உண்மையில் வீரரே. உங்களை நாடறியச்செய்து கௌரவிக்க நாம் தயார்."
அவர்களுள் ஒருவர் நீங்களானால் அல்லது அவ்வாறான ஒருவர் தொடர்பிலான விபரங்களை நீங்கள் அறிந்திருப்பின், அது தொடர்பான தகவல்களை
2018 பெப்ரவரி 28ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்!
விண்ணப்பப்படிவங்களை பொதுஜன வீரச்செயல் மன்றத்தில் அல்லது எந்தவொரு ஜனசக்தி கிளையிலும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் www.civilianbravery.org என்னும் இணைத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.
වීර පොදුජන පදනම
குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம்
Foundation for Civilian Bravery
137ஏ, சித்தஸ்தாராம வீதி, வலான, பாணந்துர.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 038 2 241 777
JANASHAKTHI INSURANCE


இமாமி கோல்ட் டர்மரிக் ஸ்கின் கிரீம்
emami GOLD Turmeric Skin Cream
சிகப்பழகை பெற பல கிரீம் வகைகள் இருந்தாலும் பளபளக்கும் தங்கநிற பொலிவினை சருமத்திற்கு பெற்றுக்கொடுப்பது இமாமி கோல்ட் டர்மரிக் ஸ்கின் கிரீம்....
தங்கத்துகள்கள்
சருமத்துவாரங்களின் உள்ளே தங்கியுள்ள அசுத்தங்கள் மற்றும் அமிலங்களை வெளியேற்றி சருமத்தினை சுத்தப்படுத்துகின்றது. சருமச்சுருக்கத்தினை குறைத்து தங்கநிறப் பொலிவினை பெற்றுத்தருகின்றது.
மஞ்சள்
சருமத்தினை சுத்தம் செய்து பொலிவாக்குகின்றது. கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகளை நீக்குகின்றது.
சந்தனம்
முகப்பருக்கள் ஏற்படுவதை தடுக்கின்றது. சருமத்தின் ஈரலிப்புத்தன்மையை காத்து சருமத்தினை போஷணைப்படுத்துகின்றது.
குங்குமம்
சருமத்தின் பொலிவு மற்றும் பிரகாசமான தோற்றத்தினை வளர்ப்பதுடன், மிருதுவான சருமத்தினை பெற்றுத்தருகின்றது.
அதிமதுரம்
சருமத்தின் பொலிவு மற்றும் பிரகாசத்தினை அதிகரிக்கின்றது
தங்கநிறப் பொலிவும் பிரகாசமான தோற்றமும்
NEW
emami GOLD Turmeric Skin Cream with 24k Gold
30 மி.லீ: ரூ. 300/-
தொலைபேசி: 011 2326281 | 011 2326284 | 077 3833456

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிங்கள பேரினவாதம்

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தன்று பிரிட்டனில்வாழும்புலம்பெயர்தமிழர்கள்லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக அணிதிரண்டு போராட்டம் நடத்தி இலங்கை அரசுக்கு எதிரான தத்தமது எதிர்ப்பைபதிவுசெய்திருந்தனர். லண்டனில்உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றும் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் வகையில் 'கழுத்தை அறுப்பேன்' என்னும் விதமாக சைகை செய்திருந்தார். இது காணொலியாகப் பதிவுசெய்யப்பட்டு பன்னாட்டு ஊடகங்களால் வெளியிடப்பட்டது. சமூக வலைத்தளங்களிலும் மிகவும் வேகமாக குறித்த காணொலி பரவி பரபரப்பாகியது.

இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்ட பிரிகேடியர் பிரியந்த பெர்னான்டோவுக்கு எதிராக கண்டனங்கள் வலுத்தன. அவர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்என்ற குரல்பரவலாகவலுத்தது. எனினும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று அழுத்தம் திருத்தமாக இலங்கையின்தரப்பில்வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்களைப்பொறுத்தமட்டில்எந்தவிதமானஒழுக்காற்று நடவடிக்கையோ அல்லது சட்ட நடவடிக்கையோ இல்லாமல் பெர்னான்டோ தனது பணிகளைத் தொடர்கின்றமை ஏற்றுக்கொள்ளத் தகாதவொன்றே. இது ஜனநாயகமும் அல்ல.

இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்ருவான்விஜயவர்த்தன ஆகியோர் சேனநாயக்க செய்ததுதான் சரி என்று தத்தமது கருத்துக்களையும், அதனூடான ஆதரவையும் பதிவுசெய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் முழுமையான காணொலிப் பதிவுகள் எமக்குக் கிடைத்துள்ளன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நபர்கள், காரணிகள் மற்றும் இடம்பெற்ற சம்பவங்கள் என்று அனைத்தையும் ஆராய்ந்தோம். பிரியங்க மீது எந்தத் தவறும் இல்லை. அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய அவசியமில்லை. அரச தலைவரின்நேரடித்தலையீட்டில்பிரியங்கதனது பதவியைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்தமிழர்களைப்புலிகள்என்றபோர்வையின் கீழ் அடையாளப்படுத்துவது இலங்கை அரசுக்குக் கைவந்த கலை. அதை மீண்டும் ஒருமுறை நிரூபித் துள்ளார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன. அவர், சுதந்திரதினத்தன்று இலங்கைஅரசுக்கு எதிராகபோராட்டத்தில்ஈடுபட்டவர்கள்புலிகள். அவர்களுக்கு அடிபணியாமல் பிரியங்க செயற்பட்டுள்ளார் என்னும் விதமாக தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார்.

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கு ஏகப்பட்ட உரிமைகள் உள்ளன. இதன்படி ஒன்றுகூடுவதற்கும், தத்தமது கருத்துக்களை, எதிர்ப்புக்களைவெளிப்படுத்துவதற்கும் கூட மக்களுக்கு உரிமையுள்ளது. அதிலும் பிரிட்டன் போன்ற ஜனநாயகத்துக்கு இலக்கணமான நாட்டில் வைத்தே, ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் அதனூடாக தத்தமது கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கை, கொலை மிரட்டலை என்னவென்று சொல்வது? இலங்கைக்கு வெளியிலேயே தமிழர்களுக்கு இந்த நிலையென்றால், இலங்கைக்கு உள்ளே எவ்வாறாக அவர்கள் நடத்தப்படுவார்கள்? அவர்களுக்கு உரிய உரிமை எந்த மட்டத்தில் பேணப்படும் என்பது தொடர்பில் பன்னாட்டுச்சமூகம் சிந்திக்க வேண்டும்.

பிரியங்க பெர்னான்டோவினது செயற்பாடுக்கு எதிராக இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களும் தத்தமது எதிர்ப்புக்களை வலுவாகப் பதிவுசெய்ய வேண்டும். அது காலத்தின் கட்டாயமும்கூட.

# மைத்திரியின் அண்மைக்கால நடவடிக்கைகள் தவறானவை

சேரலாதன்

அரசதலைவரின் அண்மைக்காலநடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகக் காணப்படவில்லை. அவரையொரு நடுநிலையான. இனவாதம் கலக்காத அரசியல்வாதியென இதுவரை நம்பிக் கொண்டிருந்தவர்கள்வியப்பில்ஆழ்ந்துபோகும்அளவுக்கு அவர் தன்னை மாற்றிக்கொண்டுள்ளார்.

### வெந்த புண்ணில் வேலாக அரச தலைவரின் கருத்து

யாழ்ப்பாணத்தில்இடம்பெற்றதேர்தல்பரப்புரைக் கூட்டமொன்றில் அவர் தெரிவித்த ஒரு கருத்து. காணாமல்போனவர்களின்உறவுகளைஅதிர்ச்சியிலும், வேதனையிலும்ஆழ்த்திவிட்டது. "காணாமல் போனவர்களை எங்கு தேடியும் எம்மால் கண்டறியமுடியவில்லை. அவர்களின்உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அரசு தயாராகவுள்ளது" என அரச தலைவர் கூறியமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பான வேதனையைஏற்கனவேபிரிவுத்துயரில்ஆழ்ந்திருந்த காணாமல்போனவர்களின் உறவுகளுக்குஏற்படுத்தி விட்டது. காணாமல் போனவர்கள் தொடர்பான ஆதாரங்கள் ஏற்கனவே அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அரச தலைவரின் இந்த அலட்சியமான பதில் ஒருபோதும் ஏற்கக் கூடியதல்ல.

### போர்க் குற்றங்களை மறுக்கிறார் மைத்திரி

இறுதிப் போரின்போது போர்க்குற்றங்கள்இடம்பெறவில்லை. ஆகவே இது தொடர்பாக விசாரிக்கவெனஇங்குவருகைதரவிருக்கும்வெளிநாட்டுநீதிபதிகளை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இறுதிப் போரின் போது பல்லாயிரக்கணக்கானஅப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டதுடன்ஏராளமானவர்கள்தமதுஅங்கங்களைஇழந்துநிர்க்கதியான நிலையில் உள்ளனர். வெள்ளைக் கொடி ஏந்தியவாறுபடையினரிடம்சரணடையச் சென்றவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். புலிகளின் தலைர் பிரபாகரனின் இளைய புதல்வன் பாலச்சந்திரன் ஒரு சிறுவன் என்ற இரக்கம்கூட இல்லாத நிலையில் படையினரால் கொல்லப்பட்டார். இசைப்பிரியாவுக்கு நடந்த கொடுமைகள் உலக அரங்கில் ஆதாரத்துடன் நிரூபிக் கப்பட்டன. இதை விடப் போர்க்களத்தில்இருந்தமக்களுக்கெனபாதுகாப்பு இடங்களை ஒதுக்கி வைத்து விட்டு அந்த இடங்களில் தாக்குதல் நடத்திப் பலர் கொல்லப்பட்டனர். இவை போர்க்குற்றங்கள் இல்லையா? மனித உரிமை மீறல்கள் இல்லையா? இந்த நிலையில் தான் போர்க்குற்றங்கள் எதுவும் இடம் பெறவில்லையென அரச தலைவர் வாய் கூசாது கூறு கின்றார். அவருக்கு வாக்களித்துப் பதவியில் அமர்த்திய தமிழர்கள் அரச தலைவர் இவ்வாறு கூறுவாரென ஒருபோதுமே எதிர்பார்க்கவில்லை.



### பிரியங்கவுக்கு மைத்திரி ஆதரவு

இதைவிட அயலுறவுத்துறை அமைச்சினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த பிரிட்டனில் உள்ளஇலங்கைத்தூதரகத்தில்பாதுகாப்புஅதிகாரியாகப் பணி புரிந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, அரசதலைவரின்உத்தரவின்பேரில் மீண்டும்அந்தப்பதவியில்அமர்த்தப்பட்டுள்ளார். அண்மையில்லண்டனில்ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டவர்களைப்பார்த்துஇந்தஅதிகாரி கழுத்தைஅறுத்துவிடுவதுபோன்றுசைகைகாட்டியுள்ளார். இவரது செயல் காணொலிக் காட்சி மூலமாக உலகெங்கிலும் பரவிப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியிருந்தனர். இந்த நிலையில்தான் அரச தலைவரின் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

### சிறுபான்மை மக்களால்தான் அரச தலைவரானார் மைத்திரி

கடந்த அரசதலைவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலில் பெரும்பான்மையின மக்களின் ஆதரவை முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச பெற்றிருந்தார். இதனால் தேர்தலில் வெற்றி பெறுவதுதற்போதைய அரசதலைவருக்குஇலகுவானதாக இருக்கவில்லை. ஒரு கட்டத்தில் அவர் தோல்வியைத்தழுவப்போகின்றாராஎன்ற எண்ணமும் உருவாகியிருந்தது. ஆனால் வடக்குக் கிழக்கில்வழங்கப்பட்டவாக்குகள்அந்தநிலையை மாற்றிவிட்டன. குறிப்பாகத் தமிழ் மக்கள் கூட்டமைப்பின்தலைவரானசம்பந்தனின்ஆணையை ஏற்றுமைத்திரிபாலசிறிசேனாவுக்குதமதுவாக்குகளை அள்ளிவழங்கினர். இதன் காரணமாகவே தற்போதைய அரச தலைவரால் மகிந்தவைத் தோற்கடிக்க முடிந்தது. தமிழர்களின் வாக்குகள் கிடைத்திருக்காது விட்டால் அவரால் தேர்தலில் வெற்றியைப் பெற்றிருக்கவே முடியாது. ஆனால் இதையெல்லாம் மறந்து அவர் அரசியல் இலக்குகளைப் பெறுவதற்காகத் தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்துவது நியாயமானதல்ல. அரச தலைவரால் வழங்கப்பட்ட பல உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. போரினால்மோசமாகப்பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில் ஏக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அரச தலைவர் தமக்கு உறவுகள்என்றநம்பிக்கையுடனேயேகாத்திருந்தனர். ஆனால்தாம்ஏமாற்றப்பட்டதாகத்தற்போது உணர்கின்றனர்.

அரசதலைவருக்கு ஆயிரம்பிரச்சினைகள்இருக்கலாம். அதற்காக அவர் தமது கொள்கைகளை விட்டுக்கொடுப்பதுஅவருக்குஇழுக்கையேதேடித் தரும். குற்றவாளிகளைக்காப்பாற்றுவதற்குஅவர் முயற்சிசெய்வதைஇனியாவது அவர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் எதிர்காலச் சமூகத்தின் தவறான பார்வைக்கு அவர் உள்ளாக வேண்டிநேரிட்டுவிடும்.

# மனச்சாட்சியை விற்று விட்டாரா முதலமைச்சர் விக்னேஸ்வரன்?

இந்துமதி



இன்னமும் சில மாதங்களே பதவியில்அமர்ந்திருக்கப்போகும் வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தாம் வசிக்கின்ற வீட்டுக்குக் கல்லெறிகின்ற கைங்கரியத்தை இன்னமும் கைவிட்டதாகத் தெரியவில்லை. தம்மைப்பதவியில் அமர்த்தியகட்சியையும்அதன்தலைவர்களையும் விமர்சனம் செய்வதே தமது வேலை என்பது போன்று அவர் நடந்து கொள்கின்றார். அவர்மக்களைப்பார்த்து பதவி மற்றும் சலுகைகளுக்கு அடிபணியாத அரசியல்வாதிகளை உருவாக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போது அவர் வகித்துவரும் முதலமைச்சர் பதவி , பதவிகளின் பட்டியலில் இடம் பெறவில்லையா? அதே போன்று அவர் அந்தப் பதவியின் மூலமாக அனுபவித்துவரும்சலுகைகள்சலுகைகளின் பட்டியலில்உள்ளடக்கப்படவில்லையா? விக்னேஸ்வரனே இதற்கானவிளக்கத்தையும்தெளிவாகக்கூறவேண்டும். தாம் பதவியில் அமர்ந்து கொண்டு அதற்குரிய சலுகைகளை ஒன்று கூட விடாது அனுபவித்துக் கொண்டு அவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்வது சாத்தான் வேதம் ஓதுவதற்குச்சமமானது.

**மனோதர்மத்துக்கு விரோதமான வடக்கு முதலமைச்சரது கருத்து**

இதைவிட தமிழ் மக்களுக்கான தீர்வுகளை முன்வைப்பதற்கு கூட்டமைப்பின் தலைவர்களுக்குத் திராணி இல்லையென அவர் கூறியுள்ளார். தமக்குப்பதவிப்பிச்சை வழங்கியதே கூட்டமைப்பின் தலைமைதான் என்பதை மறந்து அவர் இவ்வாறு கூறுவது மனோதர்மத்துக்கு விரோதமானது. கூட்டமைப்புக்குக் குழி பறிக்கின்ற வேலையில் அவர் கடுமையாக ஈடுபட்டுள்ளமை இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. ஒரு நீதியரசராக இருந்தவர் என்பதை முற்றாகவே மறந்துவிட்டு அவர் நீதி பிறழ்ந்து கருத்து வெளியிடுகின்றமை அவருக்கு மட்டுமல்ல, அவர் சார்ந்திருந்த நீதித் துறைக்கே அவமானத்தை ஏற்படுத்த வல்லது. முதலில் அவர் கூறியவாறு நடந்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அவர்விளங்கவேண்டும். தமதுபதவியையும் அதன் மூலமாகக் கிடைக்கின்ற சலுகைகளையும் உடனடியாகத் தூக்கியெறிந்துவிட்டு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் மக்கள் இவரைநம்புவார்கள். ஆனால் அந்த நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் தற்போது காணப்படவில்லை.

**முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிடும் முதலமைச்சர்**

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற சகல கட்சிகளும் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவேனெனக் கூறியவர் இந்த விக்னேஸ்வரன்தான். அவ்வாறாயின் வடக்கு மாகாண சபையில் தமக்கெதிராகத் தமிழ் அரசுக் கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது தமது பதவியைத் துறக்காமல் கூட்டமைப்புக்கும் தமிழ் அரசுக்கட்சிக்கும்விரோதரமானவர்களின்முதுகுகளுக்குப் பின்னால் மறைந்து நின்று கொண்டு தமது பதவியைக் காப்பாற்றியது இவரது பாசாங்குத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. பதவிச் சுகத்துக்கு கூட்டமைப்பு; பதவியைக்காப்பாற்றுவதற்குகூட்டமைப்புக்குஎதிரானவர்கள் என்ற சூத்திரத்தை இம்மியும் பிசகாமல் அனுசரித்து வருபவர்தான் இவர். கடந்த நாடளுமன்றத் தேர்தலின்போதே இவரது உண்மையானமுகம்தெரிந்துவிட்டது. பரப்புரைகளில் ஈடுபடாமல் இவர் ஒதுங்கி நின்று கொண்டார்.

சிலவேளை கூட்டமைப்புதம்மைக் கைவிட்டால் ஒதுங்குவதற்கு வேறோரு இடம்தேவையென இவர் நினைத்திருக்கலாம். இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே கூட்டமைப்புக்குஎதிராக உருவாக்கப்பட்டதமிழ்மக்கள் பேரவையில் இணைந்து அதன் இணைத்தலைவர் பதவியில்அமர்ந்துகொண்டார். நீதியைமறந்துசெயற்படுகின்றார். மற்றவர்களைமுட்டாள்களெனஎண்ணிச் செயற்படுகின்றார்.

**வடக்கு முதலமைச்சர் மீதான மக்களது நம்பிக்கை தகர்ந்து போய்விட்டது**

இந்த நிலையில் வடக்கின் அடுத்த முதலமைச்சரும்விக்னேஸ்வரனேயெனஅடித்துக்கூறியிருக்கிறார், முன்னாள்மாகாண அமைச்சரான பொ. ஐங்கரநேசன். தமது பதவியையே காப்பாற்ற முடியாத இவர் விக்னேஸ்வரனுக்குவக்காலத்துவாங்குவது வேடிக்கையாக உள்ளது.

விக்னேஸ்வரன் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பும், நம்பிக்கையும் தகர்ந்து போய்விட்டன. மக்கள் அவர் மீது கடுமையானவெறுப்பில்உள்ளனர். ஒருசில ஊடகங்கள் தமது பிழைப்புக்காக அவரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றன.

ஆனால் விரைவில் அவை வாயடைத்து நிற்கப்போவதைக் காணத்தான் போகின்றோம். விக்னேஸ்வரன்ஐயா தமது இந்த இறுதித்தருணத்திலாவது மனச்சாட்சிக்கு விரோதமில்லா மல் நடந்து கொள்ள வேண்டும் . மனசாட்சியுள்ள முதல்வராகச் செயற்பட வேண்டும்.

> கூட்டமைப்பு தம்மைக் கைவிட்டால் ஒதுங்குவதற்கு வேறோரு இடம் தேவையென இவர்நிலைத்திருக்கலாம். இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள்பேரவையில்இணைந்துஅதன் இணைத் தலைவர் பதவியில் அமர்ந்து கொண்டார்.

## ஆசிரியருக்கான கடிதம்

### இதே கவனிப்பு இனியும் தொடருமா?


உள்ளூராட்சித் தேர்தல் நாடெங்கிலும் நேற்று நடைபெற்றது. பலத்த பாதுகாப்புஏற்பாடுகளுக்கு மத்தியில்இந்தவாக்குப்பதிவுகள்நடைபெற்றன. வேட்பாளர்களும் அவர்களின் நெருங்கிய ஆதரவாளர்களும் வாக்காளர்களை விழுந்துவிழுந்து கவனித்தமையை பல இடங்களிலும் அவதானிக்க முடிந்தது. போக்குவரத்து வசதி இல்லாவர்களுக்கு வீடுதேடி ஓட்டோ, மோட்டார் சைக்கிள், ஹைஏஸ்வாகனம் அடேயப்பா! பிரமாதம். ஆனால் இதே வேகம் இனிவரும் காலங்களிலும் தொடருமா என்பதே தற்போதுள்ள கேள்வி.

தமக்கு வாக்களித்த மக்கள் தமது தேவையொன்றைநிறைவேற்றிக்கொள்ள முற்படும்போது இதே வேகத்துடன் கவனிக்கப்படுவார்களா? போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படுமா? பெரும் அலைச்சல்பட்டுச் சென்றாலும் அலுவலகங்களில் அவர்கள் உரிய முறையில் அனுசரிக்கப்படுவார்களா?

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. அரசியல் பிரதிநிதிகள் அனைவரும் இங்கே மக்களால்தான் தெரிவுசெய்யப்படுகின்றனர். ஜனநாயகத்தின் அடிப்படைச் சித்தாந்தமே மக்கள்தான் எல்லாம் என்பதே. ஆனால் அந்த நடைமுறை தேர்தல் காலத்தில் மட்டும் இங்கு பின்பற்றப்படுவது வேதனைக்குரியது.

வாக்களிக்கும்தினத்தன்றுகுனிந்துவளைந்துகோலமிட்டுவாக்குகள்பெறப்படுகின்றன. ஆனால் தமக்கு வாக்களித்தவர்கள் என்ற அங்கீகாரம் மக்கள் பிரதிநிதிகளால் மக்களுக்கு தேர்தலுக்குப் பின்னரும் வழங்கப்படுகின்றதா என்றால்,பெரும்பாலும்இல்லைஎன்பதேபதிலாகஅமையும். தேர்தல்காலங்களின் போது கிள்ளுக்கீரைகளாக வாக்காளர்களைப் பயன்படுத்தும் நிலை மாறவேண்டும். மக்களும் திடீர் மரியாதைகளுக்கும் கவனிப்புக்களுக்கும் எடுபடாதவர்களாக இருக்க வேண்டும். அதுவே அனைத்துக்கும் சிறந்தது.

லயனல்



உதயன் நித்திய சுகம் 355
உடலே கோயில்


# தைரொயிட் சுரப்பி தொடர்பான நோய்கள் அதற்குரிய தீர்வுகள்

**தைரொயிட் சுரப்பி தொடர்பான நோய்கள்**

தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் நோய்கள் பல்வேறு வகைப்படும். தைரொயிட் சுரப்பி குறைவாகச் சுரப்பதனால் ஏற்படுகின்ற நோய் (Hypothyroidism) தைரொயிட் சுரப்பி அதிகமாகச் சுரப்பதால் ஏற்படுகின்ற நோய் (Hyperth yroidism) ஆகும். மற்றும் தைரொயிட் சுரப்பியில் ஏற்படுகின்ற பல வகையான புற்று நோய்கள் இவற்றுக்கு உதாரணங்கள் ஆகும்.

**தைரொயிட் சுரப்பு குறைவாகச் சுரத்தல்**

தைரொயிட் சுரப்பு குறைவாக சுரக்கும் நோயானது எமது நாட்டில் காணப்படுகின்ற மிக முதன்மையான தைரொயிட் தொடர்பான நோயாகும். இந்த நோயாளர்கள் கழுத்தில் கழலையோடோ, கழலையின்றியோ இருக்கலாம். சோர்வு, பகல் நேரத்தில் அதிக தூக்கம் உடற்பருமன் அதிகரித்தல், மலச் சிக்கல். குளிர் தாங்க முடியாமல் இருத்தல் மற்றும் பெண்களில் மாதவிடாய் அதிகமாக இருத்தல் போன்ற குணங்குறிகள் இந்த நோயாளர்களுக்கு இருக்கும். இவர்களின் குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோன் அளவை (Free T4 THS) பரிசோதிப்பதன் மூலம் நோயை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். கழுத்தில் கழலை போன்ற வீக்கமுள்ளவர்களுக்கு ஸ்கான் பரிசோதனை மற்றும் இழையப்பரிசோதனை (F#whC) போன்றவை மேற்கொள்ளப்பட நேரிடுகின்றது.




**தைரொயிட் சுரப்பு குறைவாகச் சுரத்தலுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைமைகள்**

இவர்களுக்கு தைரொயிட் மருந்தானது அவர்களின் உடல்நிறை மற்றும் வேறு நோய்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தேவையான அளவில் வைத்தியர்களால் வழங்கப்படுகின்றது. இவ்வாறான நோய் ஏற்பட்டதற்கான காரணத்தை அறியும் சோதனைகளும் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை தைரொயிட் ஹோர்மோனின் அளவை (TSH) மதிப்பிடுவதன் மூலம் தைரொயிட் மருந்தின் அளவானது தேவைப்படின் மாற்றப்படுகின்றது. தைரொயிட் மருந்து உட்கொள்பவர்கள் அதனை அதிகாலையில் வெறுவயிற்றில் உட்கொள்வது அவசியமானதாகும். இதன் பின்னர் அரை மணித்தியாலத்துக்கு உணவு மற்றும் தேனீர் போன்றவற்றை உள்ளெடுக்கக் கூடாது. அத்துடன். கல்சியம் இரும்புச்சத்து மருந்து போன்றவற்றையும் தைரொக்சினுடன் சேர்த்து உள்ளெடுக்கக் கூடாது. இவ்வாறு உள்ளெடுக்கும்போது தைரொக்சினின் அகத்துறிஞ்சலானது குறைவடைய நேரிடுகிறது.

**தைரொயிட் சுரப்பி அதிகளவில் சுரத்தல்**

தைரொயிட் சுரப்பி அதிகளவில் சுரக்கப்படும்போது உடலில் பல்வேறுபட்ட குணங்குறிகள் ஏற்படுகின்றன. படபடப்பு, கைநடுக்கம் ஏற்படுதல், அதிகளவு வியர்வை ஏற்படுதல், அடிக்கடி மலம் கழித்தல், அதிக வெப்பத்தைத் தாங்க முடியாமல் இருத்தல். உடல் மெலிவடைதல் மற்றும் பெண்களில் மாதவிடாய் ஒழுங்கற்று காலப்பகுதி குறைவடைதல் என்பவை இதன் அறிகுறிகளாகும். இந்த நோயாளருக்கும் தைரொயிட் ஹோர்மோன் அளவை (Serum Free T4> TSH) குருதியில் பரிசோதிப்பதன் மூலம் நோயை உறுதிசெய்துகொள்ள முடியும். சில நோயாளருக்கு கண்கள் வெளித்தள்ளி கண் உருட்டுதல், பார்வை இரண்டாகத் தெரிதல் போன்ற பிரச்சினைகளும் ஏற்பட நேரிடலாம். கழுத்துப் பகுதியில் தைரொயிட் பெரிதாகி கழலை ஏற்பட்டு இவ்வாறான கண் சம்பந்தமான பிரச்சினைகள் (Graves disease) என அழைக்கப்படுகின்றது. தைரொயிட் சுரப்பு அதிகமாகச் சுரப்பதற்கும் பல காரணங்கள் உள்ளன.

**தைரொயிட் சுரப்பு அதிகமாகச் சுரத்தலுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள்**

கார்பிமஸோல் (Carbimazole) எனப்படும் குளிகையானது இந்த நோயைக் கட்டுப்படுத்த வழங்கப்படுகின்றது. வைத்திய ஆலோசனையின்படி நோயாளியின் குணங்குறிகள் மற்றும் குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோனின் அளவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்த மருந்தின் அளவு (Dosage) தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோனின் அளவைப் பரிசோதித்து அதற்கேற்ப கார்பிமஸோஸ் மருந்தின் அளவு மருத்துவர்களால் மாற்றப்படுகின்றது. இந்த மருந்தைப் பாவிக்கும் போது ஏற்படும் சில பக்கவிளைவுகள் சம்பந்தமாக மருத்துவர்கள் எடுத்துக் கூறுவார்கள். கார்பிமஸோஸ் மருந்தைப் பொதுவாக 18 முதல் 24 மாதங்களுக்கு உள்ளெடுக்கும் போது இந்த நோயானது முற்றிலும் குணமடையும் வாய்ப்பு அதிகமாகும். சில வகையான தைரொயிட் சுரப்பு அதிகரிக்கும் நிலைமைகளின் போது கார்பிமஸோஸ் மருந்தை இரண்டு வருடங்கள் பயன்படுத்திய பின்னரும் நோயானது குணமடையாமல் இருக்கும். இந்த நோயாளருக்கு சத்திரசிகிச்சை மற்றும் கதிர்வீச்சு மருந்தை உட்கொள்ளும் சிகிச்சை (Radio iodine treatment) போன்றவை வழங்கப்பட நேரிடுகின்றது.

**தைரொயிட் தொடர்பான பிரச்சினையுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு வழகங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றிய விளக்கம்**

தைரொயிட் சுரப்புக் குறைபாடுடைய பெண்மணியொருவர் கர்ப்பம் தரித்தலை உறுதிப் படுத்திய உடனேயே தனது தைரொக்சின் மருந்தின் அளவை மருத்துவ ஆலோசனையுடன் அதிகரித்தல் அவசியம். கர்ப்பத்தில் சிசுவின் உடல் அங்கங்களின் வளர்ச்சி ஏற்படும்போது வைத்திய ஆலோசனையின்படி தேவையான அளவு தைரொக்ஸின் மருந்தை எடுக்காது விடும்போது பல்வேறுப்படபட்ட குறைபாடுகள் சிசுவில் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. இதேபோல் தைரொயிட் சுரப்பு அதிகமாகச் சுரக்கும் பிரச்சினையுள்ளது. பெண்மணியொருவர் கர்ப்பம் தரிக்கும் போது அவசரது மருந்தின் அளவு வைத்திய ஆலோசனையின்படி மாற்றப்பட (Adjustment) நேரிடுகிறது. கர்ப்பத்தின் முதல் 3 மாதங்களின்போது தைரொயிட்டு நோயுள்ள கர்ப்பிணிப் பெண்ணுக்கும் மாதாந்தம் தைரொயிட்ட ஹோர்மோன் நிலையானது பரிசோதிக்கப்படுவது அவசியமாகும்.






கார்பிமஸோல் (Carbimazole) எனப்படும் குளிகையா னது இந்த நோயைக் கட்டுப்படுத்த வழங்கப்படுகின்றது. வைத்திய ஆலோசனையின் படி நோயாளியின் குணங்குறிகள் மற்றும் குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோனின் அளவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்த மருந்தின் அளவு (Dosage) தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை குருதியிலுள்ள தைரொயிட் ஹோர்மோனின் அளவைப் பரிசோதித்து அதற்கேற்ப கார்பிமஸோஸ் மருந்தின் அளவு மருத்துவர்களால் மாற்றப்படுகின்றது.

சூரியகாந்தி
உதயன்
11.02.2018
ஞாயிறு சிறப்பம்சம்

மனோஜ் குமாரசாமி

கட்டுரை

கடந்த வாரம் சூடு பிடித்த விவகாரம் இது.
இலங்கை அரசின் பிரித்தானியத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, அந்தத் தூதரகத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களைக் 'கழுத்து அறுப்பேன்' எனும் விதமாகச் சைகை செய்து மிரட்டியுள்ளார். விளக்கமாகக் கூறுவதானால், இலங்கை இராணுவத்தின் பொதுப் பண்பு இதுதான் என அதன் அங்கத்தவர் ஒருவர் தனது செயல்பாடு மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.
தவிர, ஆச்சரியப்பட எதுவுமில்லை.

பக்.22

# உங்கள் பணியை தொடரலாம்

- அரச தலைவர்





"நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும்...."

"காக்கைக்கு எப்போதும்...."

அவரின் செயற்பாட்டைப் பார்த்ததும் இப்படிப்பட்ட பழமொழிகள் தான் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஆம்! பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற 70ஆவது வருட நிறைவைக் கடந்த 4ஆம் திகதி இலங்கையர்கள் கடைப்பிடித்தனர். ஆனால், ஈழத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் வழமை போன்றே அதைக் கணக்கிலெடுக்காமல் நகர்ந்து சென்றனர். கொண்டாடவும் முடியாமல் எதிர்க்கவும் முடியாமல் ஒரு தொகையினர் இருந்தாலும், அதைக் கட்டுடைத்துச் சுதந்திர தினத்தைப் புறக்கணிக்கும் முகமான சில போராட்டங்களை இங்குள்ளவர்கள் நடத்தாமல் விடவில்லை. ஆனால், புலம்பெயர்ந்திருக்கும் தமிழர்களுக்கு இவர்களிலும் அதிக சுதந்திரம் இந்தப் போராட்ட விடயத்தில் இருந்துவருகிறது. பிரித்தானியா வாழ் புலம்பெயர் தமிழர்கள் லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் இலங்கையின் சுதந்திர நாளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்தவேளை தூதரகத்துக்குள் இருந்து வெளியே வந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ, போராட்டக் காரர்களைப் பார்த்துக் கையைத் தனது கழுத்தை நோக்கி நகர்த்தி 'கழுத்து அறுக்கப்படும்' என்று அர்த்தப்படும் விதமாகச் சைகை செய்து காட்டியுள்ளார். இவ்வாறு சைகை காட்டக்கூடிய துணிவு இவருக்கு எப்படி வந்தது? ஆளும் சகல சிங்கள அரசுகளும் இத்தகைய மனோபாவத்தில் இருப்பதால்தான் இவ்வாறான துணிவுகள் இவர்களுக்கு வருகின்றன.

**போர்க் குற்றவாளிகள்**
**தண்டிக்கப்படவேண்டியதன் அவசியம்!**

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மாத்திரமல்ல இலங்கையின் அனைத்து அரச கட்டமைப்புக்குள்ளும் இப்படிக் குரோதம் நிறைந்த வர்கள்தான் நிரம்பிக் கிடக்கிறார்கள். பெரும்பான்மையினர் என்பதால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவர்களால் தொடர்ந்தும் அரசைத் தக்க வைத்துக்கொள்ள முடிகிறது. அவர்களின் கட்டமைப்பைச் சிதைவுறாது கட்டிக் காக்கவும் முடிகிறது. பிரிகேடியர் பெர்னாண்டோ, 2008-2009ஆம் ஆண்டு இறுதிப்போர்க்காலத்தில் மணலாறுப் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி முன்னேறிய 59ஆவது படைப்பிரிவில் அங்கம் வகித்த 11ஆவது கெமுனுகாவற் படை பற்றாலியனின் கட்டளை அதிகாரியாகவிருந்தவர். இறுதிப்போரில் அங்கம் வகித்த பல இராணுவத்தளபதிகளிலும் போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர் மீது முல்லைத்தீவு மருத்துவமனை மீதான பீரங்கித் தாக்குதல்கள் உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. இறுதிப்போர்க் குற்றச்சாட்டு இவருக்கு மாத்திரமானதன்று. பன்னாட்டு விசாரணைகளைத் தொடர்ந்தால் இவர்போன்ற பலர் இதில் சிக்குவார்கள். இவர்கள் அனைவரும் அடிப்படையிலேயே இத்தகைய குரோதக் குணத்தைக் கொண்டவர்கள்தான். இப்போது இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியதன் தேவையை உணர்த்தியிருக்கிறது மேற்படிச்சம்பவம். இதுபோன்ற ஏராளமான குரோதங்கள் இன்னும் இந்தக் குற்றவாளி களுக்குள் இன்னமும் குமுறிக்கொண்டே கிடக்கின்றன. ஒருவன் இழைத்ததாகக் கூறப்படும் குற்றங்களை இனங்கண்டு, அவற்றுக்குத் தண்டனை வழங்காவிடில், குற்றவாளி தொடர்ந்தும் குற்றத்தில் ஈடுபடத்தானே செய்வான்...? தண்டிக்கப்படாத வரையில் அவனுக்குத் தான் செய்தது குற்றமன்று எனும் எண்ணம்தானே ஆழ ஊறியிருக்கும்.

குற்றம் செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற பயம் இல்லாதுபோனால் அவனால் எப்படித் திருந்தி நடக்க முடியும். யதார்த்தமும் அதைத்தானே காட்டியிருக்கிறது. அதனாலேயே மேற்படி அரச அதிகாரியின் நடத்தை சினிமாக்கள் சித்திரிக்கும் 'ரவுடி'யைப்போன்று கீழ்த்தரமுடையாதகத் தொடர்கிறது.

இது, போர்க்குற்றவாளிகள் யாராகினும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டில் இனங்கள் ஒற்றுமைப்பட்டு வாழ்வதில் அதன் பக்கவிளைவு என்றைக்கும் தடையாகவே இருக்கும் என்பதையே இடித்துரைத்து நிற்கிறது.

**கொதித்துப் போயுள்ளது**
**முகநூல்**

இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் இப்படியாக நடந்து கொண்டதானது உள்ளூர் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தியதோ, இல்லையோ முகநூலில் முழு மூச்சாகப் பரவிக்கிடக்கின்றது. காணொலிகளாகவும், படங்களாகவும் நிரம்பி வழிகின்றது முகநூல்.

புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் அதை அனைவருக்கும் பகிர்ந்து தமது கண்டனங்களைக் கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழில் மாத்திரமன்றிப் பல மொழிகளிலும் குறித்த விடயம் வெளிப்படுத்தப்பட்டு, பன்னாடுகள் பூராகவுமுள்ள புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பரவி முகநூலில் சூடு பிடித்திருக்கிறது.

**கொடியும் குணமும்**



ஜனநாயக ரீதியிலான ஒரு போராட்டத்துக்கு சிங்களத்தின் ரியாஷன் சொல்கிறது...
வன்முறையும் பயங்கர வாதமும் எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என்பதை.
(முகநூலில் இருந்து)



**அறவழிப்போராட்டங்கள்**
**ஆயுதவழி ஆனதன் பின்னணி?**

ஈழத் தமிழர்கள் இந்த நாட்டில் சமஉரிமையுடன் வாழ்வதற்காகப் பல போராட்டங்களை மேற்கொண்டிருந்தமை வரலாறு. அவை அனைத்தும் ஆரம்பித்தது அறவழி என்பதும் அதே வரலாறு. அதற்கடுத்து அந்த அறவழிப்போராட்டங்கள் மீது சிங்களத் தலைமைகளால் ஏவிவிடப்பட்ட வன்முறைகள், ஒடுக்குமுறைகள் எப்படியெல்லாம் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வேண்டும் எனத் திணித்தன என்பதும் கறைபடிந்துவிட்ட மறக்க முடியாத வரலாறே. இவை அனைத்திலும் தமிழர்களின் அறவழிப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்காமல், உரிய தீர்வு காணாமல் வாய்ப்பேச்சுக்குச் சமாதானமும் சமத்துவமும் பேசித்திரிந்த பெரும்பான்மை அரசியலே வெளிப்பட்டிருந்தது. பெரும் பாரதூரங்களைக் கடந்து வந்தபிறகும்கூட அது இன்னமும் மாறிவிடவில்லை. பிரித்தானியா நாட்டின் லண்டன் நகரத்திலுள்ள குறித்த தூதரகத்துக்கு முன்பாகப் புலம்பெயர் தமிழர்கள் போராட்டம் நடத்தியது அமைதியான முறையிலேயே. ஆனால், அதற்குக் குறித்த அரச அதிகாரியின் வெளிப்பாடு இவ்விதம் இருக்கிறது. போராட்ட வடிவத்தை மாற்றிவிடக்கூடிய அந்தச் சைகை போராட்டக் காரர்களை நிச்சயம் பாதிக்கவில்லை. அவர்கள் தாம் இதுவரை பெற்ற அனுபவங்களில் இருந்து அதைக் கையாண்டு, திரும்பவும் தமது கண்டனத்தைத் தெரிவித்துக் கடந்தே சென்றுள்ளனர்.

**மேற்படி விடயம் வெளிப்படுத்துவது என்ன?**

பிரித்தானியத் தூதரகத்துக்கு முன்பான போராட்டம் 2009ஆம் ஆண்டோ, அதற்கு முன்னரே நடத்தப்பட்டது அல்ல. வெளிநாடுகளின் உதவியுடன் தமிழர்களின் போராட்டத்தை அழித்த 2009க்குப் பின் கிட்டத்தட்ட ஒன்பது வருடங்கள் கழித்து தமிழ் மக்களால் நடத்தப்பட்ட ஒரு சாத்வீகப் போராட்டத்துக்கே இந்தக் கழுத்தறுப்புச் சைகை விடப்பட்டி ருக்கிறது. அப்படியானால், 2009க்கு முன்னர் இவ்வாறான போராட்டங்களை சிங்கள அரசுகளும், கழுத்தறுப்புச் சைகை காட்டிய இந்த இராணுவ அதிகாரிகளும் எவ்விதமாகக் கையாண்டிருப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். எத்தகைய போராட்டங்கள் நடத்தினால் என்ன? அதையெல்லாம் எப்படித்தான் நடத்தினால் என்ன? தமிழ் மக்களுக்கு முடிவு ஒன்றுதான் என இராணுவ அதிகாரி சைகை மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இதை உறுதிப்படுத்தவே பணி நீக்கம் செய்யப்படவிருந்த அவரை மீண்டும் பணியிலமர்த்தி அவரது கழுத்தறுப்புப் பணியைத் தொடர அரச தலைவர் அவருக்கு அனுமதி வழங்கியுள்ளார். எத்தகைய போர்க் குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும் குற்றம் செய்த படை அதிகாரிகள் தண்டிக்கப்படவே மாட்டார்கள்என்பது மறுபடியும்நிரூபணமாகியுள்ளது. பாவம் தமிழ் மக்கள்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மாத்திரமல்ல இலங்கையின் அனைத்து அரச கட்டமைப்புக்குள்ளும் இப்படிக் குரோதம் நிறைந்த வர்கள்தான் நிரம்பிக் கிடக்கி றார்கள். பெரும்பான்மையினர் என்பதால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவர்களால் தொடர்ந்தும் அரசைத் தக்க வைத்துக் கொள்ள முடிகிறது.

சில குடும்பங்களின் உணர்வுகளைப்பேசும்
ஓர் இனிய தொடர்கதை மூத்த எழுத்தாளர்
கே.எஸ்.ஆனந்தன் எழுதும்
'நின்னைச் சரணடைந்தேன்'
அடுத்த வாரம் ஆரம்பம்

# அக நெகிழ்வு

மலரன்னை

சிறுகதை



மலைவேம்புகளின் நடுவே அமைந்திருந்தது அந்த ஆரம்பப் பாடசாலை. வெள்ளைச் சீருடையில் வெண்புறாக்களாக நடமாடித் திரிந்த மாணவச் செல்வங்களிடையே இனம்புரியாத ஒரு பரபரப்பு குடிகொண்டிருந்தது.

"டாங்...! டாங்...!"

பாடசாலையின் ஆரம்ப மணி ஒலித்து ஓய்ந்ததுதான் தாமதம், அனைவரும் தத்தமது வகுப்பறைக்குள்போய் தஞ்சம் புகுந்து கொண்டனர். அப்போதுதான் பாடசாலை வளவுக்குள் அவசர அவசரமாக நுழைந்துகொண்டிருந்த வித்யா ரீச்சர், கால்களை நகர்த்தி ஆசிரியர் தங்கும் அறையை நோக்கி முன்னேறினாள். அவளது இச்சைக்கு இயங்க மறுத்த ஒரு கால் சற்றே பின்வாங்கியது. அவளது தலைக் கறுப்பைக் கண்ட மாத்திரத்திலேயே சக ஆசிரியர்கள் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு ஆரவாரத்துடன் அவளுக்கு வாழ்த்துக்கூற முற்பட்டனர். அவர்களது இந்தச் செய்கை அவளுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

"கங்கிராஜுலேஷன்ஸ் ரீச்சர்!"

முந்திக் கொண்ட பாமினி ரீச்சரின் குரல், அவசரமாக நடந்து வந்ததனால் ஏற்பட்ட இதயப் பட படப்பை இன்னும் அதிகமாக்கியது.

"கலக்கீட்டீங்க ரீச்சர், இந்த முறை பதினெட்டுப்பேர் பாஸ்"

நிமலன் சேரின் வார்த்தைகள் வித்யாவுக்கு நிலைமையை ஓரளவுக்குப் புரிய வைத்தன. புலமைப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகி விட்டிருந்த செய்தியை அவளது மனம் ஒரு நொடியில் கிரகித்துக் கொண்டது. இனந்தெரியாத அதிர்ச்சி அவளை உந்தித் தள்ள, அறிவித்தல் பலகையை நோக்கி விரைந்தாள். ஒரே நோக்கில் சித்தியெய்திய மாணவர்களின் பெயர்ப்பட்டியலை மேய்ந்தன கண்கள். அவள் எதிர்பார்த்த அத்தனைபேரும் சித்தியெய்தியதில் அவளுக்கு மனநிறைவு ஏற்பட்டது. இருந்தபோதும் வகுப்பில் வலு மட்டாய் இருந்த குந்தவி என்ற மாணவி வெட்டுப்புள்ளியைத் தாண்டியிருந்தது தான் அவளை மகிழ்ச்சியின் உச்சத்துக்குக் கொண்டு சென்றுவிட்டது. மனசீகமாக அவள் இறைவனுக்கு நன்றி செலுத்தினாள்.

குந்தவி இறுதிக்கட்டப்போரில் தனது பெற்றோரை இழந்து அநாதையாகியவள். இப்போது அவளுக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள அப்பம்மாதான் இருக்கிறாள். உடல் தளர்ந்துபோன நிலையில் அவளால் தனது பேத்தியைச் சரியாகக் கவனிக்க முடிவதில்லை. குந்தவியும் ஏனோ தானோ வென்று உடையணிந்த பாடசாலைக்கு வருவாள். சில சந்தர்ப்பங்களில் வித்யாவும் அவளைக் கண்டித்ததுண்டு. ஒரு வெள்ளிக்கிழமை. பாடசாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் அதிபர், குந்தவியை மேடைக்கு அழைத்துக் கண்டிக்க வேண்டியதாய் சந்தர்ப்பம் அமைந்து விட்டது. மற்றைய மாணவர்களைப்போல் குந்தவியும் காலுக்குச் சப்பாத்து அணிந்து வரவேண்டுமென்பதுதான் அவரது கட்டளை.

"கெப்பர் என்ன வேலை செய்கிறார்? ஏன் சப்பாத்து வாங்கித்தரவில்லை?" என அதிபர் பகிரங்கமாகக் கேட்டபோது குந்தவி பதிலேதும் சொல்லாமல் தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள். அவளுக்குப் பெற்றோர் இல்லையென்ற விடயம் அன்றுதான் பாடசாலைச் சமூகத்துக்கு அம்பலமாகியது. மறுநாள் பாடசாலைக்குக் குந்தவி சப்பாத்து அணிந்து வந்திருந்தாள். அது வித்யா ரீச்சரின் உபயம் என்பதை எவரும் அறிந்திலர்.

இயற்கையாகக் குந்தவியிடம் படிக்கக்கூடிய திறன் இருந்தபோதிலும் அவளை ஊக்குவிக்க எவருமேயில்லை. இதுதான் அவளது கற்றல் செயற்பாட்டில் இருந்த பலவீனம். இதை நன்கு புரிந்து கொண்ட வித்யா, அவள் மீது விசேட கவனம் செலுத்தத் தொடங்கினாள். ஓய்வாக இருக்கும் சமயங்களில் அவளைத் தனது வீட்டுக்கு அழைத்துப் பாடம் சொல்லிக் கொடுத்தாள். புத்துயிர் பெற்றவளாகக் குந்தவியும் படிப்பில் அக்கறை செலுத்தத் தொடங்கினாள்.

அங்குள்ள சக மாணவர்களில் பெற்றோர் காட்டும் அதீத சிரத்தையைக் கண்டு அந்தப் பிஞ்சு மனம் மறுகியது.

"எல்லாப் பிள்ளையளும் ரியூசனுக்கும் பேப்பர் கிளாசுக்கும் ஓடியோடிப் போய்ப் படிக்கினம். ஒருவேளை எனக்கும் அம்மா, அப்பா இருந்தால்... நானும் இவையைப்போல படிச்சிருக்கலாம். இப்பிடியிருக்கிற நான் எங்க பாஸ் பண்ணுறது" விரக்தியால் வெதும்பிப்போவாள் குந்தவி.

இப்போது வித்யா ரீச்சரின் அரவணைப்பு அவளுக்குப் பிடித்திருந்தது. தவிர அவளுக்கு வாழ்க்கையில் ஒரு பற்றுதல் ஏற்பட்டிருந்தது. ரீச்சர் சொல்லித்தரும் பாடத்தைக் கவனமாக மனதில் பதித்துக் கொண்டாள். முழுத் தென்புடன் பிரயத்தனத்தில் இறங்கினாள். அதன் விளைவாக இன்று வெற்றி பெற்று விட்டாள்.

சித்திபெற்ற மாணவர்கள் இருவரும் கைகளில் இனிப்புப் பொதியுடன் வந்து வித்யா ரீச்சருக்குப் பரிமாறி, அவளிடம் ஆசி பெற்றனர். சில மாணவர்களுடன் கூடவே பெற்றோரும் வந்து ஆசிரியரை வாழ்த்தி நன்றியும் தெரிவித்தனர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருந்தாலும் குந்தவி மட்டும் ஆதரவற்றவளாய்த் தான் காற்றில் ஊசலாடுவதுபோன்றதொரு பிரமையில் திளைத்து நின்றாள். வித்யவைச் சூழ்ந்திருந்த மாணவர்கள் அனைவரும் அவளை விட்டு விலகியதும் வித்யா குந்தவியிடம் வந்தாள்.

"கெட்டிக்காரி"

முதுகில் தட்டிக்கொடுத்த வித்யா ரீச்சரின் கால்களில் விழுந்தாள் குந்தவி. அதிர்ச்சியுற்ற வித்யா, அவளைத் தொட்டு எழுப்பினாள்.

"நான் இனிப்பொண்டும் வாங்கிக் கொண்டு வரயில்லை ரீச்சர். என்னாலை உங்களுடைய காலிலை விழுந்து ஆசி வாங்கத்தான் முடியும்"

அவளது மனதைப் புரிந்துகொண்ட வித்யா, அது பாடசாலை என்றும் பாராது அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள்.

"தனது சொந்தப் பணத்தில் எனக்குச் சப்பாத்து வாங்கித் தந்த ரீச்சர். சனி, ஞாயிறு என்று பார்க்காமல் தனது ஓய்வு நேரத்தை எனது கல்விக்காகச் செலவிட்ட ரீச்சர், கற்பித்தலே கருந்தனம் என மதித்து ஆசிரியப் பணிக்காகத் தன்னையே அர்ப்பணித்த ரீச்சர்...." இப்படியாகக் குந்தவியின் மனதில் ஓங்கி, உயர்ந்து நின்றாள் வித்யா ரீச்சர்.

பத்து வயதுச் சிறுமிக்குக் காலம் ஏற்படுத்திக் கொடுத்த பக்குவமான மனநிலையை எண்ணி வியப்படைந்தாள், வித்யா. தனது சொந்தப் பிள்ளையாகவே அவளைக் கருதியவள், மனதளவில் தத்தெடுத்துக் கொண்டாள்.

"இனிமேல் இவளது கல்வி நிலையை மேம்படுத்து வதை;தவிர, எனக்கு வாழ்க்கையில் வேறு என்ன இலட்சியம்தான் இருக்க முடியும்" உள்ளத்தில் தோன்றிய உணர்வலைகள் அவளது எண்ணத்தைச் சீண்டின.

"வித்யா ரீச்சர்! உங்களுடைய தன்னலமற்ற, அர்ப்பணிப்பான உழைப்புக்குக் கிடைத்த வெற்றிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்"

சிந்தனையில் மூழ்கியிருந்தவளை அதிபரின் வாழ்த்துக்கள் சுயநிலைக்குக் கொண்டு வந்தன.

"சேர்! அந்தப் பாராட்டுக்கள் எனக்குரியவையல்ல. பிள்ளைகளின் கடின உழைப்பும் திறமையும் தான் காரணம்"

தன்னடக்கமாகப் பதிலளித்தவளை ஏறிட்டுப் பார்த்தார் அதிபர். வெறுமையான நெற்றி, களையிழந்த முகம். இதுதான் வித்யாவின் வெளிப்புறத் தோற்றம்.

"ரீச்சர்! இண்டைக்குப் பாடசாலையிலை ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறன். நிச்சயமாக அது உங்களுக்குப் பாராட்டுவிழாவாகத்தானிருக்கும்.

அதிபரின் பேச்சைக் கேட்டு துணுக்குற்றவளாய் வாய் திறந்தாள் வித்யா. "சேர்! என்னுடைய கடமையைத்தானே நான் செய்திருக்கிறன்? அதுக்குப்போய் பாராட்டுவிழா, அது, இது எண்டு பெரிய வார்த்தைகளாய்ச் சொல்லுறியள்"

"நல்லாய் இருக்குது உம்மட கதை, போன வருசம் மூன்று பிள்ளையள் பாஸ் பண்ணின இடத்தில... இந்த முறை பதினெட்டுப் பேர் சித்தியாகிறதெண்டால், அது ஒண்டும் சாதாரண விடயமில்லை... மாகாண மட்டத்தில் எங்கட கிராமப் பாடசாலைக்கு இதனால நல்ல கௌரவம் கிடைச்சிருக்கு. இதுக்குக் காரணமான உங்களைக் கௌரவிக்க வேண்டியது எங்கட கடமை"

வாய் திறந்து எதுவும் பேச முடியாதவளாய் மௌனத்தைத் தழுவிக் கொண்டாள் வித்யா. அவளது மனம் மகிழ்ச்சிக் கொந்தளிப்பால் பொங்கி எழாவிட்டாலும் ஒரு வித ஆத்ம திருப்தி அவளைத் தழுவிக் கொண்டது.

★★★

பாடசாலை நேரம் முடிவுற்றதும் பாராட்டுவிழா சிறப்புற நடைபெற்றது. ஆசிரியர்கள் பலர் வித்யாவை மனதார வாழ்த்திப் போற்றினார்கள். அதே சமயம் ஓரிரு பொறாமைக் கண்களும் பார்வையால் ஊடுருவித் துளைத்ததை எவராலும் மறுக்க முடியாது.

அதிபர் தனது உரையில், "ஒரு சிறந்த ஆசானுக்குரிய இலட்சணம் பொருந்தியவர் எங்களது வித்யா ரீச்சர்" என்று புகழாரம் சூட்டியபோது ஒரு கணம் அவளையறியாமலேயே மெய்சிலிர்த்து உணர்வுகளின் உச்சத்தில் அவள் பட்டாம் பூச்சியாக மாறினாள். மறுகணமே தன்னைச் சுதாகரித்து நிதான நிலைக்குத் திரும்பியவள், அதிபரின் உரையை உன்னிப்பாகச் செவிமடுத்தாள்.

"மாணவச் செல்வங்களுக்கு எழுத்தறிவிக்கும் புனிதமான செயலில் ஈடுபட்டு வரும், எமது ஆசிரியர்கள் தெய்வத்துக்குச் சமமானவர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வகையில் பெற்றோருக்கு அடுத்தபடியாக ஒரு குழந்தை, ஆசிரியரை அவரது வழிநடத்தலை எதிர்பார்க்கிறது. அதை உணர்ந்து நாம் அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக நடந்துகொள்ளவேண்டும். எங்களுடைய வித்யா ரீச்சர் கற்பித்தலே கருந்தனம் என முன்னின்று உழைப்பவர். அந்தக் கடின உழைப்பின் பயனால், இன்று எங்களது பாடசாலை அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்று நிமிர்ந்து நிற்கிறது. அந்த வெற்றியைத் தேடித்தந்த வித்யா ரீச்சரைப் பாராட்டிக் கௌரவிப்பதில் நான் பெருமையடைகிறேன்"

ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரதும் கைதட்டல்கள் வானைப் பிளந்தன. வித்யாவின் கண்களில் நீர் திரண்டு பார்வையை மறைக்க... எதையோ சாதித்து விட்ட பெருமை அவளது இதயத்தை நிறைக்க... இறுமாப்படைந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் தாயை ஆர்வத்தோடு அழைத்தாள்.

"அம்மா! குந்தவி கொலர்சிப் சோதினை பாஸ்"

"எல்லாம் அந்த முருகனின் கருணைதான்"

அம்மாவின் மனத்திலும் மகிழ்ச்சி

வித்யா எதுவும் பேசாமல் வீட்டுக்குள் போனாள். அங்கே குண்டு வீச்சுக்கு இலக்காகி மடிந்த கணவனதும் இரண்டு வயது மகன் தமிழ்நிலவனதும் உருவப்படம் முன்னால் போய் நின்றாள். விம்மி வெடித்த இதயத்தின் தாபத்தை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

மகளது அழுகைக் குரல் கேட்டுத் தாய் ஓடி வந்தாள்.

"அம்மா! என்ர பிள்ளையும் இண்டைக்கு உயிரோடை இருந்திருந்தால், பரீட்சை எழுதியிருப்பான்தானே"

பொங்கி எழுந்த உணர்வலைகளுக்கு அணைபோட முடியாமல் தவித்த மகளை மெதுவாக அரவணைத்து அழைத்துப்போய் கட்டிலில் இருக்க வைத்தாள். அவளது கண்களிலும் கண்ணீர்.

"என்னுடைய காலை மட்டும் கொண்டுபோன குண்டு, என்னையும் அவர்களோடு சேர்த்துக் கொண்டுபோயிருந்தால்... நான் இப்படிக் கிடந்து தவிக்கவேண்டியிருக்காதே"

தனக்குப் பொருத்தப்பட்டிருந்த செயற்கைக் காலைத் தழுவியவாறே புலம்பிக்கொண்டிருந்தாள் வித்யா.

# புத்தியுள்ளவன் பிழைத்துக்கொள்வான்

ஓர் ஊரில் சீலன் என்றோர் இளைஞன் இருந்தான். அவன் உடல் வலிமையே இல்லாதவன். ஆனால், சீலனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்கள் மிகவும் பலசாலிகள். தமது உடலை நன்கு பலப்படுத்தி வைத்திருந்தார்கள். "என்ன பிரயோசனம்? மூளையைப் பலப்படுத்துங்கள். அது தான் வாழ்க்கைக்கு உதவும்!" என்று சொல்லிச் சிரிப்பான் சீலன்.

அதற்கு அந்த மூவரும், "உடலை பலப்படுத்தினால் போதும், மூளைதானே பலப்பட்டு விடும். மூளை வலிமையை விட உடல் வலிமையால் தான் எதையும் சாதிக்க முடியும்" என்று சொல்லிச் சிரிப்பர்.

ஆனாலும் அனைவரும் நல்ல நண்பர்களாகவே இருந்து வந்தனர்.

ஒரு நாள் சீலன் தனது வீட்டுக்குத் தேவையான சாமான்களைச் சந்தைக்குச் சென்று வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டி ஒரு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்துகொண்டிருந்தான். வழியில் ஒரு பெரிய மேடு ஒன்று குறுக்கிட்டது. அந்த மேட்டின் மேல் வண்டியை இழுக்க முடியாமல் திணறினான். யாராவது ஒருவர் உதவிக்கு வந்தால் வண்டியை எளிதாக மேட்டின் மேல் ஏற்றி விடலாம் என்று நினைத்த அவன், வண்டியை நிறுத்தி விட்டு யாராவது வருகிறார்களா? என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

அப்பொழுது, அதிசயப்படுமளவுக்கு அவனது மூன்று பலசாலி நண்பர்களும் அவ்வழியாக வந்து கொண்டிருந்தனர். சீலனுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனடியாகக் கீழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டுக்கு ஓடி வந்தான். அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்து விட்டனர். உடனே சீலன் கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான்.

"எனதருமை நண்பர்களே! உங்களுக்கும் எனக்கும் ஒரு போட்டி!" என்றான்.

"என்ன போட்டி?" என்று கேட்டனர் நண்பர்கள்.

"உங்களுக்கும், எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் வெற்றிபெறுகிறோம் என்று பார்க்கலாம்!" என்றான்.

அதைக் கேட்ட நண்பர்கள் நகைத்தனர்.

"இதோ பாருங்கள். ஆளைப் பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னைத் தோற்கடியுங்கள் பார்க்கலாம்"என்று என்று அவர்களைச் சீண்டிவிட்டான்.




"அட! எங்களை உன்னோடு ஒப்பிடுகிறாயா? உனக்குப் பாடம் கற்பித்தால்தான் புத்தி வரும். பிடி மறுமுனையை ஒரே ஒரு இழுவைதான். நீ எங்கோ பறந்து விழப் போகிறாய் பார்" என்று சொல்லிவிட்டுக் கயிற்றின் ஒரு முனையைப் பிடித்தனர்.

சீலன், இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிற்றை இறுக்கமாகக் கட்டிவிட்டான். "ம்! இழுக்கலாம்!" என்றும் கத்தினான். அந்த மூன்று நண்பர்களும் சீலன்தான் கயிற்றை இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாய் இழுத்தனர். அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று "சீலனுக்கும் பலம் வந்துவிட்டதோ" என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது. மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. சீலன் மாம்ம் தோற்றுப் போனால் அது எவ்வளவு அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலத்தைக் காட்டிக் கயிற்றை இழுத்தனர். வண்டி மெல்ல மேட்டில் ஏறிக்கொண்டிருந்தது.

சீலன் தனது பலத்தை மெல்ல மெல்ல இழந்து மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. கயிற்றை வேகமாக இழுத்தனர். ஒருவாறு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைக் கண்டதும் நண்பர்கள் வியப்புற்று நின்றனர். சிரித்தபடி அவர்களின் அருகே வந்தான் சீலன். அவர்களுக்கு அப்பொழுதுதான் விஷயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது வண்டியை என்று. மூவர் முகத்திலும் அசடு வழிந்தது. அவர்களிடம் வந்த சீலன்"மூளைப் பலம் என்பது இது தான்," என்று சொல்லிவிட்டுத் தனது வண்டியைச் சமதரையில் மிகவும் லாவகமாக இழுத்துக் கொண்டு போனான்.



உ.கபிலசர்மா,
தரம்- 10,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



ச.மாயோன்,
தரம் -2,
யா/ யாழ்ப்பாணக் கல்லூரி.

## மஹாகவி உருத்திரமூர்த்தி




மஹாகவி என்ற புனைபெயரில் எழுதிய துரைசாமி உருத்திரமூர்த்தி ஈழத்தின் கவிதை மரபில் முக்கியமான கவிஞர்களுள் ஒருவராவார். யாழ்ப்பாணம் - அளவெட்டியைச் சேர்ந்தவர். பண்டிதர், மாபாடி, காப்பியாற்றும் காப்பியனார், மகாலட்சுமி, பாணன், வாணன் என்பனவும் இவரது புனைபெயர்களே. எனினும் பிற்பாடு 'மஹாகவி உருத்திரமூர்த்தி' என்பதே நிலையாயிற்று. நீலாவணன், முருகையன் ஆகிய பிரபல ஈழத்து கவிஞர்களோடு சமகாலத்தில் எழுதிவந்தவர்.

மஹாகவி பல காவியங்களை எழுதியுள்ளார். 'கல்லழகி', 'சடங்கு', 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்', 'கண்மணியாள் காதை', 'கந்தப்ப சபதம்' போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். 'தகனம்' என்பது இவர் முருகையனுடன் இணைந்து எழுதியது. இதைவிடப் பல கவிதைகளை எழுதியுள்ளார்.

ஈழத்திலும் தமிழகத்திலும் புகழ் பெற்ற ஒரு கவிஞரானார். மறுமலர்ச்சிக் காலத்தில் எழுத்துலகில் புகுந்த மஹாகவி. 1971 வரை கவிதை, காவியம், கவிதைநாடகம் முதலிய பல்வேறு துறைகளில் பயணித்தாலும், கவிதை வடிவிலேயே தனது அதிக படைப்புகளை யாத்துள்ளார்.

மஹாகவியின் கவிதைகள் பெருமளவில் பத்திரிகைகளிலும் இதழ்களிலும் வெளிவந்துள்ளன. 'வள்ளி'(1955), 'குறும்பா'(1966), 'கண்மணியாள் காதை'(1968), 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்'(1971), 'கோடை'(1970), 'வீடும்வெளியும்'(1973), 'இரண்டு காவியங்கள்'(1974), 'மகாகவி கவிதைகள்'(1984), 'புதியதொரு வீடு', 'மஹாகவியின் ஆறு காவியங்கள்'(2000) என இந்நூல்கள் மஹாகவி வாழ்ந்த காலத்திலும் மறைந்த பின்னரும் எனப் பரந்துபட்டு வெளியாகியுள்ளன. ஈழத்து 'மஹாகவி' என்ற பெருமையுடன் எழுத்துலகில் தனக்கெனத் தனியிடம் பிடித்துக்கொண்ட மஹாகவி உருத்திரமூர்த்தி 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி இயற்கை எய்தினார்.



## வழிகாட்டுவோம்





# 'குவர்னிகா'

## போரின் கோரத்தைப் பதிவு செய்த 'ஓலம்'

ஜெ.காயா

பிக்காசோ பற்றி அறிந்திராதவர்கள் இருப்பது கடினமே. அதிலும் ஓவியத்துறையில் சஞ்சரித்திருப்பவர்களுக்கு அவரை அறிவது எளிதாகவே இருக்கிறது. ஆனால் பிக்காசோ புகழ்பெற்ற ஓவியர் என்று மட்டும் கருதிவிடலாகாது. கட்டலோனியாப் பிரச்சினை மூலம் உலகச் செய்திகளில் அண்மைக்காலத்தில் இடம்பிடித்துத் தன்னைக் கவனிக்க வைத்த ஸ்பெய்ன் தான் பிக்காசோவின் பூர்வீகம். ஓவியப் புலத்தினர் அவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் அவரை ஓவியர் மாத்திரமான வரையறைக்குள் அடக்கிவிட முடியாது. பிக்காசோ ஓவியர், சிற்பி, அச்சுப்பொறியாளர், மட்பாண்டக் கலைஞர், மேடை வடிவமைப்பாளர், கவிஞர், நாடக ஆசிரியர் என்று பல் பரிமாணங்களில் தடம் பதித்த ஒருவராவார். ஆனால் அவர் ஓவியத்தையே தனது முதன்மைக் கலையாகத் தெரிவு செய்து கொண்டார். அந்தக் கலையின் மூலம் காலத்தைப் பதிவு செய்தார். அது ஓலம் நிறைந்த போர்க் காலம். காலத்தைப் பதிவு செய்து வைத்திருக்கும் கண்ணாடி இலக்கியம் என்றால் கலை அதற்கு வெகுதொலைவல்ல என்பதும் உண்மைதானே!

### 'யதார்த்தத்தின்' வளர்ச்சி புதிய பாணிகளுக்கு வித்திட்டது

பிக்காசோ பல பரிமாணங்களில் பயணித்தவர் ஆயினும், அவர் அதிகம் ஈடுபாடுகொண்டது ஓவியம், வரைதல் துறைகளிலேயே. அவர் வரைய முற்பட்ட காலங்களில் அவரது திறமை அதி உச்சமாகவிருந்தது. யதார்த்தம் நிறைந்த பாணியில் அவருடைய ஓவியங்கள் அதிகளவில் எழுந்தன. பின்னர் சில காலங்களில் அவரது ஓவியங்களில் மாற்றங்கள் தென்பட்டன. 'கியூபிசம்' எனும் குறியீட்டுப் பாணியிலான கலை முறைமையில் அதிக படைப்புக்களைத் தோற்றுவித்தார். "ஒளிப்படக் கருவி ஒன்றால் செய்ய முடிந்த வேலையை ஒரு கலைஞன் செய்யவேண்டியதில்லை", "கலைப்படைப்பு என்பதில் கலைஇரசனை நுகரக் கிடைக்க வேண்டுமே தவிர வெறுமனே ஒன்றை நகல் செய்யும் பண்பு வளர்ந்து விடக்கூடாது" என்பதாகப் பிற்காலத்தில் எழுந்த குரல்கள் பலவும் யதார்த்த வாதத்தை முற்றாக நிராகரித்து அதில் தேர்ச்சியற்று நேரடியாக 'கியூபிசம்' போன்ற குறியீட்டு வடிவ ஓவிய முறமையிலும் 'நவீன ஓவியம்' என்பதான வரைதல் முறைமைக்குள்ளும் பின்வந்தோர்களை உள்ளீர்ப்பதற்கு வழி சமைத்தன. ஆனால் பிக்காசோ போன்று இன்றுவரை பேசப்படும் கலைஞர்கள் அப்படி உருவாகியிருக்கவில்லை. திறமையும், ஆற்றலும் சரிவரப் பொருந்தி வெளிப்பட்டதன் விளைவாகவே பேசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய பெரும்பாலானவர்களின் நிலை அப்படியிருக்கவில்லை. பிக்காசோ போன்றவர்கள் யதார்த்தவாதத்தின் வழி பெற்ற வளர்ச்சியே பின்எழுந்த புதிய ஓவிய முறைமைகளுக்கு உயிரூட்டின. அதுவே ஆரோக்கியமான கலை வெளிப்பாடுகளையும் அவர்கள் மத்தியில் தோற்றுவித்திருந்தது. இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டும் பிக்காசோவின் 'குவர்னிகா' தான்.

### வரலாற்றுப் பின்னணி

1937ஆம் ஆண்டு. ஏப்ரல் 26ஆம் திகதி. ஒரு திங்கள் கிழமையின் பிற்பகல். பொழுது சரிந்து கொண்டிருந்தது. ஸ்பெய்னின் வட எல்லைக்கருகில் உள்ள குவர்னிகா எனும் சிறிய நகரம் உழைத்துக் களைத்துப் போயிருந்தது. ஏனெனில் அன்று அந்த நகரத்தின் சந்தை கூடும் தினம். கிட்டத்தட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு ஒரே இடத்தில் கூடுவார்கள். அதனால் காலையிலிருந்து சனநெரிசலும், வியாபாரக் கூச்சலுமாக இருந்த நகரம் மாலையானதும் சற்றே ஆசுவாசம் கண்டிருந்தது.

சற்றும் எதிர்பார்த்திராத அந்த வேளையில், சரியாக 4:30 மணிக்கு, மேகங்களுக்கு இடையில் மேகமாக இருந்து திடீரென உருவம் பெற்றதைப்போல ஜேர்மனியப் போர் விமானங்கள் வெளிப்பட்டன. அவற்றின் இரைச்சலை என்னவென்று பிரித்தறிவதற்குள் அவை சரமாரியாகக் குண்டுகளை வீசத் தொடங்கின. 2மணித்தியாலங்களாகத் தொடர்ந்த அந்த விமானங்களின் தாக்குதல்களில் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்தனர். இதுதான் உலகப் போர் வரலாற்றில் முக்கியமான சம்பவமான குவர்னிகா குண்டுவெடிப்புச் சம்பவம்.

ஸ்பெய்னில் இருந்த இடதுசாரி ஆட்சிக்கு எதிராக வலதுசாரிக் கூட்டணி கிளர்ச்சி நடத்திக்கொண்டிருந்தது. இதன் தொடர்ச்சியே இந்தப் படுகொலைச் சம்பவம். இந்த வலதுசாரிக் கூட்டணிக்கு (ஹிட்லர்) ஜேர்மனியும் (முசோலினி) இத்தாலியும் ஆதரவு அளித்தன.



> திறமையும், ஆற்றலும் சரிவரப் பொருந்தி வெளிப்பட்டதன் விளைவாகவே பேசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைய பெரும்பாலானவர்களின் நிலை அப்படியிருக்கவில்லை.

இந்தத் துயரச் சம்பவத்துக்கான ஒரு கலைஞனின் எதிர்வினையே பிக்காசோவின் 'குவர்னிகா' ஓவியம். உலகப்போரின் உச்சகட்டத்திலும் பாரிஸிலிருந்து வெளியேறாமல் பாரிஸிலேயே வாழ்ந்து மறைந்த பிக்காசோ, கிட்டதட்ட கால் நூற்றாண்டுக் காலம் வரைக்கும் தனது தாய் நடாகிய ஸ்பெய்னிலேயே வாழ்ந்தார். பரிஸிலிருந்த பிக்காசோ, 1934ஆம் ஆண்டுக்குப் பிறகு ஸ்பெயினுக்குத் திரும்பவில்லை. என்றாலும் 1937ஆம் ஆண்டில் நடந்த இந்தச் சம்பவத்தின் துயரத்தை அனுபவித்துணர்ந்ததைப்போல அவர் சித்திரித்துள்ளார்.

### குவர்னிகாவின் உள்ளடக்கம்

குவர்னிகா, குறியீட்டு வகையைச் சேர்ந்தது. முன்னர் கூறியதுபோல பிக்காசோ தனது ஆரம்ப காலத்தில் யதார்த்த வகை ஓவியங்களையே வரைந்துள்ளார். அவரது அந்தக் கால ஓவியமான 'முதல் கம்யூனிசன்' (1869)இதன் சாட்சியாகும். 1890களின் இறுதியில் பிக்காசோ அப்போது வலுவடைந்திருந்த குறியீட்டுப் பாணியைத் தனது ஓவியங்களில் வெளிப்படுத்தத் தொடங்கினார். அவரது குறியீட்டு ஓவிய முறைமை யில் எழுந்ததுதான் குவர்னிகா. குவர்னிகா நகரத்தின் மீதான குண்டுவீச்சு நடந்த இரண்டு மாதங்களுக்குள் இந்த ஓவியம் வரைந்து முடிக்கப்பட்டுள்ளது. 1937ஆம் ஆண்டு ஜூனில் இந்த ஓவியத்தை பிக்காசோ வரைந்து முடித்துள்ளார்.

வெளிச்சம் மேலிருந்து ஒரு குண்டு மின்குமிழின் வழியே வழிகிறது. அந்த மின்குமிழின் வெளிச்சம் விமானத் தாக்குதலைச் சித்திரிக்கிறது. ஓவியத்தில் உள்ள குதிரையும் காளையும் ஸ்பெயின் மக்களின் பாரம்பரியத்துடன் இணைந்த மிருகங்கள். இவற்றுக்கான நாட்டுப்புறவியல் கதைகளும் இருக்கக்கூடும். ஓவியத்தின் நடுவில் உள்ள அந்தக் குதிரை குரல்வளை நெறிக்கப்பட்டு நாக்கு வெளித்தள்ள கனைத்து நிற்கிறது. அதன் கால்கள் தாக்கப்பட்டுள்ளன.

இடது ஓரத்தில் நிற்கும் எருதின் வால் தீப்பற்றி எரிகிறது. அதன் பக்கவாட்டுக் கண்களுக்கு அருகில் இன்னொரு கண் முளைத்து மனித முகங்கொண்டு அலறுகிறது. அதற்குக் கீழே அப்பாவித் தாயொருத்தி இறந்த தனது குழந்தையைத் தூக்கி மார்பில் முட்டிக் கதறிக்கொண்டிருக்கிறாள். வலது ஓரத்தில் அருகே இந்த ஆபத்திலிருந்து மீட்க ஏதாவது ஒரு கரம் உயராதா? என மேலே தெரியும் ஜன்னலை நோக்கிக் கைகளை உயர்த்தும் ஒரு பெண். சிப்பாய் ஒருவன் கீழே விழுந்து கிடக்கிறான், அவன் கையில் உள்ள வாள் உடைந்திருக்கிறது. இது போரின் விளைவைச் சொல்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலே சிறு ஜன்னலுக்கு அப்பால் இருந்து தேவதையைப் போல் விளக்கைக் கையில் ஏந்திப் பெண்ணொருத்திப் பறந்து வருகிறாள். ஆனால் இந்த உருவங்களுக்கு எல்லாம் கிழே வீழ்ந்து கிடக்கும் சிப்பாயின் கைக்கு அருகே ஒரு வெள்ளைப் பூ கிடப்பதையும் நாம் காண முடிகிறது.

நீலத்தையும் பச்சையையும் பிக்காசோ முதன்மைப்படுத்திக் கையாளும் வண்ணங்களாகக் கருதப்பட்ட காலத்தில் இந்த ஓவியத்தை அவர் வண்ணமற்றதாக உருவாக்கியுள்ளார். ஆதலால் இந்த வண்ணமின்மையை வன்முறையின் குறியீடு என்று நாம் கருதலாம். மிருகங்களும் மனித உருக்களும் துண்டு துண்டாகக் கிடந்து ஓலமிடும் இந்த ஓவியக் காட்சி குண்டுத் தாக்குதலின் குரூரமான வன்முறையை அப்பட்டமாக வெளிக் கொணர்கிறது. இன்றுவரை அதிலிருந்து வெளிப்படும் ஓலத்தின் ஒலி குறைந்துவிடவில்லை. செவிப்பாறைகளைக் கிழித்துக்கொண்டு மனிதர்களைத் தலை குனிய வைத்துக்கொண்டேயிருக்கின்றது. அவர்களுடைய மிருக குணத்தைச் சுட்டிக்காட்டியபடி. இப்படிப்பட்ட கலைப்படைப்பும் கலைஞனும் நம்மிடமிருந்து மறைவது சாத்தியமா சொல்லுங்கள்...?



# தங்கப் பறவை

14

செல்லையா குமாரசாமி

சிறுவர் நவீனம்

"மறப்போனா? அதற்காகத்தானே நீங்கள் சொல்லொணாத் துன்பங்களைச் தலைசுமந்து வந்தீர்கள்" எனப் பதிலளித்து தான் பக்குவப்படுத்தி வைத்திருந்த வைரத்தை எடுத்து அவன் முன் வைத்தாள்.

அதனொளியில் மலைத்துப்போனது பார்த்தீபன் மட்டுமல்ல தங்கப் பறவை தவிர்ந்த எல்லாப் பறவைகளும் கூட.

ஏறக்குறைய ஒரு நாழிகைப் பொழுது கழிந்தது...

"நாளை விடிந்தால் பௌர்ணமி. இப்போதே புறப்பட்டால்தான் நாளை பகலாவது மதனாபுரியைச் சென்றடையலாம். அதுவும் கூட நேர்ப் பாதையில் போனாலே" கூறிய பார்த்தீபன். பெரிய பறவையிடம் வந்தான். அதன் தலையைத் தடவினான். அதை முத்தமிட்டான். கண்கள் பெருகச் சொன்னான். "நீங்கள் எல்லோரும் எனக்காக எத்தனையோ தொல்லைகளுக்கு முகம்கொடுத்தது மல்லாமல் எனது சங்கல்ப்பம் நிறைவு பெறவும் செய்தீர்கள். உங்களை விட்டுப் பிரிவது மனதுக்குத் துன்பமாக இருக்கிறது. இருந்தாலும் எனது கடமையை முடிக்க வேண்டியவனாக இருக்கிறேன். போய் வரட்டுமா?"

பறவைகள் கவலையோடு வழியனுப்பி வைக்கத் தங்கப் பறவைகள் வலையில் அமர்ந்திருந்த யோதி நிலாவையும் பார்த்தீபனையும் தூக்கியபடி வானில் பறந்து மறைந்தன.

மலைகள், விலங்குகள் வசிக்கும் வனங்கள், மனித நடமாட்டமற்ற கானகங்கள், ஆறுகள், குளங்கள், பாலைவனங்கள், பசுந்தரைகள், குடியிருப்புகள் கடந்து தங்கப் பறவையின் வழிகாட்டலில் பறந்து கொண்டிருந்த தங்கப்பறவையின் வழித்தோன்றல்கள் அரண்மனை வளாகத்தை அண்மித்தபோது சூரியன் உதயமாகி இரண்டு நாழிகைப் பொழுதுகள் கழிந்துவிட்டன.

அரண்மனையைச் சுற்றி மூன்று நான்கு தடவைகள் பேரிரைச்சலோடு பறவைகள் வலை ஒன்றைத்தூக்கிய வண்ணம் பறந்ததறிந்த அரசரும் அரசியும் எழில் நிலாவும் பரிவாரங்களும் நந்தவன வெளியிலும் கூடினர். அரண்மனையைச் சூழ்ந்தும் வீரர்கள் நிற்கத் தங்கப் பறவை திடீரெனத் தலை கீழாகப் பறந்துவந்து அரசகுமாரியின் பக்கமாக நின்றது. தன்னருகே தானாக வந்து நின்ற தங்கப் பறவையைக் கண்டதும் அதைப் பிடித்து வரவென்று அரசகுமாரர்களுக்கும் தமது நாட்டு வீர இளைஞர்களுக்கும் வேண்டுதல் விடுத்த அரசகுமாரி எழில் நிலாவின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.

தங்கப் பறவை அரசகுமாரியின் அணைப்பில் நின்று அவளின் முகம்நோக்கிப்பேசியது. "நான் கவர்ந்து போன வைரம் உங்கள் அக்காவான யோதி நிலாவிடம்தான் இருக்கிறது"

"அக்கவா?"

"ஆமாம், உங்கள் அக்கா யோதிநிலா"

"யோதிநிலா"என்று தங்கப் பறவை சொன்ன சொல் காதில் விழுந்ததுதான் அரசரும், அரசியும், அரசகுமாரியும் அடைந்த மகிழ்ச்சியை வர்ணித்துக் கூற ஒரு நாள் போதாது.

தங்கப் பறவைகள் புடைசூழ நந்தவன வெட்டையில் வெற்றிக் களிப்போடு வந்துகொண்டிருந்த பார்த்தீபனை ஒட்டினாற்போல அன்னமாக எழில்நிலாவின் சுயம்வரத்தன்று அவள் அணிந்திருந்த அதே ஆடையில் உலகிலுள்ள அழகுகளையெல்லாம் ஒன்று திரட்டிப் பிறந்த அழகிய கன்னியாக கண்களில் மிரட்சியோடு வந்த யோதி நிலாவையும் பார்தீபனையும் கட்டி அணைத்தார் அரசர் மகேந்திரதேவா. அரசியின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகின. மகளின் ஒவ்வோரங்கமாகத் தடவிப்பார்த்தார். குந்தியிருந்து அவளின் பாதங்களையும் தொட்டுத் தனது கண்களில் ஒற்றினார். வாய் பேச்சை மறந்தது.

"இரண்டு கொண்டு வரப்போனவர் மூன்றாவது அதிசயத்தோடும் வந்திருக்கிறார். எமது நாடு கண்ட வீரர்" எனக் கூறியபடி பார்த்தீபனின் கரங்களை தன் தளிர்க்கரங்களால் பற்றிப்பிடித்தாள் இளவரசி எழில்நிலா.

"யோதிநிலா உட்பட எல்லோரும் பசியாலும் களைப்பாலும் சோர்ந்துபோயிருப்பதை மறந்துவிட்டீர்கள்"பொதுவாகச் சொன்னான். பார்த்தீபன்.

"முதலில் எல்லோரும் உள்ளே போவோம் பசி. தாகத்தைத் தீர்போம்"என உரத்துரைத்த எழில் நிலா "தங்கப்பறவைகளே எல்லோரும் வாருங்கள். என்னுடன் வாருங்கள்" எனச் சொல்லியவள் ஒரு கையால் பார்த்தீபனையும் மறுகையால் தங்கப் பறவையையும் பிடித்து முன்னே நடந்தாள்.

அரச சபை விழாக் கோலம் பூண்டது. "யோதி நிலா வந்த செய்தியை நாட்டு மக்களுக்கு உடனே தெரியப்படுத்துவதோடு எல்லோருக்கும் ஒரு வாரத்துக்கு வேண்டிய உணவு வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் அரசர். அத்தோடு தங்கப் பறவைகள் எமது நாட்டில் அரண் மனைக்குச் சமீபமாக சுதந்திரமாக இருந்து வாழ எல்லா ஒழுங்குகளும் மேற்கொள்ளப் படவேண்டும் எனவும் பணித்தார்.

மதியம் அரச விருந்துண்ட பார்த்தீபன் வைரத்தையும் தங்கப் பறவையையும் தேடிப் புறப்பட்ட நாள் தொடக்கம் பசி பட்டினியால் துவண்டு. மரநிழலிலும் மண்மேலும் தீங்கியதாலும் தூங்காது கண் விழித்திருந்தாலும் காடு மேடு பாராது நடந்தாலும்இளைத்தவனின் கண்கள் அவன் அமர்ந்திருந்த இடத்திலேயே சோர்வுற்றுப் போவதை அவதானித்த அரச குமாரி எழில் நிலா பிரத்தியோக அறையில் படுக்கை தயாரித்து விரைந்தோடி வந்தாள். அவன் தோள் தொட்டாள். "சிறிதுநேரம் படுத்து உறங்குங்கள்"எனக் கை பற்றினாள் வாஞ்சையோடு.

அவளது பட்டுக்கரம் தொட்டதும் திணுக்குற்று எழுந்து பேந்தப் பேந்த விழித்தான் பார்தீபன்.

"சிறுபொழுதாவதுபடுத்து உறங்குங்கள்" யாழும் குழலும் அவன் காதுகளில் சேர்ந்து ஒலித்தன.

எதுவுமே பேச முடியாதவனாய் அவள் காட்டிய கட்டிலில் விழுந்தான். தூங்கிப்போனான்.

இரண்டு நாழிகைகள் செல்ல எழிலரசி வந்து பார்த்தாள். அவன் தூக்கம் கலையவில்லை. போர்வை எடுத்துப் பூரிப்போடு போர்த்தித் திரும்பினாள்.

பார்த்தீபன் கண்விழித்தபோது விளக்குகளின் ஒளியில் கண்கள் கூசின.

துடித்துப் பதைத்து எழுந்தான்.

வாசலில் எழில்நிலா வெள்ளிப் பாத்திரம் ஏந்தி நின்றது தெரிந்தது.

"பானம் கொண்டுவந்திருக்கிறேன். பருகிவிட்டுக் குளித்து உடை மாற்றுங்கள்"

இரண்டு கரங்களும் நீட்டிப் பயந்தவனாக எட்டவே நின்று வாங்கிய நேரம் அரசரின் முகம்தெரிந்தது. அறைவிட்டு மெல்ல மெல்ல அரசரிடம் வந்தான். பானத்தைத் தரையில் வைக்க குனிந்தவனின் பானத்தைத் தன்கையில் வாங்கினாள் எழில்நிலா.

இரண்டு கரங்களையும் கூப்பினான் பார்த்தீபன். "என்னுடைய கடமைகளைச் சரிவர முடித்துவிட்டேன் என்று நினைக்கிறேன். பெற்றவரைப் பிரிந்து வெகுகாலமாகிறது. எனக்கு வீட்டுக்குப் போக அனுமதி வேண்டும்"என்றான்.

அரசர் சிரித்தார். "முதலில் அரசகுமாரியின் கையில் இருக்கும் பானத்தை வாங்கிப் பருகுங்கள்"

எழில் நிலா முகமலர்ந்து நீட்டினாள்.

அவன் பெற்று ஒரு மூச்சில் குடித்து முடித்தான். பாத்திரத்தைத் தரையில் வைத்துவிட எத்தணித்தவனிடமிருந்து மீண்டும் வாங்கிச் சிரித்தாள்.

"நான் வீட்டுக்குப் ....போக...." இழுத்தான்.

"எந்த வீட்டுக்கு?"

"அரசர்.. எமக்கு...அளித்த.."

"இதுகூட இன்றிலிருந்து என் மகள் அரசகுமாரி எழில்நிலாவுக்கும்...இந்த நாட்டுக்குக் கிடைத்த ஒரே ஒரு வீரப் புதல்வன்..." அரசகுமாரி சொல்லி முடிக்கவில்லை.

"சேந்தரின் செல்வப் புதல்வன் பார்த்தீபனுக்கும்" என்று அரசர் தொடர்ந்தார். "உங்களைப் பெற்றெடுத்து எனக்கு மருமகனாகவும் என் மகள் எழில்நிலாவுக்குக் கணவனாகவும் மதனாபுரிக்கு வருங்கால அரசனாகவும் தந்த திருவாளர் சேந்தனுக்கும் பாரியாருக்கும் நான் செய்தி அனுப்பியிருக்கிறேன். அதோ அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்."

(முற்றும்)




நெடுந்தீவு க.யோகேஸ்

கவிதை

முச்சந்திகளில் கொட்டப்படுகின்ற
கழிப்பு இளநீர் மீது
சிறுநீர் கழித்துக்கொண்டிருக்கிறது
நாய்

ஆச்சாரமான குடும்பத்து
பெண் ஒருவர்
நள்ளிரவில் வீடு
திரும்பிக்கொண்டிருக்கிறார்

செய்வினைத் தகடுகளை
புதைப்பதற்காக
நிலையம் பார்க்கிறார்
மந்திரவாதி

பழைய சரக்குகளில்
புதியகாலாவதித் திகதிகளை
ஒட்டிக்கொள்கிறது
மருந்துக்கடை

ஓர் உணவு விடுதியில்
பத்தாவது தடவையாகவும்
தீக்குளித்துக்கொள்கிறது
கோழி ஒன்று

எல்லோர் மீதும் அப்பிய இரவை
கழுவிக்கொண்டிருக்கிறான்
சூரியன்

# மகாசிவம் இராத்திரி விரதம்...?



தையிட்டி அ.இராசதுரை

ஊரெல்லாமிந்தத் திருட்டுப்பயல்கள்... வேண்டுமெண்டபடியாய், கொள்ளை, கொள்ளையாய் மலிந்து புழுத்துப்போயிருக்கும்... பொல்லாதகொடியாந்திரமானதொருகாலம்...? அதுவுமின்றைக்கு இந்த மகா சிவராத்திரி விரத நாள்...! இன்றைக்கிந்த மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டுக் கோயிலுக்குப்போகாத சனங்களில்லை...! வீடு வாசல்களெல்லாம்... மிக மிக எச்சரிக்கையான முறையில், ஆமான பூட்டுத்திறப்போடு... வெறுமையடைந்து போயிருக்க... வேண்டுவார்வேண்டுவனவற்றையெல்லாம்... ஈயுமந்த, பரம்பொருளிடம்... கண்களெரிய எரிய, மனமெல்லாம் உருக... உருக... சிவனே! பரனேயென்று.. விடிய விடிய... முழிப்பிருந்து... தங்களுக்கு, நல்வாழ்வு... வேண்டி நிற்போர்... ஒரு பக்கம்...!

இந்த விரதத்தின்... அடுத்த பக்கமாய்... சிவராத்திரி, விரதத்தின் ஆவலாதியில், ஓடோடியும், அவன் சந்நிதி வந்துவிட்ட சிலர்...

"இங்கை நாங்கள் வந்து நிக்க... அங்கை கள்ளரும்... வீடு வாசலும்... என்ன... வழியோ..??" என்றெல்லாம் மனதைப் போட்டுப் பிய்த்துப் பிடுங்கி... விரதத்தின் முழுமையை அரை குறையாய்..?

".... இந்தச் சித்திரத்தில் இந்த மகா ஜனங்களெல்லாம்... கெட்டித்தனமாய்... யுகம் யுகமாய்ச் சேகரித்து, இறக்குமதி செய்து வைத்திருந்த, இந்தச் சேனை திரவியங்களை யெல்லாம்... இந்தத் திருட்டுக் கொம்பனிக் காரங்களான, நாங்கள் பாருங்கோ... கண்களையெல்லாம், இறுக்கி மூடிக் கொண்டுதான்... படுசுட்டித்தனமாய்... ஒரு சில, செக்கண்களுக்குள்ளேயே... ஒரு, முதல் போடாத, ஹோல்சேல்ஸ் வியாபாரமாய்... எங்கடை, களவுக்கப்பலிலை, சுப்பராய்... ஏற்றுமதி செய்து கொண்டு தான்... போறமல்லோ...!?"

இப்படியெல்லாம்.. இந்தத் திருட்டுக் கூட்டம்... கோரஸ் பாடி, கும்மாளம் போடுகின்றளவுக்கு... இந்தச் சிவராத்திரி விரத நாள் முழிப்பும்... பட்டப்பகிரங்கமாய்... எல்லாச் சனங்களும்... வீடு வாசல்களையும்... சிவராத்திரியைச் சாட்டி... கள்வர் காடருக்கு தோதுமாதிரியாய் விட்டுவிட்டுப் போகின்றதால்... இது இவர்களுக்கெல்லாமொரு, 'வசந்த...' இரவு மாதிரித்தானே...!??

இப்படியெல்லாமிந்தக் கள்ளர் காடரின் திறில்லான, கலக்கடியோடு, கூடி மகாவல்லமை பொருந்திய, மகாசிவராத்திரி விரத முழிப்பு, ஆரவாரங்களும்... ஓட்ட பாட்டங்களுமாயொரு... சிவபூஜையில், கரடி புகுந்து விட்டதோர், கலக்குக் கலக்கியடிக்க... கலக்குக் கலக்கியடித்துக் கொண்டிருக்க... வீடுவாசல்களில்பச்சப் படியவே ஆமான ஆள்களிருக்கின்ற, நேரத்திலும்தான்... ஆயுதங்களைக் காட்டி, உருட்டி, மிரட்டிக் கைவரிசை காட்டிக்கொண்டு போகுமிந்தப் பொல்லாத, திருட்டு வங்கோலைகளின் தியானத்தோணடு... இந்த மகா சிவத்தின், மனைவியான... அங்கயற்கண்ணி... ஓர் ஆண் பிள்ளைக்காக... மகாசிவராத்திரி விரத நோன்பிருந்து.. தனது இரண்டு பெண்பிள்ளைகளோடும்... பக்கத்து வீட்டுச் சிவகாமி, அன்ரியோடும்... வீட்டின், காவலுக்கு எல்லாம் வல்ல 'சிவனையும்...' கணவன் 'சிவத்தையுமே....' முற்று முழுதாய் நம்பிக் கொண்டு ஓட்டோவில், நகுலேஸ்வரம் புறப்படுகின்றாளே..!

"இங்கை நாங்கள் வந்து நிக்க... அங்கை கள்ளரும்... வீடு வாசலும்... என்ன... வழியோ..??" என்றெல்லாம் மனதைப் போட்டுப் பிய்த்துப் பிடுங்கி... விரதத்தின் முழுமையை அரை குறையாய்..? ".... இந்தச் சித்திரத்தில் இந்த மகா ஜனங்களெல்லாம்... கெட்டித்தனமாய்... யுகம் யுகமாய்ச் சேகரித்து, இறக்குமதி செய்து வைத்திருந்த, இந்தச் சேனை திரவி யங்களை யெல்லாம்... இந்தத் திருட்டுக் கொம்பனிகாரங்களான, நாங்கள் பாருங்கோ... கண்களையெல்லாம், இறுக்கி மூடிக் கொண்டுதான்... படுசுட்டித்தனமாய்... ஒரு சில, செக்கண்களுக்குள்ளேயே... எங்கடை, களவுக்கப்பலிலை, சுப்பராய்... ஏற்றுமதி செய்து கொண்டு தான்... போறமல்லோ...!?"

★★★

சிவசிந்தனையையும், திருடர் சிந்தனையையும்... தன்னுள் அள்ளிப் போட்டபடியே... எந்தச் சிந்தனையுமற்ற ஓட்டோவானது... ஓட்டத்தில், ஓடிப்போய்க் கொண்டிருந்தது...!

ரைமும், நைற், 'ரென்னொக்குளக்'கையும்... கெம்பீரமாய்ப் பாஸ் பண்ணிக் கொண்டிருந்தது...!? மெயின் வீதியில் சகல சிவராத்திரி கோயில் ஓட்டபாட்டங்களும், ஆரவாரங்களும் நல்லாய் ஓய்ந்துதான் போயிருந்தாலும்... தெறியனாய்.. இருந்திருந்துவிட்டு, மோட்டார் பைக்குகளும், ஓட்டோக்களும் ஊர்பெண்டுகள் மாதிரியாய், முணுமுணுத்துத் தள்ளிக் கொண்டிருந்தன...!

"... இன்னுமொரு, கொஞ்ச நேரத்திலை... இந்த றோட்டும்.. நித்திரையாகிவிடும்...? அதுக்குப் பின்னாடியா... இந்தக் கள்ளங்களின்ரை.. ராச்சியம்...??" இப்படியாய், மகாசிவம்... கள்ளர் காடரைப் பற்றிய அலட்டல்களைத் தொடங்கிய முகூர்த்தமாய்... படாரென்றொரு.. திடீர்ச் சத்தமானது, குண்டுச் சத்தம், நிகராய் மகாசிவத்தை லேகாய் துள்ளிக் குதிக்கவும் வைத்து விடுகின்றதே..!?

கேற்றடியில்.. திருட்டுக்கூட்டம், வந்துதான், திருட்டு அற்ராய்க்குக்குத் திறில்லால் குதித்தும் தான் விட்டார்களே..? அய்லட்டைகளில்... எந்தச் சனிகளுமில்லையே... என்ற விதமாய், திருடர் பயமானது... சிவத்தை, ஹைபிறஷராய் நெருடித் தள்ள... இந்தத் திருட்டுக் காடையர்கள், வீட்டுக்குள் பாய்ந்து வந்து சாமானில் தொடமுன்னமாய்த் தன்னைத்தான் அற்ராய்க்பண்ணியேவிடப்போகின்றார்களேயென்றபொல்லாத பயக்கெடுதியில்... குளறிச் சத்தம், வைக்க வேண்டும் போலொரு மகா... மகா... அவசரம்...? அப்படித்தான்.... குளறினாலும்... இந்த, இப்போதைய புளுத்த காலத்துக் கலாசாரத்துக்கு... தங்களையே காப்பாற்றிக் கொள்ளும் ஐடியாவில் றோட்டால் போகின்றவர்களும் ஓடிப்பறந்தே போயும் விடுவார்களென்றும் அற்லாஸ்ராய் திரு டர்களின் காலடியிலேயே சகல வீட்டயிற்றங்களையெல்லாம், கொண்டு போய்க் கொட்டிச் சிந்திப் பரவி... அந்த அவர்களிடமே... சரணகதியும்.. கச்சிதமாய் அடைந்தும்விட்டாற்போல்... 'சிவராத்திரியையும்,' எங்கெல்லாமோ, தூக்கித் தொம்மென்று போட்டும், விட்ட கோலம்பறையில்... வீசியும் விட மலரடியில்... சிவத்தின் நடுங்கும், கையொன்று, தெரிந்தோ தெரியாமலோ.. வெளிப்பிளாற் லயிற் சுவிற்சில்முட்டியும்விடுகின்றது...!!பிளாற்றிலுள்ள, ரியூப் லயிற்றானது... வெளிச்சத்தையள்ளி எறிய... வாழ்க்கையில் இதுவரையில் கண்டும் கேட்டும் விடாதோர் வகையான.. ஆச்சரியமும்.. இப்பதான் நெஞ்சுக்குள், தண்ணி வந்துவிட்டது போன்ற பெரிய மனஆறுதலாய்... சிவத்தைச் சில விநாடிகளுக்குள்ளேயே சிவராத்திரி, விரதத்தையும் முறையாக அனுட்டித்தும் முடித்துவிட்ட கதையாய் தழுவித் தடவியும் தான் விடுகின்றதே..!

★★★

"... கோயில் கும்பிடப்போன... இந்தப் பக்கத்து வீட்டு முழியன்ரை..?" என்று கதை தொடங்குது தொடங்கவும், அந்த நைற், !! பாசாகிறதுக்குள்ளை.. ஸ்கை ஜம்பில், கோலொன்று பிய்த்து வாங்கிக் கொண்டே வந்திடவும்... சிவம், தொடங்கின, 'கோவில் கும்பிடப் போன...' என்ற கதையும் அந்தளவோடு குளோசாகியே போச்சுது..!?

"ஹலோ .... ஹலோ... ஆர் பேசிறீங்கள்...??" தாயாரின் மரண அறிவித்தல், வந்த பத்திரிகை, போடப்பட்ட தனது செல்போன் நம்பரைத்தான் கவனமாய் எழுதிவைத்திருந்த திருடன்தான், இந்த நம்பருக்குக் கோலடித்தானோ... நாசமறுத்தானோ.... என்ற பேந்தும் தான், வேதாளம், முருங்கை மரத்திலேறிவிட்ட திருடர் சிந்தனைப் பயத்தோடு... சிவம், கோலைக் கொல்லன்றெடுத்தும் விட...

"பேந்தாரப்பா... இந்த நேரத்திலை.. உங்களோடை... ரோக் பண்ணமுடியும்..!? நான்தான்... உங்கடை... மிஸிஸ்...!! என்னப்பா, பயந்துகியந்தும்... போனீங்களே என்ன...? கள்ளர் காடற்ரை.... மணப்புக்கிணப்பேதும்... தட்டுப்படுற, சிலமன்...??"

மிஸிசின் குரல் கேட்ட... கேட்டுவிட்ட, முழுத்தம்... இந்தச் சிவராத்திரி விரதம், தொடங்கின, நேரத்துக்கு... இந்த மகா சிவராத்திரிவிரதம், முழுவதையுமே... அந்தப்படியவே.. ஒரு, பிடி பிடித்தும்' முடித்துவிட்டாற்போல... சிவத்தாரின் சிவந்த, வாயானது... முதல்முறையாக.... கெக்கெக்கேயென்று பெரிதாய் லவுச் பண்ணியும்தான் விடுகின்றது...!?

சித்தம்சிவனேயென்றுதானிருந்துகொண்டிருந்த, அங்கயற்கண்ணிக்குத் தன்னுடைய சிவத்தின் வெடிச்சிரிப்பைச் செல்போனில் கேட்டுவிட்டபோது... தான் ஓர் ஆண்பிள்ளைக்காக... சிவராத்திரி விரதமிருப்பதன் நற்பலனை இப்பவே கண்டும் கொண்டுவிட்டாற்போன்ற ஒரு பக்திமுக்தியான, சந்தோசக் கொண்டாட்டம்...!

".... எந்தக் கள்ளன் காடனாவது...? மண்ப்பாவது... மண்ணாங்கட்டியாவது...?? இந்தச்சிவத்தான்ரை முன்னாலை... எந்தக் கள்ளப்பயல்... துணிஞ்சு... வாறானோ... அவன்... சாச்சவம்...??"

ஒரு நகைச்சுவை, நாகேஸ் ரைப்பான, சினிமா ஹீரோவாய்... வெட்டி முழக்கி, ஓர் எழுப்பம், காட்டிய சிவம்... வாய் கொன்னிக்க... மேலும், கதைத்துக் கொள்ளவும்... முடியாமல்... பட்டுத் தொலைத்த... அவஸ்தை...?

"ஐயோ, மைடியரப்பா... என்ன, உள்ளதைச் சொல்லுங்கோ, பிளீஸ்... இப்ப, கதைக்கேக்க... உங்கடை... வாய் சரியாக் தொன்னிக்குது..? நடுங்குறமாதிரிக் கிடக்கே...!?? குயிக்கா.. அதேனெண்டு சொல்லுங்கோப்பா...?? ஏதும்... தீவ்ஸின்ரை... ஐயிற்"

"அப்படியான சமாச்சாரமெண்டுமேயில்லை. அங்கையா...! தேவையில்லாமலுக்கு அலட்டிக் கொள்ளாதையும்... இந்த விரதம் பிடிக்...."

"அப்ப பிள்ளை... ஏனப்பா.:!? சுறுக்கா சொல்லுங்கோ... அடுத்த சாமப் பூசைக்கும், ஆயத்தமணி..."

"இல்லையப்பா... அடுத்த வளவு முழியன்ரை.. தென்னையிலிருந்தொரு... ஆமான தேங்காயெண்டு.. இஞ்சாலை... எங்கடை... தகரக்கொட்டிலுக்கு மேலைபடாரெண்ட, பெரிய சத்தத்தோட விழுந்துதேயொரு... விழுகை..!? இந்தக் கள்ளப்படையெல்லாம், வந்து எங்கடேக்க ஒருமிக்க கொட்டுண்டு விட்டுதேயண்டு, எனக்குப் பிடிச்ச பயம்...!? கடைசியா... பிளாற்... லயிற், வெளிச்"

"அட என்ரை ராமா...!! நீங்கள், சரியான லூஸ்தான்...!! ஒரு தேங்காய்... உங்களைப் பேய்க்காட்டி... உந்தக் காத்தியேஸ் அங்கிளின்ரை... மகள் நந்தினி அவவின்ரை அப்பா யூ.கே.யிலை...! மனிசன்... காசுழைக்கிற... ஆசேலை... மூண்டு நாலுவருசத்துக்கொருக்காத்தான்... வந்தெட்டிப் பார்க்கும்....!!? நாங்களெண்டா... ஒரு சொட்டுக்கும் தாங்க மாட்டம்... நந்தியெண்டபடியாத்தானே... இந்த அசெப்க்ஸ்... எல்லாத்தையும் பல்லைக் கடிச்சுக் கொண்டு... சமாளிச்சுத் தள்ளிறாளே....!! இந்த இப்பிடியாம்பட்ட, கெட்டிக்காறி தாணண்டைக்கி... தம்பியாரையும்... தாயையும்... கீரிமலைக் கனுப்பிப் போட்டு அந்த 5வயதுப் பாலனோடை இந்தக் கள்ளங்களுக்கொரு பெரிய சவாலாய் தான் தனியாவாயிருக்கிறன்" "ஓ... யெஸ்... நவ்... ஐ நோ தற் லேடி வெரி வெல்..! வெரிவெல்...!!"

28

அயக்கிரீவன்

தொகுப்பு

# நூல் அறிமுகம்



**நூல் - ஒரு பூவின் மடல்**
**ஆசிரியர் - பங்கஜன் தனுஜா**
**விலை - 120ரூபா**

உணர்வுகள் கட்டுக்கடங்காது நின்றபொழுதெல்லாம் அதற்கு வடிகால் தோண்ட முற்பட்டபொழுது கவிதையே எனக்குத் துணையானது. வீடு, பாடசாலை, கிராமம் என்ற குறுகிய வட்டத்துக்குள் உலா வந்த எனக்குப் போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வும், முள்ளிவாய்க்காலில் முடங்கிப்போய் மூச்சு முட்ட கோரமான நிகழ்வுகளும் என்னை வெளி உலகுக்குக் கொண்டு வந்தன. அன்றுதொட்டு என் பேனா முனை வெள்ளைக் காகிதங்களைக் காணும்போதெல்லாம் ஏதேதோ வாசகங்களைக் கிறுக்கியது. பார்த்தவர்கள் அவை யாவும் கவிதை என்றார்கள். எனக்கோ கவிதை என்றால் என்ன? என்பதே தெரியாத பருவம். ஏன்? இன்றுகூட கவிதைகள் பற்றிய முழு வட்டத்தையும் பார்வையையும் தெரிந்துகொண்டேனா? என்பது சந்தேகம்தான்.

எனது கவிதைகளுக்குக் குறிப்பாக உணர்வுகளுக்கும் வடிவங்களுக்கும் நான் வரையறை போட்டதில்லை. மூன்று வரிகளுக்குள் என் உணர்வுகள் தீர்ந்தால் முடித்துக்கொள்வேன். இல்லை முந்நூறு வரிகள் தாண்டியும் முடியவில்லையாயின் அதற்குக் கவலைப்படவும் மாட்டேன்.

நான் கவிதைகளைப் படைக்கும்தோறும் இந்தக் கவிதைகள் நாளை வெளிவரவேண்டும். பலரும் வாசிக்க வேண்டும் என்று எண்ணியதில்லை. எனக்கு ஆறுதல் வேண்டும் அதற்காகவே எழுதினேன். பாடசாலை மட்டத் தமிழ்த்தினப் போட்டியிலும் விழாக்களிலும் கவிதைகளைப் படைக்கும்போது ஏற்படும் சந்தோசம் தான் இந்தப் படைப்பு வெளிவரும்போதும் ஏற்படுகின்றது. அவ்வளவுதான்... கவிதைத் தொகுப்பு வெளிவர என்னைக் கவிதையோடு அழைத்துச் சென்ற ஆசிரியர், திரு.க.முருகமூர்த்தி, திருமதி.யாழ்மொழி ஆசிரியர்களுக்கும், சூரியன் எவ்.எம் முகுந்தன் அண்ணா, மற்றும் கவிஞர்களுக்கும் இவர்கள் யாவற்றிலும் மேலான எனது பெற்றோர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

(நூலாசிரியர்)



**நூல் : பண்டாரவன்னியன் காவியம்**
**ஆசிரியர் : மு.அருள்பிரகாசம்**
**வெளியீடு : வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கலாசாரத் திணைக்களம்**
**விலை : 250ரூபா**


மண்மானம், தன்மானம், பண்பாடு தனைக்கொண்ட மாவீரன் பண்டார மன்னவன் போர்க்களத்தில் தன்னாட்சி உரிமைதனைத் தான் பறிக்க நான் விடவோ! தலை கொடுத்தும் தரணி காப்பேன்! தமிழர் நெஞ்சை நிமிர வைப்பேன். தமிழ் மானங்காத்து அந்நியருடன் சமரசம் செய்யாது தமிழர்களின் தன்மானம் காத்த வன்னி மண்ணின் வரலாற்று நாயகன் பண்டார வன்னியனின் வீர வரலாற்றை பண்டாரவன்னியின் காவியமாகப் படைத்துள்ள அண்ணாவியார் கலாபூசணம் மு.அருட்பிரகாசம் அவர்களின் கைவண்ணம் நூலுருப் பெறுவதையிட்டுப் பேருவகை அடைகின்றேன். பா செய்யும் ஊர் என்ற நாமம் பூண்ட யாழ்பாடியின் பாட்டுக்குப் பரிசாய் வழங்கப்பட்ட பிரதேசம் என்ற ஐதீகத்தை உறுதி செய்யும் பாசையூர் கிராம்த்தின் படைப்பு வரிசையில் இந்தக் காவியமும் சேர்ந்து கொள்கின்றது. நூற்றுக்கு மேற்பட்ட கூத்துகளையும், நாடகங்களையும், சிற்றிலக்கி யங்களையும் படைத்துள்ள பாசையூர்க் கிராமத்தின் கவி மரபுக்குச் சான்றாகவும் அந்த மரபின் தொடர்பறாப் படைப்பின் நீட்சியின் சாட்சியாகவும் விளங்குகின்ற இந்த நூல் ஒரு வரலாற்று ஆவணமாகப் பேணப்படுவது உறுதி. ஒரு சமுகம் கடந்தகால வரலாற்றுக்குள்ளிருந்தே தனக்கான உயிர்ப்பைப் பெறுகின்றது. சமகால வாழ்வுக்குரிய படிப்பினைகளையும், பண்புகளையும் வரலாற்றுவேரில் இருந்து பெற்றுக்கொள்ளும்போதே அது தனது மண்ணுக் குரிய தனித்துவத்தையும், உறுதிப்பாட்டையும் நிலைத்து நிற்கச் செய்யும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்த வகையில் ஈழத்தமிழர்களின் மேல் வரிச்சட்டங்களாக நிற்கும் மன்னர் பெருமக்களில் பண்டாரவன்னியனும் ஒருவனாவான். அவனது வீரவரலாற்றைக் காவியமாக்கிய அண்ணாவியார் மு.அருட்பிரகாசத்தின் முயற்சியைத் தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டும் என்று நினைக்கின்றேன்.

(யோ.யோண்சன் ராஜ்குமார்)

*நூலாசிரியர்களே!*
*இந்தப் பகுதியில் உங்கள் நூல் பற்றிய குறிப்புகள் இடம்பெறவேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.*

**'சூரியகாந்தி' உதயன் பத்திரிகை**
**இல.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# மகாசிவம் இராத்திரி விரதம்...?



(தொடர்ச்சி)

... அந்தப் பெண்ணைப் பற்றி... தன் மனையாள் கசிந்துருகிய... வாழ்வியல்... யதார்த்தங்களுக்கு.. மகாசிவம்... தலைவணங்கிநின்றபோது... அவன் மனமானது... அவனையுமறியாது... அவன் மனைவியையுமறியாமலே... இந்தத் திருடர் கூட்டத்தையுமே அறியாமலே... இந்த மகாசிவராத்திரியையும் கூட... அறியாமலே.. எங்கெல்லாமோவெல்லாம்... ஒரு ஹைப்பாட் நிலையில் கூட்டிப் போகத் தொடங்கியே விடுகின்றது..? அந்தத் தடங்களெல்லாம்.. அவனும்... இப்பவே... இந்த நிமிடமே போயேயாகியே... விடுமாற்போல்...? போயேயாகிய விட்டாற்போல்...?

"ஓஷீ இஸ்சே... வெரி... வெரி... ஹான்ட்சம்லேட் பேட்...!?"

... ஏதோ... எக்கச்சக்கமாய்... போதைவஸ்தோ... என்னவோ வாங்கிக் கொண்டாற்போல்... அவன்... இப்படியாய் ஓர் உளறு நிலையைத் தொட்டுநின்றபோது.... இந்தச் சிவத்தின் வார்த்தைகள்.. ஒரேயமுக்காய்த் தன்னைப்பிடித்துக் கொன்றொழித்தே விட்டாற்போல.. அங்கயற்கண்ணியின், கதைப்பும், திடீர ரட்டியனவாய் அப்செற்ராகியேவிடுகின்றது...? தான் இவ்வளவு, பாடுபட்டு, மனம்வருந்திப், பிடிக்குமிந்தப் புனிதமான, சிவராத்திரிவிரதமும்தான்... கிலுசைகெட்டும்தான் ..போச்சுதோவென்ற, பாடோரிச், சிந்தனையில்.. ஓர், அவலைப் பெண்ணாய், சரியாகத்தான், மங்கமடித்து, கலங்கிப் போனவள்... இந்த நந்திகாவின், ஸ்ரோறியை.. ஏனிந்த வெறும் லூஸ் மனிசனுக்குப்பிடிச்சுதன்ரைவாய் கிடவமாலுக்குச் சொன்னேன் சொன்னேனெண்டெல்லாம் இந்தப் பின்புத்தியான பெண்புத்தியைத்தான் தறிய முறிய நொந்து கொண்ட வேளையாய்..

நல்லாய் முறிந்து தறிந்து போனவளைத்தான் ஆறக்கட்டிவிடவென்றுதானோடியும் வந்துவிட்ட சிவனருள்போல அடுத்த சாமப் பூசையும் இந்தா பிடியென்றுதான் தொடங்கியும் விடுகின்றது.

★★★

அப்பொழுது தான் சடுதியாய்த் திடுக்கிட்டு நித்திரை முழித்துக் கொண்டவன்போல் தானே அந்த நேரத்துக் கடுமுணர்ச்சி வசப்பட்டுவிட்ட மூட்டில் உளறித்தான் தள்ளிவிட்ட ஒரு கணவனானவன் தன்னுடைய மனைவிக்கு முன்னால் இன்னொரு பெண்ணைப்பற்றி எழுப்பமாய் ஒருபோதும்தான் சொல்லக்கூடாத கதையைச் சொல்லியே காட்டி விட்ட படுபாதாளச் சங்கதியை 'டீப்பாகத் திங்' பண்ணத் தொடங்கியே விடுகின்றானிந்த மகாசிவம். திடீரட்டியனவாய் அந்த நடுச்சாமம் ஒரு மணிநேரத்தில் சடுதியானதொரு கோலொன்று வந்தும் விடுகின்றது.

இந்தக் கோலானது தன்னுடைய மனைவியின் கோலாகத்தானிருக்குமென்ற ஐடியாவோடு சிவம் பயந்து கெடிமண்டிக் கொண்டே 'ஹலோ ஹலோ' என்று கத்திக் கத்தி கூப்பிட்டும் விடுகின்றான்

"குட்நைட் குட்நைட் சிவமங்கிள் நான் தான் நந்திகா ரோக்கிங்! இந்த நைற்ரைமிலை உங்களோடை ரோக் பண்ணுறதுக்கு கிடைச்ச வெரி வெரி லக்கி ஷாண்ஸ் ஐயாம் வெரி வெரி ஹப்பி"

"இதென்னடாப்பா பூகம்பமெண்டு பயந்து சாக..: பூமாரியாப் பொழியிது...?" இப்படி லவுடராய் அலட்டிக்கொண்ட சிவம் இப்பொழுது மகாவல்லமை பொருந்திய தோர் மகா சிவமாய் ஒன்யுவர் மார்க்கில் ரெடியாய் திடீரட்டியனவாய் ஒரு த்திறில்லான பெரிய சவுண்ட் மோட்டார் பைக்கொன்று வேகக்கட்டுப்பாட்டினையிழந்துபோய்எதிலையோ த்திறில்லாய் மோதிவிட்ட ஐயிற்றம் ஒருக்காக் கேட்ட கேட்டுமுடிந்த மரண ஓலம் இந்த அபசகுணத்தைப் பிடித்துச் சிவம் நந்திக்காவோடு அலறித்தள்ளுகின்றான்.

"ஓ மைடியர் அங்கிள் அவை யாரும் செத்துப் போகட்டும் யூடோன்ற் வெறி பிளிஸ் ப்ளீஸ்"

இந்த இரண்டு மானிடங்களும்தான் அந்த மோட்டார் பைக்கிள் கதையாய் தங்கள் வேகக்கட்டுப்பாட்டினை (மனக்கட்டுப்பாடு) இழந்துதான் போய்விட்டார்களா என்ன வெளிச்சக்குண்டுகள் இடைவிடாது வெளிக்கிடத் தொடங்கிவிட்ட காட்சி, இராணுவ வாகனங்களின் ஓட்டபாட்டங்கள் எட்டத்தில் அரானிப்பாய் வீயின்ரை சத்தஞ்சாவடியள் இஞ்சாள் பக்கமாய் இப்படி யாரோ ஒரு பாவி காலையில் அலட்டிய இந்தச் கதையையும் போசாய் பைபோசாய் அப்பாலே அப்பாலே தூக்கிச் சுழற்றியடித்து வீசியெறிந்துவிட்ட பங்கறையாய் இந்தா இப்பவே இந்த நிமிசமே ஓரெப்பனுக்கும் தான் ரைமை வேஸ்ற் பண்ணாமலுக்கு வெளிக்கிடென்ற போட்டுப் பிய்த்துப் பிடுங்கித் தின்று தள்ளும் அகோர வீசுர அவதிக் கொண்டெழுப்பலின் உத்வேகத்தில் உதறலில் ஓடோடெண்டோடிப் போய் மோட்டார் பைக்கில் கைபோட்டும் விடுகின்றான் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து போன வாகனமாய்...

★★★

மனிதா சவுக்கியமா? இப்படியாய் இடியேறாய் அந்தப் பரமசிவன் கழுத்திலுள்ள பாம்பு தான் கேட்டும் விட்டாற்போன்றதோர் மனப்பிரமையில் அவன் உழன்றும் விட்டபோது கள்ளனைப் பிடிக்கவென்று காவலிருந்த நீயா இப்ப கள்ளப்பட்டு வேஷம் போட்டும் கொண்டாய் என்றெல்லாம் இன்னும் மேலே ஓவராய்ப் போய் அந்தப் பரமசிவன் கழுத்துப் பாம்பு தான் பாடோரியாய்க் மீண்டும் தான் கேட்டேதொலைத்தும் விட்டதா என்ன ஏதோவொரு மன புய்ய்சிளீவீ இல் அவன் திக்கழிந்துதடுமாறிப்பரிதவித்துப்போய்நின்றவேளையாய் கோலொன்று ஜம் பண்ணி வந்தும் விட்ட காட்சி மோட்டார் பைக்கில் வைத்த கை போனை எடுக்கின்றது. நேரம் 1.30

"ஹலோ ஹலோ "

வேறையார் நான்தான் உங்க மிஸிஸ் கதைக்கிறன் எப்ப என்ன நடக்குமெண்டு சொல்லமுடியாதளவுக்கு ஆவாக்களும் ஆவன்னாக்களும் நல்லாய் முத்தி மூண்டு கிடக்கு. இப்ப நீங்க எத்தனை கள்ளங்களைப் பிடிச்சுப் போட்டீங்கள்?"

தன்னுடைய மிசிஸ் தன்னைத்தான் கள்ளனெண்டு குத்திக்காட்டினாளோ என்றும் த்திறில்லான சஷ்பின்சனில் திருட்டுமுழுக்கத் தொடங்கி விட்ட சிவம் நீர் பார்க்கக்கூடியதா கள்ளனைப் பிடிச்சுக்காட்டாட் டிக்கி நல்ல காலத்துக்கே ஒரு கெட்டகாலத்துக்கோ வாயில் வந்ததைச் சொல்லிக்காட்டிவிட்டு போனையும் சடினாய் வைத்தும் விடுகின்றான். திடுகூறாய் அதேகையோடு அடுத்த கோல் சரீரமெல்லாம் நடுங்கிப் பதறித்துடிக்க வாயில் வந்தபாட்டுக்குப் பேசிப்பேசி ஏதோவொரு காமவெறிபிடித்த மிருகமாய் கோலை எடுத்தும் விட ஐயோ மைடியரங்கிள் ரைம் வண் ஓகுளோக் ஆகப்போகுதே ஆகப்போகுதே பிளீஸ் வெளிக்கிட்டு சடினா சடினா வாங்களேன் வாங்களேன் நந்திகாவின் அவசரப் பறப்பு வேகக்கட்டுப்பாட்டை இழந்துபோனதோர் வாகனத்தையும் தான் ஓவர்ரக் பண்ணியும் தான் விட்டதா வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான அந்த மோட்டார் பைக்கடியில் பெரும் கூட்டம் அலைமோதும் காட்சி சிவம் ஒருவித வெறியோடு மோட்டார் பைக்குடன் கேற்றுக்கு வெளியில் வந்து படபடத்தபடியே கேற்றைப் பூட்டிக் கொண்டு நிற்க ஆட்டோவொன்று கிடுகிடுத்தபடியே சடாரென்று கேற்றடியில்

இப்ப எங்கை போறீங்கள் மெய்யே பக்கத்துக் குண்டுவெடிப்போடுபறந்தும்வந்துவிட்ட அங்கையற்கண்ணி சடாரென ஆட்டோவிலிருந்து குத்தித்துவிடுகின்றாள். மனிதா சவுக்கியமா மீண்டும் இப்படித்தான் பரமசிவன் கழுத்திலுள்ள அந்தப் பாம்பு தான் கேட்டும் விட்டதா என்ன?

# தென்கிழக்கு திசையில் இருந்து

அனார்கலி

தொகுப்பு



## சுதந்திர தினம்!

இலங்கையின் 70ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களிலும் வெகுவிமர்சையாக நடைபெற்றன. தேசியக் கொடிகள் உரிய நேரத்துக்கு ஏற்றப்பட்டும், தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டும் நிகழ்வுகள் ஆரம்பமானதுடன், சுதந்திர தினத்தின் முக்கியத்துவம் குறித்த சிறப்பு உரைகளும் நிகழ்வுகளில் இடம் பெற்றன.



## பாலர் நிகழ்வு!

நிந்தவூர் 'ஸ்மாட் கிட்ஸ்' முன்பள்ளிப் பாடசாலை. இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தையொட்டி நிந்தவூர் கடற்கரையில் பாலர் சிறப்பு நிகழ்வு ஒன்றை நடத்தியது. 'கடல் மணலைக் கொண்டு மணல் அரண் அமைத்தல்' எனும் தலைப்பில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இந்தப் பாடசாலைப் பாலர்கள் மணல் அரண் அமைத்த காட்சிகளைப் பெருந்தொகையான பெற்றோரும், பொது மக்களும் கண்டுகளித்தனர்.

*'புதுமைகள் புகுத்தப்படத்தான் வேண்டும்'*

## நாணயத்தாளில் நமது பள்ளி!

இலங்கையின் 70ஆவது சுதந்திர தின முதன்மை நிகழ்வில் வெளியிடப்பட்ட சுதந்திர தின ஞாபகார்த்த ஆயிரம் ரூபா நாணயத்தாளில் பழமை வாய்ந்த சாய்ந்தமருது ஜிம்ஆ பள்ளி வாசலின் முகப்புத் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளமை அந்தப் பிரதேச முஸ்லிம்களைப் பெரும் குதூகலத்தில் ஆழ்த்தியது. இதனால், தனி உள்ளூராட்சி மன்றம் கோரிப் பல வாரகாலமாகப் போராட்டரணகளமாக மாறியிருந்த சாய்ந்தமருது மண் கடந்த சுதந்திர தினத்தன்று, பெரும் குதூகலத்துடன் கொண்டாட்ட நிலையில் காணப்பட்டது. சாய்ந்த மருது ஜிம் ஆ பள்ளிவாசல் வளாகம், பிரதான வீதி என்பன தேசியக் கொடிகளால் அலரிங்கப்பட்டு இருந்ததுடன், பாரம்பரிய முஸ்லிம் கலை, கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றுக் களை கட்டும் நிலை ஏற்பட்டது.

“இதற்கே இவ்வளவு என்றால், தனி உள்ளூராட்சி கிடைத்தால் குதூகலத்தைக் கேட்கவா வேண்டும்?”








## “தேன் பழம்... தேன் பழம்... யாழ்ப்பாணம்!”

“தேன்பழம், தேன்பழம்-யாழ்ப்பாணம்” இப்படிக் கூவிக் கூவி விற்கும் வியாபாரம் ஒன்று தென்கிழக்குப்பிரதேசத்தில் உள்ள பிரதான வீதிகளில் ஆரம்பமாகி உள்ளது.
யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்படும் பலாப்பழங்களைத் தான் மேற்கண்டவாறு கூவி அழைத்து இந்த நடைபாதை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.
இந்தப்பலாப்பழ வியாபாரிகள், “யாழ்ப்பாண பழம்” என்ற மவுசைக்கூறி கொள்ளை லாபம் ஈட்டுவதாகக் கூறும் பொது மக்கள். கனிய வைப்பதற்காக மருந்தூட்டப்படுகிறதா? என்னும் சந்தேகத்தையும் கிளப்பாமல் விடவில்லை.

“யாழ்.பலாப்பழங்கள் தனிச்சுவை கொண்டவையல்லவா?”



## அதிருப்தி குற்றச்சாட்டுக்கள் – 20!

இலங்கைத் தென்கிழக்குப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் அவரது நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் 20 வரையான அதிருப்திக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது. இந்த ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது மேற்படி 20குற்றச்சாட்டுக்களையும் விவரமாகச் செய்தியளாலர்களிடம் தெளிவு படுத்தி விளக்கியது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவரும், சிரேஸ்ட விரிவுரையாளருமான ஏ. அப்துல் ஜப்பார் தலைமையில் நடத்தப்பட்ட இந்தச் செய்தியாளர் சந்திப்பில், தற்போதைய உப வேந்தர் நாஜிமின் பதவிக்காலம் முடிவடைய இருக்கும் நிலையில், உரிய காலத்தில் புதிய உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படாது தாமே மீண்டும் அந்தப் பதவிக்கு வருவதற்கு அவர் திட்டமிட்டுச் செயற்படுவதாக முதன்மைக் குற்றச்சாட்டைத் சங்கத்தலைவர் ஜப்பார் சுமத்தினார்.

*“ஐயோ...! இந்தப் பல்கலைக்கழகத்தின் கதி எப்போதும் இப்படித்தானா? ”*

## அறுவடை ஆரம்பம்!

அப்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை வேலைகள் ஆரம்பமாகி உள்ளன. இந்த முறை நெல் விளைச்சல் விவசாயிகளுக்குத் திருப்திகரமாக அமைந்துள்ளபோதிலும் நெல் விலையில் வீழ்ச்சியே காணப்படுகின்றது. இதனால் அறுவடை செய்யப்படும் நெல்லை வெயிலில் உலரவிட்டுச் சேமித்துவைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மூதன்மை வீதி மருங்குகளில் மட்டுமன்றி உள்ளூர் வீதிகளிலும் நெல் உலர வைக்கப்படுவதால் பாதசாரிகளான பொதுமக்களும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

*“கொள்ளை விலைக்கு விற்கும் ஆசை யாரைத்தான் விட்டது?”*



## மகஜர்

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த ஆவண செய்யுமாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைகளிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். இராஜேஸ்வரன் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை தொடர்பான மகஜரொன்றைக் கையளித்துள்ளார். இத்தனை வருடங்கள் கடந்து விட்டபோதும், நாம் பொறுத்தது போதாதா?– கேட்கிறார்கள் கல்முனை வாழ் தமிழ்மக்கள்.

## தேர்தலின் பின்பும் பணி தொடருமாம்!



உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்பும், முஸ்லிம் காங்கிரசையும், அதன் மரச் சின்னத்தையும் காப்பாற்றி மீட்டெக்கும் எமது போராட்டம் தொடருமென ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹசனலி சூளுரைத்துள்ளார்.
மர்ஹும் அஷ்ரபின் கொள்கைகளையும், வழிகாட்டல்களையும் புறம்தள்ளி, சர்வதிகாரப்போக்கில் செயற்படும் இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் தலைமையையும் துரத்தியடிப்போம் எனவும் அவர் சபதம் மிட்டுள்ளார்.
“அந்தத் தலைமையுடன் கூடிக்குலாவிக்கொண்டிருக்கும்போது பிறக்காத இந்த ஞானோதயம் இப்போது ஏன் ஐயா பிறக்கிறது?” - கேட்கிறார்கள் மக்கள்!

அறிந்த மிருகம் அறியாத கதை





# கரடிகள் சொல்லும் கதை



ஏ.ஜே.ஞானேந்திரன்

கட்டுரை

கரடிகளின் கதை சற்றே நீளமானதுதான். மனிதர்களையும் குரங்குகளையும்போல நடந்தும், தாவியும் திரியும் பழக்கம் கரடிகளுக்கும் உண்டு. ஊடலில் கவனமாயிருக்க வேண்டிய தேவை பெண் கரடிகளுக்கிருக்கின்றது. இல்லாதுபோனால் தனது இணைக்கு இரையாகிவிடும் ஆச்சரியம் இருப்பதைப் பற்றியும் கூறினோம். இனி அவை கருவடைந்து பிரசவிப்பதை நோக்குவோம்.

**வசதிக்கேற்ப குட்டி ஈனும் நாள்**

முட்டைகள் சினைப்படுவதைத் தள்ளிவைக்கும் உடல் அமைப்பு பன்டாஸ், பிறவுண்(மரநிற) கரடி இனங்களுக்கு உண்டு என்பது இன்னொரு அதிசயமான விடயம். பாதுகாப்பாக, சூடான இடத்தில் குட்டிகள் இருக்க, தமது உறங்கு நிலை வரும்போது இவை குட்டிகளை ஈனுகின்றன. பிறந்த குட்டி, ஒரு வரிக்குதிரையின் குட்டிபோல துள்ளி எழ முடியாதிருக்கின்றது. (குட்டிகள் வளரும்) இவைக்குப் பற்கள் கிடையாது. கண்பார்வை இல்லை. காதும் கேட்காது. இப்படியொரு ஆக்ரோஸமான மிருகத்தின் குட்டிகள் பிறக்கும்போது உள்ள இயலாமையை நினைக்கும்போது பாவமாகத்தான் இருக்கின்றது. ஒரு பூனைக்குட்டியின் அளவில் இருக்கும் இவற்றின் சராசரி எடை 454கிராம்கள் மாத்திரமே! ஸ்லொத் கரடிகளை விட, மற்றைய இனக் கரடிகள் எல்லாம், தமது குட்டிகளைத் தலையில் வைத்துக் கொண்டே பயணம் செய்கின்றன. அல்லது உணவை வேட்டையாடுகின்றன.

**கண்டிப்பான அம்மாக் கரடி**

பிள்ளைகளை வளர்ப்பதில் அம்மாக் கரடி மிகவும் கண்டிப்பாக இருப்பதுண்டு. உணவை வேட்டையாடக் கற்றுக் கொடுப்பதோடு, எப்படி உணவு தேடுவது என்பதையெல்லாம் தாய்க் கரடி குட்டிக் கரடிகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்றது. அத்துமீறினால் குட்டிகளுக்கு முன்னங்கால்களால் 'அறை' கொடுக்க அம்மா பின்வாங்குவதில்லை. ஒன்றரை அல்லது இரண்டு வயதாகியதும், "நீ போய் தனியனாகப் பிழைத்துக் கொள்" என்று அம்மாக் கரடி, குட்டிகளை அனுப்பி விடுவதுண்டு. பின்பு மீண்டும் அது தன்னை இன்னொரு உறவுக்குத் தயார்ப்படுத்திக் கொள்ளும். மீண்டும் ஒரு 'மைனர் மச்சான்' வந்து தன் 'பணியை' முடித்து விட்டுத் திரும்பி விடுவார்!

**ஆசியக் கரடி**

ஆசியக் கரடி எனப்படும் இனம் இமயமலை கறுப்புக் கரடி, திபெத் கறுப்புக் கரடி சந்திரக் கரடி என்று வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது, இந்தக் கரடிகளின் நெஞ்சில் 'வை' போன்ற வடிவில் வெள்ளை அல்லது கிரீம் நிறத்தில் அடையாளம் இருக்கும்.. காதுகள் பெரிதாக இருப்பதோடு, பெரிய கண்களும், நீண்ட முடியும் உடலில் காணப்படும். இவை மரங்களில்'கூடு'களைக் கட்டிக் கிளைகளில் உறங்குவதை விரும்புகின்றன. இவற்றின் முதல் எதிரி மனிதர்கள்தான் என்கிறார்கள். பனி கொட்டும் காலங்களில் சுள்ளிகளைப் பொறுக்கித் தரையில் அடுக்கி, வசதியான படுக்கையைத் தமக்குத் தயாராக்கிக் கொள்கின்றன. தாவரங்கள், பழங்கள், பூச்சிகள், எஞ்சிக் கிடக்கும் மாமிசம் என்று பலதையும் இவை உண்ணும். மனிதர்கள்தான், குறிப்பாக விவசாயிகள்தான் இவற்றைக் கொன்று விடுவதால், இந்த இனம் அழிந்துவிடும் அபாயத்தில் இருக்கின்றது.



**கறுப்புக் கரடிகள்**

கறுப்புக் கரடிகள் என்ற பெயருக்குப் பொருத்தமில்லாத இனம் இது. காரணம் இந்த இனக் கரடிகள் கறுப்பு, பிறவுண், சாம்பர், வெள்ளி நீலம், கிரீம் என்று பல நிறங்களில் காணப்படுகின்றன. கனடாவின் வடபகுதி, அலஸ்கா, மத்திய அமெரிக்கா, மெக்ஸிக்கோ போன்றன இவை காணப்படும் காடுகள் உள்ள இடங்கள். சிறிய கண்கள், நீண்ட மூக்கு, வட்டமான காதுகள், குட்டையான வால் என்பன இந்த இனத்துக்கு உரியவை!. 'கொடியாக் கரடி' என்று அழைக்கப்படுவது இந்த 'கறுப்புக் கரடிகளுக்குள்' மிகப் பெரிய உருவம் கொண்டவை. .

**பிறவுண் கரடிகள்**

இந்த நிறக் கரடிகள், உலகெங்கும் பரந்திருப்பது இவற்றின் சிறப்பு. கனடாவின் மலைமீதுள்ள அடர்ந்த காடுகள், பள்ளத்தாக்குகள், புற்றரைகள், மத்திய அமெரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா என்று எங்கும் நிறைந்திருப்பவர் இவர். தோளில் ஏரி இருப்பது, இந்த இனத்தைக் காட்டிக் கொடுத்து விடும்.

**பண்டாக் கரடிகள்**

சீனாவில்தான் இவற்றைக் காணமுடியும். சுமாராக ஆயிரம் பண்டாக்களே எஞ்சியிருக்கின்றன. இவை ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் ஈனும். ஆனால் ஒன்றை மட்டும் கவனமெடுத்து வளர்க்கும். இரண்டாவது ஒழுங்கற்ற பராமரிப்பால் இறந்துவிடும். ஒரு வயது வந்ததும் குட்டி தானாகவே தன் வாழ்க்கையைத் தொடரும்.

**துருவக் கரடிகள்**

தரையில் காணப்படும் இரை பிடித்துண்ணும் மிகப்பெரிய விலங்கினம் என்றால் அது துருவக் கரடிதான்! ஆர்ட்டிக் பிராந்தியம், அலாஸ்கா, கனடா, ரஷ்யா, கிரீன்லாந்து, நோர்வே ஆகிய இடங்களில் இவற்றைக் காணமுடியும், இன்றைய நிலையில் 25ஆயிரம் தொடக்கம் 40ஆயிரம் வரையில் இவை காணப்படுகின்றன. இந்த மிருகங்கள் உள்ள நாடுகள் வேட்டையைத் தடை செய்தோ அல்லது வேறு கட்டுப்பாட்டுவிதிகளை வைத்தோ, இந்த இனக் கரடிகள் அழிந்து போவதைத் தடுத்து வருகிறார்கள்.

பிறக்கும்போது மனிதக் குழந்தையை விடச் சிறிய அளவில் இருக்கும் குட்டிகள், உணவு தாராளமாகக் கிடைத்தால், ஒரு வருடத்தில், ஒரு முழு மனித உயரத்துக்கு வளர்ந்து விடும். ஆண் கரடிகள் 10அடி வரை உயர்ந்து வளர்வதோடு, எடை ஆயிரத்து400 இறாத்தல்களைத் தொட்டுவிடும். இவை 25வருடங்கள் வரை வாழக்கூடியன. இவற்றின் ஈரல்தான் இவற்றின் சிறப்பு. ஏனைய மிருகங்களை விட 10 மடங்கு அதிகமான விட்டமின் 'ஏ' இவற்றின் ஈரலில் இருக்கின்றது. சீல் மிருகத்தை உண்ணும்போது கிடைக்கும் கொழுப்பிலிருந்து, இந்தச் சத்தைப்பெற ஈரலின் செயற்பாடு இந்த துருவக் கரடிக்கு மிக மிக அவசியம்.

இனி ஆரம்பப் பழமொழிக்கு வருவோம்.

"கரடியாய் கத்தியும் பயனொன்றும் இல்லையே"

கரடி பெரிதாகச் சத்தமிட்டே மனிதனையும் மிருகங்களையும், நடுநடுங்கச் செய்து வெற்றிவாகை சூடுகின்றது. சிங்கத்தின் கர்ஜனைக்கு அடுத்ததான பயங்கரக் கர்ஜனை கரடியினுடையது என்றால் அது மிகையாகாது. பெருங்குரல் எடுத்துக் கரடியாய்க் கத்தியும் பலன் கிடைக்கவில்லை என்பதையே இந்தப் பழமொழி உணர்த்துகின்றது. காட்டுக் கூச்சல் எப்பொழுதுமே வெற்றி தருவதில்லை என்றும் சொல்லி விடலாம்.

---

ஓர் அப்பாவியின் கதை 1

கை.சரவணன்

கவிதை


## சாவு

யாரோடும்
உறவாடும் பெருமையற்ற
உறவு.

அழைத்து
வாசல் நின்றுவரவேற்று
உபசரிக்கத் தேவை
ஏதுமில்லை.

தானாய்
அது வருமென்றாலும்
யாரும்
வரவேற்பதில்லை.
என்றாலும் தயங்காது.
கோபிக்காது.
குறையேதும் சொல்லாது.

பிறப்பிலிருந்து
கூடவே




சேர்ந்து வரச்
சலித்ததே இல்லை
சாவு.

கூடவரும் சலிக்காது.
முகங்காட்ட மறுத்து
மறைந்தே வாழும்
இயல்பதற்கு.

அச்சப்பட
ஏதுமற்ற ஓர் அப்பாவியாய்
காலுள் குழையும்
ஒரு பூனைக் குட்டி
சாவு.

ஒருநாள்
முன்குதிக்கும்
முழுதாக முகங்காட்டி
கட்டியணைத்துக்
கைகோர்த்துக்
கூட்டிப்போகும்பக்குவமாய்.

யாதொரு கவலையும்
சாவுக்கு
இருப்பதேயில்லை.



ரவுண்ட் த வேர்ல்ட்

பிரகாஸ்

# சிரியா என்னும் கொலைக்களம்

சிரியாவில் இதுவரை இல்லாத அளவுக்குத் தற்போது உச்சக்கட்டத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. ஐக்கிய நர்டுகள் சபையும் இந்தத் தகவலை ஏற்றுக்கொண்டுள்ளது.

சிரிய அதிபர் அல் அசாத் பதவி விலகவேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் பின்னணியில் தோற்றம்பெற்ற அழுத்தக்குழுக்கள் அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களாக மாற்றம்பெற்ற பின்னர் கடந்த 8 வருடங்களாக அங்கு உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. சிரிய அரசுக்கு ரஷ்யாவும் சிரிய அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவுக்கு அமெரிக்காவும் உதவி செய்து வருகின்றன. இத்தனை காலமும் இல்லாத அளவுக்கு கடந்த வாரம் மிகப்பெரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தத்தமது குழந்தைகளைச் சுமந்தவாறு பெற்றோர்கள் பதறியடித்து ஓடும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி மனதைப் பதைபதைக்க வைக்கின்றன. ஐ.நா. சபையும் தனது கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளது.

"சிரியாவில் நிலைமை தற்போது முன்பு இருந்ததைவிட மோசமாகியுள்ளது. சிரியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட முக்கிய மூன்று இடங்களில் உதவிகள் தடுக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் சிரியாவில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மிக மோசமானவையாகப் பதிவாகியுள்ளன. கடந்த 8 வருடங்களில் இம்மாதிரியான மோசமான தாக்குதலை சிரியாவில் நாங்கள் பார்க்கவில்லை.' என்று ஐ.நா. சபை கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*'வல்லரசுகளின் வலையில்
கொலைக்களமாகச் சிரியா...'*



# காய் நகர்த்தும் "காலம்"

ரஜினியும் கமலும் தீவிர அரசியலில் ஈடுபட்டு வரும் நிலையில், "ரஜினியுடன் ஒன்று சேர்வீர்களா?" என்ற கேள்விக்கு "இதற்கான பதில் காலத்திடமே உள்ளது" என்று தெரிவித்தார் கமலஹாசன்.

நடிகர்கள் ரஜினியும், கமலும் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போது இருவருமே கட்சிக் கூட்டங்கள் நடத்துவது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைப்பார்கள் என்று எதிர்பார்த்த நிலையில், "இதற்கு காலம் தான் பதில் சொல்லும்" என்று ரஜினி தெரிவித்திருந்தார். தற்போது அதே கருத்தைக் கமலும் தெரிவித்துள்ளார்.

*"காலம் என்பதுதான்
தமிழக அரசியலில்
காய் நகர்த்தலுக்கான
அடையாளமோ..."*



# பிணக்கடும் இணக்கடும்

குளிர்கால ஒலிம்பிக் தொடர் தென்கொரியாவில் ஆரம்பமாகியுள்ளது. இந்தத் தொடரில் தென்கொரியாவின் கடும் பகைமை நாடான வடகொரியாவும் பங்கெடுக்கிறது. தொடரில் கலந்துகொள்ளவுள்ள வடகொரிய வீரர் வீராங்கனைகள் தென்கொரியாவில் அணிவகுத்துச் செல்லும்காட்சிகள்தான் தற்போது ட்ரெண்ட். தென்கொரியாவைச் சாம்பராக்குவோம் என்று உறுமிக்கொண்டிருக்க வடகொரியா, தென்கொரியாவில் களமிறங்கி விளையாடுகிறது என்றால் அதை எவர்தான் விரும்ப மாட்டார்கள்...


*'அவசியம் தேவையான
மாற்றம் இது...'*

# வில்லங்கமான விருப்பம் இது

பிற நாடுகளைப்போல அமெரிக்காவின் தலைநகரிலும் பிரம்மாண்ட இராணுவ அணிவகுப்பை நடத்த விருப்பப்பட்டுள்ளாராம் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

அமெரிக்காவின் கடும் எதிரி நாடான வடகொரியா, இராணுவ அணிவகுப்புக்களை நடத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. அமெரிக்க அதிபராகக் கடந்தாண்டு பதவியேற்ற ட்ரம்ப் அரசு முறைப்பயணமாக பிரான்ஸ் சென்றிருந்தார். அப்போது, பரிஸ் நகரில் நடந்த அணிவகுப்பில் சிறப்பு விருந்தினராக அவர் கலந்து கொண்டார். அந்த அணிவகுப்புக்களால் கவரப்பட்டே வொஷிங்டனிலும் அவ்வாறான ஓர் அணிவகுப்பை நடத்த விரும்பியுள்ளாராம். ட்ரம்பின் இந்தத் திட்டத்தை விமர்சித்துள்ள ஜனநாயகக்கட்சி "எச்சேத்திகார அரசுகள் செய்வது போன்ற செயல் இது" என குறிப்பிட்டுள்ளது.

*"ம்ம்ம்... வில்லங்கமான நபர்தான் ட்ரம்ப்..."*



# மாலைதீவில் அவசர நிலை



மாலைதீவில் அதிபர் அப்துல்லா யாமீன் அவசர நிலையை அறிவித்திருப்பதற்கு பல முனைகளில் இருந்தும் கண்டனங்கள் குவிந்துள்ளன. ஐ.நா. சபையும் அப்துல்லா, தனது அறிவிப்பை திரும்பப் பெறவேண்டும் என்று எச்சரித்துள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்றான மாலைதீவில் அரசியல் நெருக்கடியும், குழப்பமும் ஏற்பட்டுள்ளது. அதிபர் அப்துல்லா யாமீனுக்கு எதிராக செயல்பட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12 பேர் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர். இந்தத் தகுதிநீக்கத்தை உச்ச நீதிமன்றம் இல்லாமல் செய்தது. 12 பேருக்கும் பதவி திரும்பக் கொடுக்கப்பட்டால் அதிபரின் பதவி பறிபோகும் சூழல் உருவானது. இதனால் நீதிமன்ற உத்தரவை ஏற்க மறுத்த அதிபர் அப்துல்லா, 15 நாட்களுக்கு அவசர நிலையை அறிவித்துள்ளார். அரச அலுவலகங்கள் அனைத்தும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளது. கைது நடவடிக்கைகளும் தொடர்ந்து வருகின்றன.

இவ்வாறிருக்க "மாலைதீவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதை அரசு விரைவில் திரும்பப் பெற வேண்டும். மேலும் மக்கள் மற்றும் நீதித்துறை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்" என ஐ.நா. பொதுச்செயலாளர் குத்தேரஸ் வலியுறுத்தியுள்ளார். அமெரிக்காவும் அவ்வாறான ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

*"மாலைதீவில் ஒரு ஜனநாயகக் கொலை..."*




அப்பாவின் சாவுக்குக் காரணமானவனைக் கண்டுபிடிக்கவும், தனது சொந்த ஊரில் 20ஆண்டுகளுக்குப் பிறகு ஜல்லிக்கட்டு நடத்தவும் புறப்படும் இளைஞனின் கதையே 'மதுரவீரன்'.

**கதைப்பார்வை**

மதுரை மாவட்டத்தில் சத்திரம்பட்டிக் கிராமத்து மக்களின் மனதில் மரியாதையுடைய மனிதராக வலம் வருகிறார் சமுத்திரக்கனி. சாதிப் பிரச்சினை, ஜல்லிக்கட்டுப் பிரச்சினை எனச் சுற்றி இருக்கும் கிராமங்கள் முழுக்கப் பிரச்சினைகள் உருவெடுக்க அவற்றைத் தீர்க்க நினைக்கிறார். ஆனால், வேல ராமமூர்த்தி, மைம் கோபியால் பிரச்சினைகள் பெரிதாகின்றன. "ஜல்லிக்கட்டுப் போட்டியில் எல்லோரையும் வாடிக்கு அழைப்பேன், விரைவில் இன்னொரு சமூகத்தைச் சார்ந்தவர்களையும் கோயிலுக்குள் வரவழைப்பேன்" என்கிறார் சமுத்திரக்கனி. அதற்கு வேல ராமமூர்த்தி கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார். எதிர்ப்பை மீறி ஜல்லிக்கட்டு நடத்தத் தயாராகும் சமுத்திரக்கனி மர்மமான முறையில் கொல்லப்படுகிறார். இதனால் சமுத்திரக்கனியின் குடும்பம் மலேசியா சென்று 20ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த ஊர் திரும்புகிறது. சமுத்திரக்கனியின் மகன் சண்முக பாண்டியன் பெண் பார்க்கும் படலத்துக்காக ஊருக்கு வருவதாக அம்மாவை நம்பவைக்கிறார். சொந்த ஊரான சத்திரப்பட்டிக்கு வந்ததும் அப்பாவைக் கொன்றது யார்? ஜல்லிக்கட்டு பிரச்சினை என்ன? என்பதைக் கண்டறிய முயற்சி செய்கிறார். அந்த முயற்சிகள் என்ன ஆகின்றன? அதன் விளைவுகள் என்ன? என்பது மீதிக் கதை.

**இயக்குநரின் பாராட்டத்தக்க பண்பு**

சாதிகள் குறித்துக் கலகக்குரல் எழுப்பாமல் ஒற்றுமை குறித்த சிந்தனையை விதைக்கும் படத்தை எடுத்து, ஏற்றிருக்கும் இயக்குநர் பொறுப்புக்கு நியாயம் செய்திருக்கிறார் முத்தையா. அவரின் அக்கறை மதிக்கத்தக்கது. சாதி சமூகம் சார்ந்த படங்கள் என்றாலே வேல ராமமூர்த்தி, சமுத்திரக்கனி, மாரிமுத்து ஆகியோர் தவறாமல் இடம் பெறுகிறார்கள் எனும் பிம்பம் தோன்றத்தான் செய்கிறது.

**பாத்திர வார்ப்புகள்**

சண்முகபாண்டியன் 'சகாப்தம்' படத்தைக் காட்டிலும் நடிப்பில் முன்னேறி இருக்கிறார். ஆனால், காதல், உணர்ச்சி வெளிப்பாடு என எல்லா காட்சிகளிலும் ஒரே மாதிரியாகப் பேசுவது நெருடுகிறது. சண்டைக் காட்சிகளில் மட்டும் கவனிக்க வைக்கிறார். பல படங்களில் பதிவு செய்த கதாபாத்திரம்தான் என்றாலும் மிடுக்கு குறையாமல், அதே சமயம் மிகையான நடிப்பைத் தருகிறார் வேல ராமமூர்த்தி. மாரிமுத்து, கொடுக்கப்பட்ட பாத்திரத்தில் இயல்பாகப் பொருந்திப் போகிறார். மைம் கோபி ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியின் உணர்வுகளை மிகச் சரியாக வெளிப்படுத்துகிறார். படத்தின் மையப் பாத்திரமாகவும், ஜீவனாகவும் இருப்பது சமுத்திரக்கனியின் கதாபாத்திரம்தான். படத்தை தாங்கி நிற்கிறார் என்று நினைத்தால், அந்த சமயத்தில் கருத்தூசி போட்டுக் காலி பண்ணுகிறார். ஈலசரவணன், நான் கடவுள் ராஜேந்திரனின் காட்சிகள் நகைச்சுவைக்குப் பதிலாக எரிச்சலையே வரவழைக்கின்றன. மீனாட்சி இயல்பான பக்கத்து வீட்டுப் பெண்ணைப் பிரதிபலிக்கிறார்.



**இசை, ஒளிப்பதிவு, தொகுப்பு**


படத்தின் மிகப் பெரிய பலம் தொழில்நுட்பக் கலைஞர்களின் பங்களிப்புத்தான். முத்தையாவின் ஒளிப்பதிவு ஜல்லிக்கட்டு பின்னணி, மதுரை நிலவியல் அமைப்பை கண்களில் கடத்துகிறது. சந்தோஷ் தயாநிதி இசையில் பாடல்கள் ரசிக்க வைக்கின்றன.

**பலவீனங்களும் பார்க்கக் கூடிய அம்சமும்**

மிகச் சுவாரஸ்யமான படைப்பு, திரைக்கதையாக வடிவமைத்த விதத்தில் சறுக்கி இருக்கிறது. அப்பாவைக் கொன்றவனைத் தேடும் படலத்துக்காகச் சண்முகபாண்டியன் போதிய நுட்பம் இல்லாமல் ஊரில் திரிவது படத்தின் பலவீனத்தைக் காட்டுகிறது. நகைச்சுவை சுத்தமாக எடுபடவில்லை. ஜல்லிக்கட்டுப் பிரச்சினையே முழுவதுமாகப் படத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மெரினா புரட்சி, விஜய் பேசும் வீடியோ காட்சி, உச்ச நீதிமன்றத் தடை என்று இரண்டாம் பாதியில் ஆவணப்படத்துக்கான கூறுகளே அதிகம் ஆக்கிரமிக்கின்றன. திரைக்கதையில் தொய்வு ஏற்படுகிறது.

சமுத்திரக்கனியைக் கொன்றவர் யார்? என்பது தெரிய வரும் இடமும் செயற்கையாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சமுத்திரக்கனியைக் கொன்றது யார்? என்ற திசையில் திரைக்கதையை அணுகி இருந்தால் படம் வேகம் பிடித்திருக்கலாம். ஜல்லிக்கட்டுப் போராட்டத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதால் படத்தின் ஆதார மையம் ஆட்டம் காண்கிறது. தவிர, சாதிப் பெருமை பேசாமல் சமூக ஒற்றுமை குறித்துப் பேசியதற்காக மதுரவீரனுக்கு நாம் மரியாதை அளிக்கலாம்.

## வீண் பொழுதுச் சினிமாக்கள்




**கதைப்பார்வை**

இந்தியா – ஆந்திராவின் ஒரு மாவட்டத்தில் உள்ள மலைக் கிராமம் எமசிங்கபுரம். அங்கு வசிப்பவர்கள் திருடுவதைத் தொழிலாகக் கொண்டவர்கள். அந்தக் கிராமத்தின் முக்கிய பிரமுகரான எமன் (விஜய் சேதுபதி), அங்கிருந்து சென்னைக்கு வந்து கல்லூரியில் படிக்கும் சௌமியாவைக் (நிஹாரிகா) கடத்திச் செல்கிறார்.

சௌமியா பின்னால் சுற்றிக்கொண்டிருக்கும் ஹரீஷும், சதீஷும் (கவுதம் கார்த்திக், டானியல்) அவளைக் காப்பாற்றுவதற்காக எமசிங்கபுரத்துக்கே செல்கிறார்கள். அங்கு எமனுக்கும் சௌமியாவுக்கும் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நாகரீகமான இளம் பெண்ணான சௌமியாவுக்கும் எமசிங்கபுரத்துக்கும் என்ன தொடர்பு, எமன் சௌமியாவைத் திருமணம் செய்தானா? என்பது மீதிக் கதை.

இயக்குனர் ஆறுமுகசாமிக்கு இது முதல் படம். அதில் இப்படி ஒரு வித்தியாசமான பின்னணியில் கதையைச் சொல்ல முயன்றது மிகவும் துணிச்சலான முயற்சி. ஆனால், அந்த முயற்சி முழுமையாகப் பலனளிக்கவில்லை.

சௌமியாவைத் திருமணம் செய்வதற்காக எமன் நகரத்துக்கு வருவது, சௌமியா– ஹரீஷ் இடையிலான கல்லூரிக் காட்சிகள், எமன் ஹரீஷ் இடையிலான காட்சிகள் என எல்லாமே மனதை எவ்விதத்திலும் கவராமல் மேலோட்டமாகவே நகர்கின்றன. குறிப்பாகக் கல்லூரிக்குள் நடக்கும் கலை விழா, அதில் நடக்கும்கூத்துகள் ஆகியவற்றைப் பார்க்கும் போது ஏதோ விளையாட்டுத்தனமாக எடுக்கப்பட்ட, முயற்சி ஒன்றைப் பார்ப்பதுபோல தோன்றுகிறது.

இடைவேளைக்குப் பிறகு, படம் எமசிங்கபுரத்துக்குப் படம் நகர்ந்த பிறகு சற்றுப் பரவாயில்லை. குறிப்பாக இறுதிக்காட்சிக்கு முந்தைய அரை மணி நேரம் கலகலப்பாக நகர்கிறது. இருந்தாலும் படத்தின் பல இடங்களில் புதிதாக ஏதுமில்லாமல், நடந்த சம்பவங்களையே திரும்பத் திரும்பப் பார்ப்பதைப்போல இருக்கிறது.

**பாத்திரங்கள்**

விஜய் சேதுபதியுடன் வரும் ராஜ்குமாரும் கவுதம் கார்த்தியுடன் வரும் டோனியலும் படம் முழுதும் சிரிப்புமூட்டுகிறார்கள். இந்தப் படம் சற்றேனும் கலகலப்பாக நகர்வதற்கு இவர்களது நகைச்சுவைக் காட்சிகளே பிரதான காரணம். படத்தில் இரண்டாவது நாயகனாக வரும் கவுதம் கார்த்திக்கின் பாத்திரம் மிகவும் குழப்பமானது. சில வருடங்களுக்கு முன்பாகத் தமிழில் வந்த திரைப்படங்களில் கதாநாயகிகள் அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்டேயிருப்பார்களே! கவுதம் கார்த்திக் இந்தப் படத்தில் அதைத்தான் செய்கிறார்.

விஜய் சேதுபதியைப் பொறுத்தவரை மற்றுமொரு வித்தியாசமான கதாபாத்திரம். ஆனால், அதே மாதிரியான நடிப்பு. இடைவிடாமல் வசனம் பேசும் ஒரு காட்சிக்குத் திரையரங்கில் கைதட்டல் கிடைக்கிறது. நிஹாரிகா கொனிதெலாவுக்கு நடிப்பதற்குப் பெரிய வாய்ப்பில்லை என்றாலும் இந்தப் படம் அவருக்கு ஒரு நல்ல அறிமுகம்.

**பலவீனங்களுக்குக் குறைவில்லை**

சாகசமும் நகைச்சுவையும் நிறைந்த ஒரு படத்தைத் தருவது இயக்குநரின் நோக்கம் என்று படுகிறது. ஆனால், படத்தில் சாகசம் பெரிதாக இல்லை. நகைச்சுவைக் காட்சிகளும் அந்தத் தருணத்தில் மட்டுமே சிரிக்கவைக்கும் அர்த்தமற்ற நகைச்சுவைக் காட்சிகளாகிவிடுகின்றன.

ஆகவே, அந்த நகைச்சுவை, அந்தத் தருணத்தோடு மறந்துவிடுவதால் முழுமையான நகைச்சுவைப் படத்தைப் பார்த்த அனுபவம் இந்தப் படத்தில் கிடைக்கவில்லை. வித்தியாசமான கதைக் களத்தைத் தேர்வுசெய்த இயக்குநர், சுவாரஸ்யமான காட்சிகளையும் யோசித்திருந்தால் ஒரு நல்ல நகைச்சுவைப் படம் கிடைத்திருக்கக்கூடும்.

இந்தப் படத்தின் முன்னோட்டக் காட்சி வெளியானபோது, இது என்ன மாதிரியான, வகையிலான படம் என்று புரியாததால் படம் குறித்துப் பரவலான எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிட்டது.

ஆனால், படம் வெளிவந்து அதைப் பார்த்த பிறகும் அதே மாதிரியான மனநிலைதான் பார்வையாளர்களுக்கு இருக்கிறது. படத்தில் ஆரம்பத்திலும் முடிவிலும் மட்டுமே பாடல்கள் இருப்பது மாத்திரம் பரவாயில்லாமல் இருக்கிறது.

சி.சந்திரகலா

கட்டுரை



# ஏழைகள் ஒருபோதும் மது அருந்த கூடாது

# குற்றவாளிகளை உருவாக்குவது குடியே!

மட்டக்களப்பு - படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த விறகு வெட்டி ஒருவர், விறகுகளை வெட்டி, தான் வெட்டிய அந்த விறகுகள் முழுவதையும் ஒருவாறு உயரமாக அடுக்கிக் கட்டி, அதன் அருகிலும் விறகுகளைக் கட்டி சைக்கிளை மிக உச்சமாகப் பயன்படுத்தியவராக விறகுடன் நகரத்துக்குச் சென்றுகொண்டிருக்கின்றார். அவரைப்போன்ற பல ஏழை விறகு வெட்டிகள் இப்படியாக அதிக விறகை இயன்றளவில் தமது சைக்கிள்களில் கட்டிப் பிரதான வீதிக்குக் கொண்டு வந்து மிகக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். விற்றதும் அவர்கள் முதலில் செல்லும் இடம் மதுபானச் சாலைகளே!

மது அருந்தியபின் அவ்வளவு பெருந்தொகையான விறகுகளைக் கட்டி ஓடிவந்த அந்தச் சைக்கிளை உருட்டக்கூட முடியாத அளவுக்கு மது போதையில் அவர்கள் தள்ளாடியபடி செல்வதை அன்றாடம் இந்தப் பகுதிகளில் காணமுடியும். அவர்கள் பல வருடங்களாக இந்தத் தொழிலைச் செய்கின்றார்கள். ஆனால், அவர்களது பொருளாதார நிலை அப்படியேதான் உள்ளது. அதுபற்றி விசாரித்தால், "தமது கஷ்டகாலத்தால் முன்னேற முடியவில்லை" என்பார்கள். இங்கு அவர்கள் உழைப்பது குறைவாக இருந்தாலும், அவர்களது வாழ்வாதாரத்துக்குப் போதுமானதாகத்தான் இருக்கிறது. ஆனால், அவர்கள் குடிப்பது அவர்களுடைய வருமானத்தை விஞ்சியேயுள்ளது. ஏழைகள் குடிப்பதால் ஒரு குடும்பமே அழியும். இதில் பெண்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கும். இது வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் ஏழைகளுக்கு அதிகம் பொருந்தும்.

**வடக்குக் கிழக்கில் மதுப்பாவனை அதிகம்**

இன்று வடக்குக் கிழக்குத் தமிழர் மத்தியில் மதுப்பாவனை மிகப் பெரிய அளவில் அதிகரித்து விட்டது. இந்த மக்களுக்குத் தலைமைதாங்குகின்ற அரசியல்வாதிகள் வெள்ளை வேட்டியுடனும் திருநீற்றுப் பூச்சுடனும் புனிதரிலும் புனிதராகக் காட்சி அளிக்கின்றனரே தவிர, அவர்களது அரசியல் வாழ்க்கையில் ஒரு மதுபானச் சாலையையாவது மூடியதாகக் கூறிவிட முடியாது. அதே வேளை, திருகோணமலையில் கிண்ணியாப் பகுதியிலும், மட்டக்களப்பில் காத்தான்குடிப் பகுதியிலும் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்த போதிலும், அங்கு ஒரு மதுபானக் கடைகூட இல்லை என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். "எவர் எத்தனை மதுபானச் சாலைகளைத் திறந்தாலும் நாம் குடிக்கமாட்டோம்" என்று முடிவெடுத்து விட்டால் மதுக்கடைகளைத் திறப்பவர்கள் தமக்கு வியாபாரம் இல்லையென்று மூடிவிட்டுப்போகும் நிலை ஏற்படும். இது மக்களின் ஒத்துழையாமை நடவடிக்கை யாலேயே மேற்கொள்ள முடியும். ஆனால், தமிழர் பகுதிகளில் இத்தற்குப் பூரண ஒத்துழைப்பே வழங்கப்படுகிறது. பல தமிழ் அரசியல்வாதிகளின் பின்னணியிலும் பல மதுச்சாலைகள் உண்டு. அவற்றை ஏனைய அரசியல்வாதிகள் கண்டுகொள்வதில்லை. மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு எதையெதையோ எல்லாம் கதைப்பவர்கள் தமது பகுதியில் திறக்கப்பட்டுள்ள மதுச்சாலைகளுக்கான அனுமதியைப் பெறுவதற்காகக் குறிப்பிட்ட அரசியல்வாதி எவ்வளவு பிரயத்தனப்பட்டார் என்பதைத் தேடுவதில்லை.

**சிங்களவர்களும் மதுப்பாவனையும்**

நாடாளுமன்றில் பியருக்கு வரி குறைக்கப்பட்டது பற்றிய விடயத்தில் சமூக அக்கறை உள்ளவர்கள் போலத் தம்மைக் காட்டிக்கொண்டாலும், தமிழ் அரசியல்வாதிகள் தமது மக்களைக் குடிக்கவேண்டாம் என்று ஒருபோதும் பரப்புரை செய்வதில்லை. இலங்கையில் பெரும்பான்மை இனமாகச் சிங்களவர்களே இருப்பதால் அவர்களது விடயத்தை அவர்களின் தலைவர்கள் தீர்மானிப்பார்கள். அதுபற்றி நாம் பேசவேண்டிய அவசியம் இல்லை. எம்மவர்களுடன் ஒப்பிடும்போது அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மதுபானசாலைகளை அனுமதிக்கவோ, அவற்றின் அனுமதிகளை வாங்கி அதிக விலைக்கு விற்கவோ அதிகம் செல்வதில்லை.

**'விலேச்' விஞ்ஞானிகளின் கசிப்புத் தயாரிப்பு**

அரசு, மதுபானங்களுக்கான விலையை அதிகரிக்கும் போதெல்லாம் உள்ளூர்ச் சாராயமான கசிப்புப் போன்றவை அதிகம் தயாரிக்கப்படுகின்றன. இந்த 'விலேச்' விஞ்ஞானிகளின் வேலையால் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கசிப்பைப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் கசிப்பு, விற்பனைக்காகப் பல்வேறு வகைகளில் பொதி செய்யப்படுகின்றது. சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப்படுகின்றது. இலகுவாக எடுத்துச் செல்லவும், விற்கவும் முடிகிறது. பொலிஸ் அச்சுறுத்தல் இருந்தால் மெதுவாகக் கைவிட்டுச் செல்லவும் முடியும். இதைவிட பால் விற்பனை என்ற பெயரில் பால் எடுத்துச் செல்லும் பெரிய தாங்கிகளுக்குள் இந்தப் பக்கற்றுக்களை மறைத்து எடுத்துச் செல்லும்போது பிடிபட்டு இருக்கின்ற சம்பவங்களும் பதிவாகாமல் இல்லை.

**இலாபம் தேடுவதைவிட குடிக்கு அதிகம் செலவழிக்கிறார்கள்!**

பல தமிழ் இளைஞர்கள், வெளிநாட்டில் இருப்பவர்கள் ஊடாக பெரிய முதலீகளை, லீசிங் கம்பனிகள் மற்றும் சொத்துக்களை அடவு வைத்து ஆரம்பிக்கின்ற போதிலும் குறுகிய காலத்திலேயே படுமோசமாக நட்டமடைந்து விடுகின்றனர். அதற்குக் காரணம் அவர்களது உழைப்பை விஞ்சிய மதுபானத்துக்காக அவர்கள் செலவிடுவதேயாகும். வயல் வேலை, தோட்ட வேலை செய்பவர்களுக்கு உணவு, தேநீர் போன்றவை வழங்கவேண்டிய தேவையே முன்பு இருந்தது. ஆனால் தற்போது ஒரு போத்தல் சாராயம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்ற நிலை வந்து விட்டது. பல கூலி ஆட்களை வைத்துக் கட்டட வேலை கள் போன்றவற்றைச் செய்விக்கின்ற முகவர்கள் அன்று மாலையில் அந்தக் கூலி ஆட்களுக்கான வேதனத்தை மதுபான சாலைகளுக்கு முன்பாக வைத்தே வழங்குகின்றனர். அந்தக் கூலி ஆட்கள் அனைவரும் காசு சேர்த்து தமது முகவருக்குச் சந்தோசத்துக்காகச் சாராயம் வாங்கிக் கொடுப்பதும் மிகச் சாதாரண நடைமுறையாகி விட்டது. அதேபோல அடிமட்டத் தொழிலாளிகளில் பலர் காலையில் வேலைகளுக்குச் செல்ல முன்னரே சாராயம் வாங்கும் பழக்கத்துக்கு உட்பட்டுவிட்டனர்.

> பொதுவாக ஏழைக் குடும்பங்களில் போதாமைகள் நிறையவே இருக்கும். போதையை ஏற்றிக்கொண்டுள்ள ஒருவர் இந்த நிலையை மேலும் அதிகரிக்குமாறு செய்கிறார்;. மதுபோதையில் இருப்பவர் வெறி குறையும் வரை வீட்டிலுள்ள உடைக் கக்கூடிய பொருள்களை உடைத்து மனைவி, பிள்ளைகளைக் காயப்படுத்தி வீட்டையும் சின்னா பின்னப் படுத்தி விடுகின்றனர். சில போதையாளர் உணவுக்கும் பங்கம் விளைவித்துவிடுவர். இது பல குடும்பங்களில் தினமும் நடக்கிறது.

**பெண்கள் அதிக கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்**

ஏழைகள் மது அருந்துவதால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அதிகம் பாதிப்பிற்குள்ளாகுகின்றனர். உணவு, உடை, கல்வி, சுகாதாரம் என ஏனைய ஏராளமான அடிப்படைகள் இந்தக் குடும்பங்களுக்குக் கிடைப்பதில்லை. பல பெண்கள் கூலி வேலைகளுக்குச் சென்று தனது பிள்ளைகளுக்குச் சமைக்கின்ற உணவில் தனது குடிகாரக் கணவனையும் ஒரு பிள்ளையாகக் கருதி அவனுக்கும் சமைத்துப் போடுகின்றாள். உணவளிக்கின்றாள். இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்களாகவும் குழந்தைக் கூலிகளாகவும் பின்நாளில் குற்றச் செயல்களைப் புரிபவர்களாகவும் மாறுகின்றனர்.

**கோயில்களிலும் குடி!**

இங்குள்ள சூழலில் அதிக கோயில்கள் காணப்பட்டாலும், அவற்றில் மாலையானதும் மது பாவனையாளர்களும் போதைவஸ்து பாவனையாளர்களும் அதிகம் கூடுவதையும் மறுநாள் பியர் ரின்களும், மதுபான வெற்றுப் போத்தல்களும் ஆங்காங்கு வீசப்பட்டிருப்பதையும் காணமுடியும். இவர்களே பெரும் அடாவடித்தனங்கள் நிறைந்தவர்களாக ஒவ்வொரு கிராமங்களிலும் உருவெடுத்து வருகின்றனர். இவ்வாறான அடாவடிப் பேர்வழிகள் தொடர்பில் உரியவர்களுக்கு அறிவிக்க பொலிஸாரைத் தவிர அதற்கெனத் தனியாக உருவாக்கப்பட்ட அமைப்புக் கள் தொலைபேசி இலக்கங்களை அறிவிப்பது அவசியமானது. இதன் மூலம் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குற்றவாளிகள் உருவாக்கப்படுவதைக் கண்டறிந்து நிறுத்த முடிவதுடன், அடாவடிக் கும்பல்களின் செயற்பாட்டை முன்னரே அவதானிக்கவும், குடித்தபிறகு அங்கிருந்து அவர்கள் புறப்பட்டு மேற்கொள்ளவிருக்கும் நாசகார வேலைகளைக் கண்காணித்து நிறுத்தவும் முடியும்.

**ஏழைகள் மேலும் ஏழ்மைப்படுகிறார்கள்**

பொதுவாக ஏழைக் குடும்பங்களில் போதாமைகள் நிறையவே இருக்கும். போதையை ஏற்றிக்கொண்ட உள்ள ஒருவர் இந்த நிலையை மேலும் அதிகரிக்குமாறு செய்கிறார். மதுபோதையில் இருப்பவர் வெறி குறையும் வரை வீட்டிலுள்ள உடைக்கக்கூடிய பொருள்களை உடைத்து மனைவி, பிள்ளைகளைக் காயப்படுத்தி வீட்டையும் சின்னாபின்னப்படுத்தி விடுகின்றனர். சில போதையாளர் உணவுக்கும் பங்கம் விளைவித்து விடுவர். இது பல குடும்பங்களில் தினமும் நடக்கிறது. பல கிராமங்களில் பெண்கள் மதுபான விற்பனையில் ஈடுபடுகின்றனர். இதற்குக் குடும்பக் கஷ்டத்தை மட்டும் காரணமாகக் கூறிவிட முடியாது. இலகுவாகப் பணம் சம்பாதிக்கும் ஒரு வாழ்வாதாரத் துறையாக, இது ஒரு நடவடிக்கையாகக் காணப்படுகிறது. இந்தச் சூழலில் இருந்து இந்தக் குடும்பங்களை மீட்பதாக இருந்தால் அவர்களுக்கு மாற்று வழிகளை முன்மொழிவது அவசியம். அதேவேளை அரச ஊழியர்களும், அரசியல்வாதிகளும், மதத் தலைவர்களும், கொடையாளர்களும் இந்த ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று ஒருபொழுதையாவது அவர்களுடன் கழிக்கவேண்டும். சமூகத்தில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வருவதாக இருந்தால் இப்படிப்பட்ட அடிமட்ட மக்களுடன் வாழ்ந்து அனுபவம் பெற வேண்டும். இதையே ஜப்பானியத் திரைப்படமான 'செவின் சாமுராய்' எடுத்துக்காட்டுகிறது. ஒரு சமூகம் முழுமையாக அழிந்து செல்வதற்கு அடையாளமாக இருப்பது ஏழைகளின் குடிப்பழக்கம் தான். இலங்கையில் தமிழரில் அதிகம் பேர் ஏழைகள் என்பதை மறந்துவி_க் கூடாது.



# மதங்களை மறுதலிப்போம் வாரீர்...!

"மதம்' என்பது வறுமைப்பட்ட மக்களைத் தலை எடுக்கவிடாமல் அழுத்திவைக்க ஏற்படுத்தப்பட்ட முக்கிய சாதனங்களில் ஒன்றாகும்" என்பது தோழர் லெனினின் கூற்று.
இலங்கையில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது என்று ஜே.வி.பி. கட்சி சார்பாக அநுர குமரா திசநாயக்க தெரிவித்துள்ளார். அவர் ஒரு சிங்களவர் மட்டுமல்ல பௌத்த மதத்தையும் சேர்ந்தவர். இருந்தும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது என்று பேசியுள்ளார். பல சிங்களப் புத்திஜீவிகளும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது என்று பேசியும் எழுதியும் வருகின்றனர்.
பல மதங்கள் உள்ள ஒரு நாட்டில் ஒரு மதத்துக்கு மட்டும் முன்னுரிமை வழங்குவது சமவுரிமைத் தத்துவத்துக்கு முரணானது. அதுமட்டுமல்ல மதங்களை முன்னிலைப்படுத்துவதானது லெனின் கூறியதுபோல வறுமைப்பட்ட மக்களை விடுதலை பெற விடாமல் தொடர்ந்தும் அழுத்திவைக்கவே உதவி புரியும். இலங்கை மக்கள் அனைவரும் முன்னேற்றம் அடைவதற்குக் குறைந்தபட்சம் இலங்கை மதச்சார்பற்ற நாடாகவேணும் இருத்தல் அவசியம்.



# சின்னதா ஓர் அரட்டை

மேரி கிரேஸ் வரதராஜன்

## மக்களிடமிருந்து பாதுகாக்க வேண்டிய அவலநிலை அமைச்சர்களுக்கு!

"புலிகளின் தளபதிகளும் பாதுகாப்போடதான் திரிஞ்சவை இப்பத்தேய அரசியல் தலைவுர்களுக்குப் பாதுகாப்புக் குடுக்கிறது என்ன தவறு?" என்று கேட்பவர்களுக்கு இதுதான் விளக்கம்.
புலிகள் அப்படித் திரியேக்கை மிகப்பெரும் படைபலம் கொண்ட எதிரியோடை மோதிக்கொண்டிருந்தவை. அந்த நேரங்களில் எதிரியின் பெரும் இலக்குகளை, எதிரியின்ர கோட்டைக்குள்ளையே நுழைஞ்சு புலிகள் அழிச்சுக் கொண்டிருந்தவை. அந்த அவமானத்தை ஈடு கட்ட எதிரி முயற்சிப்பான். எதிரியின்ற முயற்சியில இருந்து தளபதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியதுசகபோராளியின்ர கடமை. இப்ப என்ன சண்டையா நடக்குது? பாதுகாப்பு யாரால், யாருக்குக் கொடுக்கப்பட்டது? யாரிடமிருந்து யாருக்கு என்பது தான் இங்கு கேள்வி?
2009ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு வெடிச்சத்தமும் இல்லை! இப்ப புலிகள் ஊர்ல இல்லை எண்டுறாங்கள்! அப்ப எங்கட சனத்திட்ட இருந்து பாதுகாக்கத் தானே, அமைச்சர்கள், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக் குடுக்கப்படுது.
ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குப் பொலிஸ் பாதுகாப்பு குடுக்கிறது வழமை தான். இங்கை என்னடா எண்டால் ஊருக்கு ஓர் அமைச்சர் வந்தால், அதைப் பாக்க மகிந்த மாத்தையா பலத்த பாதுகாப்போட ஊருக்க உலா வந்துபேறதுதான் ஞாபகத்துக்கு வருகுது.



## திருந்துங்கள்

### திருத்தச் சட்டங்கள் தேவையில்லை!

இலங்கை ஒரு ஜனநாயக நாடு!
இலங்கையில் 'நல்ல ஆட்சி' நடக்கிறது!
அதன் சுதந்திர தினத்தன்று நாட்டின் ஓர் அதிகாரி சிறுபான்மை மக்களைத் தகாத வார்த்தையால் ஏசிச் சுதந்திரமாக மிரட்ட முடிகிறது!
லண்டனில் ஓர் அதிகாரி சிறுபான்மை மக்களின் கழுத்துக்களை வெட்டுவோம் என்று சைகை காட்டுகிறார்.
தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும்?
தமது கைகளில் ஆயுதம் இருந்தால் மட்டுமே தாம் பாதுகாப்பாய் வாழமுடியுமா?
"மறுபடியும் அதற்கான ஒரு சூழலையும், கட்டாயத்தையும் உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள் பெரும்பான்மையினர்" என்று முணுமுணுக்கத் தொடங்கிவிட்டார்கள் தமிழ்மக்கள்.
அதுதானே! சிங்களவர்கள் திருத்தாமல் ஆயிரத்தி யெட்டுத் திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவதால் என்ன பயன்...?

## 'சுதந்திர தினம்'

### கொண்டாடப்பட வேண்டியதல்ல! மக்கள் துயரங்களைப்போக்கச் சபதமெடுக்கவேண்டிய நாள்!

இலங்கையில் யாருக்குச் சுதந்திரம் இருக்கிறது? அரசியல்வாதிகள் பதவி பெறவும் அந்தப் பதவி மூலம் லஞ்சம் பெறவும் ஊழல் செய்யவுமே சுதந்திரம் இருக்கிறது. சுதந்திரம் என்னும் பெயரில் வெள்ளைக்காரர்களுக்குப் பதிலாகக் கொள்ளைக்காரர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள்.
இதுவரை 40ஆயிரம் தமிழ்மக்கள், 60ஆயிரம் சிங்கள இளைஞர்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கையின் அபிவிருத்திக்குப் புலிகள் தடையாக இருக்கின்றார்கள் என்றார்கள். புலிகள் இல்லை என்றால் இலங்கையில் பாலும் தேனாறும் ஓடும் என்றார்கள். இப்போது புலிகள் இல்லை. ஆனால் அவர்கள் கூறிய பாலும் தேனாறும் இன்னும் ஓடவில்லை.
போருக்குக் கோடிக் கணக்கான ரூபாவைத் திரட்டிச் செலவு செய்த ஆட்சியாளர்களால் இப்போது மக்களுக்காக ஒரு ரூபாய் திரட்ட முடியவில்லை?
நாடுமுழுவதும் மக்கள் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் பிள்ளைகளுடன் தற்கொலை செய்கிறார்களே. அது குறித்து இந்த ஆட்சியாளர்களால் அக்கறை கொள்ள முடியவில்லை. புனித பூமி என்று கூறும் அநுராதபுரத்திலே ஒரு சிங்களச் சிறுவன் உடுக்க உடையின்றி நிர்வாணமாக நின்றுகொண்டு குப்பையில் உணவு பொறுக்கிறான். இது கேவலம் இல்லையா? நாடுமுழுவதும் புத்தர் சிலைகளை அமைப்பதற்குப் பணம் ஒதுக்கும் இந்த ஆட்சியாளர்களால் அந்தச் சிறுவனுக்கு உணவு வழங்கப் பணம் ஒதுக்க முடியவில்லை.
ஒரு சிங்களத் தாய் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் தனது மகளை விபச்சாரம் செய்ய வைத்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். இது போன்றவர்களின் வறுமையைப் போக்குவதற்கு உறுதிபூணலாம் அல்லவா?
அனைத்து மக்களும் கஸ்டப்படுகின்றனர். ஆனால் அமைச்சர்களுக்கும்; நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலட்ச ரூபா சம்பளம், சொகுசு வாகனம். அதற்குள்ளும் லஞ்சம், ஊழல் என்று ஆயிரம் வேலைகள். எப்போதுதான் இதையெல்லாம் ஒழித்து மக்களின் துயர்போக்குவோம் என்ற நோக்குடைய அரசு மலரப்போகின்றதோ தெரியவில்லை. இப்படியான நாட்டில் வருடா வருடம் சுதந்திர தினம் கொண்டாடுவதில் என்ன பெருமை இருக்கிறது?
அடிமட்ட மக்கள் கூட்டம் தொடர்ந்தும் உழைத்துக் கொண்டிருக்க இன்னொரு கூட்டம் உழைக்காமல் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறது. இந்த உயர் – கீழ் பாகுபாடுதான் சமூகம் என்றால் வீசும் காற்றில் விஷம் பரவட்டும்!



## மாமன்னரும் அமைச்சர் எடுபிடியும்.

**மாமன்னர்** – "அமைச்சரே! மாதம் முழுவதும் மும்மாரி பொழிகிறதா? இன்று நாம் நகர்வலம் செல்ல வேண்டும் அல்லவா?"
**அமைச்சர் எடுபிடி** – "அரசே! மாதம் முழுவதும் மும்மாரி பொழிகிறதோ இல்லையோ நமது நாட்டில் கசிப்பு ஆறு நன்கு ஓடுகிறது. கேரளக் கஞ்சாவும் நிறைய வருகிறது".
**மாமன்னர்** – "அமைச்சரே! மக்கள் எல்லோரும் நடக்கும் நமது 'நல்லாட்சி'யில் மகிழ்வாக இருக்கிறார்கள்தானே?"
**அமைச்சர் எடுபிடி**– "கடன் கொடுமை தாங்க முடியாமல் மக்கள் தற்கொலை செய்வதாகவும் செய்தி வருகிறது மன்னா!"
**மாமன்னர்** – "அரசியல் தலைவர்களும் பிள்ளைகளும் மகிழ்வாக இருக்கிறார்களே! அப்படியென்றால் தமிழ் மக்கள் மகிழ்வாக இருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்?"
**அமைச்சர் எடுபிடி** – ???
('எடுபிடிகளே'...! உங்களையும் இப்படிச் சிந்திக்க வைக்கிறதா?)





கப்ரன் மலரவன்



# போர் உலா

"உங்கற்றா எங்கட மாமாவை" ஓடிச்சென்று அணைத்துக் கொண்டேன். ஆம், எங்களுடன் ஒன்றாய் இருந்து யாழ்ப்பாணத்தில் விசேட பயிற்சிகளைப் பயின்ற போராளிகள்தான் அவர்கள். அவர்களுடன் கோட்டைச் சண்டையில் ஈடுபட்ட எங்களைப் பின்னர் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலுக்குக் கூட்டிச் சென்று தாக்குதலை முடித்துக் காட்டிலிருந்து நாங்கள் வருகின்றோம். இவர்கள் கோட்டைச் சண்டையை முடித்துவிட்டு வருகின்றார்கள்.

வர்மன், யெல்சின், றஞ்சன், விக்டர் எல்லோரும் வந்திருந்தாங்கள். மகிழ்ச்சிப்பெருக்கில் ஆரவாரித்து ஒருவரையொருவர் தழுவிக்கொண்டோம். பிரிந்தவர் கூடினால் கேட்கவும் வேண்டுமா என்பதைப்போல்.

"என்ன மச்சான், நீலநிறத்தில் கோல்சர் அடிச்சு ரைபிள் கட்டியிருக்கிறாய்?"

"கோட்டைச் சண்டை முடியப் பானு அண்ணா தந்தவர்." இது றஞ்சன்.

"கோல்சர் துணியில்லையென்றால் பச்சைக் கலரில துணி அனுப்பியிருப்பன்." றஞ்சனைச் சீண்டினேன்.

"நீங்களொன்றும் தரவேண்டாம்" முதுகில் குத்தினால் மெலிதாய் றஞ்சன். கொஞ்சம் உயர்ந்து சதை சேர்த்திருந்தான். கறுப்பாயும் இருந்தான். எல்லோருடைய தலையிலும் காகம் கூடுகட்டும்போல். "எங்களுக்கு நேரமில்லயப்பா" வர்மன் கூறினான்.

சிறுவயதில் கொழும்பில் இருந்து பின் வளர்ந்து வேலை செய்து, பிறகுதான் யாழ். பூமியை மிதித்தவன். கட்டையாகவும் மஞ்சள் தோலுமாய்க் கையை வீசியபடி நடப்பவன். தலைமயிர் வழமையாக அரை அங்குலத்தின் வெட்டுபவன் இன்று கூடையாய் வளர்த்திருந்தான்.

"யெல்சின் என்ன சோகத்தில?" அரைக்கண் தூக்கத்திலிருந்தவனைக் கிண்டினேன்.

"ஒன்றுமில்லை, நித்திரை தூக்கியடிக்குது." ஒரே நித்திரைச் சாமி. இவனும் வர்மனும் போட்டிக்கு நித்திரை கொள்வார்கள். காலை 7.30, 8.00, 8.30க்குப் பின்னர் ஒருவாளி நீருடன் ஜலக்கிரீடை செய்யப்படுவார்கள். இருவருக்கும் இது வாரத்தில் குறைந்தது இருமுறை. விக்டரைக் காட்டி, "ஐயர் என்னவாம்...?" என்று வினவ, சிரித்தபடி அருக வந்தான் விக்டர். கன்ன ஓரங்களில் பூஞ்சையான சுருள் மயிர்கள் தாடியைப்போல அடர்த்தியற்று வளர்ந்திருக்க, கண்களைக் கண்ணாடியால் மறைத்து, தலைமயிரால் நெற்றியை மறைத்து, கொஞ்சம் கொழுத்திருந்தான்.

"என்ன....? என்னப் பற்றி ஏதோ கதைச்ச மாதிரி இருந்தது?"

"இல்லை இப்பவும் றோய் அண்ணரிட்ட அடிவாங்கிறவனோ என்று கேட்டனான்"

வயிற்றுள் மெலிதாய் குத்த, 'அம்மா' என்றேன்.

"றோயரோட எப்படிப் போகுது?"

"பைம்பலாய்ப் போகுது. இடைக்கிடை முதுகு நோகுது" இது விக்டர்.

"மச்சான் அவற்றை கதையைக் கேட்டியே! நான் போய்க் கிட்ட நிற்க யாரென்று கேட்டார். புதுசா வந்தனானென்று சொல்ல, சும்மா அங்கால போடாப்பா உனக்கு விசயம் விளங்காது. பிறகு மிஸ் கிஸ்செண்டா எங்களுக்குத்தான் பிரச்சினை. இதுகளைப் பற்றித் தெரியாமல் கிட்ட வரக் கூடாது என்று கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாய்க் கலைத்துப் போட்டான்" என்றான் இதயன் சிரித்தபடி.

"ஆர் மச்சான் ஆள்? புதுசாய் வந்தவனோ?" ஒல்லியான உடம்புடன் வயோதிபரைப்போல நின்ற போராளியைக் காட்டி றஞ்சனிடம் கேட்டேன்.

"ஓ நீங்கள் போனப் பிறகெல்லே வந்தவன்கள். இவன் தான்ராப்பா சிறி. கிழட்டுச்சிறி என்று கூப்பிடுவம்."

"அந்தப் பனங்குற்றியில் குந்தியிருக்கிற பரதேசி ஆர்? பார், பனைக்கும் ஆளுக்கும் கொஞ்சம் கூட வித்தியாசமில்லை!" கூறப்படுவன் இன்னொருவனுக்குக் கல்லால் எறிந்தபடி பல்லைக் காட்டினான்.



"அவரோ? அவர்தான் எங்கட கறாட்டி மாஸ்ரர், பேய்ப் பைம்பல் காய்! எந்த நேரமும் முஸ்பாத்திதான். இப்ப கல்லெறி வாங்கியவன் அழகையா. இவற்றை சோடி."

அவனொரு பெரிய கல்லை எடுக்க வாத்தியார் பனைக்குப் பின்னால் ஒளிச்சார். கிட்டக் கிட்ட வர மறைவிலிருந்து வெளிப்பட்டு அருகே போய்க் கட்டிப்பிடித்தார்.

"விடுங்கோ மாஸ்ரர், விடுங்கோ!"

"எல்லாம் அன்பிலைதான்". திரும்ப அவன் கூற செல்லமாய்க் கன்னத்தில் தட்டினார். மறுகையால் எம்மைப் பார்த்து சேர்ட் கொலரை உயர்த்தி விட்டபடி இருவரும் தோளில் கைபோட்டு நடந்தனர்.

"பிறகென்ன நல்ல செற்தான். பைம்பலாய்ப் போகும்" என்றேன்.

ஏதோ ஞாபகம் வந்ததாய், "மச்சான் எங்கட நாற்பதாம் நம்பர் எங்கையடா?" என வினவினேன்.

"அங்கைபார் அந்த பூவரசுக்குக் கீழே குந்தியிருக்குது?" வர்மன் காட்டினான்.

'நாற்பதாம் நம்பர்' ஏன் என்றால் ஒருநாள் நல்லெண்ணைக்குப் பதிலாக 40ஆம் நம்பர் ஒயிலை முழுகுவதற்காக ஏராளமாகத் தப்பியபடி விறாந்தைக்கு வர, சிரித்தபடி இன்னொருவன் வர விசயம் தெரிந்து நாங்கள் அறுக்க, அன்றிலிருந்து 'நாற்பதாம் நம்பர்' ஆனான். அவனது பெயர் சசிக்குமார் என்பதே. மேலும் பல அறிமுகமற்ற போராளிகள் வந்திருந்தார்கள்.

மதிய வெயில் வெளியில் எங்கும் சுட்டெரித்தபடி பரவிக் கிடந்தது. தூரத்தே யிருக்கும் இலக்குக் கம்பங்கள் வெயிலில் அலை அலையாய்த் தெரிந்தன. பூவரசுகள் எல்லாம் மழை காலத்துடன் செழித்து நின்றன. இன்னொருபுறம் போராளிகள் ஒவ்வொரு அணியாகப் பீரங்கிகளைப் பரீட்சிக்க ஆரம்பித்தனர். நாம் "வோக்கி"யில் உடனுக்குடன் தகவலை அனுப்பினோம்.

"மச்சான் இது வெடிக்கிற ஷெல்லடா, கவனம்" என்றேன்.

"இது உள்ளுக்குள்ள போனா எப்படிஇருக்கும்?" கண்ணைச் சிமிட்டினான் றஞ்சன்.

தொடர்ந்து ஒவ்வொன்றாய்ப் பரீட்சித்துப் பார்க்கப் பிற்பகல் 5.30ஆனது. "கெதியா அதிலை இரண்டு பொயின்ற் அடியுங்கோ, டச் எடுப்பம்." சிராஞ் அண்ணா ஊக்கப்படுத்த, ஆறு மணிக்கு 125 மண்மூடைகளுடன் இரு அரண்கள் அமைக்கப்பட்டன.

ஒருபுறமாக வீடியோ எடுக்க சிராஜ் அண்ணா கத்தினார். "அவன் ஆற்றாப்பா சறத்தோட அதிலை நிற்கிறது. இறங்கடா கீழே" என்று எரிந்து விழுந்தார். சொன்னதுதான் தாமதம். "டேய் மாடா இறங்கடா கீழே" என்று அவனை இழுக்காத குறையாக இழுத்து இறக்கினான் வர்மன். அவன் பெருங்குரல் எடுத்து அவனைத் திட்ட சிராஜ் அண்ணா சிரித்தார். "ஆர் வரதனோ? சொல்வழி கேளான்" என்றார். வரதன் எடுத்த கல்லைப் போட்டு விட்டு நாக்கைக் கடித்தபடி, சாரத்தை ஒரு கையால் பிடித்த வண்ணம் வெளியே வந்தான். புன்னகை பூத்தார் மாஸ்ரர். கரகோசம் எழுந்து அடங்க மீண்டும் வீடியோ படமாக்கப்பட்டது. அன்றுதான் முதல் முதலாக ஓர் அரிய நண்பனை, புன்னகை மன்னனைப் பெற்றுக்கொண்டேன். அவர் அறிமுகத்துடன் சிநேகிதமானார். வாழ்வில் என்றும் மறக்க முடியாதது அது.

(தொடரும்)

எஸ்.தர்சி

கவிதை

# மெய்க் காதல்

நேற்றடித்த ஆசை மழையில்...
இன்று முளைத்த எல்லாக் காதலிலும் ....
பார்க்க முடிகின்ற அன்பிலும்...
கேட்க நேர்கிற காதலிலும் ....
உணர முடிகின்ற உணர்வுகள் யாவற்றிலும்
உடல்களின் வாசமே....
இது தான் மெய்க்காதலாம் பலர்.
அப்படி என்றால் இதற்குப் பெயர் என்ன.....?

கனவில் விதி எழுதி....
என் நினைவில் உன் உணர்வெழுதி.......
நீ எங்கோ நான் எங்கோ சென்றுவிட்டபோதிலும்...
நானோ வீசும் காற்றில் உனக்காய்

கவி எழுதிச் சத்தமிட்டு வாசிக்கின்றேன்..
நீ அதை முத்தமிட்டு நேசிக்கின்றாய்....
உன் மார்பில்லை நான் தூங்கிக்
கொண்டு தான் இருக்கின்றேன்....
உன் தோள் இல்லை நான்
சாய்ந்து கொண்டு தான் இருக்கின்றேன்....
விலங்கிடப்பட்ட நம் காதல்...
விதியை மீறி விண்ணையும் தாண்டி
உணர்வுகள் கொண்டு விடிவெள்ளியாய்
அசைபோட்டுக் கொண்டுதான் இருக்கிறது....

இதயமும் பட்டாம்பூச்சியாய் சிறகடித்து
பறந்து கொண்டுதான் இருக்கின்றது....
இதைவிட ஓர் உயரிய மெய்க் காதலை
நான் இன்றுவரை எவரிடமும் கண்டதில்லை
என்னவனே....
என் காதலின் மன்னவனே...
மெய்யான உன் காதல் நினைவுகளுடன்
காத்திருக்கிறேன்...





# தப்பிய தும்பித் தம்பதிகள்

மாதவி உமாசுத சர்மா

கட்டுரை

தும்பியொன்று பட படவென்று தனது கண்ணாடி போன்ற இறகுகளை அடித்தபடி இலையொன்றில் வந்து அமர்ந்தது. சில விநாடிகளில் இன்னொரு தும்பி எங்கிருந்தோ பறந்துவந்து ஓர் உலங்குவானூர்தி நிலத்தில் இறங்குவதுபோல் தனது இணைக்கு அருகே வந்தமர்ந்தது. சிறிய தலை. ஆனால் நீண்ட உடல். உரோமங்களையுடைய கால்கள். கண்ணாடியைப்போல் மிக மெல்லிய தடிப்புள்ள இறகுகள். இரண்டு பக்கங்களிலும் சமச்சீராக அமைந்திருந்தன. அந்த மெல்லிய இறகுகளில் நரம்புகள் தெரிந்தன. அந்த இறகுகளைப் பயன்படுத்தித் தனது உடலைத் தூக்கிப் பறக்கக் கூடிய வல்லமை அதற்குண்டு. தும்பியின் செயற்பாட்டையும் உருவத்தையும் பார்த்துத்தான் மனிதன் உலங்கு வானூர்தி மற்றும்பிற வானூர்திகளைப் படைத்தானோ என்னவோ? என்றது என்மனம்.

**கூடவே பறந்தது அதே மனம்**

இயற்கையின் சிருஷ்டியில்தான் எத்தனை ஆச்சரியங்கள். மனிதன் கற்க வேண்டிய பாடங்கள் பல. தும்பியை ஆங்கிலத்தில் 'ட்றாகொன் ப்ளை' (Dragon Fly) என்பார்கள். தும்பிகளில்தான் எத்தனை வகைகள். அவை ஒவ்வொன்றும் வித விதமான ரகங்களில் அழகு காட்டிப் பறப்பதைக் காண்பதில் என் மனமும்கூடவே பறந்தது. என் சிந்தனை பறக்கும் பூச்சியினங்களைப் பற்றி யும் சிந்திக்கத் தொடங்கியது. 350மில்லியன் வருடங்களுக்கு முன்பு பூச்சிகள் தோன்றினாலும் அவர்களின் தோற்றகால வாழ்க்கையைப் பற்றி விவரங்கள் மிகக் குறைவு. பூச்சிகள் வெகுதூரம் பறப்பன. தத்தித்தத்திச் செல்வன, ஊர்வன போன்ற இயக்கங்களை உடையவை. ஆரம்ப காலத்தில் அவை ஊர்வனவாக இருந்திருக்கலாம்.

**வெப்பம் குறைந்தால் வாழ்வு, கூடினால் சாவு!**

நிலப்புழு, லீச், கர்ரான் எனப்படும் ஊர்வன போன்றவை குளிர்ந்த குருதியை உடையன என்பர். தங்களைச் சுற்றியுள்ள சூழல்களின் வெப்பநிலையை அவற்றின் உடல் விரைவில் அடையும் தன்மை பெற்றன. சில வகைப் பூச்சிகள் தமது குருதி 16பாகை செல்சியஸாக வெப்பநிலை உறை நிலையாக இருக்கும்போதுகூட நடந்து செல்கின்றன. தொடர்ந்தும் இயங்கக்கூடியவனவாகவும் இருக்கின்றன. இவ்வகைப் பூச்சிகள் வெகுவான வெப்பநிலை அதிகரிப்பால் பாதிப்படையக்கூடியவை. இதிலொன்றை சாதாரண 30பாகை செல்ஸியசளவான வெப்பநிலையில் கையில் எடுத்துப் பார்வையிட்டால் அதன் உயிர் பிரிந்த நிலையில். அது அசையாது இருப்பதை அவதானிக்க முடியும்.

**வெப்பநிலைக்கேற்ப இசைவாக்கமடையும் குருதி**

தமது உடலின் வெப்பநிலையைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக்கூடச் சில பூச்சியினங்களால் முடிகிறது. 48பாகை செல்சியஸ் வெப்ப நிலைக்கு ஏற்ப தமது குருதி வெப்பநிலையை மாற்றியமைத்து வாழக் கூடிய பூச்சிகள் தற்காலத்திலும் வாழ்கின்றன. இவ்வகை ஜந்துக்களின் தலை அல்லது தலையையும் உடலையும் இணைக்கும் பகுதி மூலம் அதன் உடல்சுற்றுவட்டத்துக்குள் நகர்ந்துகொண்டிருக்கும் குருதியின் வெப்பநிலையைக் கணிக்க முடியும். அதுவே அதன் உடல் வெப்பநிலையாகவிருக்கும். இவ்வகை ஜந்துக்களில் குளிர்ந்த குருதியுள்ள ஊர்வனவற்றில் இருந்து சூடான குருதியுள்ள பறப்பன வரை உண்டு.

37பாகை செல்சியஸ் முதல் 41பாகை செல்சியஸ் வரையிலான வெப்பநிலை மாற்றங்களுக்குத் தம்மைச் சரி செய்து கொள்ளும் அல்லது இசைவாக்கிக் கொள்ளும் பறவைகளும், ஊர்வனவும், பூச்சிகளும் உள்ளன. இந்த வெப்ப இடைவெளிக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ வெப்பநிலை மாற்றம் ஏற்படுமிடத்துப் பொதுவாக அவை நோய்வாய்ப்படும் நிலைமை உள்ளது. தமது உடலின் வெப்பநிலையைச் சுற்றாடலின் வெப்பநிலைமைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ள முடியாமையே இதற்குக் காரணமாகும்.

**அற்ப ஆயுள் - அதிக பெருக்கம்**

பூச்சிகளின் வாழ்நாள் சிலகாலமே. பழ இலையான்கள் மனிதனைவிட 700 மடங்கு தமது இனத்தை பெருக்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தன. ஆனால் அவற்றில் 95சதவீதமானவை மனிதர்கள் விசிறும் கிருமிநாசினிகளாலும் வெப்பநிலை மாற்றங்கள் காரணமாகவும் அழிந்துவிடுகின்றன. நீர் உறைந்துபோகுமளவுக்கு நிலவுகின்ற வெப்பநிலையிலும் பறக்கவல்ல சில பூச்சிகள் உண்டு. பூச்சிகளின் கழுத்துப்பகுதி மிகவும் முக்கிய பாகமாகும். அந்த இடத்தில்தான் இறகுகளும் பறக்க உதவும் தசைகளும் செயலாற்றுகின்றன. பூச்சிகள் பறக்கும் விதத்தில் பல இரகசியங்கள் உள்ளடங்கியுள்ளன. இறகுகளில் பல மாற்றங்கள் ஏற்படும். இனச்சேர்க்கைக்கு ஏதுவாக இறகுகளின் நிறம் மாறும். சில பூச்சிகள் இறகுகளைப் படபடவென அடித்து ஒலியை எழுப்பி இனச்சேர்க்கைக்கு அழைப்பை விடுகின்றன. தத்துவெட்டி அல்லது வெட்டுக்கிளி என அழைக்கப்படும் பூச்சி இனங்கள் போன்றவை தமது இனச்சேர்க்கைக்குத் தேவையான அழைப்பை ஓசை மூலம் வெளிப்படுத்துகின்றன. சூரிய வெப்பக் கதிர்களிடம் இருந்து தமது உடலைப் பாதுகாக்க வண்ணத்துப் பூச்சிகளும், பீட்டில் என்ற வண்டும் தமது இறகுகளைப் பாவிக்கின்றன என்பது சில ஆய்வாளர்களின் கருத்து. தம்மைக் கொன்று உணவாக உண்ணவரும் ஜந்துக்களை ஏமாற்றி தம்மைக் காப்பாற்றி கொள்ளவும் சில பூச்சியினங்களும் பறப்பனவும் தமது இறகுகளின் வண்ணங்களை மாற்றுகின்றன.

**மீன்களுக்குக் கால்கள்!**
**பறப்பதற்குப் பயன்படாத இறகுகள்!**

முற்காலத்தில் மீன்களுக்குக் கால்கள் இருந்ததாக விஞ்ஞானிகள் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருந்னர். அவை வாழ்ந்த நீர்த் தேக்கங்கள் வற்றியவுடன், தொலைவில் உள்ள வேறு நீர் நிலைகளுக்குச் சென்று அவை உயிர் பிழைத்துக்கொள்வதற்கு அவற்றின் கால்கள் பயன்பட்டன என்றும் கருதப்பட்டது. ஆனால், இந்த விளக்கத்துக்கு எவ்வித ஆதாரங்களும் இருக்கவில்லை. இதுபோலதான் ஆரம்பத்தில் பூச்சிகளின் இறகுகள் முழுமையாக செயற்படாது இருந்தன என்றும் அவை வேறு செயற்பாடுகளுக்கு பூச்சிகளால் பாவிக்கப்பட்டன என்றும் உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் கருதினர். அதாவது பறத்தலைத் தவிர்த்து, சூரியக்கதிர்களை உள்ளெடுத்துத் தமது உடலைச் சூடாக்கவும் இனச்சேர்க்கைக்காகத் தமது இணைகளுக்குச் செய்திகள் அனுப்பவுமே இவற்றின் இறகுகள் பாவிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது.

ஆனால் தற்காலத்தில் இவ்விளக்கத்துக்கு எதிராக பல விதமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது பறக்காத பூச்சிகள் சூரியக்கதிர்களை உட்கொள்ளவும் இனச்சேர்க்கைக்கு அழைப்புக்களை அனுப்பவும் தமது இறகுகளைப் பாவிப்பதில்லை என்றனர். இறகுகள் தோன்றுவதற்கு ஒரு புதுமையான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார் சேர். வின்சன் விக்கில்வோர்த் என்பவர். நீரின் மேல் வாழும் 'மே இலையான்' அல்லது 'கல் இலையான்' போன்றவற்றுக்கு 'ஜில்' எனப்படும் உடம்பின் பகுதியிலிருந்து இறகுகள் தோன்றின என்றார். (செவுள் என்று இந்த உறுப்பு குறிப்பிடப்படுகின்றது. மீனினங்களில் இதையே பூ என்கிறார்கள். நீருக்குள் இருக்கும் ஒட்சிசனைப் பிரித்தெடுத்துச் சுவாசிக்கும் தொழிற்பாட்டை இது புரிகிறது) நீரிலிருந்து ஒட்சிசனைப் பெற இந்தப் பகுதி உதவுகின்றது. தேங்கி நிற்கும் நீரை விட அசையும் நீரில் ஒட்சிசன் வாயு அதிகம். அதனால் தேங்கி நிற்கும் நீரின் மேல் உள்ள இலையான்கள் தமது தசைகளை அசைத்து நீரை அசையச் செய்து தமக்குத் தேவையான ஒட்சிசன் வாயுவைப் பெற்றுக் கொள்கின்றன. மிக விரைவாகத் தமது தசைகளை அசைக்கும் போது நீரானது விரைவாக அசைவது மட்டுமன்றி பூச்சியை நீரின் மேற்பகுதியில் உந்தி எழுப்பவும் செய்கிறது. இதுவே காலப்போக்கில் பறக்கக் கூடிய செயற்பாடாக மாறியது எனவும் விளக்கம் கொடுத்தார். தற்காலத்தில் சுறா, டியூனா போன்றபல பெரிய, சிறிய மீனினங்கள் பலவும் தாம் சுவாசிப்பதற்கு மேல்விளக்கியவாறுதான் தம்மை உந்திக் கொள்கின்றன.

**தும்பிகள் ஆபத்தில் மாட்டின!**

எனது உடலை சில்லென்ற குளிர்காற்றுத் தழுவியது. சிந்தனையிலிருந்து விடுபட்ட நான் தும்பித் தம்பதிகள் தேனுக்காக ஒரு பூவை நோக்கி நகர்ந்து தேனை நுகர்வதைக் கண்ணுற்றேன். இரண்டு விழிகளும் பிதுங்க அவர்களைக் கண்வெட்டாமல் பார்த்தபடியே இருந்த நான், தம்பதிகளுடன் இன்னுமொரு ஜீவன் இருந்ததை இப்போதுதான் அவதானித்தேன். கள்ளுண்ட மயக்கத்திலிருந்த அந்தத் தும்பிகள் இரண்டும் என்னை அவதானிக்கவில்லை.

ஒரு பச்சோந்தி தன்னுடைய நீண்ட நாக்கை நீட்டித் தும்பிகளை இரையாக்கத் தயாராகிக் கொண்டிருந்தது. தனது உடலின் நிறத்தை, இலைகளின் நிறத்துக்கு ஏற்றபடி மாற்றிக் கொண்டு தும்பிகளை நோக்கி மெதுமெதுவாக நகர்ந்தது. அவற்றை ஏமாற்றி இரையாக்கத் திட்டம் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன். என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. தும்பிகளின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அவை அமர்ந்திருந்த மரக்கொப்பைப் பிடித்து அசைத்தேன். அவ்வளவுதான், அந்த அசைவில் தும்பிகள் இரண்டும் மேலெழுந்தன. தமக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தை உணர்ந்தும் கொண்டன. மறுகணம் எனக்குத் தமது கண்ணாடிச் சிறகுகளால் நன்றி கூறிப் பறந்து சென்றன. ஏமாந்த பச்சோந்தியின் உருண்டை விழிகள் எனது பக்கம் திரும்பின.

"எனக்குக் கிடைக்க இருந்த இரையைக் கிடைக்காமல் செய்து என்னைப் பட்டினி போட்டுவிட்டாயே நீ ஒரு மனிதனா?" என்றது அதன் பார்வை. நான் அதன் பார்வையால் சுட்டுப் பொசுக்கப்பட்டாலும், இரண்டு உயிர்களைக் காப்பாற்றிவிட்டேன் என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து விடைபெற்றேன். மறுபுறம் இயற்கை அன்னை என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

இர.சந்திரசேகர சர்மா
தமிழில்

SHEL SILVERSTEIN எழுதிய 'THE GIVING TREE' என்னும் கவிதையின் தமிழ்வடிவம்

# வழங்கும் மரம்

ஒரு முறை மரமொன்றிருந்தது
அது ஒரு சிறுவன்மேல் அன்பு செலுத்தியது
ஒவ்வொரு நாளும் அந்தச் சிறுவன் வருவான்
அதன் இலைகளைச் சேகரித்துக் கொள்வான்
அவற்றைக் கொண்டு முடிகள் தயாரித்து
காட்டின் இராசாவாக விளையாடுவான்

அதன் அடி மரத்தில் ஏறி அதன் கிளைகளில் தொங்குவான்
அப்பிளை உண்ணுவான்
அவர்கள் ஒளித்துப் பிடித்து விளையாடுவார்கள்
அவன் களைத்துப்போனபோது
அதன் நிழலில் நித்திரை கொள்வான்
அந்தச் சிறுவன் அந்த மரத்தின்மீது
மிகுந்த அன்பு செலுத்தினான்
மரம் மிக மகிழ்ந்தது

✦✦✦

ஆனால், காலம் ஓடியது
அந்தச் சிறுவன் வயதுகூடி வளர்ந்தான்
மரம் பெரும்பாலும் தனித்தே இருந்தது
பின்னர் ஒரு நாள் சிறுவன் அந்த மரத்திடம் வந்தான்
மரம் சொன்னது, "வா சிறுவனே!
எனது அடிமரத்தில் ஏறி கிளைகளில் விளையாடி மகிழ்ந்திடு"

"நான் ஏறி விளையாடுவதற்கு மிகவும்
பெரியவனாகி விட்டேன்"
சிறுவன் சொன்னான்
"நான் பொருட்களை வாங்கி மகிழ்வடைய
விரும்புகிறேன். எனக்குப் பணம் வேண்டும்"

"நான் மிகவும் வருந்துகிறேன்" மரம் சொன்னது.
"என்னிடம் பணம் இல்லை. ஆனால், என்னிடம் இருப்பது
இலைகளும் அப்பிள்களும் மட்டுமே
எனது அப்பிள்களை எடுத்துக்கொள் சிறுவனே
அவற்றை நகரத்தில் விற்றுவிடு அப்போது உன்னிடம் பணம் இருக்கும்
நீ மகிழ்ச்சியாக இருப்பாய்"


எனவே சிறுவனும் மரம் மீது ஏறி
அதன் அப்பிள்களைச் சேகரித்துக்கொண்டு
அப்பால் எடுத்துச் சென்றான்
மரம்மிக மகிழ்ந்தது

✦✦✦

ஆனால், சிறுவன் நீண்டகாலம் வராமலே இருந்தான்
மரம் மிகத் துன்பமடைந்தது
பின்னர் ஒரு நாள் சிறுவன் திரும்பி வந்தான்
மரம் மகிழ்வுடன் சிலிர்த்துக் கொண்டது.
அது சொன்னது "வா சிறுவனே, எனது அடிமரத்தில்
ஏறிக் கிளைகளில் தொங்கி ஆடி மகிழ்ந்திடு"
"நான் மரங்களில் ஏறுவதற்கு மிகவும்
வேலைப்பளு உள்ளவனாகிவிட்டேன்"
சிறுவன் சொன்னான், "எனக்கொரு வீடு வேண்டும். என்னை
வெம்மையாக வைத்துக் கொள்வதற்கு" அவன் சொன்னான்.
"எனக்கொரு மனைவி வேண்டும், எனக்குப் பிள்ளைகள் வேண்டும்,
எனவே எனக்கொரு வீடு தேவை. நீ எனக்கொரு வீடு தருவாயா?"
"என்னிடம் வீடு இல்லை" மரம் சொன்னது.
"காடுதான் எனது வீடு, ஆனால் நீ எனது கிளைகளை வெட்டி எடுத்து
ஒரு வீடு கட்டலாம். பின்னர் நீ மகிழ்வாக இருப்பாய்"
எனவே சிறுவன் அதன் கிளைகளை வெட்டினான்
அவற்றை எடுத்துக் கொண்டு தனக்கு
வீடு கட்டச் சென்றான்
மரம் மிக மகிழ்ந்தது

✦✦✦

ஆனால், சிறுவன் நீண்டகாலம் வராமலே இருந்தான்
அவன் திரும்ப வந்தபோது



மரம் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்ததில்
பேசவே முடியாதிருந்தது
"வா சிறுவனே!" அது கிசு கிசுத்தது
"வந்து விளையாடு"
"நான் மிகவும் வயதாகிவிட்டேன் விளையாடுவதற்கு
துன்பமாயிருக்கிறது"
சிறுவன் சொன்னான்
"எனக்கொரு படகு வேண்டும், இங்கிருந்து
என்னை வெகுதூரம் எடுத்துச் செல்வதற்கு
நீ எனக்கொரு படகு தருவாயா?"
"எனது அடிமரத்தை வெட்டி
ஒரு படகு செய்துகொள்"
மரம் சொன்னது "பின்னர் நீ அப்பால்
படகுப் பயணம் செய்து மகிழ்ச்சியாயிரு..."

எனவே சிறுவன் அதன் அடிமரத்தை வெட்டி
ஒரு படகைச் செய்து அப்பால் பயணப்பட்டான்
மரம் மிக மகிழ்ந்தது
... ஆனால் உண்மையில் அல்ல.

✦✦✦

நீண்ட காலத்துக்குப் பிறகு
சிறுவன் திரும்பவும் வந்தான்
"நான் மிகவும் வருந்துகிறேன் சிறுவனே!"
மரம் சொன்னது.
"ஆனால் உனக்குத் தருவதற்கு என்னிடம்
எதுவும் மீதமில்லை
எனது அப்பிள்கள் போய்விட்டன"
"அப்பிள்களுக்கு எனது பற்கள் மிகவும்
வலிமையற்றதாகி விட்டன" சிறுவன் சொன்னான்.
"எனது கிளைகள் போய்விட்டன"
மரம் சொன்னது. "நீ அவற்றில்
தொங்கி ஆட முடியாது"
"நான் கிளைகளில் தொங்கி ஆடுவதற்கு மிகவும்
வயதாகி விட்டேன்" சிறுவன் சொன்னான்.
"நான் மிகவும் வருந்துகிறேன்"
மரம் பெருமூச்சு விட்டது.

"நான் உனக்கு ஏதாவது
கொடுக்கலாமென்று விரும்புகிறேன்
ஆனால், என்னிடம் எதுவும் மீதமாயில்லை
நான் ஒரு பழைய அடிக்கட்டை மாத்திரமே
நான் மிகவும் வருந்துகிறேன்..."
"இப்போது எனக்கு அதிகம் தேவையில்லை"
சிறுவன் சொன்னான்
"இருந்து இளைப்பாற ஓர் அமைதியான இடம் மட்டுமே.
நான் மிகவும் களைப்படைந்து விட்டேன்"
"நல்லது" மரம் சொன்னது, தன்னால் முடிந்தளவு
தன்னைமேலே நிமிர்த்திக் கொண்டு,
"நல்லது, ஒரு பழைய அடிக்கட்டை, இருந்து இளைப்பாற
நல்லதுதான். வா சிறுவனே! இருந்துகொள்,
இருந்து கொண்டு இளைப்பாறு"
சிறுவன் கீழ்மார்ந்தான்
மரம் மிக மகிழ்ந்தது

## குறிப்பு:

'ஷெல் சில்வேர்ஸ்ரெய்ன்' ஓர் அமெரிக்க எழுத்தாளர். சிறுவர் கார்ட்டூன்கள், பாடல்கள், மற்றும் புத்தகங்கள் போன்றன இவரது படைப்புகள். 30க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன இவரது நூல்கள். இயற்கையை நேசிப்பதாக இவருடைய ஆக்கங்கள் இருக்கின்றன. 'உயிர் தரும் மரம்' என்பதும் குழந்தைகளுக்கான ஒரு நூல் ஆகும். இது 1964ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது. அதுவும் இவருடைய புகழ்பெற்ற புத்தகமாக மாறி, பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. 'குழந்தை இலக்கியத்தில் சிறந்த நெறிகாட்டும் புத்தகங்களில் ஒன்று.' எனும் அங்கிகாரம்பெற்ற புத்தகமாகவும் கருதப்படுகிறது. பன்னாட்டு அளவில் பள்ளிக்கல்வியில் சிறுவர் பள்ளிகளில் இரண்டாம் வகுப்புகளில் இருந்து இந்த நூல் குழந்தைகளுக்குப் பாடமாகப் புகட்டப்படுகிறது. கதை மாந்தர்களாக ஓர் அப்பிள் மரமும், ஒரு சிறுவனும் (இந்த சிறுவன் வளர்ந்தாலும் சிறுவன் என்றே சுட்டப்படுகிறான்) இருக்கிறார்கள். இந்த இருவரும் தங்களுக்குள் பேச முடிந்தவர்களாவர். கதை மேற்கண்டவாறு ஊருக்கு ஒதுக்குப் புறத்தைக் களமாகக் கொண்டு நிகழ்கிறது. அந்த அப்பிள் மரம் முழுக் கதையிலும், முடிவிலும் மனிதனுக்குத் தன்னால் முடிந்ததை வழங்குகிறது. "மரம் மகிழ்ச்சியாக இருந்தது." என்றே ஒவ்வொரு பத்தியும் முடிகிறது. அதில் சுட்டப்படுவது மனிதன் அதிலிருந்து பயன் பெறுவதும் அதன் அழிவிலும் ஆதாயம் தேடுவதும் தான். ஆனால் அது சலிப்படையாமல் வழங்கிக்கொண்டே இருக்கின்றது. தன்னை அழித்தாலும்கூட.








# சைவசித்தாந்தமும் இயற்பியலும்

மருத்துவர். சி. யமுனாநந்தா

கட்டுரை

நவீன இயற்பியல் கோட்பாட்டுண்மைகளை சைவசித்தாந்தம் தன்னகத்தே கொண்டுள்ளது. சிவப்பிரகாசம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருவருட்பயன் போன்ற நூல்களில் இயற்பியல் கருத்துக்கள் ஆழமாக உள்ளன. இவற்றைப்போல் திருமந்திரத்திலும் இயற்பியல் கருத்துக்கள் ஆழமாக அமைந்து உள்ளன. சைவசமயத்தில் மாத்திரமல்லாது தமிழிலே பல இயற்பியல் தத்துவங்கள் தமிழ்ச் சமணசமய நூல்களிலும், தமிழ்ப் பௌத்த நூல்களிலும் அமைந்திருந்தன. அவை பெரும்பாலும் அழிவடைந்துவிட்டன. எஞ்சியுள்ள தமிழ் சித்தாந்த நூல்களைப்பேணி ஆராய்தல் எம் கடமையாகும்.

பிரபஞ்சத்தின் இயல்பை ஆராயும் இன்றைய விஞ்ஞானம், புவியீர்ப்பு அலைகளைக் கண்டறிந்துள்ளது. ஒளி அலைகளின் வளைவை அறிந்துள்ளது. இதனால் நான்காம் பரிணாமத்தை உணர்த்தியும் உள்ளது. இயற்பியலைக் குவாண்டம் E8 மாதிரி மூலம் விளக்க முனைகின்றனர். குவாண்டம் கணனிகள் செயற்படத் தொடங்கிவிட்டன.

இவற்றை எம்முன்னோர்களால் சமய சித்தாந்தத்தில் அளவையியல் என்ற முறையில் அணுகப்பட்டு உள்ளது. உயிரைப் பற்றியும், ஆன்மாவைப்பற்றியும், உலகை இயக்கும் சக்தி பற்றியும் அளவையியல் விளக்குகின்றது. அளவைகளை 10 வகையாகச் சைவசித்தாந்தத்தில் காணலாம். அவையாவன :

1) காட்சி அளவை
2) கருதல் அளவை அல்லது அனுமான அளவை
3) ஆகம அளவை அதாவது நூல்களைக் கொண்டு அறிதல்.
4) உவமை அளவை
5) அருந்தா பத்தி அளவை அதாவது உய்த்தறிதல்
6) அபாவ அளவை அதாவது இன்மை அளவை
7) இயல்பு அளவை
8) ஐதீக அளவை
9) மீட்சி அளவை
10) உண்டாம் நெறி அளவை

ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்று பொருள். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மைபடுமாறு செய்வது ஆணவமலம். ஆணவமலத்தை இன்றைய இயற்பியலில் சக்தித் துணிக்கையாகக் கருதலாம். ஆணவமலம் மட்டும் உடையவை இந்தப் பூதசம்பந்தமான தேகம் அற்றவர்கள். அதாவது விதேகிகள். இவர்களே விஞ்ஞானகலர் என்பர்.
ஆணவம், கன்மம் உடையவர்கள் பிரளயாகலர் எனப்படுவர். இவர்கள் பிரளயகாலத்தில் சக்தியினுள் ஒடுங்குவர். பிரளயாகலர்களும் தேகம் அற்ற சிவ விதேகிகள் ஆவர்.
பிரளயாகலர்கள் இரண்டு வகை. இதில் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம் பெற்று பதி, பதார்த்தங்களாக மாறுவர். இதில் ஆதிமுத்தசிவன், ஹீகண்டர், வீரபத்திரர், புவனவாசிகள், பரமுத்தசிவன் என்பவர்கள் அடங்கும். பிரளயாகலரில் மற்றையவர்கள் அபரிபக்குவமலர்கள் ஆவர்.
ஆணவம், கன்மம், மாயை உடையவர்கள் சகலர் எனப்படுவர். இவர்கள் தேகம் உடையவர்கள். தேவர்கள், மனிதர்கள் மற்றும் உலக உயிர்கள் இதில் அடங்கும்.
சகலர் ஆணவம், கன்மம், மாயை உடையவர்களாகத் திரிபந்திகள் எனவும் துவிபந்திகள் எனவும் இருவகையாகவும் தூலதேசிகள், அப்பிராத்தா ஆகிய சரீரி, பிரநட்டா ஆகாசரீரி என மூவகையாகவும் வகைப்படுத்தலாம். இவை ஈற்றில் பரிபக்குவமலர்கள், அபரிபக்குவமலர்கள், பதிபதார்த்தங்கள் ஆகவும் மாறுவர். எனவே சகலர் பன்னிருவகையாக மாறுகின்றனர்.

**சிவமும் ஆதிசக்தியும்**

பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் சக்தியையே சைவசித்தாந்தம் சிவமாகக் கூறுகின்றது. பிரபஞ்ச இயக்கத்தையே சிவநடனமான நடராஜர் விளக்குகின்றது. இந்தப் பிரபஞ்சத்தின் மையமாகத் தில்லை விளங்குகின்றது. பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும்பொருட்டு ஆதிசக்தி தொழிற்படும் பொழுது இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என வகைப்படும்.

*'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்'*
*(திருவருட்பயன் பதிமுது நிலை 2)*

சக்தியும் சிவமும் ஒன்றாகக் காணப்படும் தன்மையை திருவருட்பயனின் மேற்படி வரிகள் விளக்குகின்றன. 'சக்தி பின்னமிலான்' என்பது இன்றைய பௌதீகத்தில் அகிலம் பற்றிக் கூறும் பின்னல் மாதிரியை (E8 Spiral model) விளக்குவது போல் உள்ளது. இதைச் சிவஞானசித்தியாரில் பின்வருமாறு காணலாம்.

'சிவஞ்சக்தி தன்னை யீன்றுஞ்சக்தி தான் சிவத்தையீன்று
முவந்திடுவரும் புணர்ந்திங்கலே ருயிரெல்லா மீன்றும்
பவள பிரம சாரியாரும் பான்மொழி கன்னியாகுந்
தவந் தருஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே'

சிவமும் சக்தியும் எவ்வாறு உருமாற்றமடையும் என்பதை மேற்படிப் பாடல் விளக்குகின்றது. சிவஞ்சக்தி பேதங்கள்

சதாசிவன் – மனோன்மணி
மனோன்மணி – மகேஸ்வரன்
மகேஸ்வரன் – மகேஸ்வரி
மகேஸ்வரி – உருத்திரன்
உருத்திரன் – உமை
உமை – மால்
மால் – மகாலட்சுமி
மகாலட்சுமி – பிரமன்
பிரமன் – சரஸ்வதி

இவற்றையே இன்றைய நவீன இயற்பியல் கோட்பாட்டில் திணிவை உடைய துணிக்கைகள் என்றும் வகைப்படுத்துகின்றனர். ஒவ்வொரு திணிவை உடைய துணிக்கைகளுக்கும் இணையாக ஒவ்வொரு சக்தியை உடைய துணிக்கைகள் அமைகின்றன. இவை அகிலத்தின் அடிப்படைத் துணிக்கைகளால் அமைகின்றன.
இவை :
நுண்ணிழைவடிவில் 248வகையான பரிதியில் ஒன்றை ஒன்று தழுவிய வண்ணமும், சுற்றிய வண்ணமும் நடனமிட்டுக் கொண்டு காலவெளியின் தளத்தில் அமைகின்றன என A Geometric Theory of Everything – E8 மாதிரி விளங்கு கின்றது. இந்தச் சக்திகளின் விளைவு பூச்சியம் (Curled up vectors are zero) என்பதைச் சிவஞானபோத சூத்திரம் 7 விளக்கு கின்றது.

*'யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்*
*சத்தே அறியாது அசத்ரிலது அறியாது*
*இரு திறன் அறிவுளது இரண்டாலது ஆன்மா'*

அதாவது பரமாத்மாவுக்கு (சத்) முன்னால் அசத்தான உலகமும் மாயையும் சூனியங்களாகி விடுகின்றன. பரமாத்மாவை அறிவில்லாத ஜடமான அசத் அறிவதில்லை. சத்தாகிய பரமாத்மாவையும் அசத்தாகிய ஜடப்பொருளையும் அறிகின்ற அறிவாக ஆன்மா உள்ளது. ஜீவாத்மா சத்பொருளுமல்ல. அசத்தும் அல்ல. இது இவையிரண்டும் இல்லாமலேயே
இவ்விரண்டின் தன்மையை அறிகின்ற அறிவுடையதாகின்றது. எனவே ஜீவாத்மா சதசத் ஆகின்றது.
"பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்
கறி வென்ற பேர் நன்றற"
திருவருட்பயன் உயிரவை நிலை 15. அதாவது ஆத்மா அறிவைப்பெற ஐம்புலன் முதலிய கருவிகள் தேவை ஆன்மா என்ற சொல்லுக்கு வியாபகம் என்று பொருள். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மைபடுமாறு செய்வது ஆணவமலம். இதை

*"அன்றளவியுர் ளொளியொ டாவியிடையடங்கு*
*இன்றளவு நின்ற திருள்' திருவருட்பயன்" (24)*

ஆன்மாவின் தோற்றத்தில் இருந்து சட ஆற்றலை இயக்கும் திரோதனசக்தியானது இருளாகச் சித்திரிக்கப்படுகின்றது. இதையே இந்தக் கால இயற்பியலில் கீருந்துளைகள் என்கின்றார்கள். "இருளின்றேல் ஆன்மா இல்லை" என்கின்றது திருவருட்பயன். இன்றை இயற்பியலில் இதைக் கருந்துளைகளுக்கு ஒப்பிடலாம்.

*"இருளின் றேற்றுன் பென் உயிரியல்பேற் போக்கும்*
*பொருளண் டேல் ஒன்றாகப் போம்"*
திருவருட்பயன் (27)

'நாயேன்' என விழித்துக்கூறும் ஆன்மா
திரோதனசக்தி ஆன்மாவுக்கு வீடுபேற்றைத் தருதல் என்பது கருந்துளைகள் அகலும் பிரளய காலமாகும். இதுவே அகிலத்தின் ஒடுக்கமாக அமையும். Big Crunch பிரள்யகாலத்தில்
தேகம் இல்லாதவர்கள் பிரளயாகலர் ஆவார். அகில ஒடுக்கத்தின்போது சிவன் என்கின்ற பதிபதார்த்தம் எனும் சுடரொளியுடன் சேரும். ஆத்மாவையைப் பரிபக்குவமலர்கள் என்றும் கூறுவர். மற்றையவை
அபரிபக்குவ மலர்கள் என்பர். அபரிபக்குவ மலர்கள் சிருஷ;டிக் காலத்தில் சகலர் ஆவார். பசுத்தன்மை மறைய பதித்தன்மையை ஆன்மா அடைகிறது.
'நாயான நம் தன்னை ஆள் கொண்ட நாயகனை'
என மணிவாசகர் திருவம்மானையில் பதிபதார்த்தமாகிய நிலையில்
பாடுகின்றார். ஆன்மா இறைவனை அடைய முனையும்போது அது தன்னை விழித்துக்கூறும் நிலையே 'நாயேன்'. இது தமிழில் தன்மை முன்னிலை நிலையாகக் கருதப்படும். அதாவது எதிரில் உள்ள
இறைவன் நீயே என்றும் இறைவனுக்கு அருகில் பதிபதார்த்தமாக நின்று தனது உடலை 'நாயேன்' என்றும் விழிக்கும் இடமாகச் சிதம்பரம் அமைகின்றது. இதை மணிவாசகரின் திரு வாசகத்தில் பல இடங்களில் காணலாம்.

அதேபோல் அருணகிரிநாதரும் சிதம்பரத்தில் பாடிய திருப்புகழில் (616)

*"சித்தி லாட அழைதிடு வார்கவ*
*முற்ற மாதர் வலைப்புகு நாயெனை*
*சித்தி ஞானம் வெளிப்படவே சுடர் மடமீதே"*

என்று பதிபதார்த்தமாக மாறும் பசுவின் தன்மையே 'நாயேன்' என்ற வெளிப்பாடு.
அகிலத்தின் மையமான தி;ல்லையிலேயே இறைவனுடன் ஆன்மா இணைகின்றது என்ற உண்மை எமக்கு விளங்க வேண்டும். உலக ஒடுக்கத்தின்போது எல்லா ஆத்மாக்களும் ஒடுங்கும் இடமாகத் தில்லை விளங்கும். அதாவது பசுத்தன்மை மறைய பதித்தன்மை அடையும் இடமாகத் தில்லை விளங்குகின்றது.
கன்மமலம் உயிர் கூடுகின்ற உடம்புகளுக்குக் காரணமாகும். இது அழிந்தும், தோன்றியும் வருவதால் பிரவாக அநாதியாய் உள்ளது. உயிர்கள் பெறும் உடலுக்குக் காரணம் சஞ்சித கன்மம் ஆகும். உயிர்கள் அநுபவிக்கும் இன்ப, துன்ப அனுபவங்களுக்குக் காரணம் பிரார்த்த கன்மம் ஆகும்.
கன்ம நுகர்ச்சியின் பொருட்டு உயிர்கள் செய்வதே நல்வினை, தீவினைகளாகும். இவற்றை ஆகாமியவினை என்பர். பிரார்த்தவினை அழியும்பொழுது ஆகாமியம் வந்து பிரவாகம்போல் தொடர்ச்சியாகக் கன்மம் தொடரும். இது பிரவாக நாதி எனப்படும்.
ஊழிக்காலத்தில் உயிர்கள் மாயையில் ஒடுங்கும்பொழுது (இதையே இன்றைய விஞ்ஞானம் கருந்துளைகள் என வரையறை செய்கின்றது) கன்மமும் உயிர்களைவிட்டு நீங்காமல் மாயையில் ஒடுங்கும். இவ்வூழிக்காலமே. இதுவே அகிலத்தின் ஒடுக்கமாகும் ஆன்மாவின் வியாபகத்துக்குக் கருந்துளைகள் இன்றியமையாதவையாகும். கருந்துளைகள் அழியின் ஆன்மாவும் அழியும்.

*"ஆசாதியே லணைவ காரண மென்முத்திநிலை*
*பேசா தகவும் பிணி' திருவருட்பயன்" (28)*

இப்படியாகப் பல்வேறு வழிமுறைகளில் இன்றைய இயற்பியலைத் தன்னுள் அடக்கியுள்ளது சைவசித்தாந்தம். இன்னும் அதற்குள் ஏராளமானவற்றைத் தேடி உணர்ந்துகொள்ளலாம்.

# மாற்(று)எம் பிரளயத் தீர்ப்பு...

நா.நவராஜ்

கவிதை

பிரளயம் ஒன்றெம் இனியவாழ்வில் வந்து
விரவிநின் றாடிக் களித்தே - உரத்த
ஒலியாய்த்தன் வெற்றியைச் சாற்றியே போச்சு
வலியொடுசேர் துன்பம் விடுத்து.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய
வல்லமைகொள் நற்குடியாய் மார்தட்டி தொல்லைவளம்
பேசிப் பெருநிலம் எங்கணும் வாழ்ந்தகுடி
கூசிக் கிடக்கு மருண்டு.

முழங்கிய போர் முழுதாய் முடித்துப்
பழங்கதையாய்த் தானும் முடியக் கிழவர்
முதல்நற் குழந்தை வரைகிடந்தோம் நெஞ்சில்
சிதறபட்ட வாழ்வை நினைந்து.

வாழிடமும் அங்கிருந்த நல்வனப்பும் போயிடவே
பாழிடமாய்த் தோன்றிய அவ்விடத்தில் வாழ்ந்திடுவாய்
இங்கென்(று) அமர்த்திடக்குட் டிச்சுவருள் தங்கியே
எங்களை நொந்தோம் வெறுத்து.

உடம்பினில் காயமில்லை உள்ளதும் மாறி
தடமும் மறைந்துபோச்சு சொந்த இடத்தினில்
வந்துநாம் குந்தியும் விட்டோம் எனினுமேனோ
வந்த தெமக்கோர் இளைப்பு.

துள்ளிமுன்னம் மிக்க துடுக்காய்த் திரிந்தனம்
அள்ளிப்போட் டெத்தனை வேலைகள் கள்ளமின்றி
வேகமாய்ச் செய்தோம் பொறுத்தொரு போதும்நாம்
சோகமாய் இல்லை இருந்து.

தவிப்புடன் மீள எழுகையில் துன்பம்
குவிந்துடன் சூழக் குனிந்தொன்(று) அவாவியே
போய்ச்செய் வதும்கனமாய்த் தோன்றிட ஐயோஎன்
றோய்ந்தோம் தலைகைப் பிடித்து.

வெறுப்பும் விரக்தியும் வேதனைஎண் ணத்தின்
வறுப்பும் மிகுந்திட நெஞ்சம் இறுகிக்
கனமாய் இருக்கத் தலையும் விறைக்க
மனம்முய லும்தற் கொலைக்கு.


பொங்கல்நல் நாளில் கொடுத்திடும் பொங்கலை
எங்கும்பொங் கும்தன்மை யால்அதை வாங்கி
விருப்பொடு யாருமுண்ணார் அந்நிலைபோ லேயிங்(கு)
எவரு(ம்)உற்றார் போர்வடுத் தான்.

இதனால் பிறரொடு சொல்லு(ம்)ஆறு தல்போய்
அதனால் மனதுள் உலைமெழுகாம் துன்பம்
உறைவிடம் கொள்ள நடைப்பிணமாய் நாங்கள்
அறையில் கிடந்தோம் உடைந்து.

வருபவர் எல்லாம் பொருள்களும் காசும்
இருப்பின் நிழலும் தருவதில் நின்றார்.
இருப்பினும் எம்மிலவை தந்ததில்லை தென்பை
இருண்மையில் வாழும் மனது.

பிரளயம் தாக்கிப் பிழைபட்ட செல்வம்
கரவலு ஒன்றால் கடிதில் பெறலாம்
வறுமையில் நிற்பினும் செம்மையாய் வாழ்வோம்
சிறுமைசெய் உள்ளமுயர்ந் தால்.

நெஞ்சுக்கு நிம்மதி தந்திடும் மார்க்கமே
அஞ்சலில் கெஞ்சலில் துஞ்சலில் நின்றெமை
மீளக் கொணரும் உரத்தைக் கொடுத்துநல்
ஆளாக் கு(ம்)அரு மருந்து.





# தோல்வியும் எமக்கு தோள்கொடுக்கும்

கந்தர்மடம் அ.அஜந்தன்

கட்டுரை

தோல்வி என்பதைப் பொதுவாக எதிர்மறையான ஒன்றாகவே நாம் பார்க்கின்றோம். தோல்வி என்பது எமது வாழ்க்கைப் பயணத்தில் எங்காவது ஓர் இடத்தில் சந்திக்கவேண்டிய தவிர்க்கமுடியாத ஓர் அங்கம் என்பது எம்மால் உணரப்படவேண்டும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலை, முயற்சிகள் பயனளிக்காத சந்தர்ப்பங்கள், தவறான முடிவுகளின் விளைவுகள் அல்லது எடுத்த இலட்சியம் மெய்ப்படாது போதலைத் தோல்வி என்று பார்க்கின்றோம். FAIL என்ற தோல்விக்கான ஆங்கிலப் பதத்துக்கு First Attempt In Learning அதாவது 'தோல்வி என்பது கற்றலின் முதல் முயற்சி' என்ற நேர் சிந்தனையுடனான அர்த்தம் பொதிந்திருப்பதாக இந்தியமேதை அப்துல் கலாம் பல மேடைகளில் சுட்டிக்காட்டி யுள்ளார்.

### தோல்விகளின் பின்பான வெற்றிகள்

பல தோல்விகளின் பின்பே ரைட் சகோதரர்கள் விமானத்தைப் படைத்தனர். தோமஸ் அல்வா எடிசன் பல தோல்விகளின் பின்பே மின்குமிழைக் கண்டுபிடித்தார். ஒவ்வொருவரது வெற்றிக்குப் பின்னாலும் தோல்வியின் பங்கு இருக்கும். 'அனுபவம் ஒரு சிறந்த ஆசான்' என்ற ஏற்புடமை எமது வாழ்வுக்கு அவசியம். இந்த அனுபவமே நாம் தோல்விகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் முதல் முக்கிய பாடமாகும். "நீ பட்ட துன்பத்தைவிட அதில் பெற்ற அனுபவமே சிறந்தது" என்றார் சுவாமி விவேகானந்தர். "நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன: ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது" என்கின்றார் பில் கேட்ஸ். இந்த இரண்டு கூற்றுக்களும் அவர்களது வாழ்நாள் அனுபவத்தின் வெளிப்பாடுகள். அவர்களின் தோல்விகளும் அதன்மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்களுமே அவர்களை உலகறியச் செய்தது. தோல்வியில் கிடைக்கும் அனுபவமே வாழ்வின் ஆழமான புரிதலை ஏற்படுத்தும். தோல்வியில் கிடைக்கும் வலிமிகுந்த அனுபவங்கள் அவர்களது மனோபாவத்தை மாற்றியமைப்பதன் மூலம் எதிர்கால நலன்களை நோக்கிய நகர்வை மேம்படுத்துகின்றன.

### தோல்வியில் கற்காவிடில் அதுவே சிறந்தது

"தோல்வியிலிருந்து நாம் எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றால் அதுவே உண்மையான தோல்வி" என்கின்றார் பல சாதனை விருதுகளை வென்ற தென்னிந்திய இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான். தோல்விகளை நாம் சந்திக்கும்பொழுது அது எமக்குப் படிப்பினையைத் தருகின்றது. இந்தப் படிப்பினையே வாழ்வில் அழிக்கமுடியாத அறிவைத் தருகின்றது.

தோல்விகளின் எண்ணிக்கை எமது அறிவை பன்மடங்குகளாகப் பெருக்குகின்றது. மேற்குறிப்பிட்டது போல் தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழ் கண்டுபிடிப்பதில் சந்தித்த அனைத்துத் தோல்விகளும் ஒளிரும் மின்குமிழைப் படைக்கும் அறிவைக் குவித்துள்ளன என்பது அதற்குச் சிறந்த உதாரணம். ஒன்றுக்கு மேற்பட்ட தோல்விகளை நாம் சந்திக்கும்பொழுது அதன் அனுபவம் எமக்குள் தாங்குதிறனை வளர்க்கின்றது. ஒரு பெரிய வெற்றியை அடையவேண்டுமானால் தாங்குதிறனை வளர்த்துக்கொள்ளவேண்டும். அதன் மறைபொருள் தோல்விகளின் சகிப்புத்தன்மை எமக்கு வெற்றிபெறுவதற்கான தெளிவான பாதையை வகுத்துத் தரும் என்பதே.

### தோல்விகள் நல்லதொரு படிப்பினை

மகத்தான வெற்றியென்பது இலகுவில் கிடைத்துவிடாது அதற்குக் கடின உழைப்பும் முயற்சியும் அவசியம். எந்த முயற்சியும் உடனடியாக வெற்றியைத் தராது. அது தோல்வியைத் தாங்கிக்கொண்டு எம்மை மீள் ஆயத்தம் செய்வதும் அவசியம் என்ற அறிகையைத் தருகிறது.

மனிதன் முழு மனிதனாக முதிர்ச்சியடைய அவன் பல தோல்விகளைச் சந்திக்கவேண்டும். ஏனெனில் தோல்விகளே வாழ்வின் முழுமையான அர்த்தங்களையும் யதார்த்த வாழ்வின் புரிதலையும் எமக்கு தெளிவுபடுத்துகின்றது. ஏன் செய்கின்றோம்?. எதைச் செய்கின்றோம்? என்ற வினாக்களை எமக்குள் எழுப்பித் தெளிவுறச் செய்வதும், கடினமான சூழ்நிலைகளிலிருந்து வாழ்வியல் அர்த்தத்தைக் கட்டியெழுப்புவதும் தோல்விகளே. இந்த நிலை மனிதனின் முதிர்வு நிலை எனலாம். சமுதாயத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒரு தனிநபராகவே இருக்கின்றோம். இருப்பினும் எம்மை உலகளாவிய சமூகத்தினுள் இட்டுச்செல்வதற்கு எமது தனிப்பட்ட முதிர்ச்சி அவசியம்.

தோல்வி மதிப்பைத் தரும் தோல்வி எங்களை மதிப்புமிக்கவர்களாக ஆக்கிக்கொள்ளவும் அதனை சமூகத்தினிடையே பரப்பிக்கொள்ளவும் உந்துகின்றது.

எமக்குக் கிடைக்கும் மதிப்பே வெற்றிவாய்ப்பையும் அதிகரிக்கின்றது. கடந்துவந்த தோல்விகளைப் பற்றிச் சிந்திந்துப் பாருங்கள், உங்கள் மீதான மதிப்பை உயர்த்த உங்களால் முடிந்ததா என்று சிந்தியுங்கள். அந்த முயற்சி உங்கள் தோல்வியைத் தடுக்க முடிகிறதா? என்று எண்ணிப்பாருங்கள். நீங்கள் உங்கள் மீதான மகத்தான மதிப்பை உருவாக்கக் கற்றுக்கொண்டால் இறுதியில் வெற்றி பெறமுடியும்.

தோல்வியே எமது எதிர்கால இலக்கைச் சரியாகத் தீர்மானிக்க உதவுகின்றது.

எமது இயலுமை, இயலாமைகளையும் சாத்தியத் தன்மைகளையும் உணர்த்தி நிற்கின்றது. தீர்க்கமான முடிவுகளை எடுப்பதென்பது பல தோல்விகளின் பின்பே சாத்தியமாகின்றது. பலரது வெற்றிக்குத் தோள் கொடுத்தது தோல்வியே.




மழைக் காற்று ஏன் இவ்வளவு
குளிர்கிறதென்கிறாய்
உன்னை கட்டிக்கொள்ளத்தான் என்கிறேன்
உன் முத்தம் ஏன் சூடாக இருக்கிறதென்கிறாய்
நீ குளிராக இருக்கிறாய் அதுதான் என்கிறேன்
நிலவேன் இங்கு இறங்கி வருவதில்லையென்கிறாய்
நீ இருக்கிறாய்தானே பிறகெதற்கு அது என்கிறேன்

ஆகா! கடல் ஏன் உப்பாக இருக்கிறது
இப்போ சொல் பார்ப்போம் என்கிறாய்
இனிப்பெல்லாம்உன் செல்ல மொழிகளிலே
தங்கிவிட்டதென்கிறேன்

ம்ம்... சிறிது யோசிக்கிறாய்
ஆ...! பகல் வரும்போது இந்த இரவெங்கே
போகிறதென்கிறாய்
அடி என் செல்லப் பெண்ணே!
கொஞ்சம் பொறு என்கிறேன்
ஆ... ஆ... தோற்றுவிட்டாய் என்று
சொல்லிக்கொண்டு ஓடுகிறாய்

நான் வென்று விட்டதாய் உணருகிறேன் .

வேலணையூர் தாஸ்

கவிதை

மிருசுவில் தமிழ்தாசன்

சிரிப்பு

# யாரிடம் சொல்லி அழ...



இனியும் தாமதிக்கக் கூடாது இன்றே வைத்தியசாலைக்குச் சென்று இந்த நோயைக் குணப்படுத்தி விட வேண்டும். முடியா விட்டால் ரயில் முன் பாய்ந்து இந்த உயிலை மாய்த்துவிட வேண்டியதுதான். எத்தனை நாள்கள் தான் அவமானப்பட முடியும்.?

சரி! போனதெல்லாம் போகட்டும் என மறக்க முயற்சித்தாலும், நேற்று எனது அலுவலகத்தில் நடந்த அந்தச் சம்பவத்தை நினைக்க, நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்போன்றிருக்கின்றது. எத்தனை அவமானம்!

அந்த அரச கால்நடை வைத்திய நிலையத்தில் நான் ஒரு சிற்றூழியன். அதிகாரிகள் எடுத்ததற்கெல்லாம் என்னையே அழைத்து, ஓயாது வேலை வாங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரைக்கும் நானும் ஒரு கால் நடைதான். செய்யும் வேலைகள் எல்லாம் கால்நடையில்தான்.

உயரதிகாரி உலகநாதன் தனது அலுவலகத்திலிருந்தபடியே என்னை அழைப்பதற்காக அழைப்பு மணியை அடித்திருக்கின்றார். எனக்கோ அது கேட்டுத் தொலையவில்லை. அவராகவே வெளியில் வந்து ஏதேதோ கத்திக் குளறிவிட்டு எனது கைக்குள் நூற்றைம்பது ரூபாவைத் திணித்துவிட்டார். ஏன்? எதற்கு? என்று கேட்க முன்பே ஏதோ அவசரமாகக் கதைத்தார். எனக்கோ ஒன்றும் புரியவில்லை. அவர் என்னதான் கத்திப் பேசினாலும் அதில் சத்தமிருக்காது. வார்த்தைகளில் சுத்தமுமிருக்காது. ஏதோ இரகசியம்போலவே முணு முணுத்தார். இயல்பாகவே அவர் அப்படித்தான். விளங்கவில்லை என்று திருப்பிக் கேட்டால் மூக்கு நுனியில் கோபம் வந்து விடும். மெல்லிய மூலரோகமும் அவருக்கிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். வேண்டாம் வீண் வம்பு. வாங்கிய காசுடன் மயில்வாகனத்தாரின் மச்சக் கடைக்குள் நுழைந்து, அருமையான சோற்றுப் பார்சல் ஒன்றை வாங்கிக் கொண்டு, மீண்டும் கால்நடையாகவே கால்நடைகள் அலுவலகத்துக்குள் வந்து சேர்ந்து விட்டேன்.

மதியவேளை. பசியெடுக்கும் நேரம். வழமையாக வீட்டிலிருந்து உணவு கொண்டு வருபவர், இன்று கடையில் மீன் சாப்பாட்டுக்கு ஆசைப்பட்டு விட்டார்போலும்! எல்லாம் ஓர் ஊகம்தான். அவருடைய வாய் அசைவை வைத்து நானாகத் தீர்மானித்தது.

உண்மையைச் சொல்லப்போனால், எனக்குக் கடந்த பத்து நாள்களாகக் காது கேட்பது குறைவாக இருக்கின்றது. அது மேலும் குறைந்துகொண்டுதான் போவதாகத் தெரிகிறது. காதுக்குள் ஒரே இரைச்சல். யாழ்தேவி ஓடுவதுபோல இருக்கும். இதை நான் யாரிடமும் சொல்ல வில்லை. சொன்னால் உடனடியாகச் செவிடன் என்று பட்டம் சூட்டி விடுவார்கள்.

சோற்றுப் பார்சலைப் பவ்வியமாக நீட்டினேன். உலகநாதன் என்னை மேலும் கீழுமாகப் பார்த்தார். பார்வையில் தீப்பொறி பறந்தது.

⅄⅄⅄

"ஏய் சிவகுரு! ஐயா உன்னட்டை நூற்றைம்பது ரூபாய் தந்தது சோமுவிட்டைக் குடுக்கச் சொல்லியாம்! அவர் சோமு எண்டு சொல்ல உனக்குச் சோறு எண்டு கேட்டுட்டுது போலை! விசர் மனசா! உனக்கும் கொப்பரைப்போல செகிடோ?"

ஐயையோ எந்தப் பட்டம் கேட்கக் கூடதென்று நினைத்தேனோ இப்போது அதையே கேட்டுவிட்டேனே. கிளாக்கர் கிருஷ்ணபிள்ளையின் ஏளனம் கலந்த வார்த்தைகளால் அலுவலகத்திலிருந்தவர்கள் என்னைப் பார்த்து நையாண்டியாகச் சிரித்தார்கள். எனது இரண்டு செருப்புகளையும் கழற்றி எனக்கு நானே அடிக்க வேண்டும்போலிருந்தது. ஆஸ்பத்திரியை அடைந்து விட்டேன். வலது காலை முன்னே வைத்து வைத்தியரின் அறைக்குள்ளும் நுழைந்து கொண்டேன். அவர் தனது சிம்மாசனத்தில் தூங்கி வழிந்து கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் திடுக்கிட்ட நிலையில் கண்களை விழித்தார். இதுவரை வாய்க்குள் சேமித்து வைத்திருந்த எச்சில், டோட்! டோட்! டோட்! நிலத்தில் வீழ்ந்து வழிந்தது. மொட்டைத்தலை, குட்டை உருவம், தொலைக்காட்சித் தொடர்களில் வரும் 'கார்ட்டூன் டொக்டர்' போலவே காட்சியளித்தார். கண்களைக் கைளால் துடைத்துவிட்டு என்னைக் கதிரையில் அமரச் செய்தார்.

"காது கேக்குதில்லை ஐயா"

என்னுடைய குறைபாட்டை, வாய் முறைப்பாட்டை நான் சொன்ன உடனேயே வாயைத் திறக்கச் சொன்னார். திறந்தேன். டோர்ச் லைற் வெளிச்சத்தைப் பாய்ச்சி வாய் முழுவதும் ஏதோ ஆராய்ந்தார். விட்டால் டோர்ச் லைற்றை வாய்க்குள்ளே முழுமையாகத் திணித்து விடுவார்போன்றிருந்தது. நான் அவதிப்பட்டதைப் புரிந்து கொண்டு வாயை மூட அனுமதித்தார். பழைய 'ஷோ' காரின் முன்பக்கப் 'பொனட்டாக' திறந்திருந்த எனது பெரிய வாயைப் படாரெனச் சாத்தி விட்டேன்.

அடுத்து விழிகளிரண்டையும் அக்கறையுடன் விரித்துப் பார்த்த அந்த மருத்தவர் கட கடவென எதையோ எழுதித் துண்டைக் கையில் தந்தார். மருந்துகள் எழுதினாரோ, அல்லது மருந்துக் கலவைகளுக்குக் கடிதம் எழுதினாரோ சத்தியமாய் நானறியேன்:. அப்படி ஏதோ அதிகம் எழுதியிருந்தார். என்னைப் பார்த்து ஏதோ சொல்லியிருக்க வேண்டும். எனக்கொன்றுமே விளங்கவில்லை. நிலைமையைப் புரிந்து ஓடோடி வந்து நின்றாள் ஓர் அழகான தாதி!

"ஐயா! காய்ச்சலுக்கு மருந்து எழுதியிருக்கிறாராம்! மூண்டு நாளையில மாறாட்டில் வந்து ரெத்தம் சோதிக்கட்டாம்"

ஏழரைக் கட்டை சுருதியில் எனது செவியில் வாய் வைத்துக் கத்தினாள்.

"எட செகிட்டு மனிசா! நான் காதுக்கு மருந்து எடுக்க வர, அவன் பாவி காய்ச்சலுக்கு மருந்து தந்திருக்கிறான். இந்த மனிசன் என்னைவிடச் செகிடன் போல கிடக்கு"

அடக்க முடியதா ஆத்திரத்தில் மனதுக்குள் திட்டினேன். பின்னே கோபம் வராதா?

"கோவிக்காதையுங்கோ ஐயா! எங்கடை ஐயாவுக்குக் காது கேட்கிறது கொஞ்சம் குறைவு. நீங்கள் சொன்னது எனக்கு விளங்கீட்டுது தானே! நான் அவருக்குச் சொல்லுறன். உங்களுக்குக் காமாளைக் குணமாம் எண்டு"

'எடி நாசமறுந்தவளே! உனக்கும் செகிடோ? எடி எனக்குக் காமாலையுமில்லை, பூமாலையுமில்லையடி. காது அடைச்சுப் போட்டுது. காது கேட்குதில்லை'

மனதில் நினைத்ததில் பாதியை வெளியில் சொல்லி, மீதியை விழுங்கி விட்டேன்.

"ஓம் ஐயா! சரி! சரி! இனிப் பிரச்சினையில்லை! நீங்கள் சும்மாயிருங்கோ. நான் ஐயாவிட்டை எல்லாத்தையும் விளக்கமாய்ச் சொல்லுறன்"

தாதி சத்தியம் பண்ணாத குறையாக உறுதி மொழி தருகின்றாள். இனி நம்பத்தான் வேண்டும்.

மருத்துவர் என்ன நினைத்தாரோ... சிரித்தபடி கதிரையில மர்ந்திருந்த என்னடைய வேட்டியை மள மள வெனத் தொடை வரைக்கும் உயர்த்தி விட்டார்.

"ஐயோ! என்ரை வைரவரே! காளியாச்சி! இதென்ன பரிசு கெட்ட வேலையாய்க் கிடக்குது? உந்த மனிசன் இப்ப என்னத்துக்கு என்ர வேட்டியை உயத்திப் பாக்குது? அதுக்கை என்ன ஆகடியம் பாக்கப் போகுதாம்? சீ... இதென்ன பழக்கம்? ஒரு ஆம்பிளையின்ர வேட்டியை இன்னொரு ஆம்பிளை... சீ! சொல்லாமல் கொள்ளாமல் இதென்ன வேலை?'

மனம் விண் விண்ணென வலித்தது.

'சரி! சரி! கூச்சப் படாதேயுங்கோ ஐயா! எல்லாம் சரி பார்க்க வேண்டிய எல்லாத்தையும் பார்த்தாச்சுது. இனி ஐயா தாற மருந்துத் துண்டைக் குடுத்து மருந்தை எடுங்கோ. எல்லாம் சுகம் வரும்'

மீண்டும் அந்தத் தாதி வந்து தரகு தம்பட்டம் பேசினாள். மருந்தாளர் ஒரு வாலிபனாகவிருந்தான்.

⅄⅄⅄

துடிப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தவன். எனது மருந்துச் சீட்டை வாங்கிப் பார்த்துவிட்டு, என்னை ஏதோ கேட்டான். எனக்கு எதுவும் கேட்டுத் தொலையவில்லை. பக்கத்தில் நின்றவர்களின் பகீரதப் பிரயத்தனத்தால் அவன் கேட்டதை விளங்கிக் கொண்டேன். ஆம் அவன் கேட்டது இதுதான்.

'போத்தல் கொண்டு வந்தனிங்களோ?'

அவன் கேட்டதுக்கு ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட வேண்டும். நீட்டி முடக்கிக் கொண்டுபோனால் பிரச்சினை.

"கொண்டு வரயில்லை"

வார்த்தையை முடித்துவிட்டேன்.

"ஓ...! கொய்யாவாலை விழுந்தனீரே?"

போச்சடா! அவனும் என்னடைய வாய் அசைவை வைத்தே பேசுகின்றான். எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

"அப்ப இவன் பாவிக்கும் செவிடுதான்"

நான் மனம் குழம்பிக் கொண்டிருக்கையில், 'இந்தாரும் இதிலை நல்ல தைலம் கிடக்குது. இரவிலை சுடுதண்ணியிலை ஒத்தடம் பிடிச்சுப்போட்டு இந்த எண்ணையிலை நல்லாய்ப் பூசிப்போட்டுப் படும். ஐயா! நல்ல மருந்து எல்லாம் எழுதியிருக்கிறார். ஒழுங்காக எடுக்கவேணும். போட்டு வாரும். உளைவு மாறிரும்."

⅄⅄⅄

தைலப் போத்தலைக் கைக்குள் திணித்தான் மருந்தாளன். வேறு வழியில்லை. இனியும் கதைப்பது தேவையற்ற சண்டை, சச்சரவுகளுக்கே வழிசமைக்கும் என்பதையுணர்ந்து வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

வழியில் வந்த ஐஸ்கிறீம் வான் ஒன்றிலிருந்து பழைய பாடல் ஒன்று ஒலித்தது.

'காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்'

அந்தப் பாடல் அந்த வேளையில் எனக்கு மிகப் பொருத்தமாகவிருந்தது. காது மந்தத்துக்கு மருந்து வாங்கப்போய் காலுழைவுக்கு மருந்து வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். அது சரி! இந்தத் தைலத்தை வைத்து என்ன செய்வது?

'எங்கடை அன்னம்மாப் பேத்திக்குக் காலுளைவு எல்லோ? இந்தத் தைலத்தை மனிசிக்குக் குடுத்தாலும் புண்ணியமாய்ப் போகும்'

இப்போது எனது தலைவிதியை நொந்தபடி அன்னம்மாக் கிழவியின் வீட்டை நோக்கி விரைகின்றேன். இதை யாரிடம் சொல்லியழ.?



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுற்றுப்புற சூழலின் தாக்கம் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும்.

**இடபம்:** மனதில் உருவான திட்டம், செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம்.தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** தனித்திறமையுடன் செயல்படுவீர்கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில்லாபம் சுமாராக இருக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**சிங்கம்:** பேச்சில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவதால் மட்டுமே, எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**கன்னி:** இனிய அணுகுமுறையால் நற்பயன் பெறுவீர்கள். விலகி சென்ற உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**துலாம்:** திட்டமிட்ட பணி தாமதமாகலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மை பாதுகாப்பது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கருணை மனதுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகலாம். இலாபம் சுமாராக இருக்கும்.

**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**கும்பம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி பற்றிய பேச்சு நடக்கும்.

**மீனம்:** மாறுபட்ட சூழலால் அதிருப்தி உருவாகலாம். நிலுவைப் பணியை முடிக்க விரைந்து செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும்.



**கணவன்:** "ஏன்டி நான் வீட்டுக்குள்ள வந்தவுடனே கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கிறாய்?"

**மனைவி:** டாக்டர்தான் சொன்னார் தலைவலி வந்தவுடனே கண்ணாடியைப் போட்டுக்கனும்னு...




## மணிரத்னம் படத்தின் தலைப்பு அறிவிப்பு

காற்று வெளியிடை படத்தை அடுத்து பெரிய நட்சத்திர பட்டாளத்தை வைத்து மணிரத்னம் படம் இயக்க இருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகின.

இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வந்த நிலையில், தற்போது இந்தப் படத்தின் தலைப்பு அதிகாரப்பூர்வமாக வெளியாகியுள்ளது.

இந்தப்படத்திற்கு 'செக்கச்சிவந்தவானம்' எனப்பெயரிட்டுள்ளனர். இந்தப் படத்தில் அரவிந்சாமி, சிம்பு, விஜய்சேதுபதி, பிரகாஷ்ராஜ், தியாகராஜன், மன்சூர் அலிகான், ஜெயசுதா, ஜோதிகா, அதிதிராவ், ஐஸ்வர்யாராஜேஷ், டயானா உள்ளிட்ட பல பிரபல நட்சத்திரங்கள் நடிக்கின்றனர். மேலும் இவர்கள் கூட்டணியில் அருண் விஜய்யும் இணைந்திருக்கிறார். படப்பிடிப்புப்பணிகள்வரும்12ஆம்திகதிமுதல்ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

twitter.com/HAJAMYDEENNKS

கடிதத்தைப் பிரித்து படித்தபோது எமக்குள் பறந்த பட்டாம்பூச்சி மெயிலையோ,மெசெஜையோ திறந்து பார்க்கும்போது பறப்பதில்லை...!

twitter.com/HAJAMYDEENNKS

சில நேரங்களில் பொறுமை எருமையிடம் தோற்றுவிடும்.. எவ்வளவு நேரம் ஹாரன் அடித்தாலும் அப்படியே நிற்கும்...!

ரெண்டு பேரு சண்டை போட்டுக்கிட்டா மூணாவதா ஒருத்தன் போய் விலக்கி விடுவான்




இப்பவெல்லாம் மூணாவது ஆளு வீடியோ எடுக்கிறான்...

நாளைக்கு பண்ணிக்கலாம்னு தள்ளி போடாம எல்லோரும் செய்யிற ஒரே விசயம்



மொபைலை சார்ஜ் போடுவது மட்டுமே.

உண்மையிலே பூனை குறுக்கே போனதை விட....



நாய் குறுக்கே போனதால் கீழே விழுந்து பாதிக்கப்பட்டவங்கள் தான் அதிகம்

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| 1 | | 4 | 2 | | | | | 6 |
| | | | | | 6 | 9 | 2 | |
| | | | | | | | | |
| 6 | 5 | | | | 7 | 2 | 1 | |
| | 9 | | | 5 | | | | |
| | | 8 | | | 1 | 6 | | |
| | | | | | | 3 | 5 | |
| 3 | | | 4 | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 1 |

# முதலாமாண்டு நினைவுக் கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1953
.
09
.
26
(சண்டிலிப்பாய்)



உதிர்வு
2017
.
02
.
24
(கொழும்பு)

பண்ணாகம்

## தெய்வத் திருமதி. திருச்செல்வம் யோகலட்சுமி

சண்டிலிப்பாய்ச் சூரியன் சடுதியில் மறைந்ததையோ
சந்திரன் மறந்ததுவோ பண்ணாகத்தில் உதிக்க
பெண்டிருக்கே பெருமையென கொழும்புனைச் சொல்ல
பெரும் பண்புப் பேரன்பில் அகிலத்தை ஆட்
கொண்டிருந்த குலமகளே நின்றதுனதல்ல நம்மூச்சு
கொலுவிருப்பாய் எம்மனத்தே உத்தமி **யோகலட்சுமி**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வம்சம் விளங்க வரலாறு படைத்து மறைந்தும் மறையாது எமது உள்ளத்துறையும் இல்லத்தலைவி (தி) தெய்வத் திருமதி திருச்செல்வம் யோகலட்சுமி அவர்களின் ஓராண்டு நீங்காத நினைவுநாள் வைபவம் எதிர்வரும் 2018.02.13 செவ்வாய்க்கிழமை மகாசிவராத்திரி புண்ணியநாளன்று பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகும் என்பதை அறியத் தருவதில் நெஞ்சம் மிக நெகிழ்கிறோம்.


"பூரணி",
விசவத்தனை வீதி, பண்ணாகம்,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.
தொ.பே.இல.077 778 0182,
தொ.பே.இல. 077 227 6510

(CS/137140)(11.17)


கஜமுகன் டென்றல் கெயர்
நவீன முறையிலான பற்சிகிச்சை
தினமும் நடைபெறுகிறது
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
021 226 0000, 021 226 2888
www.Kajamugandentalcare.com
(SUp 1323) (M.17)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.01.2018 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தை

## அமரர் குட்டித்தம்பி சுப்பையா

(ஓய்வுபெற்ற இ.போ.ச.பரிசோதகர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 12.02.2018 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொ.சிவபாலன்
சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.
0776139592

குடும்பத்தினர்.

(CS/13758)(10)

# 31ஆம் நாள் நினைவில் நன்றி கூறுகின்றோம்

## அமரர் திரு. கந்தையா சண்முகராஜா
## அமரர் திருமதி. அன்னலட்சுமி சண்முகராஜா



எமது குடும்ப ஒளிவிளக்காகத் திகழ்ந்து, அமரத்துவம் அடைந்த எமது பெற்றோர் அமரர் திரு. கந்தையா சண்முகராஜா அவர்களும், அமரர்திருமதி. அன்னலட்சுமி சண்முகராஜா அவர்களும் இயற்கை எய்திய செய்தி கேட்டு எங்களது இல்லத்துக்கு வருகை தந்து, எங்களோடு இணைந்து நின்று துயரைப் பகிர்ந்து கொண்டவர்கள், தொலைபேசியில் அழைத்துத் தங்களது துயரைப் பகிரிந்து கொண்ட கனடிய, வெளிநாட்டு அன்புள்ளங்கள், மண்டபத்துக்கு வந்து அஞ்சலி செய்தவர்கள், மண்டபத்துக்கு வருகைதந்து மலர்வளையம் வைத்து மரியாதை செய்தவர்கள், மண்டபத்தில் நினைவஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், ஈமக் கிரியைகளை முறைப்படி நடத்திய குருமார்கள், இறுதிக் கிரியைகளுக்குரிய சகல ஒழுங்குகளையும் ஒழுங்கமைத்த மண்டப உரிமையாளர்கள், இறை அருட்பாக்களை இசைத்தவர்கள் அனைவருக்கும் நாங்கள் எமது நன்றியைச் செய்நன்றி மறவாத உணர்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தந்தையார் அமரர் கந்தையா சண்முகராஜா அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தபோது கடமை புரிந்த நொதேர்ன் தொழிற்சாலை ( Northern Industry ) உரிமையாளர், பணியாளர்கள் அனைவரும் எமது தந்தையாரின் மறைவுச் செய்திகேட்டு, எங்களோடு தொடர்புகொண்டு தமது துயரைப் பகிரிந்து கொண்டனர். மேலும் நொதேர்ன் தொழிற்சாலையில் தந்தையாரை நினைவுகூர்ந்து, அவருக்குக் கண்ணீர் அஞ்சலி செய்து அவரது சேவைக்கால செயற்பாடுகளை மதித்து நினைவு வணக்கம் செய்துள்ளனர். தாயகத்தில் வெளிவரும் செய்தித் தாள்களில், மரண அறிவித்தலைப் பிரசுரித்துள்ளனர். எமது தந்தையார் அமரத்துவம் அடைந்த பின்பு, அவரை நினைந்து, அவருக்கான நினைவு வணக்க நிகழ்வை ஒழுங்கமைத்த நொதேர்ன் தொழிற்சாலை உரிமையாளருக்கும், பணியாளர்கள் அனைவருக்கும் நாம் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பெற்றோர்கள் இயற்கை எய்திய செய்தியை அறிவித்த ஊடகங்கள், வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டவர்கள், இல்லம் நாடி வந்து உணவு தந்தோர்கள், உற்றவிடத்து உதவிய உறவினர்கள், காலமறிந்து, நேரமுணர்ந்து, தக்கவிடத்து நட்புணர்வோடு உதவிய நண்பர்கள், சுற்றம் சூழ எம்முடன் நின்ற ஊரவர்கள் அனைவருக்கும் நாம் எமது மனமுவந்த நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

எமது பெற்றோர்களின் மறைவுச் செய்தி கேட்ட நாள் முதல், இன்று வரை பல வழிகளில் எமக்கு உதவிகள் செய்து பக்க பலமாக நிற்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் நாம் எமது குடும்பத்தினர் சார்பில் கூறும் நன்றி என்றும் உரியது.

ஒரு மாத காலத்துக்குள், பாசமிகு தந்தையையும், அன்பு மிகு தாயையும் இழந்து செய்வதறியாது துயர் சுமந்து நிற்கிறோம். எமது துயரில் பங்கு கொண்டு, எமக்கு ஆறுதல் தந்த உங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மீண்டும், மீண்டும் நன்றி கூறுகின்றோம்.

நன்றி

குடும்பத்தினர் (கனடா).

(AKN/370)(10)

# "மதியினில் சென்று வாழ்வோம்"

கந்த பேரின்பம்

கவிதை


நீல் ஆம்ஸ்ரோங் என்பார் கால் நிலவினில் பதிந்தபின்னே
நிலவினில் சென்று வாழ நிறையவே ஆசையுண்டு
தரம் கெட்ட இலங்கை மண்ணில் தறிகேட்ட வாழ்வை விட்டு
அம்புலி சென்று வாழ்ந்தால் ஆறுதல் மிகவே உண்டு

பூமியில் இருப்பதைப்போல் புலம் பெயர் வாழ்வு இல்லை
முள்ளி வாய்க்கால்கள் இல்லை முட்கம்பிச் சிறைகள் இல்லை
சர்வாதிகாரமில்லைத் தனிநபர் ஆட்சியில்லை
நல்லிணக்க மென்று நம்மை ஏமாற்று வோரங்கில்லை

வேட்டொலிச் சத்தமில்லை வீண் கொலை கப்பமில்லை
வெள்ளைவான் கடத்தலில்லை. வீதியில் துயில் வாரில்லை
இனவாதம் பேசிமற்ற இனங்களை அழிப்பாரில்லை
சிங்கள பௌத்தம் சிகல உருமய, பொதுபலசேனா என்று

ஸபேரினவாதம் பேசும் பேய்கள், நிலாவினில் இல்லை'
அரசியல் கதிரைக்காக இனத்தை அடைவு வைப்பாரங்கில்லை
காட்டிக் கொடுக்கும் கருங்காலிக் கூட்டமில்லை
ஏமாற்ற எவருமில்லை. ஏமாருவோருமில்லை

வாள்வெட்டு, வல்லுறவு, வன்செயல்கள் நிலவில் இல்லை
சாதி மத பேதம் பேசும் சளக்கர்கள் அங்குஇல்லை
ஆதியில் மனித இனம் அன்பாக வாழ்ந்ததுபோல
மரணிக்கும் காலம் மட்டும் மதியினில் சென்று வாழ்வோம்



# யாரடி நீ மோகினி?

ஓஷோ சிறிரதி

கவிதை



கரைகளுக்கு நடுவில்
நதியினைப்போல
என் முகத்தினை
உன் கரங்களில் ஏந்து

கார்முகில் போல்
காளைகள் பூட்டி
கால்கள் படாத
ஒரு தேசம் சேரு

உதிரும் மலர்களை
காற்றும் சுமந்து வந்து
உன் கூந்தலில் சூடும்
ஊரும் நதிகளோ
உன் பாதம் படவே
கால்கள் முளைத்துக்
கரைகளில் ஏறும்

வானவில் தொழிற்சாலையிலே
ஆடைகளுக்குச் சாயம் ஊட்டுபவளே
செய்கின்ற சமையலிலே
சிற்பமும் ஓவியமும்
செதுக்குபவளே



ஒரு வண்ணத்துப்பூச்சியை
என் கைகளிலிருந்து ஊதிவிடுகிறேன்
அது வானத்தைத் தோண்டி
ஓர் ஒற்றைக் கீற்றை
இந்த இரவுக்குள்
எடுத்துவராதா?

## சொற்சிலம்பம் போட்டி இல: 509

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | ■ | 5 | ■ |
| 6 | | | 7 | ■ | 8 | | 9 |
| | ■ | 10 | | 11 | | ■ | |
| 12 | 13 | | ■ | 14 | | | |
| 15 | | ■ | 16 | | | ■ | |
| | ■ | 17 | | | ■ | 18 | |
| ■ | 19 | | | ■ | 20 | | |

அனுப்புபவர் பெயர்:..........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..........................................................
கையொப்பம்:...............................................

### இடமிருந்து வலம்

1. உண்மையே பேசியதால் மதிக்கப்பட்டவனது மனைவி இவள்.
6. பாண்டவர் மனைவி
8. தலை
10. பத்துப் பத்தாயிரம்
12. சிவனின் ஒரு பெயர்
14. அம்புஜம்
15. மறிப்பு
16. உப்பரிகை
17. மறை
18. திருடுமாறான ஏவல்
19. யாகம்
20. யானையை அலங்க ரிக்க இதனை அணிவிப்பர்

### மேலிருந்து கீழ்

1. மகாத்மாவின் சுயசரிதை
2. சோதிடம் பார்ப்பவர்களிடம் இது இருக்கும்
3. வீடு
4. பாதுகாவல் செய்
5. வலிமையான
7. மேடு; 'டி'என்ற இறுதி எழுத்தை இழந்துள்ளது
8. சிங்கம்
9. தலைவி தனது கணவனைத் தானே தேர்ந்து வரித்துக் கொள்ளுதல்
11. வண்டி
13. மதகு
16. சிலப்பதிகாரத்தில் முக்கிய பெண் பாத்திரம்
17. குமரன்
18. ஆடு, மாடு, எருமைகளில் ஆண் இனம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 507 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)சபர்மதி (5)துவி (7) கரி (8)கண்காட்சி (10)வாசகன் (12)தடல் (13)சல்லி (14)பாலன் (15)யாசகன் (18)பணயம் (19) மோர் (20)கரம் (21)பிரதமை (23)விண் (24)பரிசில்

**மேலிருந்து கீழ்**
(1)சகவாசம் (2)பரிசல் (3)மகன் (4)திண் (5)துட்டன் (6)விசில் (9)காதலன் (11)கலியாணம் (14)பாகம் பிரி (16) சய (17) கூர்மை (18)பரண் (19)மோதல் (20)கவி (22)ரசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்.

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.509**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (21.02.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.509 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 25.02.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 507 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பி யவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ஸ்ரீ.வித்தியஷாலினி,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
நா.கெங்காதேவி,
கதர்காம கோவிலடி,
வதிரி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
B.வீணா பெரேரா,
பள்ளிமுனை மேற்கு,
பள்ளிமுனை, மன்னார்.

**4 ஆம் பரிசு**
கோ.மாலினிதேவி,
இல.21, பத்தினியார்
மகிழங்குளம்,
தாண்டிக்குளம்,வவுனியா.

**5 ஆம் பரிசு**
திருமதி.C.H.அருள்நேசன்
இல.79/6 புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

மனோகரரா்சா தனுசியா,
இல. 23, திருநகர் வடக்கு,
அணைக்கட்டு வீதி,
கிளிநொச்சி.

குமரேசன் துளசிகா,
இல.11, இரண்டாவது ஒழுங்கை,
பண்ணாகம், சுழிபுரம்.

மகேந்திரா ராஜரட்ணம்,
இல.61, பாரதிவீதி,கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 507 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**11.02.2018 முதல் 17.02.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சூரியன்.குரு.புதனால் நற்பலன் ஏற்படும். குடும்ப விஷயங்களில்முடிவுகளைமறுபரிசீலனை செய்வீர்கள். வீண் பேச்சு பேசுபவரிடம் விலகவும். வெளியூர் பயணம் பயனுள்ளதாக இருக்கும். புத்திரரின் ஆர்வம் மிகுந்த செயல் சிறப்பாக அமைய உதவுவீர்கள். வீட்டுச் செலவில் தாராளம் இருக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்தைக்குறை சொல்ல வேண்டாம். அரசு வகையில் உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையை திறம்பட சமாளிப்பர்.

## இடபம்

ராகு, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். மன உறுதியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்களால் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பகைவரால் உருவான சிரமம் இஷ்ட தெய்வ அருளால் விலகும். மனைவியின் சொல்லும், செயலும் மனதிற்கு ஊக்கம் தரும். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிக்காக கூடுதல் பணம் தேவைப்படும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் செயல்படுவதால் நற்பெயரை பாதுகாக்கலாம்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, செவ்வாய், புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். உறுப்பினர்கள் ஆதரவு தருவர். மனதில் நம்பிக்கை மேலோங்கும். புதிய வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர்களின் செயல்திறனில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். மனைவி விரும்பிய பொருட்கள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை செழித்து பணவரவு கூடும்.



## கடகம்

சந்திரன், சனீஸ்வரர் நன்மை வழங்குவர். அக்கம் பக்கத்தினரின் அன்பு நெகிழ்ச்சியை தரும். வாகனப்பராமரிப்பால் பணச்செலவு கூடும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் குளறுபடி ஏற்படலாம். சொத்தின் பேரில் அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். எதிர்மறையான விஷயங்களில் சமயோசிதமாக விலகுவீர்கள். மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில்.வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு அவசியம். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து பணிபுரியவும்.

## சிங்கம்

சூரியன், கேது, புதனால் நன்மை ஏற்படும். பேச்சில் நேர்மையும், செயலில் தூய்மையும் வெளிப்படும். புதியவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாப்பீர்கள். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தரக் கேட்டு பிடிவாதம் செய்வர். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல் குறையை மென்மையான முறையில் சரி செய்யவும். தொழிலில் வளர்ச்சி பெற அதிக உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரியவும்.

## கன்னி

செவ்வாய், குரு, சுக்கிரன், ராகு அளப்பரிய நன்மை வழங்குவர். அன்றாட பணிகள் சிறப்பாக நிறைவேறும். தம்பி தங்கையின் பாசம் நெகிழ்ச்சி தரும். குடும்ப செலவில் தாராளம் பின்பற்றுவீர்கள். புத்திரர்களின் மனதில் நல்ல சிந்தனை வளரும். உறவினர்களின் உதவியால் நன்மையடைவீர்கள். சிரமம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமையை தேடித் தரும். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிவது அவசியம். . மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

## துலாம்

புதன், சுக்கிரன், சனீஸ்வரர் நற்பலன் தருவர். திட்டமிட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். தம்பி, தங்கை அதிக அன்பு பாராட்டுவர். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். புத்திரர் படிப்புடன், ஆன்மிகம் அறிவதில் ஆர்வம் கொள்வர். வழக்கு, விவகாரத்தில் தீர்வு கிடைக்க தாமதமாகலாம். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்துநற்பெயர்பெறுவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்புடன், கலைகளும் பயில்வர்.

## விருச்சிகம்

கேது, சூரியன், சுக்கிரனால் நற்பலன் வந்து சேரும். வாழ்வில் முன்னேற்றம்பெறபுதியவாய்ப்புஉருவாகும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்களின் செயல்களை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். கூடுதல் சொத்து வாங்க நல்யோகம் உண்டாகும். சீரான ஓய்வினால் உடல் ஆரோக்கியம் மேம்படும். விரும்பிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவி பாச பந்தமுடன் நடந்து கொள்வார். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர்.

## தனுசு

சுக்கிரன், குரு, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் அதிகரிக்கும். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். செயல்கள் முழு அளவில் வெற்றி பெறும். உங்களின் நல்ல குணத்தை உறவினர் பாராட்டுவர். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி பெற நவீன மாற்றம் செய்வீர்கள். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற துணைநிற்பீர்கள். தர்ம சிந்தனையுடன் செயல்படுவீர்கள். மனைவி கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்குவர்.



## மகரம்

சுக்கிரன், செவ்வாய் நற்பலன் தருவர். சமூக நிகழ்வுகள் மூலம் நல்ல படிப்பினை பெறுவீர்கள். இடம், சூழல் உணர்ந்து பேசுவது நல்லது. வீடு வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். புத்திரர் புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். எதிரியால் உருவான தொந்தரவு பலமிழக்கும். மனைவியின் நல்ல செயலால் குடும்பத்திற்கு பெருமை சேரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பணியாளர்கள் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவர். பெண்கள் கணவரின் அன்பை பெற்று மகிழ்வர்.

## கும்பம்

சுக்கிரன், குரு, ராகு, சனீஸ்வரர் ராஜயோகபலன் தருவர். எவரிடமும் மதிநுட்பமாக பேசி ஆதாயம் பெறுவீர்கள். வாகன பயணத்தில் ஆர்வம் அதிகரிக்கும். புத்திரர்கள் உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் கூடும். விரும்பிய உணவு வகைகளை உண்டுமகிழ்வீர்கள். எதிர்ப்பாளர்கள் இடம் மாறிச் செல்வர். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழிலில் போட்டியை திறம்பட சமாளித்து உரிய பணவரவை பெறுவீர்கள்.

## மீனம்


கேது, புதன், சூரியன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சு, செயல்களில் புத்துணர்வு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணம் பயன் உள்ளதாக அமையும். புத்திரர்கள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வ சொத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வழக்கு, விவகாரங்களில் சமரச தீர்வு கிடைக்கும். மனைவி உற்சாகமுடன் குடும்ப பணிகளில் ஈடுபடுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பை பயன் படுத்துவீர்கள்.

# நடிகர்கள் நாடாள வரலாமா?

*அரசியல் என்பது யாருக்கோ நேர்ந்துவிடப்பட்ட ஒன்றல்ல. முன்பொரு முறை கலை இலக்கிய இரவு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடிகர் நாசரிடம், குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாகப் பார்வையாளர்கள் கேள்வியெழுப்பினர். "ஏன் இதை ஒரு நடிகனைப் பார்த்து மட்டும் கேட்கிறீர்கள்? ஒரு விஞ்ஞானியையோ, ஒரு பேராசிரியரையோ, ஒரு பத்திரிகையாளரையோ கேட்க வேண்டாமா?" என்று கேட்டார் நாசர். "வெறும் உணர்ச்சிகரமான அறிவிப்புகளைப் பார்த்து அரசியல் முடிவுகளுக்கு வராதீர்கள், ஆழமாகச் சிந்தித்து விவாதித்து முடிவெடுங்கள்" என்பதே அவரது நிலைப்பாடு.*

அ.குமரேசன்

கட்டுரை



புகழ்பெற்ற திரைப்பட நடிகர்கள் அரசியல் கட்சி ஆரம்பிப்பதாக அறிவிக்கிறபோதும், அதற்கொரு முன்னுரையாக அரசியல் கருத்துகளைக் கூறுகிறபோதும், உறுப்பினர் பதிவு, ரசிகர்களுடன் சந்திப்பு போன்ற சில நடவடிக்கைகளில் இறங்குகிறபோதும் இந்தக் கேள்வி எழுப்பப்படுகிறது.

தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கிற பல்வேறு கட்சிகளின் பேச்சாளர்கள், நேரடியாக எந்த நடிகரின் அரசியல் வருகையையும் எதிர்ப்பதில்லை. ஆனால், திரை நட்சத்திரங்களின் வருகையால் தங்கள் கட்சிகளுக்கு ஏற்படக்கூடிய பின்னடைவு பற்றிய கவலையை வெளிப்படுத்துகிறார்கள். நடிகர்களாக இருந்து அரசியலுக்கு வந்த சிலரது நடவடிக்கைகளால் அதிருப்தியடையும் மக்களில் ஒரு பகுதியினரும் தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், அது அவர்களுடைய தனிப்பட்ட குறைபாடாக எடுத்துக்கொள்வதா, திரையுலகிலிருந்து வந்தாலே இப்படித்தான் இருப்பார்கள் என்று முடிவுசெய்வதா?

நடிகர் ரஜினிகாந்தின் அரசியல் பிரவேச அறிவிப்புகள் பற்றி மத்திய ஆளுங்கட்சியினர் அடக்கி வாசிக்கிறார்கள். அதேசமயம், நடிகர் கமல்ஹாசனின் அரசியல் தொடர்பான அறிவிப்புகளைக் கடுமையாகச் சாடுகிறார்கள். அதற்குக் காரணம், ரஜினிகாந்தின் ஆன்மிக அரசியல் இவர்களும் தூக்கிப் பிடிக்கிற மதவாத அரசியலுடன் அனுசரித்துப்போகலாம். கமல்ஹாசன் முன்வைக்கும் விமர்சனங்கள் அதற்கு முட்டுக்கட்டையாகலாம் என்ற கணிப்புதான்.

**திரைப் புகழைத் தாண்டி...**

ஒருகாலத்தில், சட்ட மன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சி என்ற இடத்தைப் பெறும் அளவுக்கு வளர்ச்சிபெற்றது விஜயகாந்தின் தே.மு.தி.க. அதன் பின்னணியில் அவரது செல்வாக்குக்கு மையமான இடம் உண்டு. அந்தக் கட்சிக்கு ஏற்பட்ட சரிவின் பின்னணியிலும் அவரது செயற்பாடுகளுக்கே மையமான இடம். சரத்குமார், கருணாஸ் உள்ளிட்டோர் தொடங்கிய கட்சிகள் அந்தந்த வட்டார அளவில், சமூகப் பின்னணியோடு அடையாளம் பெற்றவை. சட்ட மன்றத்துக்குள் நுழையவைத்த அந்த அடையாளத்தின் பின்னே மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் செல்வாக்கு, சாதி வாக்குகளைக் கைப்பற்றும் கணக்கு ஆகியன இருந்தன.

இவர்களுக்கெல்லாம் நம்பிக்கை தரும் விடயமாக இருப்பது, எம்.ஜி.ஆர் தனிக்கட்சி தொடங்கி அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்த வரலாறுதான். உண்மையில், எம்.ஜி.ஆரின் அரசியல் பிரவேசமும் வெற்றிகளும் திடீரென நிகழ்ந்த அற்புதங்கள் அல்ல. ஆரம்பத்திலிருந்தே தி.மு.கவில் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த இடம், தனது திரைப்படங்களில் அவர் திட்டமிட்டுப் புகுத்திய அரசியல் கருத்துகள் ஆகியவற்றின் தாக்கம் மிக முக்கியமானது. அவரது ஆதரவாளர்களாகத் திரண்டிருந்த இளம் ரசிகர்கள் கூட்டம், தேர்தல் வெற்றிக்குப் பெரிய அளவில் உதவும் என்று அண்ணா மதிப்பிட்டது 1967ஆம் ஆண்டுத் தேர்தலில் நிதர்சனமானது. அ.தி.மு.கவில் ஜெயலலிதா மிகப்பெரிய ஆளுமையாக உருவெடுத்ததும் வெறும் சினிமா புகழால் அல்ல. கட்சிக்குள் அவருக்கு எம்.ஜி.ஆர். அளித்த முக்கியத்துவம், பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை எதிர்கொண்டு அவர் நடத்திய அரசியல் பயணம் ஆகியன இருந்தன. தற்போது அந்தக் கட்சி சந்திக்கும் சீர்குலைவான நிலைக்கும் அவர் கையாண்ட வழிமுறைகள் ஒரு காரணம் என்பது வேறு விடயம்.

தமிழக அரசியல் வரலாற்றில் எப்போதுமே கலைஞர்கள் களமாடி வந்திருக்கிறார்கள். நாட்டின் விடுதலைப் போராட்ட அத்தியாயங்களில் நாடகக் கலைஞர்கள் மகத்தான பங்களித்திருக்கிறார்கள். 'வள்ளி திருமணம்' நாடகத்தில், தினைப்புனம் காவலுக்கு வரும் வள்ளி, 'வெள்ளைக் கொக்குகளா போ போ' என்று பாடியது, அந்தக் காலத்தில் மிக முக்கியமான அரசியல் வெளிப்பாடு. முருகனாக நடித்த விஸ்வநாததாஸ் மேடையை விட்டு இறங்கியதும் கைதுசெய்யப்பட்டு சிறைக்குக் கொண்டுசெல்லப்படுவது வழக்கமாக இருந்தது. மக்களிடையே பரவும் அந்தச் செய்தி போராட்டத்துக்கு விசையூட்டியது. வில்லன் பாத்திரங்களில் நடித்த எம்.ஆர்.ராதா திரைப்படங்களில் பேசிய அரசியல், சமூக நையாண்டிகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அதைப் பார்த்த பெரியார், "எனது பேச்சுகளால் ஏற்படும் தாக்கத்தைவிடவும் உங்கள் வசனங்களால் நல்ல விளைவு ஏற்படும்" என்று பாராட்டினார். எழுத்தாளர் கல்கி எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்ட 'தியாகபூமி' என்ற திரைப்படம், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பேசியது. சாதியத் தீண்டாமைக்கு எதிராகவும் பேசியது. அவ்வாறு பேசியதில் அரசியல் அக்கறை இருந்தது. பல ஆண்டுகளாக அந்தப் படம் முடக்கப்பட்டிருந்ததிலும் அரசியல் உள்நோக்கம் இருந்தது.

விடுதலைக்குப் பிறகும் தமிழகச் சூழலில் திராவிட இயக்க அரசியலைக் கொண்டுசென்றதில் திரைப்படங்களுக்குத் தலையாய இடம் உண்டு. திரைப்படங்களுக்கு உரையாடல் எழுதிய அண்ணா, கலைஞர் என ஒரு பட்டாளமே உருவானதும், இயக்கத்தில் அவர்கள் தலைமை இடங்களுக்கு வந்ததும் தற்செயலானவையல்ல. சமூக,நீதி, நியாயங்கள் இங்கு வேரூன்றியிருப்பதிலும், மதவாத அரசியல் இங்கு கால் பதிக்க முடியாத சூழல் நிலவுவதிலும் அன்றைய திரைப்படங்களும் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தியிருக்கின்றன.

**நிலைப்பாடு முக்கியம்**

மக்களிடையே பெயர் பெற்றுள்ள கலையுலகினர் அரசியல், சமூக அக்கறைகளை வெளிப்படுத்துவது நல்லதுதான். எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தாமல் இருப்பதுதான் கவலைக்குரியது. "அறிக்கை விடுவதற்கும் போராட்டம் நடத்துவதற்கும் வேறு சிலர் இருக்கிறார்கள். அதை நாம் செய்ய வேண்டாம்" என்று ரஜினி அறிவித்தது மிகப்பெரிய நழுவல் உத்தி. 'நாளை நமதே' பயணத்தைத் தொடங்கவுள்ள கமல்ஹாசனாவது கருத்து என ஒன்றைச் சொல்லி ஆதரவையும் எதிர்ப்பையும் எதிர்கொள்கிறார். மன்றத்துக்கு என்று ஓர் இணையதளம் தொடங்கியுள்ள நடிகர் விஜய், பொதுவெளியில் விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட தனது விமர்சனங்களை முன்வைக்கிறார். நடிகர் விஷால் தனது விமர்சனங்களை வெளிப்படுத்துகிறார். நடிகர்களின் ரசிகர் மன்ற அலுவலகங்களில் உறுப்பினர் பதிவு, வட்டார அமைப்பு ஏற்பாடுகள் முதலியவை பராமரிக்கப்படுவதைக் கவனித்திருக்கிறேன். "தலைவர் எப்போது வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம், அப்படி முடிவெடுப்பாரானால் நாங்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு" என மன்றங்களின் பொறுப்பாளர்கள் கூறினார்கள். அந்த வகையில் நடிகர்களின் வருகையில் ஒரு தொடர்ச்சி இருக்கத்தான் செய்கிறது.


**அரசியல் அக்கறை**

அதேசமயம், திரைப்படங்களின் கருத்துச் சுதந்திர ஒடுக்குமுறை என வருகிறபோதுகூட திரைக் கலைஞர்களில் பெரும்பாலானோர் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு வருவதில்லை அரசியல் பிரவேசம் பற்றிப் பேசிவரும் நடிகர்கள் உட்பட. அது அந்தந்தப் படங்கள் சம்பந்தப்பட்டவர்களின் பிரச்சினை என்பதாக ஒதுங்குகிற போக்குத்தான் இருக்கிறது. இதை ஆரோக்கியமற்ற அரசியலாகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

அரசியல் என்பது யாருக்கோ நேர்ந்துவிடப்பட்ட ஒன்றல்ல. முன்பொரு முறை கலை இலக்கிய இரவு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடிகர் நாசரிடம், குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாகப் பார்வையாளர்கள் கேள்வியெழுப்பினர். "ஏன் இதை ஒரு நடிகனைப் பார்த்து மட்டும் கேட்கிறீர்கள்? ஒரு விஞ்ஞானியையோ, ஒரு பேராசிரியரையோ, ஒரு பத்திரிகையாளரையோ கேட்க வேண்டாமா?" என்று கேட்டார் நாசர். "வெறும் உணர்ச்சிகரமான அறிவிப்புகளைப் பார்த்து அரசியல் முடிவுகளுக்கு வராதீர்கள், ஆழமாகச் சிந்தித்து விவாதித்து முடிவெடுங்கள்" என்பதே அவரது நிலைப்பாடு.

எல்லோர் வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்துகிற அரசியல் பற்றிய அக்கறை எல்லாத் துறைகளையும் சேர்ந்தோருக்கு வேண்டும். கலைத் துறைச் செயல்பாட்டின் காரணமாக மக்களின் அன்பைப் பெற்றவர்கள் அந்த அன்பை ஆக்கபூர்வமான அரசியலுக்குப் பயன்படுத்தப்போகிறார்களா, ஏற்கெனவே சீர்குலைந்திருக்கிற 'சிஸ்ரம்' மேலும் பின்னுக்குப் போக உதவப்போகிறார்களா என்பதுதான் பேசப்பட வேண்டும். இவர்களில் சிலர் பெரியதொரு சக்தியாக உருவெடுக்காவிட்டாலும், அரசியல் பிரவேசத்தின் மூலம் சில பேரங்களை நடத்தலாம் என்றுகூட கணக்கிட்டிருக்கக்கூடும்.

ஆக, "நடிகர்கள் நாடாள வரலாமா?" என்ற கேள்விக்கு இப்படிப் பதிலளிக்கலாம்: நாடாள வருவோர்தான் நடிக்கக் கூடாது. நடிகர்கள் நாடாள வரலாம். எப்படி அரசியல் செய்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க மக்கள் இருக்கிறார்கள்!





> முன்னாள் அரசதலைவர் மகிந்தவின் குடியுரிமையைப் பிடுங்குவதுடன் நின்றுவிடாமல் நாட்டின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையிடுபவர்கள் மீதும் தற்போதைய அரசதலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சரத் பொன்சேகா கோரியிருக்கிறார்.

# இலக்கு வைக்கப்படும் மகிந்தவின் குடியுரிமை!

ஸ்டோ ஸ்வாமி

கட்டுரை

அண்மையில் வெளியான இரு பெரும் அறிக்கைகள் தொடர்பான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் தொடங்கப்பட்ட அன்று, குடியுரிமையை பறிப்பது பற்றிய தண்டனை தொடர்பில் அலசப்பட்டிருக்கிறது. குறித்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய தலைமை அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, நடைமுறையிலுள்ள அரசமைப்பின் 81ஆம் பிரிவு தொடர்பில் திருத்தம் கொண்டுவருவதற்கு அரசியல் கட்சிகள் தமக்கு ஒத்துழைப்பு வழங்குமா என கேள்வியெழுப்பியிருக்கிறார். அரசமைப்பின் 81ஆம் பிரிவே, அரசதலைவர் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் குடியுரிமையை பலவீனப்படுத்தும் தண்டனை வழங்கல் நடைமுறையைக் கொண்டிருக்கிறது.

மத்திய வங்கி முறிகள் மோசடி தொடர்பான மற்றும் முன்னைய ஆட்சிக்கால மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் பற்றிய அறிக்கைகளை உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றில் விவாதிப்பது தொடர்பில் அரசதலைவர் விடுத்த சவாலை அடுத்து, குறித்த விவாதத்தினை தேர்தலுக்கு முன்னதாக நடத்துவதற்கு உடனடி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்த விவாதத்திலேயே, முன்னைய ஆட்சிகால மோசடிகள் தொடர்பான அறிக்கை தொடர்பில் உரைநிகழ்த்திய பொழுதில் இந்த குடியுரிமை விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. குறித்த அரசதலைவரின் ஆணைக்குழு அறிக்கையில் குடியுரிமையை பறிப்பது அல்லது வலுவிழக்கச் செய்வது பரிந்துரைக்கப்பட்டிருப்பதால், அது தொடர்பான முன்னகர்வுகளுக்கு ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பு தொடர்பில் வினவப்பட்டிருக்கிறது.

பொதுவில், மோசடி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் புரிந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையே நோக்கியதாகச் சொல்லப்பட்டாலும், இப்போதைக்கு இத்தகைய குடியுரிமை வலுவிழப்பு தண்டனை யாரை இலக்கு வைத்ததாக இருக்கிறது என்பது பரகசியமானது.

### ஏன் எதிர்ப்பு?

ஐ.தே.க.வின் இந்த முன்மொழிவுக்கு, அன்று நாடாளுமன்றில் பிரசன்னம் தந்த தரப்புக்களிடமிருந்து எதிர்ப்பே கிளம்பியிருக்கிறது. அதிலும் மகிந்தவை நிராகரிக்கும் தரப்புகளிலிருந்து கிடைத்திருக்கும் எதிர்ப்புக்கள் கவனிப்புக்குரியவை. அரசதலைவரின் கீழ் இயங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்த்திருக்கிறது. அத்தோடு ஜே.வி.பி.யும் தனது ஒத்துழைப்பு கிடைக்காதென்பதை அறிவித்திருக்கிறது.

ஐ.ம.சு.மு.வின் பொதுச்செயலாளரான மகிந்த அமரவீர, நாடாளுமன்றில் உரை நிகழ்த்துகையில் எவரது சிவில் உரிமைகளைப் பறிப்பதற்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சம்மதிக்காது எனத் தெரிவித்திருக்கிறார். எனினும் நாடாளுமன்றத்தில் உரிய சட்டத்திருத்தங்களை மேற்கொண்டு சட்டத்துறை குறித்த அரசியல்வாதி மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் என்று அவர் கூறியிருக்கிறார்.

ஏற்கெனவே, ஐ.தே.க.வினால் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டதை கசப்பான அனுபவம் எனக் குறிப்பிட்டே தமது எதிர்ப்பினை வெளிக்காட்டியிருந்தார் அவர். குற்றவாளிகளாக இனங்காணப்படுபவர்களை சட்டத்துறையினூடாக தண்டிப்பதையே தாமும் வலியுறுத்துவதாக ஜே.வி.பி.யின் தலைவர், அனுர குமார திசாநாயக்கவும் குறிப்பிட்டிருக்கிறார். ஐ.தே.க.வின் நடவடிக்கையினை அரசியல் பழிவாங்கல் முயற்சி மற்றும் அரசியல் நாடகம் என வர்ணித்திருக்கும் ஜே.வி.பி., அதற்கு நாடாளுமன்றத்தினை பயன்படுத்துவதனை அனுமதிக்க முடியாது என்றிருக்கிறார். ஷிராணி பண்டாரநாயக்காவை இருக்கையிலிருந்து நீக்குவதற்கு நாடாளுமன்றினைப் பயன்படுத்தியதை போன்ற நடவடிக்கைகளுக்கு மேலும் இடமளிக்க முடியாது என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

இதுவரையான இலங்கை வரலாற்றில், குடியுரிமை பறிப்பு பற்றிய தண்டனை, சிறிமாவோ பண்டாரநாயக்காவினையே நினைவூட்டி வந்தது. 1980 இல் அப்போதிருந்த அரசதலைவர் ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை ஏழு ஆண்டுகளுக்குப் பறிக்கப்பட்டு நாடாளுமன்றிலிருந்து அகற்றப்பட்டார். ஆனால், பின்னர் 1986 இல் அவருக்கு மீள குடியுரிமை வழங்கப்பட்டு, பின்னொருநாளில் தலைமை அமைச்சராகவும் வந்திருந்தார். இவருடன் சேர்த்து இவருடைய காலத்தில் நிதி அமைச்சராக விளங்கிய பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினுடைய குடியுரிமையும் பறிக்கப்பட்டிருந்தது.

### குடியுரிமையை பறிப்பது மாத்திரம் போதாது

முன்னாள் அரசதலைவர் மகிந்தவின் குடியுரிமையை பிடுங்குவதுடன் நின்றுவிடாமல் நாட்டின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையிடுபவர்கள் மீதும் தற்போதைய அரசதலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சரத் பொன்சேகா கோரியிருக்கிறார்.

### மகிந்தவின் சவால்

முடிந்தால் தனது குடியுரிமை அகற்றிக் காட்டுமாறு கூட்டரசினை பார்த்து சவால் விட்டிருக்கும் மகிந்த ராஜபக்ச, அது ஒன்றும் சுலபமான காரியம் கிடையாது என்று தெரிவித்திருக்கிறார். கடந்த திங்கட்கிழமை கட்டுநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அரசினால் அமைக்கப்பட்டிருக்கும் மிஹின் எயார் மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானசேவைகளின் முகாமைத்துவம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவுக்கு முகம் கொடுக்கத் தயார் என்று அறிவித்திருக்கும் அவர், 30 வருட போரை முடிவிற்கு கொண்டு வந்ததற்காகவா தமது குடியுரிமையை அகற்ற முனைகிறார்கள் என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தரப்பினரின் தோன்றா நிலை முதல்வராக உள்ள மகிந்த ராஜபக்சவின் குடியுரிமை பேசுபொருளாகியுள்ள நிலையில், ஐ.தே.க. மட்டுமே இது விவகாரத்தில் கடும் ஆர்வத்தைக் காண்பித்திருக்கிறது.

2015இல் நடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த தோல்வியே அடைந்திருந்தாலும் 58 இலட்சம் வாக்குகளுக்கு சொந்தக்காரர் என்பதை இங்கு மறந்துவிடக்கூடாது. தனது போர்வெற்றி உரிமைகோரல் மூலமாகத் தன்னை ஒரு கதாநாயகனாக உருவகப்படுத்தி வைத்திருக்கும் மகிந்த, அதனால் நலன்களை ஈட்டிவரும் பொதுஜன பெரமுன என்பன, இந்த விவகாரத்தை வெறுமனே விட்டுவிட்டு இருக்கப் போவது கிடையாது. மக்களை வீதிக்கு இறக்கிப் பிரளயம் ஒன்றைத் தோற்றுவிக்கவே முனைவர்.

ஏற்கெனவே ராவண பலய அமைப்பு மகிந்தவின் குடியுரிமை பற்றிக் கதைத்ததற்காக மகிந்த சமரசிங்கவுக்கு எதிராக முஷ்டியை தூக்கியுள்ளது. இந்தப் பின்னணியில், மகிந்தவின் குடியுரிமையில் கைவைப்பதானது தேன்கூட்டிற்கு கல்லெறிந்த நிலைப்பாட்டினையே தோற்றுவித்தாலும் ஆச்சரியமில்லை.

சட்டரீதியான பொறிமுறை ஒன்றினூடாகத் தண்டனை வழங்குவதை சுதந்திரக்கட்சி மற்றம் ஜே.வி.பி என்பன வரவேற்றுள்ள நிலையில், நேற்றைய தேர்தல் முடிவுகளின் தாக்கம், மகிந்தவின் குடியுரிமை பற்றிய ஐ.தே.க.வின் தீர்மானங்களை வலுப்படுத்தியதாக வலுவிழக்கச் செய்ததா? என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும்.

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு மிக அருகில் 2½ பரப்புடன் கூடிய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. (புதிதாக அமைக்கப்பட்ட வீடு)

**077 846 6182, 077 676 5612** (CS/13749 (11,17)

## விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் 168/4, முத்தமிழ் வீதி, கொட்டடியில் (யாழ் நகரத்திலிருந்து 1 1/2 கி.மீ தூரத்தில்) சுற்றிவர அத்திவாரமிடப்பட்ட நிலையிலுள்ள இரண்டு பரப்பு உறுதிக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 900 7380 (CS/13769)(10)

## பழைய வீடு விற்பனைக்கு

தரமான நிலை. கதவு. ஓடு. சீற். தீராந்திகள். பனை மரங்கள். சலாகைகள் உட்பட அனைத்தும். 15.02.2018 வரை பார்வையிடலாம்.

தொடர்பு:077 169 3478 (CS/13771) (10)

## உடன் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சி சுற்றுலாத் துறை அனுமதி பெற்ற Hotel ஒன்றுக்கு
* சமையளாள் (Cook) * வெயிற்றர்
உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்.

தொடர்புகளுக்கு: **075 7313 916** (CS/13782) (10)

## Ticketing Staff தேவை

**SB Travels and Tours (Pvt) Ltd**
நிறுவனத்துக்கு **Air Ticketing** அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
இடம்:- **No 296 C 3Galle Road, Wellawatha**

**077 108 3481** (CS/13752) (11,17)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு மிக அருகில் 7½ பரப்புடன் கூடிய வீடும் 2½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. (சுற்றுமதிலுடன் உள்ளது)

**077 711 2349, 077 846 6182** (CS/13751) (11,17)

## தேவை

திருநெல்வேலியிலுள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலை மற்றும் சிற்றுண்டி தயாரிக்கத் தெரிந்த பெண்கள் தேவை.

தொடர்பு:077 6530253 (CS/13774)(10)

## விற்பனைக்கு

பலசரக்குக் கடைக்குத் தேவையான அலுமாரி. மேசை. மேடைத்தராசு 500Kg நிறுக்கக்கூடியது. எலக்ரோனிக் தராசு 15 Kg நிறுக்கக் கூடியது. பிறிச் புதிய மொடல் மற்றும் வேறு சில பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு.

**412, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்**
**077 603 8263** (CS/13776)(11,17)

## Yarl International College Of Skills Development

YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!



அழகுக்கலை
கேக் ஐசிங்
20% OFF
தையல்

பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
#அழகுக்கலை பயிற்சிகள் யாவும் Yarl Beauty உடன் இணைந்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சனி, ஞாயிறு பிரிவு 17.18/02/2018 அன்று 10.00 மற்றும் 02.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவு 16.19/02/2018 அன்று 10.00 மற்றும் 02.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

YICSD COLLEGE

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

# Institute of Junior

## Spoken & Written Elocution

(எலக்கியூசன்) பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்றவர்களைப் பாராட்டுகின்றோம்.



G.லஸ்வின் | A.கிஷோனி | G.ஜெறின் நித்தீஸ் | J.ஆன்சனா | G.ஹர்னிகா | ச.ரக்சன் | S.லக்ஷ்யா | S.பிரணவன் | A.சிவகஜன்



J.சிடான் | A.அபூர்வன் | U.தக்சகி | U.விசாகன் | B.ஹரிஷ் | V.லருசன் | S.அக்ஷயா | S.அபிசயா | S.அங்கஜன்



N.ரதுசன் | S.சதுஸ்னா | S.விஷாலி | P.சாருஜன் | K.காவியா | S.கதீசன் | K.அபிஷா | V.தீபிகா | R.கரிஷான்



N.அஷ்விதன் | S.சபிஷா | P.பவதர்சன் | M.அக்ஷயா | V.சாருசன் | N.பரணிகா | K.லிதுசனன் | V.அஷ்வின் | E.நவீன்



K.மதனிசன் | T.அரிஞ்சயன் | A.இவாஞ்சலின் | S.தஷேன் | S.யஸ்மிதன் | U.நிதுசன் | T.இனியா | M.கமல்ஜா | A.சாய் அருள்பிரசாத்

★ Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் [Spoken & Written]


★ English Classes -4 வயதிலிருந்து 13 வயதுவரை

**20.02.2018** இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்




**இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630**

(CS 9376(13,17)





# 'அப்பா' மற்றும் 'தாத்தே'

## இரண்டு மொழிக்குறும்படங்களின் திரைக்கூறு பற்றிய பார்வை

சி.ப.வேந்தன்

பார்வை

கலை ஒரு சமூகத்தின் கண்ணாடி எனக்கூறுகிறார்கள். இது ஒரு தவறான கருத்து. நமது சமூகத்தில் கலை என்பது ஒருகண்ணாடிஅன்று. ஆனால்அது ஒரு சம்மட்டி. எது நமது உரிமை, எது நல்லது, மற்றும் எது அழகானது என்று பார்க்கவும், உரத்துச்சொல்லவும், தெளிவுபடுத்தவும் நமது கைகளில் இருக்கும் ஓர் ஆயுதம்" கிரியர்சன்(திரைப்பட இயக்குநர்)

கண்ணீரைப்போலகலையும்ஒருபொதுமொழிதான். மொழிகளைத் தாண்டி, இனங்களைத் தாண்டி, மதங்களைத் தாண்டி அனைவரிடமும் போய்ச்சேரக்கூடிய வல்லமை கலைக்கு உள்ளது. இவற்றின் வழிசையில் திரைக்கலை என்பது கண்டங்களைத்தாண்டியும் பலரிடத்தில்பலரையும்நெருக்கமாகக்கொண்டுசெல்லவைத்திருக்கிறது என்றால்எவரும்மறுத்துவிடப்போவதில்லை. ஒவ்வொருநாடுகளும் தமக்கென்றுதனிஅடையாளங்களைப்பொருத்திக்கொண்டுதனித்துவமான சினிமாக்களைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றன. ஈரானிய, ஜப்பானிய, சீன, கொரிய மற்றும் இதுபோன்ற மேலை நாடுகளிலிலிருந்து வெளிவருகின்ற சினிமாக்கள் அனேகமாக தம்முடைய நாடுகளின் தனித்துவங்களையும் தம்முடைய பிரத்தியேக திரைமொழிகளையும் பேச வல்லன.

### சினிமாக்களின் பலவேறு தளங்கள்

இந்தியத்தமிழ்சினிமாவும்மற்றைய மாநிலமொழிச்சினிமாக்களும் சரிதம்முள் இருவேறு சினிமாத்தளங்களைக்கொண்டிருக்கின்றன. வர்த்தக மற்றும் வர்த்தகமல்லாத கலைப்படைப்புக்கள் அங்கிருந்து வெளிவருகின்றன. இலங்கையிலும் மொழிவாரியாகத் தமிழ் சிங்களம் எனும் இருவேறு சினிமாத்தளங்கள் இயங்கினாலும் அயலிலிருந்து(இந்தியா)பெற்றுக்கொண்டஅனுபவங்களினாலோஎன்னவோ அவையும் இருவேறு(வர்த்தக மற்றும் வர்தகமல்லாத கலைப்படைப்புக்கள்) பிரிவுகளில் இயங்க எத்தனிக்கின்றன. இதில் சிங்களச் சினிமா தனக்குரிய அடையாளச் சினிமாவை உருவாக்கிவிட பெருமளவில் முயற்சிசெய்து வருகின்றது. ஈழத் தமிழ் சினிமா பெருமளவில்வளர்ச்சிநிலையைஅடைந்திராவிட்டாலும்வளர்ந்தவரையிலும் தம்முடைய அடையாளச் சினிமாவை உருவாக்கும் முயற்சிகளைப் பெருமளவில் எடுக்கவில்லை என்றே கூறலாம். விடுதலைப்புலிகளின் காலகட்டத்தில் ஞானரதன், பொ.தாசன் ஆகியோரால் வெளிவரத்தொடங்கியமாற்றுசினிமாவின்போக்குஅவர்களின்மறைவின் பின் நிறைவுக்கு வந்ததென்றே கொள்ளலாம். அவர்களுக்கடுத்து யதார்த்த சினிமாவுக்கான முயற்சியில் ஈடுபட ஆரம்பித்த முல்லையேசுதாசனின் செயற்பாடுகளும் போர்–

அமைதியின்பின்னர்தொடரவில்லை. தற்போது மீண்டும்ஆரம்பித்திருக்கும் ஈழச் சினிமாவின் போக்கு எந்தவித வரையறைகளிலும் அகப்படாது கட்டறுந்தபோக்கிலேயே செல்கின்றதெனலாம். ஒன்றிரண்டு புதிய படைப்பாளிகள் சினிமா பற்றிய புரிதலோடும் அவை பற்றியஅறிவோடும்செயற்பட்டுவந்தாலும்அவ்வகைச்சினிமாக்களை ஏற்றுக்கொள்ளும் திறனோ பக்குவமோ நமக்குள் பெருமளவில் இல்லையென்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

### ஈழத்துச்சினிமாப் பரப்பில் ஆரோக்கியமானதொரு செயல்பாடு

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அ.யேசுராசாவால் முன்னெடுக்கப்பட்டுவரும் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த அயல் சினிமாக்களின் திரையிடலும் அவை பற்றிய உரையாடலும் எதிர்காலத்தில் ஈழத் தமிழ்ச்சினிமாக்களின்போக்கைத்தீர்மானிகக்கூடிய ஒரு செயற்பாடெனலாம்.

எப்படியாயினும் எதிர்காலத்தில் ஈழத் தமிழ்ச் சினிமா தனக்கென்றோர் அடையாளத்தைப் பெறுமாயின் அது உலகத் தமிழ்ச் சினிமாவின் முகமாகக்கூட இருக்க முடியும். வாய்ப்பிருக்கிறது.

"நமக்கென்றொரு பார்வை, நமக்கென்றொரு உத்தி – நமக்கென திரைப்படங்கள். பார்வை – படைப்பு என நாம் உத்வேகம் கொள்ள இன்னமும் வேளை வரவில்லையா? முனைந்தால் முடியாது போகுமா?" – நேசன் (திசைதெளிவோம், வெளிச்சம் – தை–பங்குனி 2004) எனநேசனைப்போலசினிமாதொடர்பியளாளர்கள்ஒவ்வொருவருள்ளும்கேள்விகள்எழத்தொடங்கினால்எதிர்காலஈழச்சினிமா தன்னுடைய அடையாளம் நோக்கிப் பயணப்படலாம்.

### இலங்கையில் இரண்டு மொழிச் சினிமாக்கள்

இலங்கைத் திரைப்பட வரிசையில் தற்போது தமிழிலும் சிங்களத்திலும் பல புதியவர்கள் திரைமொழி அனுபவம் கொண்டவர்கள், அல்லாதவர்கள் எனப் பலரும் திரைப்பட உருவாக்கத்தில் ஈடுபட்டுவருகிறார்கள்.

அவற்றுள் எது சரி, எது பிழை என்பதற்கப்பால் இரண்டு மொழிகளிலிருந்தும் வெளிவந்திருக்கும் இரண்டு குறுந்திரைப்படங்கள் தொடர்பில் ஒப்பு நோக்கையில் இரண்டு மொழிச்சினிமாவிலிருந்தும் எவ்வாறு வேறுபடமுடியும் என்பதை உணர முடிகிறது. பெரிய திரைத்துறை ஜாம்பவான்கள் அற்ற இருவரால் எடுக்கப்பட்ட இரண்டு திரைப்படங்களை வைத்தே ஆரம்பநிலை சினிமாப் படைப்பாளிகளுக்கிடையிலிருக்கும் வேறுபாட்டை பிரித்தறிய முடிகிறது. தலைப்பிடலால் மட்டுமே இணையக்கூடிய, சிங்கள மொழியில் 'தாத்தே' தமிழ்மொழியில்'அப்பா'என்ற இரண்டுதிரைப்படங்களிலும்சிங்கள தமிழ்ச் சினிமாவின் அடையாளங்களை அவற்றின் கூறுகளுடன் பிரித்தறிய முடிகிறது.

### 'தாத்தே' திரைப்படமும் அதுகூறும் திரைக்கூறும்.

புறநகர் விவசாயக் கிராமம் ஒன்று. இரண்டு வயல்களுக்கு நடுவால் பிரிந்து செல்லும் புழுதிபடிந்த வீதியால் சிறில் (பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் பாடசாலைக்கு நடந்து வருகிறான். வழியில் அவனைத் தாண்டி அவனுடைய வகுப்புத் தோழனை அவனுடைய தந்தை சைக்கிளில் பாடசாலைக்கு ஏற்றிக்கொண்டு செல்வதைச் சிறில் ஏக்கத்துடன் பார்க்கிறான். அடுத்து மற்றொரு தோழனை அவனுடைய தந்தை தன்னுடைய உழவு இயந்திரத்தில்(லான்ட் மாஸ்ரர்) ஏற்றிக்கொண்டு செல்வதையும் சிறில் ஏக்கத்துடன் பார்க்கிறான். அடுத்து பாடசாலை முடிந்தவுடன் மீண்டும் அவர்கள் வந்து தத்தம் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதையும் சிறில்; பார்க்கிறான்.

மற்றொருநாள் வகுப்பில் ஆசிரியரிடம் தம்முடைய பாடக்கொப்பிகளைச் சரி பார்பதற்காக சிறிலும் கசுனும் ஆசிரியையிடம் செல்கின்றனர் அப்போது அசிரியர் கசுனிடம், "உன்னுடைய தந்தை உனக்கு என்ன கொண்டு வந்தார்?" எனக்கேட்கிறாள். அதற்கு கசுன், அப்பா பாடும் கார் வாங்கி வந்திருப்பதாகக் கூறுகிறான். அடுத்து, "உன்னுடைய அப்பா என்ன கொண்டுவந்தார்?" என்றுசிறிலிடம்கேட்க அவன் சிறிது மௌனத்தின் பின்னர் அவர் ஒருபோதும் வர மாட்டார் அவ்ரை நான் சுவரில் தொங்கும் ஒளிப்படத்தில்தான் பார்த்தேன். அவருடன் நான் வாழ முடியவில்லை.

என்னுடைய தாய் ஒரு பூவைப்போல அழகானவள் எனக்கூறுகின்றான். ஆசிரியர் அவனை மெல்ல அணைக்கிறாள். கமரா நரகர்கிறது. சிறிலின் தந்தையினுடைய பழைய ஒளிப்படம் ஒன்று மாலையோடுதொங்குகிறது. இலேசானமங்கலுடன்படம்நிறைவடைகிறது.

### இலகு கையாளுகை

லகிண்டு கௌசர பெரேரா என்பவர் இயக்கியிருக்கும் 6நிமிடம் 40 நொடிகள் நீளமான இந்தக் குறும்படத்தின் கதையில் சிலாகித்துக்கூற எதுவும் இல்லையாயினும் கதை சொன்ன விதம் ஆர்ப்பாட்டமில்லாத அழகைக் கொடுத்திருக்கிறது. கிராமமும்பாத்திரங்களும்சூழலின் தன்மையை மிக இலகுவாகச் சொல்லிவிடுகின்றன. அந்த மக்களின்வாழ்வியல், பொருளாதார நிலையைச் சைக்கிளிலும் உழவுஇயந்திரத்திலும் காட்டிவிட முடிகிறது இயக்குனரால். நெருக்கமான(குளோச்ப்) காட்சிகளின் மூலம் பாத்திரத்தின்வழி உணர்வுநிலைக் காட்சிகளைக்காட்டுவதைவிடுத்து அகலக்காட்சிகளின்மூலம் பாத்திர உணர்நிலையைக் காட்டிவிடுவதில் திரைமொழி வேறுபடுகிறது, அழகாகிறது. படம் நெடுகிலும் புழுதி வண்ணம் காட்டியிருப்பதும்,தந்தையின் உருவப் படத்திலும்அவ்வண்ணம்வெளிப்படுவதும்கதைநிகழ்களத்தின் வாழ்வியல்குறியீடாக அவதானிக்கலாம். மிக மோசமான இசை படத்தின் தன்மையைக் கெடுத்துவிடுவதைத் தவிர்திருந்தால் நன்றாக இருக்கும். தாக்கம் நிறைந்த கதையோ, காட்சிகளோ இல்லாதிருந்தும் படம்முடியும் போது பார்வையாளனுக்குள்ஒருவிதகனத்தைஏற்படுத்திவிட முடிகிறது இயக்குநரால்.

### 'அப்பா'(த றியல் ஹீரோ) திரைப் படமும் திரைக்கூறும்

இயக்குநர்விதுசன்.ரி இயக்கியிருக்கும் 15நிமிடங்களைக்கொண்ட இந்தப் படம் தந்தைக்கும் மகனுக்குமிடையிலான கதையைப் பேசியிருக்கிறது. அதிகாலையில்எழுந்துகிடுகுபின்னிவிட்டுமகனுக்குத் தேநீர் போட்டுக்கொண்டுவந்து கொடுக்கிறார் தந்தை. தனக்குப் பால்தேநீர்தான் வேண்டும் வெறும் தேநீர் குடிக்கமுடியாதென்று கூறிவிட்டு மகன் கோபத்துடன் சென்று விடுகிறான்.

ஒவ்வொரு முறையும் தந்தையிடம் ஏதேனும் ஒரு பொய்யைக்கூறி பணத்தைப்பெற்றுச்சென்றுநண்பர்களுடன்மது அருந்துவதும், தீய பழக்கவழக்கங்களிலும் ஈடுபடுகிறான் மகன். தந்தை மிகவும் கஸ்டப்பட்டு கூலிவேலை செய்து உழைக்கும் பணத்தைாயெல்லாம் வீணடிக்கிறான். ஒருமுறை கைகளில் மதுப்போத்தல்களுடன் நிற்கும் மகனைத் தந்தை கண்டு விடுகிறார். அன்றிலிருந்து அவருக்குக் கவலையும்யோசனையும்ஏற்படுகிறது. அந்தச்சம்பவத்தின்பின்னர் மனந்திருந்தும் மகன் படிக்க ஆரம்பிக்கிறான்.



கவலையாலும் யோசனையாலும் நோய்வாய்ப்படும் தந்தை வேலைத்தளத்தில் ஒருநாள் மயங்கி விழுகிறார். அல்லது இறக்கிறார். புதிதல்லாத கதை. அதைப் படமாக்கியிருப்பீல் கூட எந்தவித புதுமையையும் காட்டவில்லை என்பதே படத்தின் பலவீனமாய் அமைந்து விடுகிறது. சட்டகங்களும் சூழலும் இணைப் பாத்திரங்களும்கூட படத்தில்தீவிரத்தன்மையைக்காட்டவில்லை. மகன் புகைப்பிடித்துவிட்டுகுப்பைத்தொட்டியில்போடும்கழிவை அதேகாட்சியில் அள்ளிச்செல்வதில் குறியீட்டுத் தன்மையைப் புகுத்தியிருப்பதும் பின்னணி இசையும் ரசிக்கவைக்கின்றன. முதன்மைப் பாத்திரமாக நடித்திருக்கும் தந்தை மற்றும் மகன் பாத்திரங்களின் நடிப்பு உறுத்தாமல் இருப்பதும் உரையாடலும் மாத்திரமே படத்தின் பலமெனலாம்.

மேலிரண்டு படங்களிலுமிருந்து அவ்வவ் சினிமாக்களுக்குரிய கூறுகளைவேறுபடுத்தும்போது இரண்டுக்குமான இடைவெளிகள் பற்றிப் புரிந்துகொள்ள முடிகிறது. இவை இரண்டையுமே வைத்து இரண்டு மொழிச் சினிமாத்தளங்களையும் எடைபோட்டோ அல்லது குறைநிறைகளையோ பேசமுடியாவிட்டாலும் அடிப்படைகளைப் புரிந்து, கற்றுக்கொள்ள முடியும். பொறுத்திருந்து பார்ப்போம். எதிர்காலத்தில் இதுபோன்ற தலைப்புகளில் சமுத்திரக்கனியின் வர்த்தக சமரசங்களுடனா அல்லது ஈரானியத்திரைப்பட இயக்குநர், 'மஜிட் மஜிடி'யின் யதார்த்தவடிவங்களுடனா எம்மவர்களின் திரைப்படங்கள் உருவாக்கப்படப்போகின்றன என்பதை.

# காரைநகரில் கூட்டமைப்பு சுயேச்சை சமபலம்

இன்று நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் காரைநகர் பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து நால்வரும் மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் நால்வரும் ஐக்கிய தேசியக் கட்சி,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றிலிருந்து தலா ஒருவருமாக பத்து உறுப்பினர்கள் தெரிவாகி உள்ளதாக அறிய முடிகின்றது.

நேற்று அதிகாலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இடம் பெற்ற வாக்குப் பதிவுகளின் அடிப்படையில் பிரதேச சபைக்கான பத்து உறுப்பினர்கள் தெரிவாகினர்.பத்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக எட்டுக் கட்சிகளைச் சேர்ந்த 104 பேர் காரைநகர் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிட்டனர்.எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாததால் ஆட்சி அமைப்பதில் நெருக்கடி நிலை தோன்றி உள்ளத்ாகக் கூறப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் 1ம் வட்டாரத்தில் (துங்கோடை,பத்தர் கேணி,மருதபுரம்,செம்பாடு உள்ளிட்ட கிராமங்கள்) 314 வாக்குகளைப் பெற்று கணேச பிள்ளை பாலச்சந்திரன் தெரிவாகி உள்ளார். 2ம் வட்டாரத்தில் (காரை மத்தி,வேதரடைப்பு,மல்லிகை உள்ளிட்ட கிராமங்கள்) 479 வாக்குகளைப் பெற்று ஆண்டிஐயா விஜயராசா தெரிவாகி உள்ளார் .3ம் வட்டாரத்தில் (பெரியமணல்,மருதடி,சடையாளி,புதுறோட்,மாப்பாணவூரி,சயம்புவீதி உள்ளிட்ட கிராமங்கள்) 328 வாக்குகளைப் பெற்று விஜயதர்மா கேதீஸ்வரதாஸ் தெரிவாகி உள்ளார்.

மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு 4ம் வட்டாரத்தில் (களபூமி,பாலாவோடை,விளானை,பொன்னாவளை,சத்திரந்தை,இடைப்பிட்டி,மொந்திபுலம்,வலந்தலை, காளிகோவிலடி,திக்கரை,ஊரி உள்ளிட்ட கிராமங்கள்) 356வாக்குகளைப் பெற்று நல்லையா ஜெயக்கிருஸ்ணனும் 5ம் வட்டாரத்தில் (கருங்காலி,வியாவில்,பலகாடு,கல்லந்தாழ்வு உள்ளிட்ட கிராமங்கள்) 263 வாக்குகளைப் பெற்று மயிலன் அப்புத்துரையும் 6ம் வட்டாரத்தில் (துறைமுகம் பிள்ளையார் கோவிலடி, பாலாவோட, தோப்புக்காடு உள்ளிட்ட கிராமங்கள்) 275 வாக்குகளைப் பெற்று மாணிக்கம் யோகநாதனும் தெரிவாகி உள்ளதுடன்.

காரைநகர் பிரதேசம் முழுவதும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 1623 வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 1263 வாக்குகளையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 1197 வாக்ககளையும் மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு 1080 வாக்குகளையும் பெற்று விகிதாசாரப் பட்டியலில் தலா ஒவ்வொரு உறுப்பினர்களையும் பெற்றுள்ளனர்.அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மொத்தம் 359 வாக்ககளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 156 வாக்குகளைம்,சிறிலங்கா சுதந்திரக் கட்சி 136 வாக்ககளையும் சிறிலங்கா பொதுஜன பெரமுன 15 வாக்குகளையும் காரைநகர் மக்களிடம் சுவீகரித்துக் கொண்ட போதும் உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

# சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் அளவெட்டிக்கு ஆன்மீக யாத்திரை

அமெரிக்க ஹாவாய் ஆதின முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் ஆன்மீக யாத்திரையாக அளவெட்டிக்கு வருகை தரவுள்ளார். எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சந்தித்து ஆசிபெற முடியும் என அளவெட்டி பசுபதீஸ்வரர் ஆலய, ஶ்ரீசுப்பிரமணிய ஆச்சிரம நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அளவெட்டி ஶ்ரீ சுப்பிரமணிய ஆச்சிரம ஸ்தாபகரும் அமெரிக்காவில் உள்ள ஹாவாய் சைவ ஆதீன ஸ்தாபகருமாகிய குருதேவ சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடரும் தற்போதைய ஆதீன முதல்வருமாகிய சற்குரு போதி நாதவேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 65 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரையாக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் உள்ள பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளும் சுவாமிகள் பின்னர் 10 மணிக்கு அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் பூசை வழிபாடுகளில்; கலந்து கொண்டு அருளாசி வழங்குவார். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (எ-36)

# ஶ்ரீகிருஷ்ணரும் ஶ்ரீஇராமரும் காட்டிய வழி – சிவ வழிபாடு

வேதகால ரிஷிகள் ஆழ்தியானத்தில் தாம் கண்டறிந்த ஆன்ம ஈடேற்ற உண்மைகளை, சமுதாய நன்மைக்காகவும், இந்து சமய வளர்ச்சிக்காகவும் அனைவருக்கும் ஏற்ற வகையில், ஆழமான அர்த்தம் பொதிந்த ஞாபகார்த்தங்களாகப் பொறித்து வைத்தனர். மேற்குறிப்பிட்ட சிவ அவதார நிகழ்வின் சுவடுகளாக இன்றும் அவை எஞ்சியிருக்கின்றன. அதன் வழி, இந்துக்களிடையே பல்வேறு விக்கிரக ஆராதனைகளும், புராணக்கதைகளும், விழாக்கள், விரதங்களும், அபிஷேக ஆராதனை முறைகளும் வேதாகமங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள வகையில், முறைப்படி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஶ்ரீ கிருஷ்ணர் கோபேஸ்வரத்திலும், ஶ்ரீ ராமர் இராமேஸ்வரத்திலும் சிவலிங்க பூஜை செய்ததாக அத்தலங்களைப் பற்றிய புராணக்கதைகள் குறிப்பிடுகின்றன. தெய்வங்களாகக் கருதப்படும் கிருஷ்ணரும் இராமரும் சரீர உணர்வை மறந்து, பணிவன்புடனும் ஆன்ம உணர்வுடனும் மனமொன்றிப் பூஜை செய்து, சிவார்ச்சனையின் பலனாகக் காரிய சித்தி பெற்றனர்.

நாளை மறுதினம் (செவ்வாய்) மாலை 6 மணி முதல் அடுத்த நாள் காலை 6 மணி வரை சுகதாமம் மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் 12 மணித்தியால நிகழ்வுகளில் அக்கால கட்டத்தில் உண்மையில் இடம்பெற்றதைத் தெரிந்து கொள்ளலாம்.

*(பிரம்மகுமாரிகள் இராஜயோகதியான நிலையம்,இல 211, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.(கலட்டி சந்தி அருகில்) தொடர்புகளுக்கு 077 9234562.*

# ஓட்டோ தரிப்பிடங்கள் வெறிச்சோடின

தென்மராட்சி, பெப்.11

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று ஓட்டோ தரிப்பிடங்கள் வெறிச்சோடி காணப்பட்டன.

பேருந்துகளில் வந்த பயணிகள் தரிப்பிடங்களில் ஓட்டோ இல்லாததால் கால்நடையாக தமது வீடுகளுக்குச் சென்றதைக் காண முடிந்தது.

பிரதேசத்தில் 50க்கும் மேற்பட்ட ஓட்டோக்கள் உள்ள போதிலும் அவை அனைத்தும் தேர்தல் வாக்காளர்களை ஏற்றியிறக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதால் தரிப்பிடத்தில் இல்லாத நிலை காணப்பட்டது.

இதனால் ஓட்டோக்களை வாடகைக்கு அமர்த்துவதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வடக்கில்...

வடக்கு மாகாணத்தில் வெளியான வட்டார ரீதியிலான முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களில் 12 உள்ளூராட்சி மன்றங்களையும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 3 உள்ளூராட்சி மன்றங்களில் மூன்றையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 4 உள்ளூராட்சி மன்றங்களையும், வவுனியா மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களையும், மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றியுள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய பேரவை, சாவகச்சேரி நகர சபை மற்றும் பருத்தித்துறை நகர சபை என்பவற்றைக் கைப்பற்றியுள்ளது. இந்த இரண்டு சபைகளும், 2011ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்த சபைகளாகும்.

இதேவேளை, தெற்கில் யார் ஆட்சியாளர்கள் என்பதை தீர்மானிக்கப் போகும் தேர்தலாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வு கூறப்பட்டிருந்தது.

இந்தத் தேர்தல் தொடர்பான புலனாய்வு அறிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சியே அதிகளவான சபைகளைக் கைப்பற்றும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன முன்னணி அவற்றை அப்படியே தலைகீழாகப் புரட்டிப் போட்டு அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. தென்னிலங்கையின் கிராமப்புற சபைகள் முழுவதும் மகிந்த அணியின் கைக்கே எதிர்ப்பின்றிச் சென்றுள்ளது.

இதேவேளை, மகிந்த அணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட சபைகளில், அங்கு போட்டியிட்ட சுயேச்சைக் குழுவுக்கு மகிந்த அணி ஆதரவு வழங்கியிருந்தது. சுயேச்சைக் குழுக்கள், அந்தச் சபைகளில் போட்டியிட்ட இரண்டு பிரதான கட்சிகளையும் பின்தள்ளி வெற்றிகளைப் பெற்றுள்ளனர். (ற-5)

## வாக்களிப்பு...

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் இணைந்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலின்போது 61.56 சதவீத வாக்குப் பதிவாகியிருந்தது. நேற்று நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது 69 சதவீதம் வாக்குப் பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது 71.89 சதவீதம் வாக்குப் பதிவாகியிருந்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 75.66 சதவீதம் வாக்குப் பதிவாகியுள்ளது.

நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 62 சதவீதமும், கிளிநொச்சி மாவட்டத்தில் 76 சதவீதமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 சதவீதமும், மன்னார் மாவட்டத்தில் 77 சதவீதமும், வவுனியா மாவட்டத்தில் 72 சதவீதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன. (ற-5)

## வெடிகள்...

மாவட்டச் செயலகங்களிலேயே வெற்றி பெற்றவர்களது விவரங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. வட்டார ரீதியாக முடிவு அறிவிக்கப்பட்டமையால், ஒவ்வொரு பிரதேசங்களிலும் வெடி கொளுத்தி ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்ததை அவதானிக்க முடிந்தது. (ற-5)

## உத்தியோகபூர்வ...

வெளியிடப்படவில்லை.

இலங்கையில் முதன்முறையாக கலப்பு முறையில் தேர்தல் நடத்தப்பட்டது. வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குகள் எண்ணப்பட்டு அறிவிக்கப்பட்டது. வட்டாரங்களில் வெற்றிபெற்றவர்களது விவரங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் விகிதாசார ஆசனங்கள் பிரதான வாக்கு எண்ணும் நிலையத்திலேயே (மாவட்டச் செயலகம்) கணிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதான வாக்கு எண்ணும் நிலையங்களிலிருந்து நேற்று நள்ளிரவு வரையில் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப்படவில்லை. இதனால் உள்ளூராட்சி மன்றங்களை எந்தக் கட்சி கைப்பற்றியது என்று அறிய முடியாத நிலை காணப்பட்டது.

உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை இரவு 8 மணிக்கு தேர்தல்கள் திணைக்களம் வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. (ற-5)

## அறுதிப்...

ஏற்பட்டுள்ளது.

வட்டாரங்களில் வெளியான முடிவுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் காரை நகர் பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, கரவெட்டி பிரதேச சபை என்பவற்றிலும், இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மூன்று சபைகளில் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

விகிதாசார முடிவுகளுக்கு அமைய, யாழ்ப்பாணம் மாநகர சபையிலும் சில வேளைகளில் கூட்டணி ஆட்சி அமைக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## இடையூறு...

நன்றி தெரிவிக்கின்றேன். பல்வேறு சவால்கள், பிரச்சி னைகள், அழுத்தங்களுக்கு மத்தியில் மக்கள் எமது கட்சியின் வெற்றியை உறுதி செய்துள்ளனர்.

தோல்வியடைந்த தரப்புக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் வெற்றியாளர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட வேண்டும். பொதுஜன முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள் ஏனையோருக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்றுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் உத்தியோகபூர்வமான முடிவுகள் வெளியிடப்படாதபோதும், சிறிலங்கா பொதுஜன முன்னணி சில மாவட்டங்களில் முன்னணி வகிப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அம்பாந்தோட்டை, கம்பஹா, காலி, மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மகிந்தவின் மலர்மொட்டு முன்னணி வகிப்பதாக உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-5)

## கிழக்கில்...

கள் நேற்று நள்ளிரவு வரையில் வெளியிடப்படவில்லை. 3 சபைகளில் அறுதிப் பெரும்பான்மையை கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளவில்லை.

கூட்டமைப்புக்கு அடுத்ததாக, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன கூடுதலான வட்டாரங்களைக் கைப்பற்றியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## யாழ்ப்பாணத்தில்...

நேற்று இடம்பெற்றது.

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட குப்பிளான் வட்டாரத்தில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன சம அளவான வாக்குகளைப் பெற்றுக் கொண்டன. இரண்டு கட்சிகளுக்கும் 314 வாக்குகள் கிடைக்கப் பெற்றிருந்தது.

வட்டார வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்கு எல்லோர் முன்னிலையிலும் குலுக்கல் இடம் பெற்றது. குலுக்கலில், காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றார்.

(5.8)

## தீடீர் பலிக்கும் மந்திரம்

தீராத நோயா? தீரா கடனா? பசு மாடுகள் விருத்தி வேண்டுமா? ஒருவரை ஒருவர் வசியம் செய்யவேண்டுமா? வீட்டுக் காவல் செய்யவேண்டுமா? தேவைகளுக்கு,

**காலசித்தர் Rev, P.K. சாமி J. P. ஐயா**
மலையாள மாந்திரீக உச்சாட்ட பீடம்
இல. 23, மேபீல்ட் றோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு -13
T.P. 011 234 2463/64, Whatsapp 077 758 8405

(C 8419/15/17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மாவதி பாலசிங்கம்



யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி பாலசிங்கம் (2018.02.10) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி (முன்னாள் வின்சர் தியேட்டர் முகாமையாளர்) தங்கம்மா தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ் சென்ற பாலசிங்கம் (நாயன்மார்கட்டு) அவ ர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை சிவகாமிஅம்மை தம்பதியரின் அன்புமருமகளும் சரஸ்வதி (கனடா) ,லீலாவதி (லண்டன்), திலகவதி, கலாவதி (லண்டன்), சிவநாதன் (லண்டன்), கருணாவதி (ஜேர்மனி), ஆனந்தன் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், நித்தியானந்தன், மனோகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கலாநிதி சசிகலா (சிரேஸ்ட விரிவுரையாளர் கல்விப்பீடம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), மணிமேகலா (லண்டன்), உமா (ஜேர்மனி), சுமதி (வவுனியா), முரளிதரன் (லண்டன்) ,ராதை (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் குகமூர்த்தி (தொழில்நுட்பவியல் கல்லூரி மருதானை), பரயோகநாதன் (லண்டன்), வினோதராஜா (ஜேர்மனி) ,செல்வரட்ணம் (வவுனியா), ஜெயரூபி (லண்டன்), நிமலகுமார் (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் தாயினி (லண்டன்), வர்சினி (லண்டன்), விசாரதன், சாரங்கா, தனுஜா (ஜேர்மனி), மிதிலா (லண்டன்), வேதப்பிரியன், தாட்சாயினி (ஜேர்மனி), பிரியங்கா ,சாரிக்கா (கனடா), தமிழினி (ஜேர்மனி), ராம்பிரகாஸ் (லண்டன்), கஜானன் (கனடா) ,பிரதிஷ்சா (லண்டன்), கோகுலன் (லண்டன்), வினோத் (லண்டன்), மயூட்சன் (வவுனியா), வினோஜி, திலீபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் லிவிராம் (லண்டன்), டிகாரா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியிலிருந்து இரவு 7 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (12.02.2018) திங்கட்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2 மணிக்கு கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பி.ப. 4 மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த. அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பா. முரளிதரன்**
**திருமதி சசிகலா குகமூர்த்தி 236 7227**

(c/8554)(17.8)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27 | 08 |
| 02 | 02 |
| 1940 | 2018 |

## திருமதி நடராசா மேரிதிரேசா (தேவா)

(வேலணை மேற்கு, வேலணை - 06)

ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, 06 ஆம் வட்டாரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா மேரிதிரேசா (தேவா) கடந்த (08.02.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் நடராசா அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோணிப்பிள்ளை விசிறிற்றம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தன் வள்ளியம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற தவச்செல்வம் மற்றும் தேவமலர், ரவீந்திராதேவி, சசீலாதேவி (பிரான்ஸ்) ,சசிதேவி, சசீகரன், சுபாஸ்கரன் (பிரான்ஸ்), சிவாஸ்க்கரன், ரஜனிதேவி (லண்டன்), ராஜினி(பிரான்ஸ்)ஆகியோரின்அன்புத்தாயாரும்பகவதி, சித்திராவடிவேல், கணேசலிங்கம் ,உதயகுமார் (பிரான்ஸ்), அரியரெத்தினம், சத்தியேஸ்வரி, பாலகௌரி (பிரான்ஸ்), நிலானி, அரவிந்தன் (லண்டன்), ஜெயரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமியும் கீர்த்தனா ,நிஷாந், சுவின்சன், ரவின்சன், சுரேக்கா, சைலஜன், சிந்துஜா, சுஜானா, சௌமியா, சானுயா ,தனுசியா, தனுசன், சாருணியா, சஜின்வாஸ், கஜீபா, சுஜின், கேஜினா ,மிதுஸ், கனிஸ் ,கரிஸ், கிசோர் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கீர்த்திகா, அகல்யன், வைஸ்னா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி சிந்தாத்துரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலணை மேற்கு,**
**வேலணை - 06.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 2718954**

(cs.13792 ) (8.17)

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2993 திகதி: 10.02.2018 சனிக்கிழமை பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 33 | 35 | 53 | 67 | Z
போனஸ் இலக்கம்: 36
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 44,254,825/-

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 164
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.02.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,836,155/-

வெற்றி இலக்கங்கள்: 10 40 43 56 M

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 117
சீட்டிழுப்பு திகதி 10.02.2018 இளஞ்சிவப்பு

வெற்றி இலக்கங்கள்: 42 47 54 64
சுப்பர் இலக்கம்: 03
அதிர்ஷ்ட மாதம்: ஜூன்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 93, 75, 080/= | ரூ. 40, 37, 768/= | ரூ. 16, 31, 804/= |

2018.02.15 ஆம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## சிவராத்திரி நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் யாழ்ப்பாணம் சிவன் அறநெறிப் பாடசாலையின் ஆரம்பிப்பு நிகழ்வும் மகா சிவராத்திரி நிகழ்வும் சிவன் சனசமூக நிலையத்தில்(சிவன் கோவில் வடக்குவீதி,வண்ணார் பண்ணை) நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமைகாலை9மணிக்கு இடம்பெறவுள்ளன. நிலையத் தலைவர் க.சண்முகராஜன்தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக சித்த ஆயுள்வேத யோகாசனப் போதனாசிரியர், உலக யோகா கேந்திரா நிலைய இயக்குநர் சி.உமாசுதனும் சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரனும் கலந்து கொள்ளவுள்ளனர். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**கடந்த 02.01.2018 சிவபதம் அடைந்த எமது குல விளக்குகள்**




**அமரர் சின்னப்பொடியன் வேலாயுதம்**

**அமரர் நாகம்மா வேலாயுதம்**

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து எம் ஆற்றொணா துயரில் பகிர்ந்து அனுதாபங்கள் தெரிவித்த அனைத்துள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 15.02.2018 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வன்னியசிங்கம் வீதி,**
**கைதடி வடக்கு, கைதடி.**

**குடும்பத்தினர்.**

## இதய அஞ்சலி



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
பிரதமகுருக்கள்
**சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்**

யாழ் போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்று முற்பகல் 10.02.2018 காலை 10.00 மணியளவில் இறைபதமடைந்து விட்டார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.02.2018 முற்பகல் 10.00 மணியளவில் 8ம் கட்டை தெல்லிப்பழை அவரது இல்லத்தில் நடைபெறும்.

**துர்க்கா தேவி தேவஸ்தானம்.**

**நிர்வாக சபை.**

(IN 5830)(10)

# 90ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்தது யாழ்ப்பாணம் தோலகட்டி மண்ணில் உருவான செபமாலைத்தாசர் சபை

அருள்திரு லூபன் மரியாம்பிள்ளை

இலங்கையில் உருவான ஒரேயொரு துறவற சபை என்ற பெயருடனும் பெருமையுடனும் தோலகட்டி மண்ணில் உருவாகி 90 ஆண்டுகளை (1928-2018) நிறைவு செய்கிறது செபமாலைத்தாசர் துறவறசபை. இந்த சபையின் இந்த 90 ஆண்டுகால வாழ்வும் பணியும் பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

செபமாலைத்தாசர் சபையின் மாகாண முதல்வராக மூன்று தடவைகள் (1996-1999) (2000-2003) (2003-2006) பணியாற்றியவரும் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவராக இந்தியாவில் உள்ள தலைமைப் பீடத்தில் 2006 முதல் 2012 வரை பணியாற்றியவருமான ஏ.எம்.ஞீபன் அடிகளார் இந்த ஆக்கத்துக்கான தகவல்களை வழங்கினார்.

**கொண்டாட்டங்கள் ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில்**

90ஆவது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டங்கள் கடந்த 2ஆம் திகதி ஓய்வு நிலை ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் அருள் ஆச்சிரமத்தில் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. கடந்த முதலாம் திகதி யாழ். ஆயர் கலாநிதி யஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் செபமாலைதாசர் சபை குருவான எம். நிமல்ராஜன் அடிகளாரின் தயாரிப்பில் உருவான உனக்குள்ளே நான் என்ற இறுவட்டு வெளியிடப்பட்டது. இந்த இறுவட்டு 04 பெப்ரவரி 2018 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மனுவேல் பெர்னான்டோ ஆண்டகை தலைமையில் முருங்கன் டொன் பொஸ்கோ இல்லத்தில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டவர் தோமஸ் அடிகள்**

எலும்பும் தோலுமாக நலிந்து மெலிந்த தோற்றத்துடன் ஒரேயொரு சுவாசப்பையுடன் பிறந்து (1886 மார்ச் 07). சுவாசிக்கவே திணறிக்கொண்டு ஒரு சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டு அன்றைய தினமே திருமுழுக்கு பெற்று 78 ஆண்டுகள் வாழ்ந்து (1886 - 1964) முதல் சுதேச தியான யோக செபமாலைத்தாசர் சபையை குருக்களுக்கும் கன்னியர்களுக்கும் நிறுவி ஆசியாவின் ஜோதி என அழைக்கப்படுபவர் யாழ். பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் தவத்திரு பி.ஏ.தோமஸ் அடிகளார். பிறப்பிலிருந்தே நோயாளியான இவர் அன்றாடம் நோயோடு போராட வேண்டிய ஒருவராகவே இருந்தார். ஆனால் யாருக்குமே பாரமாகாமல் எந்தப் பணியிலுமே குறைவிடாமல் இறுதி வரை பயணித்தார் என்றே அறிய வருகிறது. திரு. திருமதி பஸ்தியாம்பிள்ளை லூசியா தம்பதிகளின் முதல் ஆண் குழந்தை பிறந்த உடன் இறந்து இரண்டாவது குழந்தையான அந்தோனிப்பிள்ளை என்ற நாமம் பூண்ட தோமஸ் அடிகளாரின்



நிலையும் கவலைக்கிடமாய் இருந்தமையால் பெரும் அங்கலாப்பே நிலவியது. ஆனால் இறைவன் ஆறு ஆண்கள் கொண்ட ஏழு குழந்தைகளால் அந்தக் குடும்பத்தை ஆசீர்வதித்ததோடு உயிர்வாழ மாட்டார் எனக்கருதப்பட்டவரை பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை தோமஸ் அமதி அடிகளார் என்ற நிலைக்கு உயர்த்தி தம் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

ஆரம்பக் கல்வி புனித சாள்ஸ் ஆரம்பப்பள்ளி (1893 ஜீலை 20) புனித பத்திரிசியார் கல்லூரி புனித மாட்டினார் குருமடம் (1904) சீனியர் கேம்பிறிச் பாடசையில் தேர்ச்சி (1904) அரசதுறை எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி (1904) நவசன்னியாசம் கொழும்பு அலோசியஸ் நவதுறவு இல்லம் (1907) துறவற அர்ப்பண வார்த்தைப்பாடு (1910 பெப்ரவரி 02) குருப்பட்டம் (1912 ஜனவரி 06) அந்தோனிப்பிள்ளை என்னும் பெயர் தோமஸ் என மாற்றம் செபமாலைத்தாசர் தியான யோக துறவுசபை தோலகட்டியில் நிறுவல் (1928 பெப்ரவரி 02) கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் சபை வசாவிளானில் நிறுவல் (1948 செப்ரெம்பர் 8) குருத்துவப் பொன்விழா (1962) இறப்பு (1964 ஜனவரி 26) என இவரின் வாழ்வும் பணியும் 78 ஆண்டுகள் (1886 - 1964) வேகமாக முடிந்தன. மெலிந்த உடல், சாந்தமான தோற்றம், வட்டக் கண்ணாடி, தாடி நிறைய வளர்ந்த முகம், நிமிர்ந்த பார்வை, கையினில் செபமாலை, நிதானமான நடை, அன்பான பேச்சு என்பன எல்லாம் இவரை ஒரு முனிவராகவே இனம் காட்டின.

**ஆசியாவில் முதல் தியான யோக துறவு சபை**



இலங்கை நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துள்ளன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்து இங்கு உருவானவை. ஆசியாக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் நிறுவப்பட்ட தியான யோகசபை என்றால் இறையடியார் பி.ஏ தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே ஆகும். குருப்பட்டத்தின் பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்து மாணவர்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட தோமஸ் அடிகளாருக்கும் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஜே.ஏ.கியோமர் அமதி அடிகளாருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அப்போது இருவரும் தியான யோக துறவு சபைகள் ஆசியாவில் தோற்றம் பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். ஜே.ஏ.கியோமர் அமதி அடிகளார் யாழ் ஆயராக 1924 ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். 1926 பெப்ரவரி 28 ஆம் திகதி 11ஆம் பத்திநாதர் பாப்பரசர் திருச் சபையின் பணிகள் என்ற சுற்றுமடலில் கீழைத்தேய நாடுகளில் நடைபெறும் மனம் திரும்பல் பணிக்குச் செபதபதுறவு கொண்ட துறவற சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். ஆயர் ஜே.ஏ.கியோமார் ஆண்டகை தோமஸ் அடிகளாருடன் தாம் கொண்டிருந்த எண்ணப்பாட்டை மனதில் கொண்டு இந்தப் பணியைத் தோமஸ் அடிகளாரிடமே ஒப்படைத்தார்.



**ஆறு இளைஞர்களுடன் செபமாலைத்தாசர்சபை**

திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பாப்பரசர் யாழ். ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமார் ஆண்டகை தோமஸ் அடிகளார் ஆகிய மூவரையும் யாழ். மண்ணில் தியான யோக சபை ஒன்றை உருவாக்கத் தூய ஆவியானவர் ஒரே நேரத்தில் இயக்கினார் எனலாம். 1928 பெப்ரவரி இரண்டாம் திகதி ஆறு இளைஞர்களுடன் தோலகட்டியில் செபமாலைத்தாசர் சபை ஆரம்பிக்கப்பட்டது. விவசாயம், தச்சுத்தொழில், மேசன் வேலை, நெசவு வேலை, சோப் தயாரித்தல், பாலில் இருந்து தயிர் மோர் வெண்ணை தயாரித்தல், களி மண்ணில் இருந்து சட்டி பானை சொரூபம் செய்தல், வையின் வகைகள் மெழுகுதிரி திருப்பலிக்குப் பாவிக்கப்படும் ஒஸ்தி செபமாலை போன்றவற்றை தயார் செய்ததோடு ஆடு மாட்டுப் பண்ணை கோழிப்பண்ணை புறா லவ்பேட்ஸ் முயல் போன்றவற்றையும் வளர்க்கத் தொடங்கினர். நெல்லி முந்திரிகை மாதுளை நாவல் தோடை அன்னாசி எலுமிச்சை போன்ற பழ வகைகளில் இருந்தும் நன்னாரி போன்ற வேர் வகைகளில் இருந்தும் குளிர்பானம் தயாரித்தனர். பழ மரங்கள் கிழங்கு வகைகள் காய்கறி வகைகள் என்பவற்றோடு மிளகாய் மல்லி சீரகம் போன்ற பயிர் வகைகளையும் பயிரிட்டனர்.

ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு சமூகப் பொருளாதார சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் களைதல் சாதிக்கொடுமை மற்றும் தீண்டாமை என்பவற்றை ஒழித்தல் என அன்றைய சமுதாயத்தில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தினார். வாழ்வில் துன்புற்ற மக்களுக்கு ஒரு புதிய விடியலைத் தோமஸ் அடிகளார் காட்டினார். செபமாலைத்தாசர் சபையினரின் தியாகம் நிறைந்த அர்ப்பண வாழ்வு உலக மக்களின் பாவமன்னிப்புக்காகச் செபித்தல் மற்றவர்களுக்காக நாள்தோறும் வேண்டுகின்ற செப உதவி தொழில் வாய்ப்பு என்பவற்றை அறிந்து மத பேதமின்றி பலரும் தமக்காக செபிக்கும்படி வேண்டவும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் இவர்களின் உற்பத்திப் பொருள்களை வாங்கவும் என வந்து குவியத் தொடங்கினர்.

**செபமாலைத்தாசர் சபையின் இன்றைய நிலை**

ஆண்களுக்கான சபை இலங்கையில் யாழ்ப்பாணம் கொழும்பு, கண்டி, மன்னார், இரட்ணபுர ஆகிய மறைமாவட்டங்களிலும் வட இந்தியாவில் மத்திய பிரதேசம் ஜபல்பூர் சாராம், ஜல்பைபுரி, அம்பிகபுர், ஒரிசா, கேரளாவில் கண்ணூர், வெள்ளிக்குளங்கர, பெத்தேரி, கர்நாடகாவில் பெங்களூர் கார்மேலாம், ஆந்திராவில் ஏலூரா, மறைமாவட்டம் தமிழ்நாட்டில் திருச்சி சென்னை தூத்துக்குடி செங்கல்பட்டு தஞ்சாவூர் ஆகிய மறைமாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. கனடாவில் லண்டன் ஒன்றாரியோ என்னுமிடத்தில் செபமாலைத்தாசர் [illegible] ஏ.எம்.ஞீபன் அடிகளார் உயர் தலைவராக இருந்த போது நிறுவப்பட்டுள்ளது. பெண்களுக்கான சபை இலங்கையில் அச்சுவேலி, சாவிளான், யாழ்ப்பாணம், தேவத்தை புத்தளம், மன்னார், இந்தியாவில் திருச்சி தூத்துக்குடி சென்னை பெரிய பாளையம் வட இந்தியாவில் அம்பீகபூர் ஜகல்பூர் பெங்களூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

தோமஸ் அடிகளார் விரைவில் புனிதர் பட்டம் பெற இலங்கையின் புனித [illegible]

> ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு சமூக பொருளாதார சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் களைதல், சாதிக்கொடுமை மற்றும் தீண்டாமை என்பவற்றை ஒழித்தல் என அன்றைய சமுதாயத்தில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தினார். வாழ்வில் துன்புற்ற மக்களுக்கு ஒரு புதிய விடியலைத் தோமஸ் அடிகளார் காட்டினார். செபமாலைத்தாசர் சபையினரின் தியாகம் நிறைந்த அர்ப்பண வாழ்வு உலக மக்களின் பாவமன்னிப்புக்காகச் செபித்தல், மற்றவர்களுக்காக நாள்தோறும் வேண்டுகின்ற செப உதவி தொழில் வாய்ப்பு என்பவற்றை அறிந்து மத பேதமின்றி பலரும் தமக்காகச் செபிக்கும்படி வேண்டவும் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் இவர்களின் உற்பத்திப் பொருள்களை வாங்கவும் என வந்து குவியத் தொடங்கினர்.

# உடம்பில்உள்ள வேண்டாதகழிவுகளை வெளியேற்றும்வெந்நீர்



தண்ணீர் பருகுவதன் நன்மை எமக்குத் தெரியும். உடலியல் செயல்பாடுகள் சீராக இருக்க போதுமான தண்ணீர் குடிப்பது அவசியம். அதேபோல, வெந்நீர் பருகுவதும் பல நற்பயன்களை அளிக்கிறது.

வெந்நீர் குடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு, அஷீரணத்தினால் ஏற்படும் தலைவலி குறையும்.

உணவு உண்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு வெந்நீர் குடித்துவந்தால் உடல் எடை குறையும்.

வாயுத் தொல்லை உள்ளவர்கள், சுக்கு கலந்த வெந்நீர் பருகினால் வாயுத் தொல்லை நீங்கும்.

அடிக்கடி தாகம் எடுக்கிறது என்பவர்கள், பச்சைத் தண்ணீருக்குப் பதிலாக வெந்நீர் பருகலாம்.

உடம்பில் உள்ள வேண்டாத கழிவுகளையும் வெந்நீர் வெளியேற்றும்.

கால் வலி உள்ளவர்கள், கால் பொறுக்கும் சூட்டில் ஒரு பாத்திரத்தில் வெந்நீர் விட்டு, அதில் 2 தேக்கரண்டி கல் உப்பை போட்டு கலக்க வேண்டும். பின்னர் அதில் பாதங்களை 15 நிமிடங்கள் வைத்து எடுத்தால் கால் வலி குறையும்.

மிருதுவான சருமம் பெற, ஒரு தேக்கரண்டி பார்லியில் வெந்நீரை ஊற்றி, அடிக்கடி குடித்து வரலாம்.

விருந்துச் சாப்பாடு சாப்பிட்டவர்கள், ஒரு டம்ளர் வெந்நீர் குடித்தால் எளிதில் செரிமானம் ஆகும்.

# வேர்க்கடலை பக்கோடா செய்வது எப்படி

**தேவையான பொருட்கள்**

காய்ந்த, வறுக்காத வேர்க்கடலை - 200 கிராம்
கடலை மாவு - 100 கிராம்
அரிசி மாவு - 50 கிராம்
மிளகாய்த்தூள் - ஒரு கரண்டி
மஞ்சள்தூள் - கால் கரண்டி
பெருங்காயத்தூள் - கால் கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு,
வெண்ணெய் - ஒரு கரண்டி
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - பொரிக்க தேவையான அளவு




**செய்முறை**

வேர்க்கடலையுடன் வெண்ணெய், கடலை மாவு, அரிசி மாவு, உப்பு, பெருங்காயத்தூள், மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், கறிவேப்பிலை சேர்த்து நன்றாகப் பிசிறி, தண்ணீர் சேர்த்து கெட்டியாகக் பிசைந்து கொள்ளவும்.

சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் அதில் கலவையில் சிறிது எடுத்து உதிர்த்தாற் போல் போட்டு, பொரித்து எடுக்கவும்.

சூப்பரான வேர்க்கடலை பக்கோடா தயார்.

# இயற்கை மருத்துவமும் கற்றாழையும்



கற்றாழை இயற்கை எமக்குக் கொடுத்த கொடைகளில் ஒன்று கற்றாழை, பல்வேறு மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது. கற்றாழை உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் காஸ்மெட்டிக் பொருள் உற்பத்தியிலும், மருத்துவத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சோற்றுக் கற்றாழை மடல்களைப் பிளந்த நுங்குச் சுளை போல உள்ள சதைப் பகுதியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி நல்லதண்ணீரில் 7-10 முறை நன்றாகக் கழுவி எடுத்துக் கொண்டு மருந்தாகப் பயன்படுத்த வேண்டும்.

**கூந்தல் வளர**

கற்றாழையின் சதைப் பகுதிகளை சேகரித்துக் கொண்டு, அதில் சிறிது படிக்காரத் தூளை தூவி வைக்கவும், சிறிது நேரம் கழித்து பார்த்தால் சதையில் உள்ள நீர் பிரிந்து விடும்.

இதில் நீருக்கு சமமான அளவு நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்து நன்கு சுண்டக் காய்ச்சி வைத்துக் கொண்டு தினசரி தடவினால் கூந்தல் உதிர்வது நின்று, நன்கு அடர்த்தியான முடியினைப் பெறலாம்.

**தாம்பத்திய உறவு மேம்பட**

சோற்றுக் கற்றாழை வேர்களை சிறிய துண்டுகளாக வெட்டி சுத்தம் செய்து, பானையில் பால் விட்டு வேர்களைத் தட்டில் வைத்துப் பால் ஆவியில் வேகவைத்து எடுத்து, நன்கு காயவைத்துப் பொடி செய்து வைத்து கொண்டு, தினசரி ஒரு தேக்கரண்டி பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால், தாம்பத்திய உறவு மேம்படும்.

**குளிர்ச்சி தரும் குளியலுக்கு**

கற்றாழையின் சோற்றுப் பகுதியை எடுத்து அதில் நல்லெண்ணெய் சேர்த்து கடும் வெயிலில் 30 தினங்கள் வைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும், எண்ணெயை பசுமை நிறமாக மாறிவிடும். இதனை குளியலுக்கு பயன்படுத்தினால் உடலில் உள்ள சூடு நீங்கி குளிர்ச்சியாக இருக்கும்.

**முகத்திலுள்ள கரும்புள்ளிகள்**

தழும்புகள், வெயில் பாதிப்புகள், உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும் சிறிது கற்றாழைச் சாறை தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.

இதன் சாறை இரவு வேளையில் முகத்தில் தேய்த்து காலையில் வெந்நீரால் கழுவ முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பொலிவு பெறும்.

**தோல் பளபளக்க**

கற்றாழையை மஞ்சளோடு சேர்த்து அரைத்து முகம் கழுத்து கை கால்களில் தடவி சில மணி நேரத்துக்குப் பின்னர் வெந்தய நுரை கொண்டு தேய்த்து குளித்தால் உடல் பளபளப்பாகும், தோல் நோய் வராது.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 500 | 500 | 400 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 500 | 400 | 600 | 400 |
| விளை | 500 | 450 | 500 | 350 |
| முரல் | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 400 | 300 | 550 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | – |
| சூடை | 150 | 150 | 160 | 150 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 300 | 100 |
| கொய் | 150 | 100 | 50 | 100 |
| பாலை | 150 | 300 | 400 | 400 |
| வாளை | 150 | 250 | 350 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | கன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 90 | 60 | 80 | 20 |
| கத்தரி | 120 | 130 | 50 | 80 | 40 |
| மரவள்ளி | 80 | 50 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 150 | 150 | 170 | 100 | 120 |
| பாகல் | 140 | 200 | 140 | 100 | 140 |
| க.கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 30 |
| பெ.வெங்காயம் | 120 | 140 | 160 | 100 | 120 |
| சி.வெங்காயம் | 200 | 350 | 160 | 180 | 140 |
| பூசணி | 60 | 50 | 50 | 50 | 40 |
| தக்காளி | 100 | 80 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 60 | 60 |
| கீரை | 30 | 40 | 15 | 10 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 30 |
| ப.மிளகாய் | 120 | 120 | 120 | 80 | 60 |
| புடோல் | 100 | 70 | 80 | 100 | 40 |
| கோவா | 60 | 70 | 60 | 60 | 40 |
| வெண்டி | 100 | 100 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 170 | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 200 | 200 |
| தேங்காய் | 100 | 80 | 80 | 100 | 90 |
| உ.கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 60 |
| தேசிக்காய் | 40 | 40 | 60 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 180 | 180 | 160 | 160 | 100 |
| கரட் | 100 | 150 | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 800 | – | 1200 | 600 | – |




# இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. 900 ரூபாவுக்கு அவை விற்பனை செய்யப்படு கின்றன.

## வருடாந்த மகோற்சவம்

துன்னாலை அருள்மிகு கோவிற்கடவைப் பிள்ளையார் கோவில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். பெருந்திருவிழாவை கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ பூரண சுதா கரக்குருக்கள் பிரதம குருவாக அருந்து நடத்தி வருகின்றார். (எ-173)

*********************

பருத்தித்துறை கொட்டடி திருவருள் சிறி சித்தி விநாயகர் கோவில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை சிவராத்திரி தினத்தின்று வேட்டைத்திருவிழாவும் 14ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். 15ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவு பெறும். (எ-173)

*********************

சரித்திர பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வர சுவாமி திருக்கோவில் மகாசிவராத்திரி பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை 8மணிக்கு இடம் பெறும். அன்றையதினம் சிவராத்திரி நான்கு சாமப் பூசைகளும் நடைபெற்று மறுநாள் 14ஆம் திகதி புதன்கிழமை தீர்த்த உற்சவம் இடம் பெறும். (173)

## மகாசிவராத்திரி வழிபாடுகள்

வடமராட்சி,பெப்.11

பருத்தித்துறை கற்கோவளம் எல்லை ஒழுங்கை பகவான் சிறி சத்தியசாயி சேவா நிலையத்தின் சாயிசுரபியில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 6.30 மணிமுதல் மகாசிவராத்திரி வழிபாடுகள் இடம்பெறும். அன்றையதினம் இரவு 8 மணிமுதல் முதலாம் சாமப்பூசையும், 10.50 மணிக்கு இரண்டாம் சாமப்பூசையும், நள்ளிரவு 12 மணிக்கு மூன்றாம் சாமப்பூசையும் அதிகாலை 4.30 மணிக்கு நான்காம் சாமப்பூசையும் இடம்பெறும்.

அத்துடன் அன்றைய தினம் இரவு முழுவதும் அபிசேகம், பஜனை, கணபதி ஹோமம், ஶ்ரீரத்ர ஹோமம், திருப்பள்ளி எழுச்சி ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-173)

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் சந்தியிலிருந்து கிழக்கு வீதியில் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பாரதி கடைக்கு பக்க வீதியில் 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 076 697 2287

**தவறவிடப்பட்டுள்ளது**

837152810 V இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டையும் NSB, BOC ஆகிய வங்கி கணக்கு புத்தகமும் 03.02.2018 அன்று சுன்னாகம் K.K.S. வீதி பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத் தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (CS13795)(13.17) - 077 398 7102

**வீடு விற்பனைக்கு**

வடமராட்சி, மந்திகை, குரும்பகட்டி வைரவர் கோயிலுக்கு அண்மையாக 3½ பரப்புக் காணியிலமைந்த சகல வசதிகளுடன் கூடிய 5 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு.

(ACO/157)(11.17) 075 082 5430

**வீடு வாடகைக்கு உண்டு**

K.K.S. வீதியில் கொக்குவில் சந்திக்கு அருகில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக மற்றும் சிறு குடும்பத்திற்கு ஏற்றது.

075 236 0627, 077 711 0619 (CS/13787)(16.17)

**வீடு வாடகைக்கு உண்டு**

Brown றோட்டில் விசேட வைபவங்களிற்கும் மாதம், நாள் அடிப்படையில் கொடுக்கப்படும் தனி அறைகளும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு - 077 545 1358, 076 495 6123

## உறங்காத நினைவலைகளில் அகவை பதினெட்டில்



**அமரர் முருகேசு நடராஜலிங்கம்**

(ஓவுபெற்ற இ.மி.ச. உத்தியோகத்தரும், "இந்திர தீபம்" உரிமையாரும்)

பாச உறவு 19.12.1944

பாசப் பிரிவு 01.03.2000

திதி: ஏகாதசி தேய்பிறை

ஏற்றமுடன் நேற்றுவரை எமதருகில் இருந்த முகம்
இன்று அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில்
சுடர்விட்டுக் கொண்டிருக்கும் குலவிளக்கே!
மண்வாழ்வை வெறுத்து விண் வாழ்வை விரும்பி
விண்ணோடு கலந்ததேனோ?
இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

முகவரி: நீலர் வளவு, தும்பளை.

என்றும் அன்புடன் தி.பிருந்தயன், தி.கபிசாயினி, தி.டினோத்யன்.

உறங்காத நினைவுடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(AJA1 13738 -13.17)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 . 03 . 1985

ஆண்டவன் அடியில் 11 . 02 . 2007

**செல்வன் பத்மகாந்தன் சஞ்ஜீத்**

(பழைய மாணவன் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
S.S.M.Engineering College - Selam India

திதி: 09.02.2018

விரைந்து மறைந்தது ஆண்டுகள் பதினொன்று
ஆண்டுகள் எத்தனை ஓடிமறைந்தாலும்
மறையாது எங்கள் சுகமெங்கும் உந்தன் நினைவலைகள்
கரைந்து இதயம் கனத்தாலும்
கடவுள் இறையடி தொழுகின்றோம்
கண்ணீர்ப்பூக்கள் சொரிகின்றோம்


ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

புனிதவாசம் மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர். 5-4/3, 42 ஆவது லேன் கொழும்பு - 06

(CS 00311)(04.17)

## பன்னிரெண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09 . 04 . 1940

சிவன் அடியில் 25 . 01 . 2006

**அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்**

(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் - ஸ்தாபகர், சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

திதி : அபரபக்க ஏகாதசி (11.02.2018)

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன்
வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D. 1/1, சென்றல் றோட், கொழும்பு 12.
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 25 ஆவது திருமண நாள் வாழ்த்து



Congratulations!

**திரு. வே. மென்டிஸ் & மெ. கலைவாணி மெளறின்**



Best Wishes

இல்லறம் என்னும் நல்லறம் தனிலே
வெள்ளி விழா நாயகராய் வீற்றிருக்கும்
எம் அன்பு பெற்றோரே தாம்
ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரோடி
மூங்கில் போல் முடிவில்லாது வாழ்கவென
அன்போடு வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள், பேரன், மருமகன், அம்மா, சகோதரர் குடும்பம்.

## சவுதி அரேபியா

## தாதிகள் ( Nurses )

**(100 பேர்)**



மாத சம்பளம் சவுதி றியாழ் 3000/-

ரூபா. 120,000/-

1 SR = Rs. 40/- ( Subject to change according to the exchange rate )

விதிமுறைகளும், நிபந்தனைகளும்:

- உணவு,தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து இலவசம்.
- 2 வருட ஒப்பந்த காலம்
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலமும், வாரத்தில் 6 நாட்கள் வேலை
- தகுதிகாண் காலம் 3 மாதம்
- ஒப்பந்த கால முடிவில் நாடு திரும்ப விமானப்பயண டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

தொடர்புகளுக்கு:

0112681212 | 0112684433 | 0773103100

AL1316/Advt/04/18

கிவ் பி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

இல:6, கலாநிதி மிலினா சுமதிபால மாவத்தை, புஞ்சிபொறளை, கொழும்பு -10. அரச அனுமதிப்பத்திர பதிவிலக்கம்: 1316

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 03 . 03 . 1958

இறப்பு 20 . 02 . 2009

**அம்பலவாணர் பரமநாதன்**

(பொறியியல் உதவியாளர்- தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.)

திதி:11.02.2018

அன்புள்ள அப்பா!
காலங்கள் கடந்து காற்றினில் கரைந்து
ம்றைந்து நீங்கள் போனாலும்
என்றும் எங்களோடு இருங்கள்!

அன்புடன் **பிள்ளைகள்.**

(CS/13780)(10)

## மரண அறிவித்தல்

## இலட்சுமி வேலுப்பிள்ளை



மயிலணி வடக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி வேலுப்பிள்ளை நேற்று (10.02.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னக்குட்டி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவரான சீனியர், சின்னத்தம்பி மற்றும் பவளம் ஆகியோரின் சகோதரியும், சந்திரகுமார் (இ.மி. சபை), இந்திரகுமார், ரவீந்திரகுமார் (யாழ். போதனா வைத்தியசாலை), சாரதா (ஜேர்மன்), ஜெயதரன் ஆகியோரின் அன்புத் தாயும், கௌரி, ஜெயச்சித்ரா, மாலினி, ரவிக்குமார் ஆகியோரின் மாமியும், அமல்ராஜ், (Engineer) லக் ஷியா, தாரகன், கேதுசா, டென்சிகா, லக்சயன், டசோனா, ஹர்சன் ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் (மயிலணி வடக்கு, சுன்னாகம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs.13781) (13.17)

தகவல் : குடும்பத்தினர்.

077 863 2162



# கொடியது முதுமையில் தனிமை

சி.நற்குணலிங்கம்

ஒரு மனிதனின் தனது வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். மனிதனது வாழ்க்கைப் பருவம் அவனது ஆயுள்காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றமடைந்து கொண்டிருக்கும். இந்த வாழ்க்கைப் பருவத்தில் முதுமைப் பருவம் வாழ்க்கையின் கடைசிக்காலமாகும். வாழ்நாள் முழுவதும் குடும்பத்துக்கா கவே உழைக்கும் பெற்றோர் கடைசிக் காலத்தில் அந்தக் குடும்பத்தாராலேயே புறக்கணிக்கப்படுவது முதுமையில் மிகவும் கொடியதான தனிமையை தோற்றுவிக்கின்றது. அவயங்கள் ஒவ்வொன்றாகப் பலவீனமடைந்துவரும் முதுமைக்காலத்தில் தனிமையும் சேருமாயின் வாழ்க்கை நொந்துபோன நிலமைக்கு அப்படியே மாற்றம்பெற்றுவிடும். முதியோர்கள் எந்தவித வாய்ப்புக்களும் அற்ற தனிமரமாக வாழவேண்டியவர்களாவர். முதியோர் இல்லங்களில் சேர்த்து விட்டாலும்கூட பிள்ளைகள், உறவினர்கள் அற்ற தனிமைவாட்டும்.

### தமது தேவைகளுக்காக முதியவர்கள் ஏனையவரைச் சார்ந்திருத்தல் கொடிது

முதியவர்கள், தள்ளாத தமது வயதில் தத்தம் தேவைகளுக்காக மற்றவர்களை சார்ந்திருப்பதும் மிகவும்கொடுமையானது. வேகமான வாழ்க்கைமுறை மாற்றங்களைக் கண்டுவரும் இன்றைய உலகில் உண்மையான அன்புக்கோ, பாசத்துக்கோ மதிப்பு இல்லை. முதியவர்கள் குழந்தையைப் போன்றவர்கள். முதுமையில் இரண்டாவது குழந்தைத் தன்மையை பெறும் முதியவர்கள் தனிமைப்படுத்தப்படாது பிள்ளைகளால் பேணப்பட வேண்டியவர்க்ள். இவர்கள் எமது வாழ்வியலின் பொக்கிசங்கள், முதுகெலும்புகள். எனவே மதிப்பும் மரியாதையும் வழங்கி தனிமையைப் போக்கி முதியோர்க்கு உதவும் கரங்களாக மாற வேண்டும்.

முதியோர் இல்லாதவீடுகள், கருவறை இல்லாத கோயில் போன்றது. முதுமையில் தனியாகும் போது தவிக்கும் நிலை ஏற்படும் இவ்வாழ்வியல் கோலங்களில் அவலக் கோலங்களையே காணமுடியும். உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் நோய்களின் தாக்கத்தினால் உடலிலும் அதனால் எழும் மன அழுத்தங்காலும் உள்ளத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.. இந்த மாற்றங்கள் அவர்களை ஒரு பரிதவிப்புக்கு உள்ளாக்குகின்றது. இந்தப் பரிதவிப்பே முதுமையின் அவலமாகப் பார்க்கப்படுகிறது. அன்பாக நேசிக்கப்பட்டவர்கள் வேண்டத்தகாத பொருளாகக் கழித்துவிடப்படுவது அவர்களை ஜடமாக்குகின்றது.

### முதுமையைப் புரிந்துகொள்ள நாம் முன்வருதல் அவசியம்

முதியவர்களைப் பராமரிப்பது பெரும் சுமையாகப் பிள்ளைகள் கருதுகின்றனர். முதுமை எப்போதும் பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்கும், சொன்ன விடயங்களை திரும்ப திரும்பச் சொல்லிக்கொள்ளும். அடிக்கடி சினம்கோபம் ஏற்படும். புரிந்துகொள்ளும் திறன் குறைவாகக் காணப்படும். மனக்குழப்பம், பயம் காணப்படும். பொருள்களை அடிக்கடி இடமாற்றி வைப்பார்கள். மாற்றிய இடத்தை மறந்துவிடுவார்கள். வைத்த இடத்தை மறப்பதால் வேறு யாரோ பொருளை எடுத்தாகக் கருதுவார்கள். இவர்களை பொறுமையாக கையாள முடியாத பிள்ளைகள் முதுமையில் தனிமைப்படுத்த விரும்புகிறார்க்ள. சிலர் அவர்களை அடக்கிவைப்பதற்கு ஆயுதமாக வைத்தியம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். ஆரோக்கியமற்ற முதுமையுடன் புறக்கணிப்பு, தனிமை என்பவை சேர்ந்துவிட்டால் அந்த முதுமையை வாழ்ந்து கடப்பதில் அர்த்தமில்லை. தூக்கமின்மை, சமநிலையற்ற உடல்தன்மை, இவற்றைத் தகுந்தமுறையில் கையாள்வதென்பது சவாலாகத்தான் இருக்கும். அன்புக்காகவும் பாசத்துக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்கும் முதியோர் அவை கிட்டாதபோது வாழ்வில் பிடிப்பும், சந்தோசமும், மனஅமைதியும் அற்றவர்களாக இயற்கைக்கு மாறான ஒரு துன்ப நிலைக்கு தள்ளப்படுவர். மனவியல் நிபுணர்கள் "தனிமை உணர்வு என்பது உங்களை நீங்களே விரும்பாத நிலை' என்பர். பேச நேரமில்லாமல் ஓடியோடி உழைத்து குடும்பத்தைப் பார்த்தவர்கள் இறுதியில் பேச ஆளில்லாமல் முதுமையைக்கழிப்பது என்பதுகடினமானதாகும். ஆனால் ஜப்பானில் முதியவர்களை பராமரிக்க என றோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.


### முதுமையில் தனிமை ஒருபோதும் கூடாது

மனதில் காயம் ஏற்பட்டால் அவர்களது உடல்வலிகளின் விளை நிலமாகி விடுகிறது. வலி உணரும் நேரங்களிளெல்லாம் துயரங்களின் துருவங்களுக்கே சென்றுவிடுவார்க்ள. மூளையிலோ இதயத்திலோ எங்கு பாரத்தை அதிகளவில் வைத்தாலும் வலி கிடைப்பது உறுதி. முதியோரை உடல்ரீதியாகப் பார்க்காதீர்கள். உணர்வு ரீதியாகப் பாருங்கள். முதுமையில் தனிமைத்தாகம் வாட்டுமானால் வாழ்வு வறள்நிலமே. உள்ளத்தில் உள்ளதைப் பேச ஆளில்லையெனில் தனிமையே கொடுமை. முதுமையில் தனிமை முனிவனுக்கும் கொடுமை. உறவின்றி வாழ்வது உயிரற்ற வாழ்வாகும். இளமைப்பருவத்தில் என்பிள்ளையுடன் நடக்கையில் அவர்களுக்காக பக்குவமாக நடக்கிறேன். பின்பு முதுமையில் அவர்கள் எனக்காக பக்குவமாக என்னை நடத்துவார்கள் என்ற நம்பிக்கையில் "உங்கள் மீது யார் நம்பிக்கை வைத்திருக்கிறார்களே. அவர்களை ஏமாற்றாதீர்கள்" என்றார் சுவாமி விவேகானந்தர்.

முதுமையில் தனிமை பிரிவை நினைவுபடுத்தும் ஒருசூழ்நிலையாகும். பிரிவு நொடிப் பொழுதில் தனிமையைப் புரியவைத்துவிடும. அதுவே பலருக்கு வாழ்க்கையை முடித்துவிடும். முதியோரின் வாழ்வு முடியுமளவுக்கு பிள்ளைகள் வாழ்ந்துதான் என்ன? பிள்ளைகள் பேசிய பேச்சுக்களை எண்ணி எண்ணி ஒப்பாரி வைக்கிறார்கள். தமது ஏக்கங்களுக்கு பதிலற்றுவாழ்கிறார்கள். காயங்கள் உருவாக கத்திகள் தேவையில்லை. பதிலற்ற வார்த்தைகளே போதும் வலிக்க, வலிக்க நின்ற கொல்லும். பிள்ளைகளின் பல்வேறு சுதந்திரங்களுக்கு இவர்கள் தடைக்கறகளாக இருப்பதும் தனிமைப்படுத்தலுக்கான காரணமாகும். தன்னால் உதவிபெற்றவர்கள் முதுமையின் இயலாமையின்போது உதவவேண்டும் என எதிர்பார்ப்பது தவறல்ல.

உலகில் மூத்தோர்கள் மிக மகிழ்வாக இருக்கும் நாடு டென்மார்க்காகும். அங்கு வாழ நாம் கொடுத்து வைக்கவில்லை. எனினும் உங்கள் முதியவர்களை கடைசிக்காலத்தில் தனிமைப்படுத்துவதை விடுத்து நீங்களே அவர்களை அன்புடன் பராமரியுங்கள். நீங்கள் அவர்களுக்கு செய்யும் கைமாறு அதுவாகத்தான் இருக்க முடியும்.

“ வேகமான வாழ்க்கைமுறை மாற்றங்களைக் கண்டுவரும் இன்றைய உலகில் உண்மையான அன்புக்கோ, பாசத்துக்கோ மதிப்பு இல்லை. முதியவர்கள் குழந்தையைப் போன்றவர்கள். முதுமையில் இரண்டாவது குழந்தைத் தன்மையை பெறும் முதியவர்கள் தனிமைப்படுத்தப்படாது பிள்ளைகளால் பேணப்பட வேண்டியவர்க்ள். இவர்கள் எமது வாழ்வியலின் பொக்கிசங்கள், முதுகெலும்பு கள் எனவே மதிப்பும் மரியாதையும் வழங்கி தனிமையைப் போக்கி முதியோர்க்கு உதவும் கரங்களாக மாறவேண்டும்.
முதியோர் இல்லாதவீடுகள், கருவறை இல்லாத கோயில் போன்றது. முதுமையில் தனியாகும் போது தவிக்கும் நிலை ஏற்படும் இவ்வாழ்வியல் கோலங்களில் அவலக் கோலங்களையே காணமுடியும். உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் நோய்களின் தாக்கத்தினால் உடலிலும் அதனால் எழும் மன அழுத்தங்காலும் உள்ளத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் அவர்களை ஒரு பரிதவிப்புக்கு உள்ளாக்குகின்றது. இந்தப் பரிதவிப்பே முதுமையின் அவலமாகப் பார்க்கப்படுகிறது. அன்பாக நேசிக்கப்பட்டவர்கள் வேண்டத்தகாத பொருளாகக் கழித்து விடப்படுவது அவர்களை ஜடமாக்குகின்றது.



# இலங்கை சம்பியன்



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்று 1:0 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது இலங்கை அணி.

இலங்கை அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 222 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 68 ஓட்டங்களையும், றோசன் சில்வா 56 ஓட்டங்களையும், டில்ருவான் பெரேரா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரசாக், தயுல் இஸ்லாம் இருவரும் தலா 4 இலக்குகளையும், ரகுமான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 110 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மிராஸ் 38 ஓட்டங்களையும், டாஸ் 25 ஓட்டங்களையும், கையிஸ் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் லக்மல், தனஞ்சய இருவரும் தலா 3 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

112 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய இலங்கை அணி நேற்று முன்தின இரண்டாம் நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

றோசன் சில்வா 58 ஓட்டங்களுடனும், லக்மல் 7 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லக்மல். கேரத் ஓட்டமெதையும் பெற்றாது ஆட்டமிழக்க 226 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் இஸ்லாம் 4 இலக்குகளையும், ரகுமான் 3 இலக்குகளையும், மிராஸ் 2 இலக்குகளையும், ரசாக் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிலும் பங்களாதேஷ் அணி 123 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 215 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்று 1:0 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது இலங்கை அணி. (ம)



## அஸ்வின், ஜடேயா நீக்கப்படவில்லை

பந்துவீச்சுப் பயிற்சியாளர் கருத்து

2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் இருந்து அஸ்வின், ஜடேயா இருவரும் நீக்கப்படவில்லை என்று தெரிவித்தார் இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் பரத் அருண்.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டம் குறித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இந்திய அணியின் தலைவர் கோக்லி "உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் துருப்புசீட்டாக குல்தீப்- சாகல் இருவரும் இருப்பார்கள்" என்று தெரிவித்திருந்தார். இதனால் உலகக்கிண்ணத் தொடரில் அஸ்வின், ஜடேயா இருவரும் களமிறங்குவது சந்தேகம் என்று கருதப்பட்டது. இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார் பரத் அருண்.

"குல்தீப், சாகல் இருவருக்கும் தற்போது வாய்ப்பு வழங்கப்படுகிறது என்பதற்காக அஸ்வின், ஜடேயா இருவரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று அர்த்தம் இல்லை. சுழற்சி முறையில் வாய்ப்புகள் வழங்கப்படும். உலகக்கிண்ணத்துக்கான அணியில் அஸ்வின் ஜடேயாவுக்கும் இடமுள்ளது" என்று அருண் பரத் மேலும் தெரிவித்தார். (ம)




## ஆர்வம் மேலிடுகிறது

சென்னை சுப்பர் கிங்ஸ் தொடர்பில் தமிழக வீரர் முரளி விஜய் கருத்து



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காகக் களமிறங்குவதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன். எப்போது மைதானத்துக்குள் களமிறங்கலாம் என்ற ஆர்வம் மேலிடுகிறது என்று தெரிவித்தார் தமிழக வீரர் முரளி விஜய்.

"நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காகக் களமிறங்கக் காத்துள்ளேன். மீண்டும் எனது தாயகத்தில் விளையாடப்போவது சிறப்பானது. அணியின் வெற்றிக்கு என்னாலான பங்களிப்பை நேர்த்தியாக வழங்க வேண்டும். சென்னை அணி தனது இயல்பான பலத்தை வெளிப்படுத்த வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து அதைச் செய்வோம்" என்று முரளி விஜய் மேலும் தெரிவித்தார். (ம)



## மட்டுப்படுத்தப்பட[illegible]ங்களில் சிறந்த வீரராக விராட் கோக்லி

மைக்கல் கிளார்க் பெருமிதம்

பன்னாட்டு ஒருநாள் அரங்கில் சிறந்த வீரராக இந்திய அணியின் தலைவர் கோக்லியே உள்ளார் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க்.

இந்திய அணியின் தலைவர் கோக்லி அணிமைக்காலமாக 'ரண் வேட்டை' நடத்தி வருகிறார். தொடர்ச்சியாக சதங்கள், அரைச்சதங்கள் என்று அமர்க்களப்படுத்துகிறார் அவர். தலைமைப் பதவியில் அதிக சதங்களைப் பதிவுசெய்த இந்திய வீரராகவும் கோக்லியே உள்ளார். சச்சினுக்கு அடுத்த படியாக அதிக சதங்களைப் பதிவுசெய்தவரும் கோக்லியே. இவ்வாறு தொடர்ந்து பல்வேறு சாதனைகளைப் படைத்தும் பல சாதனைகயை உடைத்தும் வரும் கோக்லிக்கு பிரபலங்கள் பலரும் தத்தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துவரும் நிலையில் கிளார்க் தனது வாழ்த்தைப் பதிவுசெய்தார்.

கோக்லியின் ஆட்டம் அதியற்புதமாக அமைந்துள்ளது. தென்னாபிரிக்க மண்ணில் அவர் மிகச் சிறப்பாக விளையாடி வருகிறார். அனைத்துக் காலகட்டத்திலும் சிறந்த வீரராக அவர் உள்ளார் என்று கிளார்க் மேலும் தெரிவித்தார். (ம)

## 2016 ஒலிம்பிக் தொடரை நடத்தும் விருப்பமில்லை

அமெரிக்கா அறிவிப்பு

நிதி நெருக்கடி காரணமாக 2026ஆம் ஆண்டுக்கான குளிர்கால ஒலிம்பிக் தொடரை நடத்த விருப்பம் தெரிவிக்க மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கோடைக்கால ஒலிம்பிக், குளிர் கால ஒலிம்பிக் தொடர்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பு வருடத்துக்கான குளிர் கால ஒலிம்பிக் தொடர் தென்கொரியாவில் தற்போது நடைபெற்று வருகிறது. 2026ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் தொடரை நடத்த விரும்பும் நாடுகள் விண்ணப்பிக்கலாம் என்று பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்திருந்தது. அமெரிக்காவும் விண்ணப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நிதி நெருக்கடி காரணமாக விண்ணப்பிக்கப் போவதில்லை என்று அமெரிக்கா அறிவித்தது. (ம)

## Nivithra Beauty Parlour & Training Academy
## இலவச அழகுக்கலை பயிற்சி
(நிபந்தனைக்குட்பட்டது)

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின் புதிய இலவச அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இப்பயிற்சியில் இணைய விரும்புபவர்கள் கீழ்வரும் திகதியில் அறிமுக வகுப்பில் கலந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். உங்கள் விவரங்களை முற்கூட்டியே SMS அனுப்பிவைக்கவும்.

**திகதி : 14.02.2018 புதன்கிழமை**
**நேரம் : பிற்பகல் 2.30 மணி**
**இடம் : nivithra Beauty Parlour & Training Academy.**
**207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**(கஸ்தூரியார் சந்திக்கும் பிறவுண் வீதி சந்திக்கும் இடையில்)**
**தொடர்புகளுக்கு - 0777 712 604**


# 100ஆவது ஆட்டத்தில் தவான் 100


## வீட்டுப்பணிப்பெண் தேவை
சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் மூவர் அடங்கிய சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து சகல வேலைகளையும் செய்யக் கூடிய பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் 20,000/- வழங்கப்படும்.

**077 462 7979**

(CS/13715)(11,17)

## உடனடி வேலைவாய்ப்பு

| இல | பணி | தகைமை |
|---|---|---|
| 01 | வெளிக்கள உதவியாளர் | GCE O/L, மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் |
| 02 | அலுவலக உதவியாளர் | GCE O/L, கணினி அறிவு |
| 03 | உற்பத்தி உதவியாளர் | GCE O/L |
| 04 | சந்தைப்படுத்துநர் | GCE O/L |

- **நேர்முகத் தேர்வு :- 16.02.2018 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு.**
- **கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம், இல.1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு (கல்வியங்காட்டுச் சந்தி), யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் நடைபெறும்.
- சுயவிவரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்
- மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(CS/13750)(11,17)




இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சிகர் தவான் தனது 100ஆவது ஆட்டத்தில் சதம் கடந்து பிரமிக்க வைத்தார். இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஆறு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டம் தவானின் 100ஆவது ஆட்டமாக அமைந்து. இந்த ஆட்டத்தில் தவான் சதம் க்டந்தார். அவர் 109 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தவானின் சதத்தின் உதவியுடன் இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைக் குவித்தது. (ம)


## Dr.eam of Studying MBBS / MD
**China | Belarus | Latvia | Malaysia**




Sichuan University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
Segi University - Malaysia

Duration: 6 years | Medium-English

Limited Seats are available for 2018 intake

Colombo : 076 7013060 — 107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060 — 77, Clock Tower Road, Jaffna

iCS Study Medicine Abroad



## BRITISH COLLEGE OF LANGUAGES
**IELTS** ACADEMIC & GENERAL
திருமணமாகி U.K செல்வோருக்கான LIFE SKILLS (A1, B1) வகுப்புக்கள்

G. Rangit Thevarajan (Professional Trainer, English)

**ENGLISH COURSES** — BASIC ENGLISH / SPOKEN ENGLISH / DIP IN ENGLISH

**French** வகுப்புக்கள் பிரெஞ்சு பிரஜாவுரிமை பெற்ற ஆசிரியரால் அடிப்படையிலிருந்து **Spoken French** வரை சிறப்பாக கற்பிக்கப்படுகிறது

21, பலாலி வீதி 077 706 6000 / 077 132 7818 / 021 300 3839



## அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்
# திருமண மண்டபம்







குளிரூட்டப்பட்டது
அழகான வசதியான இருக்கைகளுடன்
தரமான உணவு வகைகள்
வாகன தரிப்பிட வசதிகள்
பிரதான வீதிக்கு அருகில்.

**தொடர்புகளுக்கு :**
**021 226 4227, 077 958 7281**


## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் பிரதமகுருக்கள்
**வா. அகிலேஸ்வரகுருக்கள்**
அவர்கள் (10.02.2018) அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மல்லாகம் பெரிய தம்பிரான் தேவஸ்தான பூசகரும், தொண்டர்களும்.**

## கண்ணீர் அஞ்சலி



நேற்றையதினம்
இறைவனடி சேர்ந்த
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான**
**பிரதமகுரு**
**சிவஸ்ரீ**
**வா. அகிலேஸ்வரக்குருக்கள்**
அவர்களின்
ஆத்மா சாந்தியடைய

எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரில், நாமும் பங்குகொள்கின்றோம்.

**ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் தேவஸ்தானம், கீரிமலை**

(CS 13796(15/17)

## மாற்றம்

இந்தியாவில் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு நடைபெற விருந்த மினி உலகக் கிண்ணத் தொடரை இடம்மாற்ற பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது என்று தெரியவருகிறது. எனினும் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வரவில்லை. (ம)




## ஒடியல் கூழ்
சைவம் - அசைவம்
**பைறட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்**
**Fried Chickan - Rice & Bites**

யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**021 222 6868, 077 736 0353, 075 987 5800**

(C/58237)(13,17)



## விருந்தினர் விடுதி, ஹொட்டல் விற்பனை
A9 வீதி, பளை நகரில் பேருந்து நிலையத்திற்கு அண்மையில் உள்ள விடுதி, ஹொட்டல் விற்பனைக்கு உண்டு.
**077 669 6820**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.